www.padippakam.com

இருமாத இதழ் ரூ. 15

# காலச்சுவடு

மே - ஜூன் 2001 இதழ் 35



சிறப்புப் பகுதி

சினிமா





இரா. செழியன்



சுந்தர ராமசாமி




ரவிக்குமார்

## விவாதம் : கலப்புத் திருமணம்

மாலதி மைத்ரி – வ. கீதா

படிப்பகம்

www.padippakam.com




மங்கள நாள்தனிலே!
அந்த மங்கள நாள்தனிலே!!

RmKV
முகூர்த்தப் பட்டுகள்
திருநெல்வேலி டவுன்

காஞ்சிபுரம் பட்டுகள் ● ஆரணி பட்டுகள் ● தர்மாவரம் பட்டுகள்
பனாரஸ் பட்டுகள் ● பிரிண்டட் சில்க்ஸ்


படிப்பகம்

www.padippakam.com

*தலையங்கம்*

# ஜெயலலிதாவின் பின் நவீனத்துவ நோக்கு

இந்தத் தலையங்கம் படிக்கப்படும்போது தேர்தல் நெருங்கியிருக்கும். இருப்பினும் இங்கு விவாதிக்கப் போவது தமிழக அரசியலின் வருங் காலத்தை அல்ல. ஜெயலலிதாவின் அரசியல் பங்களிப்பை. ஜெயலலிதா வின் ஊழலும் ஆணவமும் ஏற்படுத்திய பரபரப்பில் கவனம் பெறாமல் போய்விட்டது அவரது பின் நவீனத்துவச் செயல்திட்டம்.

புனிதங்களைத் தகர்ப்பது ஒரு பின்நவீனத்துவச் செயல்பாடு எனில் இந்திய அரசியலில் அதனை இத்தனை வெற்றிகரமாக ஒரு பூகம்பத்தின் சக்தியோடு நிறைவேற்றி வரும் இன்னொரு ஆளுமை இல்லை.

ஆட்சிக்கு வந்ததும் பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கச் சென்ற வரை வீரமணி வரவேற்க, அப்போதே துவங்கியது 'ஜெ'யின் கட்டுடைப்பு. இந்த குறுகிய காலத்தில் அவர் தகர்த்துள்ள புனிதங்களின் எண்ணிக்கை அசர வைக்கிறது.

வீரமணி நீட்டிய நேசக் கரத்தோடு அவரது திராவிடப் புனிதம் தகர்ந்தது. நடமாடும் பல்கலைக்கழகம் நெடுஞ்செழியன் சட்டசபையில் 'ஜெ'க்கு வக்காலத்து வாங்கியபடியே கட்டுடைந்தார். எஸ். டி. சோமசுந்தரம் தொங் கியபடியே தகர்ந்து போனார். எம். ஜி. ஆர். இருட்டடிப்பின் மறதியில் மறைந்தார். ஜானகியின் பத்தினி சாபம் பலிக்கவில்லை. பல குட்டி தெய் வங்கள் 'ஜெ' யுகத்தில் இருக்க இடமில்லாமல் மையமிழந்தனர்.

பா.ஜ.க.வின் தர்மம் அறம் எல்லாம் கூட்டணியில் தகர்ந்தன. இரண்டா வது 'ஐயா' டாக்டர் சாதிய மண்ணில் கலந்தார். சங்கரய்யாவும் நல்ல கண்ணுவும் வர்க்க பேதமற்ற புழுதியில் புரட்டியெடுக்கப்பட்டனர். நரசிம்ம ராவும் மூப்பனாரும் போயஸ் குட்டையில் ஊறிக் கட்டவிழ்ந்தனர். கலை ஞரும் வை.கோவும் போயஸ் வளர்த்த யாககுண்டத்தில் இந்துமயமாயினர். தலித் எழில்மலை போயஸ் அம்பலத்தில் மறைந்தார். தமிழ் தன்மான தீபம் தமிழ்க் குடிமக்ன் தமிழ் பற்றற்ற ஜோதியில் ஐக்கியமானார்.

அகில இந்திய சாணக்கியர் சுர்ஜித் சிங் 'ஜெ'யின் திருஷ்டி பட்டதும் சகுனியானார். அத்வானியின் ரதம் மறதியின் புதை சேற்றில் அமிழ்ந்தது. பிற்படுத்தப்பட்டோரின் புனிதச் சுடர் லல்லு வளர்ப்பு மகனின் திருமணத் தில் மங்கிப் போனார். நெருக்கடி நிலையின் நாயகன் பெர்னாண்டஸ் போயஸ் ஏவலாளாக சோஷலிச சமத்துவத்தைத் தரிசித்தார். எளிமையான விவசாயி தேவகௌடா பணப் பெட்டியின் மகிமையில் போயஸ் ஆடம்பரத் தில் சிதறிப்போனார்.

மத்தியதர வர்க்கத்தின் நாயகர்கள் சேஷனும், மவுண்ட் ரோடு மகா விஷ்ணுவும், பத்திரிகையுலக கருடர் சோவும் போயஸ் ஊழியில் கரைந்து விட்டனர்.

'ஜெ'யின் பணி இன்னும் முடியவில்லை . . .

தலைவர்களை விட்டு கட்சிகளைக் கட்டுடைக்கும் பணியைத் துவங்கி யிருக்கிறார். ■

**கண்ணன்**

இதழ் 35
மே – ஜுன் 2001

**காலச்சுவடு**
669 கே. பி. சாலை
நாகர்கோவில் 629 001
தொலைபேசி : 04652 - 22525
மின்னஞ்சல் : kalachuvadu@vsnl.com
தொலைநகல் : 04652 - 31160

**ஆசிரியர் குழு**
கண்ணன்
மனுஷ்ய புத்திரன்
**வடிவமைப்பு**
குமார்
லீலா, ஜோதி
**தயாரிப்பில் உதவி**
எம். எஸ்.
மைதிலி
சிவகுமாரி
மகாதேவன்

காலச்சுவடு இருமாத இதழ்
சந்தா விவரம்

| | |
|---|---|
| தனி இதழ் | ரூ. 15 |
| ஆண்டுச் சந்தா | ரூ. 90 |
| இரண்டாண்டுச் சந்தா | ரூ. 140 |
| வெளிநாட்டுச் சந்தா | ரூ. 400 |
| இரண்டாண்டுச் சந்தா | ரூ. 700 |
| வெளிநாட்டு நிறுவனங்களுக்கு | US $ 20 |

*கல்லூரி / ஆய்வு மாணவர்களுக்குச் சிறப்புச் சலுகை*
ஆண்டுச் சந்தா ரூ. 50 (சான்று அனுப்ப வேண்டும்.)

சந்தா தொகையை **Kalachuvadu** என்ற பெயரில் பணவிடையாகவோ வரைவோலையாகவோ அனுப்புக. காசோலையாக அனுப்புகிறவர்கள் ரூ. 15 சேர்த்து அனுப்புக.

முன் அட்டை ஓவியம்
மத்திய பிரதேசம் கொண்டகாங்கில் உள்ள கபிராம் என்ற ஆதி வாசி வரைந்தது.

*மின்தளத்தில் காலச்சுவடு* : www.kalachuvadu.com

படிப்பகம்

www.padippakam.com



# காலச்சுவடு 35 மே – ஜூன் 2001



பட உதவி : தியடோர் பாஸ்கரன்


21 ஜே. பி. சாணக்யா

சிறுகதை : பிளாக் டிக்கட்

47 சுமதி ரூபன்

சிறுகதை : வடு

34 விவாத அரங்கு

மாலதி மைத்ரி

வ. கீதா

கலப்புத் திருமணம்

7 சிறப்புப் பகுதி 1 : சினிமா

38 சிறப்புப் பகுதி 2 : மதிப்புரை





18 இரா. செழியன்

அதிகார அரசியல்

50 ஞாநி

நேர்காணல்





16 சுந்தர ராமசாமி

வானகமே

இளவெயிலே

மரச்செறிவே





60 ரவிக்குமார்

மேலவளவு :

நீதியின் புதிர்ப் பாதைகள்

3 கடிதங்கள்

6 இரும்புக்கை மாயாவியின் குறிப்புகள்

15 தலித் கலை விழா

20 மைக்கூடு

31 வரப்பெற்றோம்

32 புதுமைப்பித்தன் அரங்கு

46 மௌனத்தின் சிறகடிப்பு

58 விவாதம் : தி. க. சி.




படிப்பகம்

www.padippakam.com






சாகித்ய அகாதமியின் செயல், தொண்டையில் அடைபட்டிருக்கும் சளியை காறி உமிழும் செயலாகவே உள்ளது. தி. க. சி. + வல்லிக்கண்ணன் + கு. சின்னப்ப பாரதி + குழந்தைசாமி = அகாதமி விருது. இதில் சந்தேகமென்ன ? கட்டுரையாளர் அரவிந்த பாரதி கூறியது முற்றிலும் உண்மைதான். போர்வைக்குள்ளிருப்பவர்களின் போர்வைகள் பற்றியெரியட்டும். உண்மைகள் வெளிப்படட்டும். முகத்திரை கிழியட்டும்.

திரு. அ. மார்க்ஸ் மீதான எதிர்வினை குறித்து : மிகச் சரியானதே. ஸ்பார்ட்டகஸ் தாசனுக்கு எனது வாழ்த்துக்கள். திரு. மார்க்ஸ் அவர் தொடர்பான விசயங்களில் நிறைய பரிசீலனைகளை மேற்கொள்ள வேண்டும். போலிகளை உடைத்தெறிபவராக அவர் இருக்க வேண்டும் என்று விரும்புகிறேன். அவரே ஒரு பொய்யராக இருப்பதை நான் விரும்பவில்லை.

எஸ். ஆர். ஸ்ரீனிவாசன்
பட்டுக்கோட்டை

காலச்சுவடு இதழ் 34ல் பிரசுரமான ஆனந்தின் 'நான்காவது ஆணி' குறுநாவல் பற்றி. பைபிள் நிகழ்வுகளையும் பைபிள் பாத்திரங்களையும் பகைப்புலமாகக் கொண்டு எழுதப்படும் புனைவுகள் ஒன்று அந்நிகழ்வுகள் அல்லது பாத்திரங்களை மீட்டுருவாக்கம் செய்வன. இரண்டாவதாக கிறிஸ்துவின் பெயரால் ஸ்தாபிக்கப்பட்ட மதத்தின் நிறுவனத்தன்மை மற்ற பிற கேடுகளை விமர்சிப்பதாக அமைவன. 'நான்காவது ஆணி' இரண்டாவது வகையினதாக இருக்கிறது.

'இவ்வுலகில் வாழ்ந்த ஒரே கிறிஸ்தவர் இயேசுதான். அவருக்குப் பிறகு வேறொரு கிறிஸ்தவரை நான் இன்னும் பார்க்கவில்லை' என்ற நீட்சேயின் கூற்றை மெய்ப்பிக்கும்படியாகவே கிறிஸ்தவ மதத்தின் செயல்பாடுகள் இருந்து வருகின்றன. துவக்க காலங்களில் மறை பரப்புக்காக கிறிஸ்தவ மதம் செய்த கொடுமைகள் கணக்கிலடங்காதவை. கிறிஸ்தவத்தைத் தழுவாத பிற மதத்தினரை, இனத்தினரை அது எவ்வித ஈவிரக்கமும் இன்றி கொன்று குவித்தது. மனசாட்சி கொண்ட எல்லா படைப்பாளிகளுமே தமக்கு கிடைத்த சந்தர்ப்பங்களில் இந்தக் கொடுமைகளைப் பதிவு செய்துள்ளனர். தாஸ்தாயேவ்ஸ்கியின் "கரமசோவ் சகோதரர்கள்" நாவலின் The Great Inquisitor அத்தியாயம் இதற்கு நல்ல உதாரணம். இயேசு என்ற ஒரு மகானுக்கும் அவர் பெயரால் ஸ்தாபிக்கப்பட்ட மதத்துக்கும் அதன் செயல்பாடுகளுக்கும் எவ்விதத் தொடர்புமில்லை என்பதே இப்படைப்புகள் நமக்கு உணர்த்துவது. இவ்வகையில் 'நான்காவது ஆணி' மேற்சொன்ன கருத்தின் மீது இன்னும் ஒளி பாய்ச்சுவதாக உள்ளது.

அசதா
முகையூர்

எஸ். ராமகிருஷ்ணன் எழுதிய 'நகுலனோடு ஒருநாள்' மிகவும் உருக்கமாக இருந்தது. இந்தச் சந்திப்பில் நகுலன் திரும்பத் திரும்ப 'நீங்க எஸ். ராமகிருஷ்ணன் தானே' என்று கேட்டுக் கொண்டே இருக்கிறார். சந்திப்பு முடிந்து எஸ். ராமகிருஷ்ணன் புறப்பட்ட போதும் கூட அப்படியே கேட்கிறார். இடையில் நகுலன் சொல்கிறார் : 'வர வர எதுவும் ஞாபகத்திலே நிற்க மாட்டேன் என்கிறது. நேற்று ஒரு வார்த்தை எதற்கோ தேவைப்பட்டது. சட்டென நினைப்பிற்கு வரவில்லை. பிறகு எப்போதோ நினைவுக்கு வந்தபோது ஒரு காகிதத்தில் எழுதி வைத்தேன். அது என்ன வார்த்தை என்பது எனக்கு மறந்து போய்விட்டது.'

பிறகு ஒருவாறு காகிதத்தில் எழுதி வைத்த வார்த்தையை கண்டுபிடித்துவிடுகிறார். 'கயிற்றரவு' என்பதுதான் அந்த வார்த்தை.

இந்தத் தலைப்பில் 1972ல் 'கசடதபற' வில் அவர் ஒரு கதை எழுதியிருந்தார். அருமையான கதை. பூதப்பாண்டி பஸ் தரிப்பில் நாகர்கோவில் பஸ் பிடிப்பதற்காக மூன்று நண்பர்கள் நிற்கிறார்கள். பஸ்கள் எல்லாம் 'குருவியும் நெல்லும்' கணக்கில் ஒவ்வொன்றாகச் சென்றபடியே இருக்கின்றன. இவர்கள் பார்த்துவிட்டு ஒவ்வொரு பஸ் தரிப்பாக நடக்கத் தொடங்குகிறார்கள். கடைசியில் நாகர்கோவிலுக்கே வந்துவிடுகிறார்கள். இதுதான் கதை.

கயிற்றரவு என்ற தலைப்பில் ஒரு கதையே எழுதியவர் அந்த வார்த்தையை எப்படி மறக்க முடியும் ? சமீபத்தில் Dava Sobel எழுதிய கலிலியோவின் மகள் என்ற புத்தகம் படித்தேன். எழுபது பிராயம் தாண்டிய கலிலி யோவை 'சூரியனைக் கிரஹங்கள் சுற்றுகின்றன' என்ற உண்மையைச் சொன்னதற்காக மதகுரு பீடம் சிறையில் அடைத்துவிட்டது. எத்தனையோ உடல் உபாதையிலும் இம்சையிலும் சிறுமையிலும் கலிலியோ எழுதுகிறார் : 'முதுமை என் சிந்தனை தெளிவையும் வேகத்தையும் வெகுவாக குறைத்துவிட்டது. இளம் வயதில் நான் மிக இலகுவாகக் கண்டுபிடித்த சிந்தாந்தங்களையும் அவற்றின் நிரூபணங்களையும் இப்போது விளங்கிக் கொள்வதற்குகூட மிகுந்த சிரமமிருக்கிறது.'

இதைப் படித்தபோது எனக்கு மனது கனத்தது. நகுலனின் ஞாபகம் வந்தது. மறதி மிகவும் கொடியது. வார்த்தையை மறப்பது இன்னும் கொடியது. அதுவும் ஒரு படைப்பாளிக்கு.

அ. முத்துலிங்கம், கனடா
(மின்னஞ்சலில் பெறப்பட்டது)

காலச்சுவடு 34ல் வெளியான நாஞ்சில் நாடனின் சிறுகதையை ரசித்தேன். நாஞ்சில் நாடனின் நயம் பிணத்தின் முன் அமர்ந்து திருவாசகம் படித்தவர் உணர்ந்ததை நாமும் உணருமாறு செய்தது. படைப்பின் இயல்பை இன்னும் தக்க வைத்துக் கொண்டிருக்கும் விரல்விட்டு எண்ணத்தக்க வெகு சில படைப்பாளிகளில் இவரும் ஒருவர். நீண்ட இடைவெளிக்குப் பிறகு நாஞ்சில் நாடனைப் படிப்பது ஒரு சுகமான அனுபவம்.

எதிராளிகளின் குணவிசேசங்கள் மட்டுமல்ல காலச்சுவட்டோடு அவர்களுக்கான உறவு குறித்த நிலைப்பாடுகளைப் புரிந்து கொள்ள உதவும் மௌனத்தின் சிறகடிப்பு துடிபிடிக்கத் தொடங்கிவிட்டது. கோவையிலிருந்து அவ்வப்போது காட்டமான சொற்களால் தங்கள் இதழைக் கிழிக்கும் நபரின் எண்ணங்களுக்கு 'எடிட்டிங்' கிடையாதோ எனச் சந்தேகம் வருகிறது. மேலும் வாசகர் படைப்பாளியாகவும் இருக்கலாமோவென எண்ணத் தோன்றுகிறது. முன்பே வாசகர் கடிதங்களில் இவர் இடம் பெற்றிருக்கிறார். அந்தக் கடிதத்தில் காட்டம் அதிகம்.

தி. க. சிக்கு சாகித்ய அகாதமி விருது குறித்த இலக்கியவாதிகளின் அபிப்பிராயங்கள் நியாயமானவையே. தி. க. சியின் இலக்கியம் குறித்த சொற்பிரயோகங்கள் இலக்கிய வாசகனை சலனமேற்படுத்த இயலாதவை. இருப்பினும் தமிழின் மிகச் சிறந்த படைப்பாளிகள் பலரை இனம் கண்டு சிலாகித்து சொல்லியுள்ளதையும் கணக்கில் எடுத்துக்கொள்ளத் தேவையில்லை என்பதுபோல் துறை ஈடுபாட்டோடு செயல்பட்டவரை ஒருதலைப் பட்சமாக கணித்து விமர்சித்திருக்கத் தேவையில்லை. சாகித்ய அகாதமி இன்னும் கீழிறங்கிப் போகாமல் தி. க. சியின் தேர்ந்தெடுப்பை வரவேற்பதன் மூலம் தக்க வைத்துக் கொள்ளலாம் என்பதே தற்போதைய ஆறுதலான விசயம்.

மதிக்கத்தக்க இரு கட்டுரைகள் நகுலனைப் பற்றி வெளியாகியுள்ளன. வாசகனை வெகு நேரம் சிந்திக்க வைத்த இக்கட்டுரையில் எஸ். ராமகிருஷ்ணன் வாசகனை மிகவும் நெருங்கியிருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

வி. ஏ. சரவணன்
வாங்கல்

ரவிக்குமாரின் 'கலவரத்தின் பின் அதிர்வுகள்' கட்டுரை படித்தேன். 1999 பாராளுமன்ற தேர்தலில், சிதம்பரம் தொகுதியில் ஏற்பட்ட வன்முறையில் பாதிக்கப்பட்ட தலித் மக்களுக்கு வீடுகள் கட்டித்தருவது மறுக்கப்படுகிறது என்பது வருத்தத்தையே ஏற்படுத்துகிறது. கட்டுரை ஆசிரியர் குறிப்பிட்டுள்ளவாறு சிதம்பரம் தொகுதியில் நடைபெற்ற தேர்தலில் போட்டி என்பது இரு கட்சிகளுக்கிடையே என்றில்லாமல் தலித், வன்னியர் என்கிற இருசாதிகளுக்கிடையேயான போட்டியாகத்தான் இருந்தது.

வன்னியர் சங்கங்களின் ஆரம்பகால போராட்டங்களும், கொள்கைகளும், சுயமரியாதை மற்றும் சமூக கௌரவம் ஆகிய

மறதி மிகவும் கொடியது. வார்த்தையை மறப்பது இன்னும் கொடியது.



படிப்பகம்

www.padippakam.com

# காலச்சுவடின் power of contentsஐ மறுபரிசீலனை செய்தால் நன்று.

வற்றை மையப்படுத்தியிருந்தாலும், அவை பாட்டாளி மக்கள் கட்சியாக உருமாறியபோது, ஒரு சராசரி அரசியல் கட்சிக்கே உரித்தான கொள்கைகளைத்தான் முன்னிறுத்தியது. மேலும், பாட்டாளி மக்கள் கட்சியின் ஆரம்ப கால வளர்ச்சி என்று பார்த்தால், அது முழுக்க முழுக்க தலித்துகளை வைத்துத்தான். பாட்டாளி மக்கள் கட்சி ஆரம்பிக்கப்பட்ட போது, அதில் 40 விழுக்காடுகள் தலித்துகள் உறுப்பினர்களாக இருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 1994ம் வருடம் கல்லிடைக்குறிச்சியில், பாட்டாளி மக்கள் கட்சியின் தென் மாவட்ட மாநாடு நடந்த போது, திரண்டிருந்த தலித் மக்களைப் பார்த்து பா.ம.க தலைமையே அரண்டு போயிருந்தது உண்மை. ஒரு அரசியல் கட்சி எந்தவொரு குறிப்பிட்ட சமூகத்தால் வளர்ச்சியடைந்ததோ, தற்போது அதே கட்சி அந்த சமூகத்தை புறக்கணிக்கிறது என்பதுதான் வேதனைக்குரிய விஷயம்.

பெருமாள் முருகனின் 'எருமைப் பாலும் பத்திரிகை வேலையும்' கட்டுரை கண்டேன். கட்டுரையின் தலைப்பு என்னவோ நகைச்சுவையாக இருந்தாலும் கட்டுரை முழுவதும் ஒரு மென்சோகம் இழையோடியது. பத்திரிகை அலுவலகத்தில் வேலை பார்த்த அனுபவம் எனக்கில்லை. பத்திரிகைத் துறையைச் சார்ந்த நண்பர்கள் உண்டு. அவர்கள் கூறியுள்ள கதைகளையெல்லாம் கேட்டிருக்கிறேன். நடைமுறை வாழ்க்கையைப் பார்த்தால் சூழ்நிலை காரணமாக பலர் தங்களுக்கு ஒவ்வாத வேலையைச் செய்யவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளோம். பெருமாள் முருகன் மாதிரி ஒரு சிலருக்கு மட்டும் தான் அந்த மாதிரி பிடிக்காத வேலையை ராஜினாமா செய்துவிடும் தெம்பு இருக்கிறது. பத்திரிகை வேலையை எருமைப் பால் வியாபாரத்தோடு ஒப்பிடக் கூடாதா என கேள்வி எழுப்பியிருந்தார் கட்டுரை ஆசிரியர். எருமைப்பால் வியாபாரத்தின் மூலம் வாழ்க்கையில் எல்லா விதத்திலும் உயர்ந்துள்ள மனிதர்களை என்னால் அடையாளம் காட்ட முடியும். பொருளாதார ரீதியாகப் பார்த்தால் என் தாய் வழி கிராமத்தில் எருமைப்பால் வியாபாரத்தின் மூலம் மச்சு வீடு கட்டியவர்கள் பலர். பத்திரிகை வேலையோடு மட்டுமல்ல வேறு எந்த அரசாங்கத் துறையைச் சார்ந்த வேலையோடும் எருமைப்பால் வியாபாரத்தை ஒப்பிடுவது ஒன்றும் கீழ்தரமானது அல்ல... உயர்வே.

வே. முத்துக்குமார்
கல்லிடைக்குறிச்சி

தி. க. சிக்கு விருது வழங்கப்பட்டதான நிகழ்வை விவாத அரங்கில் கொண்டு வந்தது நன்றுதான். ஆனால் 'அரவிந்த பாரதி'யின் கருத்துக்களோடு எத்தனைபேர் ஒத்துப் போவார்கள்?

குழந்தைசாமி பற்றிய அவரது கருத்தை வேண்டுமானால் ஏற்கலாம். ஆனால் வல்லிக் கண்ணன், கு. சின்னப்ப பாரதி அவர்களைப் பற்றிய கருத்தை ஏற்க முடியவில்லை.

தி. க. சி.யைப் பற்றி அறிய அவருக்கு விருதைப் பெற்றுத் தந்த 'விவாதங்கள், விமர்சனங்கள்' அடங்கிய நூலே சாட்சியாயிற்றே. ஒருதலைப்பட்டசமாக யோசிப்பதைத் தவிர்க்க வேண்டும் நாமெல்லாம்.

ரமேஷ்குமார்
கங்களாஞ்சேரி

'எனக்குள் பெய்யும் மழை' பற்றிய விமர்சனத்துக்கு யமுனா ராஜேந்திரனின் 'நிதானம் தவறாத' எதிர்வினை பற்றிச் சில சொற்கள் :

யமுனா ராஜேந்திரனின் தமிழாக்கக் குளறுபடிகளை உணர ஒருவர் ஸ்தாலினிய வாதியாகவோ நோம் சோம்ஸ்கி மாதிரி பொல்பாட்டை 'நியாயப்படுத்தும்' ஒருவராகவோ இருக்க வேண்டியதில்லை. பத்தாம் வகுப்பு வரை ஒழுங்காகத் தமிழ் கற்ற எவரும் நான் சுட்டிக் காட்டிய சில உதாரணங்களிலும் இன்னும் நூல் நெடுகிலும் உள்ள கோமாளித்தனமிக்க தமிழ்ப் பிரயோகத்தை மிக எளிதாகவே அடையாளங்காண முடியும்.

சரியான, ஒரே ஒரு மொழிபெயர்ப்பு என்பதில் யமுனா ராஜேந்திரனுக்கு நம்பிக்கை இல்லை. எனக்கும் இல்லை. என்றாலும் படுமோசமான மொழிபெயர்ப்புகளும் உள்ளன என்று நான் நம்புகிறேன். நூற் தலைப்பு பற்றியது முதலாக பிரைடா காலோ தொட்டுச் சிவரமணி வரையிலானவர்கள் பற்றியன உட்படப் பல்வேறு கருத்துக்கள் யமுனா ராஜேந்திரனின் குளறுபடிகள் பற்றியன. இதைத் திசை திருப்ப அவர் கையாண்டுள்ள உபாயங்கள் எனக்கோ காலச்சுவடுக்கோ காணப் புதியன அல்ல. எனினும் இன்னும் கடுமையாக முயன்றிருக்கலாம்.

The point, however, is to change it என்பதைப் 'பிரச்சனை அதை மாற்றுவது' என்று 'தமிழ்ப்படுத்தி' அதை விடாப்பிடியாக நியாயப்படுத்தவும் வல்ல ஒருவர் என்னென்னவெல்லாம் செய்ய வல்லார் என்று தெரியாமலே போய்விட்டது. Alice in Wonderland அல்லது Through the Looking Glassல் அலிஸ் 'ஒரு சொல்லுக்கு ஒருவர் எவ்விதமாயும் பொருள் கொள்ள இயலுமா?' என்று கேட்பதாகவும் 'கேள்வி ஏதெனில் யார் எசமான் என்பதே?' என்று விடை கிடைப்பதாகவும் படித்த நினைவு. எனவே யமுனா ராஜேந்திரன் எசமானாக உள்ள ஒரு நூதன உலகில் அவர் வேண்டியவாறே ஒவ்வொரு அயல் மொழிச் சொல்லையும் தமிழ்ப்படுத்தலாம். இந்த உண்மையை அப்போதே உணரும் அளவுக்கு என் அறிவு சுடர்விட்டு ஒளிரவில்லை. என்ன செய்ய!

என்ன காரணத்தாலோ, ஒரு படைப்பாளிக்கு நாம் காட்டும் மரியாதை அவரது படைப்பை நேர்மையாகவும் பொறுப்புணர்வுடனும் பிறருக்கு வழங்குவது என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன். கல்லும் வில்லும் காற்செருப்புங் கொண்டு சாற்றப் பட்டதையெல்லாம் சிவபெருமானே மெச்சியிருக்கிறார். யமுனா ராஜேந்திரனால் தமிழுக்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ள கவிஞர் குழாம் அவருடைய மொழிபெயர்ப்புக்கு நன்றி பாராட்டாமல் இருப்பார்கள் என்று எதிர்பார்ப்பது தவறாகவே இருக்கும். வளர்க அவரது பணி! தமிழ்... ஆதி சிவன் பெற்றதல்லவா. அது வழமை போல எப்படியாவது பிழைத்துக்கொள்ளும்.

சிவசேகரம்
இலங்கை

தங்கள் பத்திரிகையில் வந்த விளம்பரப்படி '......' இதழ்களுக்கு, சந்தா அனுப்பினேன். '......' ஒரு இதழுக்குப் பிறகு ஒன்றும் வரவில்லை. '......' – சப்தமே காணவில்லை. விவரம் கேட்டு எழுதிய கடிதத்திற்கும் பதில் இல்லை. சந்தா அனுப்பி ஆறு மாதம் இருக்கலாம். இந்த சஞ்சிகைகளுக்கு விளம்பரம் தருவது உசிதமல்ல என்று கருதுகிறேன். கருதவும்.

உங்கள் பத்திரிகை, எழுத்தாளர்களுக்குள் நடக்கும் சண்டைகளை பிரதானமாக விவரிப்பது வீண் என்று நினைக்கிறேன். உங்களுக்குள் தீர்த்துக் கொள்வது நல்லது. பக்கங்களும் வீணாகா.

நகுலன் நேர்காணல் அவருடைய இன்றைய பரிதாபமான உடல்நிலை, மனநிலையைக் காண்பிப்பது அல்லாமல் வேறு ஒன்றுமில்லை. வீணே. அவருடைய சிறந்த சிறுகதையைப் பிரசுரித்திருந்தால் அவரைப் பற்றிய கருத்து உயர்ந்திருக்கும்.

காலச்சுவடின் power of contentsஐ மறுபரிசீலனை செய்தால் நன்று.

பாலசுப்ரமணியன்
ஹைதராபாத்


## காலச்சுவடு விளம்பரக் கட்டணம்

| | | ரூ. |
|---|---|---|
| முழுப் பக்கம் | : | 2000 |
| அரைப் பக்கம் | : | 1000 |
| கால் பக்கம் | : | 500 |
| ஒரு பத்தி (1/3 பக்கம்) | : | 650 |

புத்தக விளம்பரங்களுக்கு 25% தள்ளுபடி உண்டு.

ஒரு வருடம் (ஆறு இதழ்கள்) தொடர்ந்து வரும் விளம்பரங்களுக்கு 50% தள்ளுபடி

புத்தகச் (சிறு) விளம்பரம். (மிகக்குறைந்த கட்டணம்.) ஒரு நூலுக்கு ரூ.100. ஒரே பதிப்பகத்தின் அதிகப்படியான ஒவ்வொரு நூலுக்கும் ரூ.50. அளவு ஒரு பத்தியில் மூன்றில் ஒரு பங்கு (எட்டு செ.மீ.) தள்ளுபடி எதுவும் இல்லை.



படிப்பகம்

www.padippakam.com



எஸ். ஜி. வாசுதேவின் முன் அட்டை ஓவியம் பல வண்ணங்களில், மிகுந்த ரசிப்புக்குரியதாக இருந்தது. அட்டை வடிவமைப்பும் கச்சிதமாக இருந்தது.

குடும்ப செண்டிமெண்ட், பக்தி கரைசல்களில் இருந்து எத்தனை பெண் வாசகர்கள் வெளிவந்து சிற்றிதழ்களைப் படிக்க முற்படுவர் என்று கூறமுடியவில்லை. ஆனால் காலச்சுவடு தயாரிப்பில் அதிக சதவிகித பங்காய் இருப்பது பெண்கள் தான் என்பது எனது எண்ணமாக உள்ளது. தயாரிப்பின் தர அம்சம் வாசிப்பனுபவத்தில் தான் வெளிப்படும். கடந்த இரண்டு இதழ்களாக உறுத்தலாய் தெரிவது வார்த்தைகள் சம்பந்தா சம்பந்தமில்லாமல் பிரித்துக் கொலை பண்ணுவது. உதாரணத்திற்கு ... இல்லாத தாக்குவதும் (பக். 60 யமுனா ராஜேந்திரனின் கடித ஆரம்பத்தில் 7வது வரி). சாதாரண விஷயம் என்று விட்டுவிட்டால் வரும் இதழ்களில் இது அதிகரிக்கவே செய்யும். கருத்துப் பிழை ஒற்றுப்பிழை, எழுத்துப்பிழை ஆகியன கூட மனசு ஏற்றுக் கொள்கிறது. இப்படி வார்த்தைகளை ஒடித்து சின்னாப் பின்னப்படுத்துவது பத்திரிகையின் தரத்தின்மீது கரும்புள்ளியாய் உறுத்துகிறது. கவனிக்கவும்.

மௌனத்தின் சிறகடிப்பில் குறிப்பிட்ட கடைசி பத்தியின் வரிகள் கவனிக்கத்தக்கது. ஆரோக்யமான விவாதங்கள் சர்ச்சைகள்தான் முன்னெடுப்புக்கு அத்யாவசியமான ஆதாரங்கள். 'சர்ச்சை : தி. க. சி.'யை குறிப்பிட்டுச் சொல்லலாம். எதிர்வினைக் கருத்துக்களைச் சம்பந்தப்பட்டவர்கள் தெரிவிப்பார்கள் என்றே நம்புவோம்.

தினப்பத்திரிகை உலகின் உள் பூச்சை பெருமாள் முருகன் பகிரங்கப்படுத்தியது பத்திரிகை உலகுக்குப் புதிது. வாய்வழியாகவும் நண்பர்கள் வழியாகவும் அறியப்பட்ட ஒரு சேதியை எழுத்தில் காண்பவர்களுக்கு ஒரு நிம்மதியை அளித்திருக்கும். பத்திரிகையுலகின் போலித்தனங்களை காலச்சுவடு பதிவு செய்து வர வேண்டும் தொடர்ந்து. யூகச் செய்திகளை உண்மையாக நேரில் கண்டது கேட்டது போல எழுதும் பிரபல பத்திரிகைகளின் 'உள்வெளி' அமைப்புகளைத் திரை விலக்கிக் காட்ட வேண்டும். யூகச் செய்திகள் சில 'உண்மைகளை' சில வேளைகளில் கூறி விடுவதால் எல்லா யூகச் செய்திகளையும் நம்ப வேண்டிய கட்டாயத்திற்கு மனம் தள்ளப்படுகிறது.

ஞாநியின் நேர்காணல் நல்ல பதிவு. பத்திரிகைத் துறையின் போலித்தனங்களை அவர் வெளிப்படுத்துவதற்கு அவரின் திறமையை அவர் மதிப்பதுதான் காரணம். என் பதினெண் வயதில் ஜூனியர் போஸ்ட் தொடர்ந்து படித்த வாசிப்பனுபவத்தில் ஞாநியின் உழைப்பு இருக்கிறது. அவர் பொறுப்பில் வந்த அந்த இதழ்களின் கட்டுரைகள் எனக்குப் பல்வேறு பாதைகளைத் திறந்துவிட்டன. அதன் ஏக்கமான பாதிப்பு விண்நாயகன் நிறுத்தப்பட்டது வரை நீடிக்கிறது. ஞாநியின் பவர்புல்லான கண்ணாடியைப் பார்க்கும்போது அவர் கண் பார்வை குறித்த அக்கறை வருகிறது.

குழந்தைகளின் 'மன உலகை' அவர் அலசி ஆராய்ந்து வெளிப்படுத்திய சில கருத்துக்களை சம்பந்தப்பட்டவர்கள் யோசிக்க முயற்சிப்பார்கள் என்று நம்புகிறேன். பெருகிக் கிடக்கும் தரமற்ற ஆங்கிலப் பள்ளிகளின் ஆண்டு விழாக்களில் 'ரிக்கார்ட் டேன்ஸ்கள்' தான் நடக்கின்றன. அவை தான் கலை என்றும் பெற்றோர்கள் நம்புவது ஜீரணிக்க முடியாத விஷயமாக இருக்கிறது. பள்ளி நிர்வாகத்தைக் கேட்டால் பெற்றோர்கள் விருப்பப்படிதன் எல்லாம் நடக்கிறது. மீறினால் 'வரும்படி' குறையும் என்பது நிர்வாகத்தின் கவலை. ஒரு பக்கம் தரமற்ற கல்வி; அதனூடே விரசமான பாடலுக்கு விரசமான நடன அசைவுகளோடு பால்மணம் மாறாத குழந்தைகளின் எதிர்காலம் என்பது எப்படி இருக்கும். மேலும் அப் பள்ளிகளில் படிக்கும் குழந்தைகள் மாதா மாதம் கட்டும் கட்டணத்தொகை அவ்வப்போது கட்ட வேண்டிய பணம், வாகன கட்டணம் இத்யாதிகளின் நெருக்கடியில் குழந்தை மனம் செத்துப் போய் பகிர்ந்துண்ணும் பண்பும் போய் நசிவான மன நிலைக்குத்தள்ளப் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். விளைவு ஒருவித வன்முறை மனநிலையைப் பெற்று பள்ளியின் ஒவ்வொரு அம்சத்தையும் வெறுக்கவும் 'பள்ளியின் உடைமைகளைச் சேதப்படுத்தவும் அபகரிக்கவும் செய்கின்றனர்.

முத்துச் செல்வன்
மணமேடு

சாகித்ய அகாடமியின் தி. க. சி. தேர்வு குறித்து அதிருப்தி இருந்தும் தி. க. சிக்கான பரிசை இலக்கியம் சாராத, அதிகார அடிவருடிகளான கோவி. மணிசேகரனுக்கும், சு. சமுத்திரத்துக்கும் கிடைத்ததோடு சமப்படுத்தி பார்க்க முடியாது. தி. க. சி. கூர்மையான விமர்சகராக இல்லாமல் இருக்கலாம். ஆனால் தமிழ் இலக்கிய சூழல் மேம்பட வேண்டும் என்று கடந்த பல ஆண்டுகளாக தன்னுடைய நிலையில் இருந்து மனப்பூர்வமாக பணியாற்றியவர். கதை, கவிதை எழுதுபவர்கள்தான் ஒரு இலக்கிய சூழலை உருவாக்குபவர்கள் என்பது அல்ல. கடிதம் எழுதுபவர்கள் கூட ஒரு இலக்கியச் சூழலை நிர்மாணிக்க முடியும். ஒரு தேர்ந்த வாசகன் கூட ஒரு இலக்கிய சூழலை உருவாக்க முடியும். ஒவ்வொருவருடைய பங்களிப்பும் ஒவ்வொரு வகையில் ஒப்பிட்டுப் பார்க்க அவசியமில்லாதபடி சூழலை முன்னே நகர்த்திச் செல்ல உதவுகிறது.

எழுத்தாளன் வாசகன் உறவு என்பது செழுமையடையாத தமிழ்ச் சூழலில் ஒரு வாசகனின் இருப்பை நிலைநாட்டியவர் தி. க. சி. ஒரு இலக்கியப் பரிவர்த்தனைக்கு அவசியமான முதல் கட்டமாக ஒரு தொடர்புத் தளத்தை உருவாக்கியவர் அவர். அந்தத் தளம் வலிமையற்றதாகக் கூட இருக்கலாம். ஆனால் அந்தத் தளத்தைப் பற்றிக்கொண்டு மேலே செல்வதற்கான ஒரு நெகிழ்ச்சியை தி. க. சி. உருவாக்கியிருக்கிறார். எந்த சந்தர்ப்பத்திலும் சூழலுக்குள் தன்னை இருத்திக் கொண்டு ஏதோ ஒரு வகையில் அதன் அங்கமாக தன்னை அடையாளம் காண்பவர். அதற்குரிய ஒரு கௌரவத்தை அவர் பெறுவதில் வருத்தங்கள் தேவையில்லை.

நாடகத்தின் தவிர்க்க இயலாத ஒரு அங்கம் தி. க. சி.

வெளி ரெங்கராஜன்
சூரத்

**ஒன்பதாம் திசையில்...**
(வித்தியாசமான நாவல்)

பா. அமிழ்தன்

பக். 231 (1 x 8 டெமி), விலை ரூ. 85

"நாவலின் கருவாக, 'முரணாக எதிர்ப்படும் நாயகன் – நாயகி இருவர்க்கும் ஏற்படும் உள்ளப் பிணைப்பை, ஒருமிப்பை, உன்னதமான பிரபஞ்சத் தத்துவமாக' ஆசிரியர் உயர்த்திக் காட்டுகிறார் ... இந் நாவலின் வெற்றிக்கு மற்றுமொரு சிறப்பு நாவலாசிரியரின் சிறந்த நடையுமாகும் ..."

– அருட்செல்வன்

அருள் புத்தக நிலையம்
12, வாணியர் வீதி
குறிஞ்சிப்பாடி 607 302
கடலூர் மாவட்டம்

படித்து விட்டீர்களா?

**அட்லாண்டிஸ் மனிதன் மற்றும் சிலருடன்**
(திருப்பூர் தமிழ்ச் சங்க விருது பெற்ற நாவல்)

எம். ஜி. சுரேஷ்

பக். 432, விலை ரூ. 250

❖❖❖

**அலெக்ஸாண்டரும் ஒரு கோப்பைத் தேனீரும்**

எம். ஜி. சுரேஷ்

பக். 320, விலை ரூ. 115

இந்த நாவல் தனது நேரற்ற வாசிப்பில் எல்லாக் காலங்களுக்கும் வாசகனை முன் பின்னாக அழைத்துச் செல்லும் அதிசயத்தை நிகழ்த்திக் காட்டுகிறது.

❖❖❖

**கனவில் பெய்த மழைப்பற்றிய இசைக் குறிப்புகள்**
(குறுநாவல்கள்)

ரமேஷ் : பிரேம்

பக். 186, விலை ரூ. 70

பின் நவீனத்துவ படைப்பிலக்கியத்தின் தேவையை இக்குறுநாவல்கள் மூலம் ரமேஷ் : பிரேம் பூர்த்தி செய்திருக்கிறார்கள்.

*வெளியீடு :*

புதுப்புனல்
32/2 ராஜி தெரு
(முதல் மாடி)
அயனாவரம்
சென்னை 600 023



படிப்பகம்

www.padippakam.com

## பெண்கள் கவிதை–ஓவியக் கண்காட்சி



கடந்த மார்ச் 4–ஆம் தேதி முதல் 8 ஆம் தேதிவரை சென்னை அருங்காட்சியக நூற்றாண்டு விழா மண்டபத்தில் கவிதை – ஓவியக் கண்காட்சி ஒன்றிற்கு கவிஞர் க்ருஷாங்கினி ஏற்பாடு செய்திருந்தார். பெண கவிஞர்களின் கவிதைகள் பெரிதாக எழுதப்பட்டு அவற்றிற்கு இயைந்த பெண் ஓவியர்களின் ஓவியங் களுடன் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்தன.

வார்த்தைகளாகவும் வண்ணங்களாகவும் தொகுக்கப் பட்டிருந்த பெண் மொழியின் தனித்துவமான அடையாளங் களைக் கண்காட்சி தீவிரத்துடன் வெளிப்படுத்தியது. கவிதை – ஓவியம் இரண்டிலுமே பரந்த அளவில் உருவாகி வரும் பெண் படைப்பாளிகளை இனம் காட்டிய இவ்வரங்கினில் இடம் பெற்றி ருந்த படைப்புகள் பார்வையாளர்களுடன் மட்டுமல்ல, தமக்குத் தாமேயும் மிக அந்தரங்கமான உரையாடலை நிகழ்த்திக்கொண்டி ருந்த உணர்வு ஏற்பட்டது. காலத்தாலும் இடத்தாலும் வேறுபட்ட இப் படைப்பாளிகள் ஒரு பொது மொழியினை சாத்தியப்படுத்திய படி பெண்ணின் இருப்பை பல்வேறு தளங்களிலும் வெளிப் படுத்தினர்.

கவிதைகள் தமிழில் பெருமளவு எழுதப்பட்டபோதும் அதன் மீது யாருக்கும் எந்த அக்கறையும் அற்ற சூழலில் கவிதைகளை கவனப்படுத்தக் கூடிய இது போன்ற அரங்குகள் சிறந்த முன்னு தாரணங்கள். மிகுந்த பிரயாசையுடன் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இவ்வரங்கு குறித்த செய்தி பரவலாக சென்றடைந்திருந்தால் இன் னும் அதிகமான பார்வையாளர்களை ஈர்த்திருக்கமுடியும். கண்காட்சியின் ஊடே பெண்கவிஞர்களின் கவிதை வாசிப்பும் நிகழ்ந்துகொண்டிருந்தது.

கண்காட்சியில் இடம் பெற்றிருந்த கவிஞர்கள் :

அமரந்தா, ஆண்டாள் ப்ரியதர்ஷினி, ஆழியாள், இளம் பிறை, உமா மஹேஸ்வரி, ஊர்வசி, அவ்வை, க்ருஷாங்கினி, பா. கல் பனா, கனிமொழி, குட்டிரேவதி, சங்கரி, சல்மா, சிவரமணி, சுகந்தி சுப்ரமணியம், நா. சுப்புலட்சுமி, செல்வி, தாமரை, திரி சடை, தேவமகள், சே. பிருந்தா, பூரணி, பெருந்தேவி, பொன்மணி, மாலதி, மாலதி மைத்ரி, இரா. மீனாட்சி, ரோஹிணி, வத்சலா, கீ. விஜயலட்சுமி, அ. வெண்ணிலா, வைகைச்செல்வி, ஜெயராதா.

ஓவியர்கள் :

அனுஷா, மினுபால், தனியா, தீபாலி, சகரி, ஷிக்கா, துர்கா, ஸ்வப்பனா, ஸ்ரீதேவி, ரஜினி கிருஷ்ணன், ரஜியா டோனி, மார்கிரேட், ஆனி, லக்ஷமிப்ரியா, லக்ஷமி ஸ்ரீநாத், உமா, தேஜோ, ரீனா, ரமா, மோனிகா, அஸ்மா மேனன், பொற்கொடி, லக்ஷமி வெங்கட்ராமன், ஆஷா, அன்புக்கதிர், சுதா நாராயணன்.

○

## தமிழ்–மலையாளக் கவிதைப் பெருவிழா :

சாகித்திய அக்காதெமியும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் இணைந்து மூன்று நாள் தமிழ்–மலையாளக் கவிதை பெருவிழா ஒன்றினை மார்ச் 27–28–29 தேதிகளில் சென்னையில் நடத்தின. தமிழ்க்கவிதை அமர்வுகள் எதிர்பார்த்தபடியே மிகவும் கேலிக்கூத்தான முறையில் நடைபெற்றன. கவியரங்கக் கவிஞர் களும், வெகுசனக் கவிஞர்களும் நவீன தமிழ்க் கவிதையின் பிரதிநிதிகளாக வெளுத்துக் கட்டினார்கள். தற்செயலாக ஒரு அமர்விற்குள் நுழைந்து வசமாக மாட்டிக்கொண்டேன். ஒரு பக்கம் மலையாளக் கவிஞர்களின் ராக ஆலாபனை. இன்னொரு பக்கம் தமிழ் சண்டமாருதங்களின் இடிமுழக்கம். தமிழ்கவிதை கடந்த ஐம்பது ஆண்டுகளில் அடைந்திருக்கும் பரிமாணங் களையும், மாற்றங்களையும் பற்றி எவ்வித சொரணையும் அற்ற வகையில், அசட்டுத்தனமாக எழுதப்பட்ட வரிகள் மூலம் பிற மொழிக்காரர்கள் முன் தமிழ்க்கவிதை அவமானப்படுத்தப்பட் டது. இந்தக் கோரத்திற்கு இடையிடையே ஆங்கில மொழி பெயர்ப்புகள் வேறு. ம. லெ. தங்கப்பா, வல்லம் வேங்கடபதி, முருகு சுந்தரம், மின்னூர் சீனிவாசன், இ. சுந்தரமூர்த்தி, தாமரை, பொன்மணி வைரமுத்து, பொன் செல்வகணபதி, புவியரசு, மேத்தா, நிர்மலா சுரேஷ், அமுதபாரதி, கபிலன் என்ற பெரும் கோலாகலத்திற்கு இடையே கலாப்ரியா, கனிமொழி, யுகபாரதி, இன்குலாப் என சில நவீன கவிஞர்களின் பெயரும் பெயருக்கு அழைப்பிதழில இடம் பெற்றிருந்தன. இந்நிகழ்விற்கு அழைக்கப் பட்டிருந்த பெரும்பான்மையான பீரங்கிக் கவிஞர்களைக் காட்டி லும் பலமடங்கு கவித்துவ வேகமும், கவிதையறிவும், நுண்மை யும், பரந்த வாழ்வியல் நோக்கும் கொண்ட நூறு கவிகளாவது குறைந்த பட்சம் தமிழில் இருக்கிறார்கள்.

இது போன்ற அமைப்புகள் நடத்தும் கவிதை அமர்வுகளின் மேல் வாசகர்களுக்கு எவ்வித மரியாதையும் இல்லை என்பதை விரல்விட்டு எண்ணக்கூடிய பார்வையாளர்களின் எண்ணிக்கை உணர்த்தியது. பெரும் பொருட்செலவில் ஏற்பாடு செய்யப்படும் இதுபோன்ற சடங்குகள் நமக்குப் புதிதல்ல என்றபோதும் இலக்கிய ப்ரக்ஞை ஏதுமற்ற நபர்களின் தனிப்பட்ட ஆசாபாசங் களுக்கு ஏற்ப நடத்தப்படும் இதுபோன்ற நிகழ்வுகளால் தமிழ் இலக்கியம் குறித்த தவறான பிம்பங்களே மிஞ்சும். நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்கு ஒரு வேண்டுகோள். உங்களுக்கு என்ன மாதிரி கவிதைகள் பிடிக்கும் என்பது அவ்வளவு முக்கியமல்ல. ஆனால் கவியரங்கக் கவிஞர்கள், மரபுக் கவிஞர்கள், வெகுஜனக் கவிஞர்கள், நவீனக் கவிஞர்கள் என தனித்தனிப் பாதை களையும் உணர்வு நிலைகளையும் உடைய படைப்பாளிகளை யெல்லாம் ஓரே தளத்தில் 'கவிஞர்கள்' என்று வகைப்படுத்தி துன்புறுத்துவதற்குப் பதில் ஒவ்வொரு வகை கவிதைகளுக்கும் தனித்தனி அமர்வுகளை ஏற்பாடு செய்யலாம். இது சமாதான சகவாழ்விற்கான குறைந்தபட்ச ஏற்பாடாக இருக்கும். கவி யரங்கு கேட்க வந்திருந்த சக நவீன பெண்கவிஞர் ஒருவர் கடும் உடல் நலக் குறைவு ஏற்பட்டு பாதியிலேயே சென்று விட்டார். எதிர்காலத்தில் உயிராபத்துகளும் நிகழ வாய்ப்புண்டு. அசம்பா விதங்களைத் தவிர்க்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

○

## ஒரு நினைவஞ்சலிக் கூட்டம் :

நம்பிக்கைக்குரிய இளம் படைப்பாளியாக உருவாகி வந்த ராஜன் அரவிந்தன் சமீபத்தில் காலமானார். சினிமா துறையிலும் ஈடுபாடு கொண்டிருந்த அவரது அகால மரணம் மிகவும் வருந்தத்தக்கது. அவரது நண்பர்கள் மார்ச் 25–ஆம் தேதி சென்னையில் நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்றை நடத்தினர். அஜயன் பாலா கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். கூட்டம் பற்றிக் கேள்விப்பட்ட சில தகவல்கள் : எஸ். ராமகிருஷ்ணன் சிறப்புரை ஆற்றினார். ஜெயமோகனின் சிறப்புரை வாசிக்கப் பட்டது. ராஜன் அரவிந்தன் இலக்கிய உலகிற்குச் சொந்தமா சினிமா உலகிற்குச் சொந்தமா என்று ஒரு பிரச்சினையை சில உதவி இயக்குனர்கள் கிளப்ப, கடைசியில் அது மரணமடைந் தவர் எந்த ஜாதிக்குச் சொந்தம் என்பதுவரை போய் கைகலப் பில் முடிந்தது. போலீஸ் தலையிட நேர்ந்ததாகவும் கேள்வி.

இரும்புக்கை மாயாவி



படிப்பகம்

www.padippakam.com





முதல் மரியாதை
அருணா - சிவாஜி

**இலக்கிய ரசனையும் திரைப்பட ரசனையும்**
அம்ஷன் குமார்

❖

**இயற்கையில் கலை**
லக்ஷ்மி வெங்கட்ராமன்

❖

**சிங்கப்பூர் திரைப்பட விழா**
லதா

❖

**ஜான் ஆபிரஹாம் : தீவிரவாதத்தின் அழகியல் : தற்செயலும் கருத்தியலும்**
யமுனா ராஜேந்திரன்



தாகம் (1974)
முத்துராமன் - நந்திதா போஸ்

# இலக்கிய ரசனையும் திரைப்பட ரசனையும்

அம்ஷன் குமார்

இலக்கியம் மிகவும் தொன்மை வாய்ந்தது. அது வரி வடிவம் கொள்ளும் முன்னர் ஒலி வடிவம் கொண்டிருந்தது. பண்டைக்கால ஞானிகளின் உபதேசங்கள், தொன்மங்கள் ஆகியன வாய் மொழியாய் அறியப்பட்ட காலத்தில் இலக்கியம் ஒலி வடிவமாகத்தான் இருந்திருக்கிறது. இன்றும் கூட நினைவில் மட்டுமே வழி வழியாகக் காக்கப்பட்டு வரும் பல கதைகளும் செய்திகளும் எழுத்து வடிவம் பெறாமல் இருக்கின்றன. பேச்சு வழக்கு மட்டுமே கொண்ட பல மொழிகளுக்கும் அதேபோல் லிபிகளும் ஏற்படவில்லை. எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் இலக்கியவாதிகளாகவும் இலக்கிய ரசிகர்களாகவும் இருந்திருக்கிறார்கள். இலக்கிய ரசனையும் படைப்பாற்றலும் நமது மக்களிடையே காணக்கிடக்கிற பண்புகள் தான்: இலக்கிய உருவங்களான சிறுகதை, நாவல், கட்டுரை போன்றவற்றை அறிந்து கொள்வதன் மூலம் இலக்கிய ரசனை முறைப்படுத்தப்படுகிறது.

ஆனால் இந்தியாவில் சினிமா ரசனை என்பது வேறானது. இதில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் தெரியாதவர்கள் என்ற பேதமில்லை. சினிமா அறியாமை - Film illiteracy - என்பது நம்மிடம் மண்டிக் கிடக்கிறது. சினிமா ரசனை என்பது சினிமா என்கிற சாதனத்தை ரசிப்பது என்கிற நேரடியான அணுகலாக இருப்பதில்லை. ஏனெனில் சினிமா பல சாதனங்களின் ஒருமிப்பு. இலக்கியம், நாடகம், ஓவியம், இசை, கட்டிடக் கலை போன்றவை. ஆனால் மேற்கின் பாரம்பரியத்துடன் சம்பந்தப்பட்ட இலக்கியம், நாடகம், ஓவியம், இசை என்பதாக அணுகல் இருக்க வேண்டும். பாரம்பரிய இந்திய இலக்கிய ஓவிய இசை அறிவு சினிமா ரசனைக்கு இட்டுச் செல்லாது. சினிமா என்கிற சாதனத்தை வசப்படுத்திக் கொண்ட பிறகு அதற்கு இந்தியக் குணாம்சத்தைத் தோற்றுவிப்பது என்பது வேறு விஷயம். சினிமா என்கிற முற்றும் வேறுபட்ட சாதனத்தை நம்மால் ஏன் இயல்பாகப் புரிந்துகொள்ள முடியவில்லை என்பதைத்தான் நாம் இங்கு பார்க்க வேண்டும். சினிமா தோன்றிய காலத்தே மேற்கில் அதை ரசிக்கிற மனோபாவமும் ஏற்பட்டிருந்ததை வரலாறு நமக்கு அறிவிக்கிறது.

சினிமா, அழகியல் மற்றும் விஞ்ஞானம் ஆகியவற்றைக் கொண்டது. அதன் விஞ்ஞானப் பாரம்பரியத்தைச் சற்று விவரித்தால் நாம் அதற்கு எந்த வகையிலும் சொந்தம் கொண்டாட முடியாதவர்கள் என்பது எளிதில் புரியும். சினிமா என்கிற சலன சாதனம் தோன்ற ஏறக்குறைய எழுபது ஆண்டுகள் விஞ்ஞான முயற்சிகள் நடைபெற்றன. லியனோர்டோ டாவின்சி காலத்திலேயே சலனம் பற்றிய சிந்தனை தோன்றியது என்ற போதிலும் அதற்கான ஆய்வு 1824ல் தான் டாக்டர் ரோஜார்ட் என்பவரால் செய்யப்பட்டது. தொடரடுக்கான புகைப்படங்களின் அசைவினைத் தோற்றுவிப்பது எவ்வாறு கண்ணால் சாத்தியப்படுகிறது என்பதுதான் அந்த ஆய்வு. அதற்குப் பிறகு Thaumatrope, Zoetrope, Magic lantern, Praxinoscope, Kinetoscope என்ற பல்வேறு கருவிகள் ஒன்றன் பின் ஒன்றாகக் கண்டுபிடிக்கப்பட்டு பிம்பத்தை திரையில் நடமாடச் செய்ய உதவின. அதே சமயம் இன்னொரு திசையில் இந்த பிம்பத்தை ரசாயன முறையில் பதிவு செய்கிற கண்டுபிடிப்புகளும் தொடர்ந்தன. ஒளி உணர்வுள்ள பொருட்கள் தூவப்பட்ட காகிதத்தில் கேமரா மூலம் பிம்பத்தைப் பதிவு செய்ய முடியும் என்ற நிரூபணத்திலிருந்து் கொடாக் பிலிம் கண்டுபிடிக்கும் வரை. இவை அனைத்திற்கும் மகுடம் வைத்தாற்போல லூமியர் சகோதரர்களின் சாதனை நிகழ்ந்தது. சினிமா என்பது இத்தகைய மேற்கத்திய விஞ்ஞானப் பாரம்பரியம் இன்றி சாத்தியமில்லை. டெலிவிஷன், கம்ப்யூட்டர் என்றெல்லாம் இந்தப் பாரம்பரியம் அங்குதான் தொடர்கிறது. நம்மிடையே விஞ்ஞானத்தை நுகர்கிற கலாச்சாரம் மட்டுமே பெருகியுள்ளது.

1895ம் வருடம் டிசம்பர் மாதம் 26ம் தேதி பாரிஸில் லூமியர் சகோதரர்கள் முதன் முறையாக பொதுமக்களுக்குப் படங்களைத் திரையிட்டனர். அன்றிலிருந்து ஆறுமாத காலத்திற்குள்ளாகவே அப்படங்கள் பம்பாயிலும் காட்டப்பட்டன. அதாவது சினிமாவிற்கான விஞ்ஞான, அழகியல் பாரம்பரியம் சரித்திரம் ஆகியவை ஏதுமின்றி அந்த சாதனம் மட்டும் திடீரென நமக்கு நுகர்வுப் பொருளாக அறிமுகமாகியது. பாரிஸில் காட்டப்பட்ட ஒற்றைக் காட்சிப் படங்களில் புகைவண்டி ரயில் நிலையத்திற்கு வந்து சேர்கிற படமும் ஒன்று. ஆனால் பெரும்பாலான இந்தியர்கள் 1896ல் புகைவண்டியைப் பார்த்தது கூடக் கிடையாது. ஐரோப்பியர்கள்



படிப்பகம்

www.padippakam.com

புகை வண்டியில் பயணம் செய்த பிறகு அதைப் படமாகப் பார்த்தார்கள். ஆனால் நம்மவர்கள் புகைவண்டியைப் படத்தில் முதலில் பார்த்துவிட்டு பின்னரே அதில் பயணம் செய்தார்கள். புகைவண்டி மட்டுமல்ல மின்சாரமும்கூட பலருக்கும் திரையரங்கில்தான் முதன்முதலாக பரிச்சயம் ஏற்பட்டது. பலரும் கூடுகிற ஓரிடத்தில் மின்சார வசதி கிடைத்தது என்பதே முதன் முதலாக இந்தியாவில் சினிமாத் தியேட்டரில்தான்.

விஞ்ஞானம், அழகியல் ஆகியன மட்டுமல்ல ஒரு கலை சாதனம் தோன்றுவதற்குக் காரணம். பொருளாதாரம், கருத்துலகம் ஆகியவற்றின் பாதிப்புகளும் பங்களிப்பும் கூடக் காரணமானவைதான். அவற்றிற்கும் நாம் சொந்தம் கொண்டாட முடியாது.

எனவே திரைப்படம் எவ்வாறு நமக்குப் புரிகிற சாதனமாக இருந்திருக்க முடியும்? நம்மைவிடவும் பின்தங்கிய சமூகங்கள் திரைப்படத்தை எவ்வாறு எதிர்கொண்டன என்பதைத் தெரிந்து கொள்வதன் மூலம் இந்த ஊடகத்தின் அந்நியத்தன்மையை நாம் அறியலாம்.

ஆப்பிரிக்க பழங்குடியினர் ஒரு சமயம் திரைப்படத்தை எவ்வாறு பார்த்தனர் என்பது பற்றி பேராசிரியர் ஜான் வில்சன் கூறுவது சுவாரஸ்யமானது. மலேரியா நோய் வராமல் தடுக்க சுகாதார முறையைக் கையாள்வது பற்றி ஒரு பிரச்சாரப் படத்தை அவர்களுக்குக் காட்டினார்கள். அது ஐந்து நிமிட நேரப் படம். படத்தைப் பார்க்க வந்திருந்த பழங்குடியினரின் எண்ணக்கை சுமார் முப்பது. படம் துவங்குகிறது. ஒரு சுகாதாரப் பணியாளர் மெதுவாக நடந்து வந்து ஒரு தகரக் குவளையை எடுக்கிறார். அதில் நிரம்பியுள்ள நீரைக் கவனமாக மண்ணில் ஊற்றுகிறார். இனிமேல் கொசுக்கள் உற்பத்தியாகிற அபாயம் இல்லை என்பதை இதன் மூலம் தெரிவித்த பின்னர் அந்தத் தகரக் குவளையை ஒரு கழுதை மேல் கட்டப்பட்டுள்ள கூடையினுள் போடுகிறார். படம் முடிகிறது. இவை அனைத்தும் வழக்கத்தைவிடவும் மெதுவான கதியில் காட்டப்படுகின்றன. விரைவாக அவர்களால் படம் பார்க்க முடியாது என்பதால். பின்னர் அவர்கள் என்ன பார்த்தார்கள் என்று கேட்கப்பட்டது. ஒருவர் உடனே கூறினார்: ''நான் கோழிக் குஞ்சைப் பார்த்தேன்.'' திரைப்படத்தை அங்கு எடுத்துவந்து போட்டுக் காட்டியவர்களுக்கே அது புதிராகத் தோன்றியது. எனவே அவர்கள் அந்தப் படத்தைத் தாங்களே ஒருமுறை கவனமாக ஒவ்வொரு பிரேமாக நகர்த்திப் பார்த்தனர். அப்பொழுதுதான் ஒரேயொரு வினாடி நேரத்தில் ஒரு கோழிக் குஞ்சு பிரேமின் வலப் பக்கமாக ஓடியிருப்பது பதிவாகியிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. ஒரு மேற்கத்தியப் பார்வையாளர் படப் பிரேமை உடனேயே முழுதாகப் பார்க்கத் துவங்கிவிடுகிறார். ஆனால் சினிமாவை அறியாத ஒரு ஆப்பிரிக்கரால் அதில் ஒரு விவரத்தை மட்டுமே மனதில் பதித்துக் கொள்ள முடிகிறது.

ஒரு பிம்பத்தின் மீது கண்கள் எவ்வாறு பார்வையை ஓட்டுகின்றன என்பதை Saccadic patterns மூலம் அறியலாம். கலாச்சாரம், கல்வி இவற்றின் தன்மைகள் பொறுத்து சமூகத்திற்குச் சமூகம் இந்த Saccadic patterns மாறுபடுகின்றன.

ஆனால் சினிமா நமக்கு வசப்பட்டிருக்கும் ஒரு சாதனம்தான். விஞ்ஞானத்தின் மூலமாகவோ பிற கலை

# இயற்கையில் கலை

**லக்ஷ்மி வெங்கட்ராமன்**

"இயற்கையில் கலை" என்று ஒரு புதிய திட்டம் இந்தியாவில் சில மாதங்களாக நடைபெற்று வரும் ஜெர்மனிய விழாவில் தொடங்கப்பட்டது. இதில் ஜெர்மானிய, இந்தியக் கலைஞர்கள் பங்கு பெற்றார்கள். இதன் தொடர்பாக ஒரு கருத்தரங்கும் டில்லியில் நடைபெற்றது.

ஜெர்மானிய பெண் ஓவியர் உல்ரிக் அர்னால்ட் இரண்டு இடங்களைத் தேர்வு செய்தார் - திருவண்ணாமலையில் அருணாசல மலை அடிவாரமும், கர்நாடகாவிலுள்ள பதாமி என்ற இடமும். பௌத்த மத குகைக் கோயில்களுக்குப் புகழ்வாய்ந்த இடம் பதாமி. சென்னையிலிருந்து புறப்பட்டதிலிருந்து உல்ரிக் செய்த நிகழ்வுகள் அனைத்தையும் வீடியோவில் படமாக்கினார் ஆர். வி. ரமணி. இது சமீபத்தில் மாக்ஸ் முல்லர் பவனில் திரையிடப்பட்டது.

இயற்கையில் இல்லாத உருவங்களா, வடிவங்களா, அல்லது நிறங்கள் மற்றும் நிறக்கலவைகளா? இயற்கையில் இல்லாத எந்த புதுவிதமான அழகை இவர் அதில் சேர்க்கப் போகிறார் என்ற கேள்வி எழுந்தது. 'ஸ்வாகம்' என்ற வீடியோ படத்தைப் பார்த்தவுடன் இந்தக் கேள்வி மேலும் ஆழமாகப் பதிந்தது.

பிரான்ஸிலும், ஸ்பெயின் நாட்டிலும் உள்ள ஆதி மனிதனின் குகைச்சித்திரங்களைப் பார்த்து தான் பிரமித்ததாகவும், அவர்கள் உபயோகித்த மண்ணிலிருந்து உண்டாக்கிய நிறங்கள் தன்னை மயக்கியதாகவும், அது முதல் தானும் அத்தகைய கலையில் ஈடுபட்டதாகவும் உல்ரிக் கூறினார்.

திருவண்ணாமலையில் ஆட்களின் உதவியோடு காட்டுக்குள் சென்று ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து, பிறகு ஒரு பெரியவரின் யோசனைப்படி சிறு கன்றுகளான ஆலும் வேலும் சேர்ந்து நடப்பட்டு, ஒரு அகல் விளக்கு அதன் முன் ஏற்றப்பட்டது. ஒரு பெரிய வட்டமாக வெட்டப்பட்ட கான்வாஸ் அதன்முன் கிடத்தப்பட்டு, அது நான்கு பாகங்களாகப் பகிர்ந்து கொள்ளப்பட்டது. முன்பாக அருகில் உள்ள சிவந்த மண்ணாலான பாம்புப் புற்றின் மண்ணை உல்ரிக் எடுத்து வைத்திருந்தார். இப்போது அது உதிர்க்கப்பட்டு, தண்ணீரில் கலக்கப்பட்டது.

காட்டுக்குள் வெயிலில் நடந்து போவதையோ, கைகளால் மண்ணில் அளைவதையோ அவர் பொருட்படுத்தவில்லை. நீரில் கலந்த செம்மண் கலவை நான்காக பகிரப்பட்ட கான்வாஸில் உல்ரிக் கையால் பூசினார். அது காய்ந்தவுடன் ஒரு பூசாரி ஒரு சிறு பூசையும் நடத்தினார். அங்கு வந்த ஒரு நாய் சுதந்திரமாக அந்த 'ஓவியத்தின்'மீது நடந்து சென்றது.

சில நாட்களுக்குப் பின் அவர்கள் - உல்ரிக் மற்றும் ரமணி - பதாமி சென்றார்கள். அங்கு குன்றுகள் நிறைந்த மனித நடமாட்டமில்லாத ஒரு பகுதிக்கு சில உதவியாளர்களுடன் சென்றார்கள். அந்தக் குன்றின் பக்கங்களில் தான் எத்தனை விதமான நிறங்கள் - இளஞ்சிகப்பு, பழுப்பு, சாம்பல்நிறம், அங்கங்கே வெள்ளைக்கோடுகள், கறுப்புக்கோடுகள் என்று! எத்தனை எத்தனை மேற்பரப்பு textureகள். பலவிதமான சொரசொரப்புகள், வழுவழுப்புகள். அங்குள்ள சிறு கற்களைப் பொறுக்கி அதைப் பொடி செய்தால் செம்மண் நிறப்பொடி கிடைக்க அதுவும் நீரில் கலக்கப்பட்டது. ஏணி வைத்து ஏறி இந்தக் கலவையை மலையின் மேற்பரப்பில் கையால் பூசினார் உல்ரிக். இந்தப்


படிப்பகம்

www.padippakam.com



களின் மூலமாகவோ அல்லாது இலக்கியத்தின் மூலமாகவே நமக்கு சினிமா சாத்தியப்பட்டிருப்பதாக நினைக்கிறேன்.

இருபதாம் நூற்றாண்டில் இந்திய இலக்கியத்தில் நிகழ்ந்த பெரும் பாதிப்பு யதார்த்தவாதம் ஆகும். சிறு கதை, நாவல், நாடகம் ஆகியவற்றில் இந்த பாதிப்பு நடந்துள்ளது. நமது படைப்புகளை உலகத்தரம் வாய்ந்த சிறுகதை, உலகத்தரம் வாய்ந்த நாவல் என்றெல்லாம் கூறிய போது உலகத்தரமான யதார்த்த வாதத்தையும் நாம் எட்டிவிட்டோம் என்பதையும் கூடுதலாகக் குறித்தோம்.

யதார்த்தவாதத்திற்கும் விஞ்ஞானத்தின் பங்கு கணிசமானது. நமது யதார்த்தவாதம் விஞ்ஞானத்தின் மூலம் அல்லாது யதார்த்தவாத இலக்கியத்தின் பாதிப்பினால் விளைந்தது என்று கூறவேண்டும். இலக்கியத்தின் வாயிலாக பரிச்சயமான இந்த யதார்த்தவாதம் பின்னர் நமது சினிமாவைப் பாதித்தது. இந்திய சினிமாவில் புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்த 'பதேர் பாஞ்சாலி' யதார்த்த வாதப் படம். முழுக்க முழுக்க இலக்கியப் பாதிப்பினால் மட்டுமே தோன்றிய படம் என்று 'பதேர் பாஞ் சாலி'யையும் இன்னும் பிற யதார்த்த வாதப் படங்களையும் கூறிவிட முடியாது என்றாலும் சினிமாவில் யதார்த்த வாதம் உருவாவதற்கு முன்னரே இந்திய இலக்கியத்தில் யதார்த்த வாதம் தோன்றியதை முக்கியமான பின்புலமாகக் கருதவேண்டும்.

நமது சினிமா ரசனையும் இலக்கிய வழி வந்ததாக உள்ளது. சினிமாவைக் கதையாகவும் கதா பாத்திரங்களாகவும் பார்க்கிற போக்கு அதிகமாக உள்ளது. யூக்லிட், பைதகோரஸ் ஆகியோரின் ஜியோமித விதிகள் சினிமா காட்சியமைப்பினை வெகுவாகக் கட்டமைத்திருக்கின்றன. நாம் இவற்றில் இன்னமும் கவனம் செலுத்தத் துவங்கவில்லை.

ஆனால் சினிமாவை இலக்கியமாகப் பாவிக்கிற போக்கு உலகெங்கிலும் பரவலாகத் தென்படுகிறது. இரண்டிலும் கதைகள் இருக்கின்றன என்பதும் சினிமாவைப் பிரபலமாக்கியது கதைப்படங்கள் என்பதும் இதற்கான காரணங்கள். இலக்கியத்தையும் சினிமாவையும் அருகருகே வைத்துப் போதிப்பதில் செர்கே எம். ஐஸன்ஸ்டீன் ஒருபோதும் உற்சாகம் இழப்பதில்லை. அவர் கூறுகிறார்: ''திரைப்படத்தில் வரும் ஷாட், கவிதை வரியைப் போல் தன் நிறைவு கொண்டதாய் தெள்ளத் தெளிவான கருத்துடன் இருக்க வேண்டும்.'' தனது மாண்டாஷ் கருத்தாக்கம் இலக்கியத்தில் ஏற்கனவே செயல் படுவதை அவர் பார்த்தார்.

இலக்கியத்தையும் சினிமாவையும் ஒப்பிடுவதில் மேலும் இரண்டு முக்கியமான பார்வைகள் உள்ளன. அவற்றை சுருக்கமாக அறியலாம். இசையைப் போல் நவீன ஓவியத்தைப் போல் சினிமாவும் கதையைத் தேர்ந்து கொள்ளாது தனக்கே உரித்தான ஒரு உலகைக் காட்ட வேண்டும். அதில்தான் அதன் வெற்றியிருப்பதாக நினைப்பவர்கள் ஒரு சாரார் உண்டு. சினிமா வலிந்து அத்தகைய உள்ளடக்கத்தைப் பெற வேண்டுமா என்ற கேள்வி எழுகிறது. சாத்தியமென்றால் இந்நேரம் அது தானாகவே நடைபெற்றிருக்கும். சினிமா பேச முற்பட்டபோது பலரும் அதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். மௌனப் படம்தான் சினிமா என்ற நிலைப்பாடுக்கு அழகியல் ரீதியான காரணங்கள் எதுவுமில்லை என்பதும்

---



பூச்சில் எந்த ஒரு ப்ரத்யேகமான உருவமோ, வடிவமோ இருக்கவில்லை. பிறகு நடந்துகொண்டே, அங்கங்கே பாம்பு உரித்துக் கிடந்த சட்டைகளில் மேலும் செங் கலவையைப் பூசினார். பாம்புச் சட்டை அவரை மிகவும் கவர்ந்ததாம்.

அந்தந்த இடங்களில், சில நாட்கள் வசித்து, மக்களுடன் பழகி, அவர்கள் உணவைத் தானும் சாப்பிட்டு, அந்த இடத்தின் உணர்வை உள்வாங்கிக்கொண்டதாகக் கூறப்படுகிறது. மண்ணைக் கையாளுவதால் 'பூமித்தாயுடன்' உறவு வளர்ப்பதாகவும், அதேபோல் முடிந்த ஓவியத்தைவிட அதைச் செய்யும் முறைதான் முக்கியமானதென்றும் கூறப்பட்டது. சரி. அந்தப் படத்தில் பார்த்த வரையில் இதில் ஓவியம் எங்கே இருக்கிறது? கலை எங்கே இருக்கிறது? இயற்கையில் சுயமாக இருப்பதைவிட, இருந்ததைவிடப் புதிதாக என்ன உருவாக்கப் பட்டது? அங்கு வரையப்பட்டுள்ள 'ஓவியங்களை' யார் பார்க்கப்போகிறார்கள்? உண்மையில், இயற்கையில் அழகாக இருந்த மலைச்சரிவும் அதன் நிறங்களும் செம்மண் கலவையால் மறைக்கப்பட்டது! ஒளிவுமறைவின்றி எல்லாவற்றையும் ரமணி படம் பிடித்துக் காண்பித்துவிட்டார். சில பகுதிகளில் படமாக்கப்பட்ட விதம் அழகுணர்ச்சியைத் தூண்டுவதாக இருந்தது. உல்ரிக் ஒரு வருடம் கழித்துத் திரும்ப வந்து அவை எந்த நிலையில் உள்ளன என்று பார்க்க விரும்புவதாகக் கூறினார். ஆனால் அவரேகூட ஒரு வழிகாட்டி இல்லாமல் அந்த இடங்களை அடைய முடியும் என்று தோன்றவில்லை.

ஆதிமனிதனின் குகை ஓவியங்களில் அவன் வாழ்க்கை முறை தெரிகிறது. மொழிகள் உருவாகாத காலத்தில் - செயற்கையான நிறங்கள் உண்டாக்கப்படாத காலத்தில் - மனிதன் தன் வாழ்க்கையைப் பதிவு செய்ய, இயற்கையில் அவனைச் சுற்றியிருந்த கல்லையும் மண்ணையும் வைத்து, அப்போது அவனுக்குத் தெரிந்த வகையில் எழுதிய ஓவியங்கள் அவை. அந்த வரைவுகளின் நிறங்களின் மூலம் - வெண்மை, மஞ்சள், சிகப்பு - அவை எந்தக் காலங்களில் வரையப்பட்டன, அந்தந்தக் காலங்களில் மனிதனின் வளர்ச்சி எப்படி இருந்தது, எந்த வகையான மிருகங்கள் வாழ்ந்து வந்தன, மனிதன் எப்படி வேட்டையாடினான், எதைச் சாப்பிட்டான் என்று பல தகவல்களை நாம் இன்று அறிய முடிகிறது. ஆனால் உல்ரிக்கின் 'ஓவியங்களிலிருந்து' பின்வரும் சந்ததிகள் என்ன புரிந்துகொள்ளப் போகிறார்கள்? சமகாலத்தில் உள்ளவர்களேகூட இந்த விதமான 'இயற்கையில் கலை'யின் மூலம் என்ன உணர முடியும்? அதை வரைந்தவர்களே உடன் வந்து தான் என்ன நினைத்துக்கொண்டிருந்தேன் என்று சொன்னால் ஒழிய! ■



படிப்பகம்

www.padippakam.com



இப்பொழுது நிரூபணம் ஆகிவிட்டது.

இன்னொரு பார்வை. பல ஆயிரம் ஆண்டுகளாக இலக்கியத்தில் எதையெல்லாம் சொல்ல முடிகிறதோ அதையெல்லாம் ஒரு நூறு வருடங்களுக்குள்ளாகவே சினிமாவில் சொல்ல முடிந்திருக்கிறது என்னும் கருத்து. இதில் சாதனங்களைப் பற்றிய அடிப்படைகளைப் புரிந்து கொள்ளாத பலவீனம் தெரிகிறது. இலக்கியம் பல ஆயிரம் ஆண்டுகளாக இருக்கிறது என்பதால் அது பல ஆயிரம் ஆண்டுகளாக வளர்ந்து வருகிறது என்று நினைப்பது தவறு. இது வள்ளுவரைவிட, கம்பனைவிட, ஷேக்ஸ்பியரைவிட நமது நவீன இலக்கியம் மேம்பட்டது என்று சொல்வதற்கு ஒப்பானதாகும். இலக்கியம் என்று தோன்றியதோ அன்றே அது இலக்கியத்திற்குரிய வளர்ச்சி அனைத்தையும் பெற்றுவிட்டது. ஒவ்வொரு காலகட்டத்திற்கும் மனித நாகரீக வளர்ச்சிக்கும் ஏற்ப இலக்கிய வெளிப்பாடுகள், உத்திகள், மாற்றங்கள், புதிய உள்ளடக்கங்கள் ஆகியவை ஏற்படுகின்றன. ஆனால் இவற்றையெல்லாம் வளர்ச்சி என்று கொள்வது தவறு. வளர்ச்சி பெற்ற ஒன்றாக இருப்பதனாலேயே காலந்தோறும் நடைபெறும் மாற்றங்களை இலக்கியத்தினால் பிரதிபலிக்க முடிகிறது.

அதுபோலவே சினிமாவும். சினிமா அதன் சாத்தியக்கூறுகள் அனைத்துடனும் 1895லேயே பிறந்து விட்டது. எனவே எந்த வகையான இலக்கியத்தை எந்தெந்த இலக்கியக் கூறுகளை சினிமா சுவீகரிக்க முடியுமோ அவற்றையெல்லாம் சினிமா உடனேயே தனதாகப் பாவிக்கத் தொடங்கிற்று.

இலக்கியத்தை அப்படியே சினிமாவரிக்க முடியாது. அவ்வாறு செய்தால் அது பரிதாபகரமாக இருக்கும். ரோலண்ட் பார்த், புகைப்படம், ஓவியத்தினை முற்றாகப் பிரதி செய்ய எத்தனிக்கையில் விளையும் ஒவ்வாமையைக் குறிப்பிடுகிறார். புகைப்படம் ஓவியம் போல உருவாக்கப்படுகிறது. ஆனால் ஓவியம் இவ்வாறு சுயபிரக்ஞையுடன் ஓவியமாவதில்லை. ஒரு ஆதிவாசியின் ஓவியத்தில் உருவங்கள், காலக் குறியீடுகள் போன்றவை தென்படலாம். ஆனால் அதில் தென்படும் ஆன்மீக உணர்வு கட்டமைக்கப்பட்ட ஒன்றல்ல. அவ்வுணர்வு அதில் இயல்பாகவே நீக்கமற நிறைந்துள்ளது. புகைப்படத்தினால் இதனை அடைய முடியாது.

சினிமா ஏனையவற்றிலிருந்து கொள்ளும் பெரும் வேறுபாடு அது ஒரு பதிவு செய்யும் சாதனம் என்பது. பதிவு மாற்ற முடியாத ஒன்றாகவும் விளங்குகிறது. இலக்கியம் மொழிகளைக் கடந்திருக்கிறது. ஹீப்ரூ, லத்தீன், கிரேக்கம், பாலி, சம்ஸ்கிருதம் ஆகியவற்றில் தோன்றிய எழுத்துக்கள் இன்று பிற மொழிகள் மூலமாகத்தான் அறியப்படுகின்றன. ஒரு ஃபெலினியின் படத்தை இவ்வாறெல்லாம் மாற்ற முடியாது. ஓவியம், சிற்பம் ஆகியனவற்றிற்கும் இந்த இயல்பு உண்டு. ஆனால் சினிமாவில் எல்லாமே தொடர்நிகழ் காலத்தில் நடைபெறுகிறது. தொழிலாளிகள் தொழிற்சாலையிலிருந்து வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். காதலர்கள் முத்தமிட்டுக் கொண்டிருக்கிறார்கள். எனவே சினிமா ரசனையும் கணத்தில் நிகழ்ந்துவிடுகிறது.

சாதனங்களின் வாயிலாக நிகழ்கிற ரசனை சாதனங்களைக் கடந்து செல்கிறது. சாதனங்களின் நுணுக்கங்களைப் பரிச்சயம் கொள்வதே அவை காட்டும் வாழ்வியலை அறிந்து கொள்ளத்தான். இங்கு இலக்கிய ரசனையும் சினிமா ரசனையும் ஒன்றாக இணைகின்றன.

ரித்விக் கட்டக்கின் ''பாரி தேகே பலியே'' படம். அதில் ஒரு சிறுவன் கிராமத்திலுள்ள வீட்டிலிருந்து தந்தையின் அடி உதைக்குப் பயந்து கல்கத்தா ஓடி வந்துவிடுகிறான். அங்கு அவனுக்கு விளையாட்டுப் பொருட்கள் செய்கிற கைவினைக் கலைஞன் ஒருவனுடன் நட்பு ஏற்படுகிறது. மகனது இருப்பிடத்தைத் தெரிந்து கொண்டு மனம் மாறிய தந்தையும் அவன் திரும்பிவர ஏற்பாடு செய்கிறார். கல்கத்தாவிலிருந்து கிளம்புவதற்கு முன் ஹுக்ளி நதிக் கரையில் இருவரும் அமர்ந்திருக்கிறார்கள். தனக்கு நகரத்தில் புகலிடம் தந்த கைவினைக் கலைஞனையும் கிராமத்திற்கு வருமாறு அழைப்பு விடுக்கிறான். அதற்கு கைவினைக் கலைஞன் கூறும் பதில் அசாத்தியமான லட்சிய வேகம் கொண்ட மனிதர்கள் இந்த உலகில் எங்கெல்லாமோ அடையாளம் தெரியாமல் உலவுவதை உணர்த்துகிறது. இவ்வுணர்த்துதலை அளிப்பதுதானே ரசனை? அக்கலைஞன் கூறுகிறான் : ''தம்பி உன்னைப் போல எத்தனையோ சிறுவர்கள் தினமும் இந்த நகரத்திற்கு ஓடி வருகிறார்கள். ஆனால் கல்கத்தா பொல்லாத நகரம். அவர்களைக் காப்பாற்ற நானும் இங்கே இல்லாவிட்டால் அவர்களது கதி என்ன ஆவது?''

(சாகித்ய அகாதமியும், சங்கரதாஸ் சுவாமிகள் நிகழ்கலைப் பள்ளி, புதுவை பல்கலைக் கழகமும் இணைந்து நடத்திய கருத்தரங்கில் 22-1-2001 அன்று வாசிக்கப்பட்ட கட்டுரை.)

## சிங்கப்பூர் திரைப்பட விழா

சிங்கப்பூர் 14வது அனைத்துலக திரைப்பட விழாவில் "கண்டு கொண்டேன் கண்டு கொண்டேன்" தமிழ்ப் படம் திரையிடப்படுவதாக இருந்தது. ஆனால் அந்தப் படம் நீக்கப்பட்டு விட்டது.

இந்தப் படம் ஏற்கனவே சிங்கப்பூர் திரையரங்குகளிலும் தொலைகாட்சி 12லும் திரையிடப்பட்ட படம் என்று தமிழ்முரசு சுட்டிக்காட்டிய போது, சிங்கப்பூர் அனைத்துலக திரைப்பட விழா இயக்குநர் திரு பிலிப்ஸ் சியா வியப்புத் தெரிவித்தார். உடனே "இனி அந்தப் படம் பற்றி மறு பரிசீலனை செய்ய வேண்டாம்" என்றார். விழாவில் திரையிடப்படும் படம், சிங்கப்பூர் வர்த்தக ரீதியாக திரையரங்கங்களில் திரையிடப்பட்டிருக்கக் கூடாது என்பது திரைப்பட விழா விதிமுறைகளில் ஒன்று.

கடந்த 14 ஆண்டுகளாக சிங்கப்பூரில் நடைபெற்று வரும் அனைத்துலகத் திரைப்பட விழாவில் இந்திய மொழிப் படங்கள் திரையிடப்பட்டு வந்தபோதும், இதுவரை தமிழ்ப்படம் திரையிடப்பட்டதே இல்லை. சிங்கப்பூரின் நான்கு அதிகாரத்துவ மொழிகளில் தமிழும் ஒன்று என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.

சிங்கப்பூர் அனைத்துலக திரைப்பட விழாவில் முதல் முறையாக தமிழ்ப் படத்தை திரையிட இந்த ஆண்டு முடிவு செய்யப்பட்டது. அதுவும் கடைசியில் இப்படியாகி விட்டது.

சிங்கப்பூர் 14வது அனைத்துலக திரைப்பட விழா ஏப்ரல் 11ம் தேதி முதல் 28ம் தேதி வரை சிங்கப்பூரில் நடைபெற்றது. 45 நாடுகளைச் சேர்ந்த ஏறக்குறைய 300 படங்கள் இந்த ஆண்டு விழாவில் திரையிடப்பட்டன. ஆசிய மொழிப் படங்களில் ஜெயராஜ் இயக்கிய "பாஃதோஸ்" (கருமம்), ஜெகமோகன் இயக்கிய "சாண்ட்ஸ்ட்ரோம்", புத்தாதேப் தாஸ் குப்தாவின் "ரெஸ்ட்ரல்லர்ஸ், தீ" ஆகிய மூன்று இந்திய மொழிப் படங்கள் காட்டப்பட்டன. ஆசிய திரைப்படத் தயாரிப்பை ஊக்குவிக்க, இவ்விருது 1991ல் தொடங்கப்பட்டது.

ஆண்டுதோறும் நடைபெறும் சிங்கப்பூர் அனைத்துலக திரைப்பட விழா, தகவல் கலைகள் அமைச்சு, சிங்கப்பூர் திரைப்பட ஆணயம், சிங்கப்பூர் பயணத்துறைக் கழகம், தேசிய கலைகள் மன்றம் ஆதரவில் நடைபெற்று வருகிறது. திரைப்பட விழா பற்றிய விவரங்களை www. filmfest. org.sg என்ற இணையப் பக்கத்தில் பார்க்கலாம்.

லதா, சிங்கப்பூர்



படிப்பகம்

www.padippakam.com



# ஜான் ஆபிரஹாம் :
## தீவிரவாதத்தின் அழகியல் : தற்செயலும் கருத்தியலும்

யமுனா ராஜேந்திரன்

ஜான் ஆபிரஹாமின் சினிமாவும் வாழ்க்கையும் சினிமா பற்றிய அவரது கோட்பாடுகளும் 'கலகக்காரனின் திரைக்கதை' என்ற புத்தகமாக ஒரு வரலாற்றுச் சந்திப்பில் வெளியாகியிருக்கிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றி, செல்வாக்குப் பெற்று, அனைத்துத் துறைகளிலும் பாதிப்புச் செலுத்திய மார்க்சியச் சிந்தாந்தம், சோவியத்தின் வீழ்ச்சி, புரட்சிக்குப் பிந்திய சமூகங்களில் தோன்றிய பிரச்சினைகளால், நெருக்கடிக்கு உள்ளாகியிருக்கிறது. பல்வேறு கோஷங்கள் இன்று அர்த்தமற்றுப் போய்விட்டன. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் ஒரு புதிய வர்க்கத்தின் சர்வாதிகாரமாகியதன் பின் புரட்சிகர சமூகங்களில் ஜனநாயகம் குறித்த கேள்விகள் பலமாகக் கேட்கப்படுகின்றன. புரட்சியில் வன்முறையினதும் அதனது தார்மீகத் தன்மையினதும் பற்றிய அழுத்தமான கேள்விகள் புரட்சிகர சமூகங்களில் ஏற்பட்ட மனித உரிமை மீறல்களால் உருவாகியிருக்கின்றன. தேசியக் கருத்தியலும் துப்பாக்கி ஏந்திப் போராடுதலும் நிபந்தனையற்ற புரட்சிகர சமூகத்தை உருவாக்கும் என்பது பொய்யாகிப் போனது. புரட்சிகர கோஷங்களை இன்று பாசிசமும் ஸ்வீகரிக்க முடியும் என்பது தெளிவாகியிருக்கிறது.

மூன்றாவது சினிமாக் கோட்பாடு அல்லது மாற்றுச் சினிமாக் கோட்பாடு, மூன்றாம் உலகின் விடுதலைப் போராட்டங்கள் உக்கிரமாக இருந்த வேளையில், ஏகாதிபத்திய பொழுதுபோக்குச் சந்தைச் சினிமாவுக்கு எதிராகவும் குட்டி முதலாளித்துவ அழகியலாளர்களின் நேர்த்தியான சினிமாவுக்கு எதிராகவும் எழுந்தது. குறிப்பாக, கியூபா விடுதலையை மையமாகக் கொண்டு இலத்தீன் அமெரிக்க இயக்குனர்கள் மூன்றாவது சினிமாக் கோட்பாட்டை வலியுறுத்தினர். அவர்கள் அமெரிக்க ஹாலிவுட் சினிமாவை விமர்சித்த பின்னணியிலிருந்துதான், 'மக்களிடம் சென்று அடைய வேண்டும்' எனும் நோக்கில் எளிமையை வலியுறுத்தி நேர்த்தியற்ற சினிமாவின் அழகியல் உருவானது. இந்த நேர்த்தியற்ற சினிமாவின் அழகியல், பிரம்மாண்டமான ஹாலிவுட் செலவினத்திற்கு எதிராகவும், அதன் நேர்த்தியான எடிட்டிங், வண்ணம் போன்றவை தேர்வு செய்யும் தேர்ந்தெடுத்த காட்சிக் கட்டமைப்புக்கு எதிராகவும் உருவானது. ஏனெனில், இவ்வாறு தேர்ந்தெடுத்துச் செய்யப்படும் காட்சிக் கட்டமைப்பு ஆதிக்கக் கருத்தியல் தன்மை கொண்டது. ஆனால், ஒடுக்கப்பட்ட மக்களின் கருத்தியலைச் சொல்லக்கூடிய நேர்த்தி கொண்ட சினிமாவை உருவாக்கும் சாத்தியம் உண்டு என்பதும் இங்கு உள்ளுறையாக இருக்கிறது. நேர்த்தியற்ற சினிமாவை எக்காலத்துக்கும் இலட்சியப்படுத்திக் கொள்ளும் மாயை இங்கு இடம் பெறுவதில்லை.

இன்று சொலானஸ் துப்பாக்கிப் பிரதிமையை முன்னிறுத்திய மூன்றாவது சினிமாதான் ஒரே மூன்றாவது சினிமா என்பதை ஒப்புக் கொள்ளவில்லை. அவர், "முப்பது வகையான மூன்றாவது சினிமாக்கள் இருக்க முடியும்" என்கிறார். மூன்றாவது சினிமாக் கோட்பாடு தோன்றிய இலத்தீன் அமெரிக்காவில் நிகராகுவாவின் ஸான்டினிஸ்டா இயக்கத்தின் அனுபவங்களும், எல் ஸால்வடாரின் எப். எம். எல். இயக்கத்தின் அனுபவங்களும் இருக்கின்றன. அதைப் போலவே, சமீபத்திய ஸபடிஸ்டாக்களின் எழுச்சியும் இருக்கிறது. இத்தகையதொரு பின்னணியிலிருந்துதான் இன்று இந்தியாவில் மாற்றுச் சினிமா பற்றிய ஜான் ஆபிரஹாமின் கருத்துக்களை அணுகுதல் வேண்டும்.



ஜான் ஆபிரஹாம்

தொகுப்பாளர் தனது முன்னுரையில் சொல்வதுபோல் (ஆர். ஆர். சீனிவாசன் : 13) ஜானின் அனைத்து நடவடிக்கைகளும் கோட்பாட்டினடிப்படையில் திட்டமிட்டவை அல்ல. அவரது சினிமா பற்றிய கருத்துக்களும் நடைமுறையும் அவரது வாழ்வு குறித்த பார்வைகளும் நிறைய தேர்வுகளையும் அதே வேளை தற்செயல்களையும் கொண்டிருக்கின்றன. சினிமாவின் நேர்த்தியில் லாபரடரியில் தீர்ந்துவிடும் பிரச்சினைகள் (ந. முத்துச்சாமி : 146) குறித்து ஜான் உணர்ந்தேயிருக்கிறார். நேரமும் பொருளியல் வளமும் இருந்திருக்குமானால், இந்த நேர்த்தியின்மைகளை சமப்படுத்தியிருக்க முடியும் என்றும் அவர் கருதியிருக்கிறார். ஆகவேதான், *"1978இல் அக்ரஹாரத்தில் கழுதை வெளிவந்தது. படத்தை நான் பார்த்தபோது, கதையை இன்னும் சிறப்பாகச் செய்திருக்கலாமே என்று தோன்றியது. பொருளாதாரப் பற்றாக்குறையினால் நினைத்தபடி சிலவற்றை திரைக்குக் கொண்டுவர முடியவில்லை. தொழில்நுட்பத்தை அலசும்போது பல குறைபாடுகள் இருக்கும். ஆனால், அஃது எதுவுமே சினிமாவின் சாரத்தினை வெகுவாகப் பாதிக்கவில்லை"* (ஜான் : 20) என்று அவரால் சொல்ல முடிகிறது.

இத்தகையதொரு மாற்றுச் சினிமாவுக்குக் கடன் தரக்கூடிய நிறுவனங்களும் அமைப்புகளும் இருக்குமெனில் அவற்றைப் பயன்படுத்துவதிலும் அவருக்குப் பிரச்சினையில்லை. *அக்ரஹாரத்தில் கழுதைக்காக*, அரசு கொடுக்கவிருந்த பணத்தைப் பெற்றுக் கொள்வதிலும் அவருக்கு பிரச்சினையில்லை. அவரது கோபமெல்லாம் அதிகாரமாக இறுகிய அமைப்புக்களின் மீதும் சினிமா அறியாத அழுகுணிகளின் மீதும்தானே ஒழிய – சாத்தியப்படுமானால் – இத்தகைய அமைப்புக்களையும் பொருளியல் வளத்தையும் பயன்படுத்திக் கொள்வதில் அவருக்கு ஆட்சேபமிருப்பதாகத் தெரியவில்லை. இதை ஏன் வலியுறுத்திச் சொல்ல வேண்டியிருக்கிறதெனில், நிலவும் சமூக அமைப்பில் தற்செயலாக உருவான இந்த நடைமுறைகளை இலட்சியமயப்படுத்திக் கொள்வதில் உள்ள



படிப்பகம்

www.padippakam.com





அபத்தத்தைச் சுட்டிக்காட்டுவதன் பொருட்டுதான்.

ஒரு படைப்பாளி எனும் அளவில் ஜானின் பார்வைகள் இந்திய மரபின் குருசிஷ்ய உறவினாலும், துறவு மனப் பான்மையினாலும், தன்மோகத்தி னாலும் உந்தப்பட்டதாகும். "பழங்குடி இயல்பு – தொன்மங்கள் – புராணங் கள் வாழ்க்கைக்கு உள்ள உறவு – திரா விட இயல்பு – இன இயல்பு – பழங் குடி இயல்புதான் இங்கேயுள்ள மனித னின் சரியான குணாம்சம்" (ஜான் : 26 – 27) என்கிற அவர், தொடர்ந்து, "மூன்றாவது கண் – ஞானத்தின் கண் மூலமே பார்க்க வேண்டும்" (ஜான் : 30) என்று சொல்லிவிட்டுத் தொடர்ந்து தானெனும் தன்னிலை களை முன்நிறுத்துகிறார். "ஒரு குழு வின் கூட்டு முயற்சியே என்னுடைய சினிமா. எனினும் இறுதியில் அதன் படைப்பாளி நானே" (பக்கம் : 31) என்று முடிவு கட்டிவிட்டு குருவின் ஸ்தானத்துக்கு உயர்ந்து விடுகிறார். "அறிதல் என்ற தளத்தில் அவர்களின் சுய எழுச்சிக்கு உதவுவதில் கவனம் செலுத்துகிறேன். அறிதல் என்ற தளத்தில் அனைத்தும் அடங்கும். ஒரு மனிதனை மனிதனாக்குவது அதுதான். தான் சிந்திக்கும் தளத் திற்கு மற்றவர்களையும் கொண்டு வருவதும் அவர்களை பிரக்ஞை உள்ள வர்களாக்குவதும்தான் ஒரு குருவின் வேலை" (ஜான் : 54).

இந்திய ஐதீகங்களையும் புராணி கங்களையும் பாசிசக் கருத்தியலின் வளர்ச்சிக்கு பாவிக்கக்கூடிய ஓர் அரசியல், சாவர்க்கர் காலம் தொடங்கி அத்வானி காலம் வரை இருந்து வருகிறது. பிரிட்டிஷ் காலனிய எதிர்ப்பில் இந்து மத ஆரிய இன பாசிசத்தின் வேர்கள் தொடந்து இருந்து வந்திருக்கின்றன. இச்சூழ லில் அதீதமாக இந்துப் புராணிகங் களையும் நம்பிக்கைகளையும் கொண் டாடுவதில் உள்ள ஆபத்தை ஒருவர் உணர்ந்தே ஆக வேண்டியிருக்கிறது. இத்தகைய காரணங்களினாலேயே இன்று மூன்றாவது சினிமா பற்றிய விவாதங்கள் ஏகாதிபத்தியம், ஹாலி வுட் சினிமா என்பதையும் தாண்டி மத இன பாசிசத்திற்கு எதிராகவும் உலகமயமாதலுக்கு எதிரானதாகவும் விரிய வேண்டியிருக்கிறது.

ஜான் சொல்கிறார் : "நான் பெய ரில் கிறிஸ்தவன் என்றாலும் குட்ட நாட்டுக்காரனான நான் ஹிந்துப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியிலுள்ள வன். என் முன்னோர்கள் ஹிந்துக் கள். கிறிஸ்தவ மதம் என் மேல் திணிக்கப்பட்டது. அப்படித் திணிக்கப் பட்ட கருத்துக்களைவிட என்மேல் வேரூன்றியிருப்பது பாரம்பரியமாக என் இரத்தத்திலும் என் கலாச்சாரத் திலும் பின்னிக்கிடப்பது ஹிந்துப் பழக்கவழக்கங்களும் கருத்துக்களு மாகும். என் முந்தைய படங்களில் அதிகமான இந்துக் கருத்துக்களுண்டு என்ற விமர்சனம்கூட வந்தது" (ஜான் : 84).

"அம்மா என்ற கருத்தாக்கம் பிற நாடுகளில் நிலைத்திருந்தது போலல்ல இந்தியர்களாகிய நம்மவர்களுடை யது. அது சக்தியின் ஊற்றுக்கண். தெளிவாகச் சொன்னால் புருஷ சக்தியின் சரியான ஊற்றுக்கண் இருப்பது பெண்களிடமே அல்லது தாயிடம். எந்த ஒரு சித்தாந்தமானா லும் எந்த தத்துவ அடிப்படையின் வாயிலாக சிந்தித்தாலும் மானுடக் குலத்தின் பேரழிவு வேதகாலக் கலாச்சாரத்தின் அடிப்படையில் சொன்னால் பெண் அல்லது சக்தி யின் பேரழிவாகும். இந்தத் தத்துவம் தான் *அம்ம அறியான்* என்ற சினிமா வில் கையாளப்பட்ட விஷயத்திற்கு அடிப்படை" (ஜான் : 22).

ஜானின் தாய்மை மற்றும் அம்மா குறித்த கருத்தாக்கங்கள் மிகுந்து உணர்ச்சிவயமானவையாகவும் இலட்சியப்படுத்திக் கொள்வதாகவும் தோன்றுகின்றன. தாய்மையைப் போற்றுவதும் அம்மாவின் மேன்மை யில் கரைவதும் அம்மா எனும் கருத் தாக்கத்தில் உள்ள அரசியல் முக்கி யத்துவமும் இந்திய மரபுக்கு மட்டுமே உரியதல்ல. இன்னும் அம்மா எனும் கருத்தை இந்தியப் புராணிகங்களோ டும் தெய்வங்களோடும் தொடர்பு படுத்துகிறபோது அங்கு பகுத்தறிவை விட இலட்சியப்படுத்திக் கொள்ளும் உணர்ச்சிவசமே மிஞ்சி நிற்கிறது. அம்மா எனும் கருத்து இயல்பிலேயே புனிதமான ஒன்று அல்ல. அம்மா எனும் பெயரில் பாசிசமும் நிலை நாட்டப்படலாம். தாட்சர், கோல்டா மேயர், சந்திரிகா, இந்திரா காந்தி போன்றோரெல்லாம் அதற்கு உதார ணங்கள். ஆகவே பகுத்தறிவுபடியு மான அம்மா குறித்த பார்வையே இன்று பொருத்தமுடையதாகும்.

சினிமாவில் ஈடுபடும் பிற கலைஞர் களின் ஆளுமை குறித்த ஜானின் பார்வை அவர்களின் இயங்கும் ஆற்றலையும் தமது வெளிப்பாட்டுச் சாதனங்களின் வழி செயல்படும் அவர்தம் பங்களிப்பையும் நிராகரிக் கும தன்மை கொண்டதாகும். ஜான் சொல்கிறார் : "கலைஞனின் சொந்த அடையாளம் அதாவது பார்வை (vision) உருவாக வேண்டும். (*நான் எனது சினிமா : ஜான் : 24*) அவர்கள் எனக்காகத்தான் பணிபுரிகிறார்கள். எனது கருத்துக்களின் வெளிப்பாட்டுக் காகவே அவர்கள் காமெராவை இயக்குகிறார்கள். நடிக்கிறார்கள். அங்கே சமரசங்களின் பிரச்சினையே கிடையாது. அவர்களின் ஆலோச னைகளை நான் ஏற்றுக் கொள்ளும் போது அவை எனது படைப்புக்கான அவர்களின் பங்களிப்புகள். அதுதான் படைப்புத் திறன். சினிமா என்பது ஒளிப்பதிவு தான். ஆனால் நான்தான் முதலில் ஒளிப்பதிவை மேற்கொள் கிறேன். எடிட் செய்கிறேன். (ஜான் : 25). இயக்குனர் மடையனாக இருந்தால் மட்டுமே திரைக்கதாசிரியன் சினிமா வாக மாறும். இயக்குனரின் திறமை யின்மையால்தான் திரைக்கதை மட் டும் வெற்றி பெறுகிறது"(ஜான் : 25).

இன்றைய சூழலில் சினிமா எனும் அமைப்பு, நடிகர்கள், தொழில்நுட்பக் கலைஞர்கள், அவர்தம் கூட்டுழைப்பு போன்றவை குறித்த ஜானின் கருத் துக்கள் மிகுந்த சர்ச்சைக்குரியன. இதைப் போலவே கலைஞன், அவ னது நடத்தைகள், வாழ்வு பற்றிய அவனது பார்வை போன்றவை குறித்த ஜானின் கருத்துக்களும் வாழ் முறையும் மிகுந்த விமர்சனத்துக்குரி யன. அவர் மேற்கொண்ட வாழ்முறை களைக் கொண்டாடுவது என்பதை யும் விமர்சன நோக்கில் அணுக வேண்டியிருக்கிறது. சினிமாவை அவர் கூட்டுழைப்பாகப் பார்க்க வில்லை. சினிமாவில் ஈடுபடுவோரின் பல்துறை ஆளுமைகளையும் அத னது இயங்கு ஆற்றல்களையும் உயி ருள்ள ஜீவிகள் எனும் அளவில் மரி யாதை செய்பவராகவும் அவர் இல்லை. நடிகன் பற்றிய அவரது பார்வை மிகுந்த ஜடத்தன்மை கொண்டது. கருத்தியலுக்கும் பல்துறை தேர்ச்சிக் கும் உள்ள உறவு குறித்தும் அவர் அக் கறை கொண்டதாகத் தெரியவில்லை.

இந்திய மரபில் ஒரு கலைஞன் என்பவனை யோகியைப் போலப் பார்க்கும் பார்வையிலேயே அவருக்கு ஆகர்ஷிப்பு இருந்திருக்கிறது. தனி நபரின் ஞானம், மூன்றாவது கண் தரிசனம் போன்ற கருத்தமைவுகளில் இருந்தே அவரது சினிமாவில் செயல் படும் நபரின் மீதான பார்வையும் அமைகிறது. இன்றைய நிலையில் தனிநபரின் அகந்தையைக் கூட்டு ழைப்பில் கரைத்துக் கொள்ளவேண்



படிப்பகம்

www.padippakam.com



டிய சூழ்நிலை சினிமாவில் இருக்கிறது. கருத்தியல் ஒற்றுமையும் கூட்டுழைப்பும் பல்துறை மேதமைகளின் கலப்பும்தான் இன்று உன்னத சினிமாக்களையும் உருவாக்கும்.

ஜானுடைய சினிமா இயக்குனர் எனும் கருத்தாக்கம்கூட இந்திய மரபின் குரு ஸ்தானத்திலிருந்து போதிப்பது, தனிமனித தத்துவ தரிசனம் கொண்டது – சுயவிடுதலை அல்லது முக்தி தேடியது எனும் அடிப்படையிலேயே அமைகிறது. பின்வரும் அவரது கருத்துக்களே அவரது இந் நிலைபாட்டுக்குச் சாட்சியங்களாக அமைகின்றன : ''நான் புதிதாக எதையாவது படைக்க விரும்பினேன். அதுவே எனக்குப் பெரும் பிரச்சினையாக இருந்தது. அதாவது நமக்குரிய முறையில் ஏதாவது ஒரு படைப்பு. அது முழுமையாக என்னிலிருந்தே வரவேண்டும். அதுதான் அன்றைய எனது சிந்தனைப் போக்கு (*ஜானைப் பற்றிய ஜான் : 19*). காமெராமேனின் உடல்ரீதியான பங்களிப்பு – சினிமா நடிப்பு உடல்ரீதியான வேலை – உணர்வை என்னால் உருவாக்க முடியும் (*ஜான் : 57 – 58*). சினிமா ஒரு கூட்டுக் கலை அல்ல. ஜான் ஆப்ரஹாம் இயக்கும் சினிமா ஜான் ஆப்ரஹாமின் சினிமாவாகும். தீர்மானங்கள் எடுப்பது நானே. I am the Hitler of my cinema" (*ஜான் : 79*).

ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் முக்கியமான பிரச்சினைகளாகத் தோன்றாத கோட்பாடுகள் பிற்காலத்தில் மிக மோசமான மானுட விரோதத் தன்மையை எய்துவதும் உண்டு. வெ. சாவுடன் திருவனந்தபுரம் பஸ் ஸ்டாண்டில் அமர்ந்திருக்கும்போது பேப்பர் படிக்கும் மனிதர் மீதான ஜானின் ஆதிக்கத்தையும் வெறுப்பையும் (இவன் ஏன் வீட்டிற்குப் போய் மனைவியோடு படுத்துக்கக் கூடாது? அதுதான் இவனால முடிஞ்ச வேலை. அதுகூட இவனால முடியல போல இருக்கு. அதனால தான் இந்த ராத்திரில இங்க உட்கார்ந்துகிட்டு இருக்கான்" (*வெ. சா. : 141*) இந்நோக்கிலிருந்து ஒருவர் புரிந்து கொள்ளமுடியும். இதே மாதிரியான தனிமனித அதிகார நிலைபாட்டுக்கு இன்னுமொரு உதாரணம் : ஊர்வலத்தில் வந்தவர்கள் மீது காரைச் செலுத்தியது (*ஸக்கரியா : 181*). காமெராகோணம் கருத்தியலால் விளைவது என்பார்கள். பாத்திரங்களாக வாழ்ந்து பார்ப்பது என்பது உயிருள்ள மனிதர்களால் நடிகர்களால் மட்டுமே ஆக்கக் கூடியது. வெறும் ஜடங்களால் உணர்ச்சிகளைக் கொண்டு வரமுடிவதில்லை. சினிமா எடிட்டிங்கில் உருவாகிறது என்பார்கள். இன்று திரைக் கதாசிரியர்களும் சரி, எடிட்டர்களும் சரி, கென்லோச் போன்ற இடது சாரிகளுக்கென்று தனியே இருக்கிறார்கள். பால் லாவர்ட்டிதான் அவரது நிரந்தர திரைக்கதாசிரியராக இருந்தவர். சீன திரைப்பட இயக்குனர் ஜான் கார்வியின் காமெராக்காரரை அவர் தனது கண்கள் என்கிறார். தனிநபர் முக்தி, ஞானதரிசனம் போன்றதாகத் தனது படைப்பைப் புரிந்து கொள்கிற ஜான் ஆசிரியர் கோட்பாட்டில் ஆழமாகச் சரணடைவது அதீதமானதும், மதத்தன்மை கொண்டதும், பின்பற்றத்தகாததும் ஆகும்.

ஜான் ஏற்றுக் கொள்ள முடியாத பழக்கங்களும் தன்னிச்சையான பொறுப்பற்ற நடவடிக்கைகளும் கொண்டவர் (*வெ. சா. : 142*). மீட்க முடியாத நாடகத்தனமான துன்பத்தைக் கேட்டும் வாங்கியும் உள்வாங்கிச் சொந்தமாகச் சேர்த்துக் கொண்டவர் (*அடூர் : 175*). ஜானுக்கு எப்போதுமே உடலுறவு விஷயத்தில் ஆர்வம் ஒன்றும் ஏற்பட்டது இல்லை. அவரால் குடிக்காமல் இச்சமூகத்தில் நிலைத்து நிற்க முடியவில்லை. ஜானின் மதுப் பழக்கத்தின் சமூகவியல் விளக்கம் இதுதான் என்று தோன்றுகிறது. எதிர்ப்புணர்வின் ஒரு உருவமாக அது இருந்தது. வாழ்க்கையுடன் ஒரு எதிர்ப்பை உண்டாக்கி வாழ்வது ஜானின் பாணியாகும். ஒரு சூழலை எந்த அளவிற்குக் கொண்டு போகலாமோ அந்த அளவிற்கு ஜான் கொண்டுபோய்ச் சேர்த்துவிடுவார். அதுவும் ஒரு போதும் திரும்பிப் போவதற்கு முடியாத மட்டில் செய்துவிடுவார் (*ஸக்கரியா : 181*). உலகத்தில் முன்னேறுவதற்கான ஒரு மீடியாவாகத்தான் ஜானைப் பொறுத்தமட்டில் மதுப்பழக்கம் இருந்தது (*ஸக்கரியா : 182*). பின்பற்ற முடியாததும் பின்பற்றுவதற்குத் தகுதியில்லாததுமான அசாதாரணமான தனித்துவமாக இருந்தது ஜானின் நம்பிக்கை (*ஸக்கரியா : 185*).

மது அருந்துவதும் கஞ்சா போன்ற போதைப் பொருள்கள் பாவிப்பதும் இந்திய ஞானமரபில் புதிய அம்சமொன்றுமில்லை. இன்றைய சூழலில் ஒரு கலைஞனாக இருக்கிறவன் மட்டற்ற வகையில் போதைப் பொருள் பாவிக்க வேண்டும். அளவற்றுக் குடிக்க வேண்டும். எந்தப் பொது இடத்திலும் எந்த மனிதன் மீதும் தனது அறிவார்ந்த வன்முறையைச் செலுத்த வேண்டும். தூஷணங்களைக் கட்டற்ற வகையில் பேச வேண்டும். இதுவெல்லாம் வாழ்வுக்கும் அதன் கருதுகோள்களுக்கும் இடையிலான செயல்பாட்டைக் கடக்கும் நடைமுறைகள் எனச் சொல்லப்படுகிறது. நிலவிய மதிப்பீடுகளுக்கு எதிரான செயல்களாகவே இவற்றை மேற்கொள்வதாகச் சொல்பவர்கள் இத்தகைய நடவடிக்கைகள் பற்றி எழுதும்போதும் அவற்றை வெளிப்படுத்தும்போதும் மிகுந்த ஜாக்கிரதையுணர்வுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட வகையில் இத்தகைய நடவடிக்கைகளை இலட்சிய நடவடிக்கையாகக் கொண்டாடும்



'அக்ரஹாரத்தில் கழுதை'யில்

வகையில் இவற்றை முன்வைக்கிறார்கள். துரதிருஷ்டவசமாக இத்தகைய காரணங்களுக்காக இம்மாதிரிக் கலைஞர்கள் முக்கியத்துவம் பெறுவதில்லை என யாராவது சொல்லவேண்டியிருக்கிறது.

ஜெனேவின் திருட்டுக்களை எவரும் இலட்சியப்படுத்திக் கொள்வதில்லை. அவரது ஏழ்மை நிலையும் கல்வி கற்றுக் கொள்வதில் தேர்வின்மையும் அவரது வாழ்வை இந்த அவலத்திற்குத் தள்ளியது என்பதையோ, பிற்காலத்தில் மனித உரி



படிப்பகம்

www.padippakam.com



மைக்குப் போராடுகிற பாலஸ்தீன விடுதலைச் சார்பாளராக அவரை வளர்த்தெடுக்கிறது என்பதையோ எவரும் சுட்டிக்காட்டுவதில்லை. ஜான் சமூகத்தை எதிர்ப்பதற்கான ஒரு வழிமுறையாகத்தான் குடியைச் சரணடைகிறார் என சக்கரியா சொல்வது பொருத்தமானதுதான். இதற்கு சமூகத்தை எதிர்க்கிறவர்களெல்லாம் குடிகாரர்களாக இருக்க வேண்டுமென்பதோ அல்லது குடிகாரர்களும் கஞ்சா குடிப்பவர்களும் சமூகத்தை எதிர்ப்பவர்கள் என்றோ அர்த்தமில்லை. ஏனெனில், இன்றைய தமிழ்ச் சூழலில் பின்நவீனத்துவத்தின் பெயராலும் சமூகத்துக்கு எதிரான கலகத்தின் பெயராலும் சகல பொறுக்கித்தனங்களும் சமூக விரோதச் செயல்களும் மேற்கொள்ளப்பட்டு இத்தகைய செயல்களுக்கு முன்னால் இலக்கியம் அல்லது எழுத்து என்று சேர்த்துக் கொண்டால் போதும் என்கிற மாதிரியான ஓர் அமுகுணி மனநிலை நிலவுகிறது.

எந்த மனிதனுடைய உளவியலும், அவனது சொந்த சந்தோஷங்கள், பாலுறவு அனுபவங்கள், சோகங்கள், சொந்தங்களுடனான உறவுகள் போன்றவற்றிலிருந்தும் – தான் வாழ நேர்ந்த சமூகப் பொருளியல் கலாச்சாரச் சூழலினுடையதுமான கலவையாகத்தான் வளர்ச்சியடைகிறது. ஜானின் தாயின் மரணம், அவரது தாய் தெய்வ வழிபாடு, உடலுறவில் ஈடுபாடின்மை, வேசியை நடுத்தெருவில் கட்டிக்கொண்டு முத்தமிட்டது, அவருக்கு விருப்பமில்லாத அவரது தந்தையின் மறுமணம், அவர் மாதிரியாகக்கொண்ட ரித்விக்கின் குடிப்பழக்கம் மற்றும் ரித்விக்கின் சக்தி உபாசனை போன்றவற்றுக்கு இடையில் ஜானுடைய உளவியல் மற்றும் கருத்தியல் பரிமாணத்தில் எவரேனும் ஒரு தர்க்கத்தைக் காணமுடியும். ஆனால் இவற்றை ஒரு கலைஞனோ சினிமா இயக்குனரோ இலட்சியப்படுத்திக் கொள்வதோ பின்பற்றுவதோ ஒரு மோஸ்தராக முன்னிறுத்துவதோ ஆரோக்கியமான பார்வையில்லை.

ஜான், மக்கள் சினிமா பற்றி எழுப்பிய கேள்விகள் இன்றும் முக்கியமானவைதான். வெகுஜன சினிமாவையும் கலைச் சினிமாவையும் மக்கள் நலனையும் பரிவர்த்தனை மதிப்பையும் ஒருங்கே கொண்ட சினிமாவையே இன்று பரந்துபட்ட மக்களைச் சென்று அடைய நினைக்கிற இயக்குனர்கள் யோசிக்கிறார்கள். சொலானஸ் போன்ற மூன்றாவது சினிமாவை வற்புறுத்திய இலத்தீன் அமெரிக்க இயக்குனர்கள் இன்று நட்சத்திர நடிகர்களைப் பாவிக்கிறார்கள். பெர்ட்லூசி போன்று மார்க்சியத்தால் ஆகர்ஷிக்கப்பட்ட இயக்குனர்களும், கென்லோச் போன்ற இடதுசாரி இயக்குனர்களும், இந்தியாவில் நிஹ்லானி போன்றவர்களும் நட்சத்திர நடிகர்களைப் பாவிக்கிறார்கள். நட்சத்திர நடிகர்களைப் பாவிக்கிற இடதுசாரி இயக்குனர்களைப் போலிகள் என்பதும் கடுமையான விமர்சனத்தை அவர்கள் மீது வைப்பதிலும் இன்று அர்த்தமில்லை. ஹாலிவுட் சினிமாவிலும் சரி, ஐரோப்பிய சினிமாவிலும் சரி, இன்றைய இந்திய சினிமாவிலும் சரி, மூன்றாவது சினிமா அல்லது மாற்றுச் சினிமாக் கூறுகளைக் கொண்ட சினிமாவைப் பரந்துபட்ட மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் சமாந்திரச் சினிமா இயக்குனர்களும் நட்சத்திரங்களைப் பாவிக்கும் இயக்குனர்களும் வெற்றிகளைச் சாதித்திருக்கிறார்கள்.

தீவிரவாத அழகியல் அல்லது அழகியலில் தீவிரவாதம் என்பது (ஓ. வி. விஜயன் : 162) என்றுமே ஒரு சிந்தனை வகையினமாகவும் கலை மாதிரியாகவும் சோதனை முயற்சியாகவும் இருந்திருக்கிறது. ஆனால் இத்தகைய போக்கை முற்றமுழுமையென்பதும் ஒரே வகைமுறையாக முன்னிறுத்துவதும் சரியான நிலைபாடாக இருக்கமுடியாது. மக்களின் பிரச்சினைகளை சினிமாவுக்குள் எடுத்துவருவதற்கும், சினிமா எனும் ஊடகத்தை மக்களிடம் கொண்டு செல்வதற்கும், அதன் வழி சமூக மாற்றத்திற்கு உதவுவதற்கும் பல்வேறு இயக்குனர்களும் கூட்டுழைப்பில் நம்பிக்கையுள்ள சினிமாக் கலைஞர்களும் தத்தமது தளத்தில் உழைத்து வருகிறார்கள். பல்கலாச்சாரத்துக்கும் வித்தியாசத்துக்கும் ஜனநாயகத்துக்குமான அவாக்கள் அதிகரித்திருக்கும் இன்றைய தினத்தில் துப்பாக்கியை சினிமாவுக்கு ஒப்பிட்டுப் பேசும் மூன்றாவது சினிமா காலாவதியாகிவிட்டது என்றே சொல்ல வேண்டியிருக்கிறது. மூன்றாவது சினிமா இன்று முப்பது வகைகளில் அல்ல, முன்னூறு வகைகளில் தோன்ற வேண்டிய தேவையிருக்கிறது.

ஜானின் சினிமா பற்றிய கோட்பாட்டு எழுத்துக்களைச் சிந்திக்கும்போது எனக்குத் தோன்றிய இரண்டு முக்கியமான விஷயங்கள் இவைதான். ஜான் சினிமா ஊடகத்தின் இன்றைய நிலை குறித்து முன்வைத்த கேள்விகளும் மக்கள் சினிமாவை நோக்கி அவர் எடுத்து வைத்த சோதனை அடிகளும் என்றென்றும் முக்கியத்துவம் வாய்ந்தவைதான். ஆனால் தனிமனிதனாக பின்பற்றத்தகாததான அவரது தனிமனித வாழ்முறைகளை இலட்சியப்படுத்திக் கொள்ளாமல் விமர்சனபூர்வமாக நம்மை அதனின்று விடுவித்துக் கொள்வதும் அதே அளவு முக்கியமானது. ஏனெனில், நம்மை நேசிக்கும் சக நண்பர்களுக்கும் மனிதர்களுக்கும் தீராத வேதனையையும் பிரச்சினைகளையும் அது கொண்டு சேர்க்கிறது. ஆயிரம்தான் சிந்தாந்தக் காரணங்களைக் கண்டுபிடித்தாலும் அந்த அதீதங்கள், சம்பந்தப்பட்ட படைப்பாளி, எழுத்தாளன் அல்லது கலைஞன் என்று சொல்லப்படுகிற மனிதனால் அடுத்த மனிதனின் மீது அகந்தையினால் மேற்கொள்ளப்படும் அத்துமீறல்தான். சகமனிதர்களின் சகிப்பையும் அவர்களின் பெருந்தன்மையையும் அவர்களுக்கே தண்டனையாகத் திருப்பிவிடும் நடவடிக்கைதான் என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை. இந்த அவலத்தினின்று நாம் அனைவருமே விடுபட்டாக வேண்டும்.

எழுத்து தனிநபரின் கலை. சிந்தனை தனிநபரின் களம். சினிமா கூட்டுக் கலை. பல மனிதரின் கூட்டு ஆளுமைகள் சங்கமிக்கும் வெளி. கூட்டு நினைவைப் பிரதிபலிக்கும் சினிமா, கூட்டு நினைவுகளாலும் கூட்டுச் சிந்தனையாலும் விளையும் கருத்தியல் ஒருமையாலும்தான் படைப்புத் தன்மையை எய்துகிறது. இந்திய வாழ்வில் குருக்களின் போதனை காலாவதியாகிவிட்டது போலவே அநேகமாக சினிமாவில் இன்று ஆசிரியனின் கோட்பாடு காலாவதியாகி வருகிறது என்பதையும் சொல்ல வேண்டியிருக்கிறது.

○

புத்தகத்தில் ஜான் குறித்த கவிதைகள், அவரது சிறுகதைகள், அவர் படங்கள் குறித்த விமர்சனங்கள், அவரது கவிதையொன்று, படங்களின் கதைக் களம் பற்றிய குறிப்புகள், திரைக்கதையின் பகுதியொன்று போன்றவை இடம்பெறுகின்றன. சினிமாக் கோட்பாடு விவாதங்கள் குறித்த அக்கறையிலிருந்து இக்கட்டுரையில் நான் ஜானின் சினிமா பற்றிய கருத்துக்களுக்கும், அவரது நடைமுறை வாழ்வுக்கும், அவரது படைப்புக்குமான உறவு பற்றிய பிரச்சினைகளையே என் விமர்சனத்துக்கு எடுத்துக் கொண்டுள்ளேன்.

ஜான் ஆபிரஹாம் : கலகக்காரனின் திரைக்கதை; தொகுப்பாளர் : ஆர். ஆர். சீனிவாசன்; தாமரைச் செல்வி பதிப்பகம், 31/48 ராணி அண்ணா நகர், கே. கே. நகர், சென்னை 600 005; விலை : இந்திய ரூபாய் 80



படிப்பகம்

www.padippakam.com



# தலித் கலை விழா

மார்ச் 17, மதுரை அரசரடி, யூ. சி. பள்ளி விளையாட்டுத் திடலில் 'தலித் கலை விழா' சூரியன் மறையத் தொடங்கியதிலிருந்து, மறு நாள் சூரியோதயம்வரை இடைவிடாது நடைபெற்றது. தமிழ்நாடு இறையியல் கல்லூரியின் துணை நிறுவனமான 'தலித் ஆதார மையம்' எட்டாவது ஆண்டாக இந்த விழாவுக்கு ஏற்பாடு செய் திருந்தது.

தமிழ்நாடு இறையியல் கல்லூரியின் முதல்வர் அறிவர் தியான்சந்த்கார் தலைமையுரையில், கலை விழாவின் நோக்க மாக இரண்டு கருத்துக்களைச் சொன்னார்.

ஒன்று : தலித் கலைகள் கொச்சைப்படுத்தப்பட்டு, தலித் கலைஞர்களுக்கு தாழ்வு மனப்பான்மை ஏற்படுவதை வேரறுத்தல்.

இரண்டு : தலித் மக்களின் திறமைகளை வெளிப்படுத்தி, தலித் விடுதலைக்குக் கலைகளையும் கருவிகளாக்குவது.

நிகழ்ச்சிகள் அனைத்தையும், முதல்வர் கூறிய இரண்டு கருத்துக்களின் அடிப்படையில் பார்க்கலாம். சிறப்புரை, கிராமிய ஆட்டம் பாட்டங்கள், தலித் விழிப்புணர்வுப் பாடல்கள், நாட கங்கள் என நான்கு வகைகளுக்குள் நிகழ்வுகளை கொண்டு வரலாம்.

சிறப்புரை

"கருத்து ரீதியான வன்முறையை எதிர்கொள்ள, கருத்து ரீதியாகவே பதிலளிக்க நாமும் வளர வேண்டும்"

"வர்க்கம் பேசிய மார்க்சிய வாதிகளும், தலித்தியம் பற்றிப் பேசவேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டிருக்கிறார்கள்"

– நாவலாசிரியர் சிவகாமி.

"தலித் விடுதலைக்காக என ஆரம்பிக்கப்பட்ட இயக்கங்கள் அர சியல்வாதிகளின் கைகளில் சிக்கி, தவறான வழியைக் காட்டுகின்றன."

– ஆதித்தமிழர் பேரவையில் அதியமான்.

தேவகோட்டைப் பகுதியில் தலித் மக்களிடையே பணியாற்றும் சந்தனமேரியின் ஆவேசமான பேச்சு அனைவரையும் கவர்ந்தது. அவர்கள் பகுதியில் நடந்த சாதியக் கொலைகள், கண்டதேவி தேர் பிரச்னை பற்றியெல்லாம் விரி வாகப் பேசினார்.



மதுரை மீனாட்சி கல்லூரி மாணவிகளின் தப்பாட்டம்

தலித் விழிப்புணர்வுப் பாடல்கள்

சின்னப் பொண்ணு, ஆறுமுகம், மணிமாறன் குழுவினர்கள் பாடல்களைப் பாடினர். திருமாவளவன், அம்பேத்கர் பற்றிய பாடல்களுக்கு, மேடை முன்னால் அமர்ந்திருந்த இளைஞர் களின் ஆட்டம் ரசிக்கும்படி இருந்தது. மக்கள் கலை இலக்கியக் கழகப் பாடலான "வெண்மணியிலிருந்து மேலவளவு வரை" பாடல், உணர்வு பூர்வமாகப் பார்வையாளர்களைப் பாதித்தது. இளையராஜாவைப் போற்றி இரண்டு பாடல்கள் பாடப்பட்டன. ஸ்ரீரங்கத்துக் கோவிலைப் பற்றி மட்டுமே கவலைப்படும், இளையராஜாவைக் கொண்டாடியது எதனால் என்று புரிய வில்லை.

நாடகங்கள் நான்கு

நிதர்சனம் வழங்கிய "கட்ட அவுறு, கயித்த அறு" நாடகம் பெரிய வரலாற்றைக் கூறுவதுபோல் ஆரம்பித்து, பல்வேறு பிரச் னைகளைத் தொட்டுச் சென்றதால், கூர்மையற்றுப் போயிற்று. இந்து மதத்தில் மட்டுமே சாதியம் உள்ளதுபோல கூறியது, கிறிஸ்தவ மதத்தில் சாதிகள் இல்லையா என்ற கேள்வியை எழுப்பியது. மேலும், ஆதிக்க சாதி எது என்ற குழப்பத்தையும் ஏற்படுத்தியது.

பரட்டை ஐயாவுக்கு ஒரு வேண்டுகோள் : ஆபாசமாகப் பேசு வதை விட்டுவிட்டு, மனதைப் பாதிக்கும் வகையில் நாடகங் களைத் தேடினால் நல்லது.

புவியரங்கம் நடத்திய 'உக்கிரம்' ('சாமியாடிகள்' என்று பெயர் வைத்திருக்கலாம்) பார்வையாளர்களை அவமதிப்பதுபோல், மேடையின்கீழே நடத்தப்பட்டது. மேடையின் கீழேதான் நடத்தி ஆகவேண்டும் என்ற 'உத்தி'யும், அந்த நாடகத்திற்கு அவசிய மாய்ப்படவில்லை. ஆட்டம் பாட்டம் கொண்டாட்டமாக இருந்த சமயத்தில் 'தாமிரபரணி' நாடகம் வந்தது. 'ஆப்டிமிஸ்' குழுவின ரின் இந்த நாடகம், பார்வையாளர்களின் கவனத்தை ஒருமுகப் படுத்தியது. இருளாக்கப்பட்ட அரங்கில், தாமிரபரணிப் படு கொலை சம்பவங்களின் தொகுப்பு, புகைப்படமாகவும் செய்தி யாகவும், திரையில் ஓட, உருவம் அறிய முடியாத வெளிச்சத்தில், மனதை அறுக்கும் வயிலின் ஒலியும், இடையே ஒப்பாரிக் குர லும், ஓலமும், இறந்தவர்களின் வாக்குமூலக் குரலும், பார்ப்ப வர்களை அந்தச் சூழலுக்கே கொண்டு சென்றன. பார்வையாளர் களின் நீண்ட மௌனம், நாடகத்திலிருந்து மீள முடியாததையே உணர்த்தியது.

ஒத்திகை நாடகக் குழுவின் 'சாம்பான்' விடிவதற்கு கொஞ் சம் முன்னதாக, கடைசியாக நடந்த முதல் தரமான நாடகம். 'சாம்பான்' என்ற தப்படிக்கும் சாமானியின் கதை இயல்பாகவும், ஜோடனை இன்றியும் நடத்திக் காட்டப்பட்டது. தலித்துகளின் அவமானங்கள், சோகங்கள், எழுச்சி எல்லாம் நாடகத்துக்குள் வந்தது. எளிமையாகக் கூட, தரமானவைகளைத் தர முடியும் என்பதற்கு நல்ல உதாரணம் இந்த நாடகம். தலித்துகளிடம் விடு தலை நோக்கிய சிந்தனையும், தலித் அல்லாதவர்களிடம் குற்ற உணர்ச்சியையும் உருவாக்கும் இந்த நாடகம் முன்னதாகவே நடத்தப்பட்டிருந்தால் – அதிகப் பார்வையாளர்களை அடைந்தி ருக்கும். நான்கு நாடகங்களிலும் தலித் விடுதலையை மையமாகக் கொண்டது 'சாம்பான்' நாடகம் மட்டுமே. இந்தக் கலைவிழாவின் அனைத்து நிகழ்வுகளிலும் மிக வும் முக்கியமானதாகப்பட்டது இந்த நாடகம்.

கலை நிகழ்ச்சிகள்

துள்ளவைக்கும் மேளம், தப் பாட்டம், கரகாட்டம், சிலம்பம், களியல், புலிஆட்டம், மகுடி, ஜிக்காட்டம், பழங்குடியினர் நட னம், கும்மி, ஒயிலாட்டம், இராசா ராணி ஆட்டம் இப்படி தமிழகத் தின் பல்வேறு இடங்களிலிருந்து வந்த கலைஞர்களின் நிகழ்வுகள் பார்க்க அரிதானவை. இவை களில் தலித்துகளுக்கு மட்டுமே உரிய கலைகள் என்று பிரிப்ப தெப்படி ?

தோல் இசை கருவிகளின் வகைகள் பிரமிப்பை ஏற்படுத் தின. மகுடி ஊதிய பார்த்திபனூர்காரர்களின் ஜாதி இன்னதென்று அரசாங்கமே அறியாததால், அவர்களின் குழந்தைகள் படிக்க முடியாத நிலையை சொல்லி வருந்தினார்கள்.

கலை நிகழ்ச்சிகள் எல்லாமே பார்க்கவும், கேட்கவும் சிறப் பாக இருந்தது. கடைசியாக வந்த ஒயிலாட்டக் குழுவினர் "இயேசுவைப் போற்றுவோம், ஸ்தோத்திரம் பாடுவோம்" என்று பாடி திடுக்கிட வைத்தார்கள்.

கலைவிழா அரங்கின் முன்னால், அதிகாரத்தின் குறியீடாய், பார்வையாளர்களை மறைத்து நின்றது வீடியோ மேடை. கடைசி யாக நடந்த பல நிகழ்ச்சிகள், வீடியோவின் கண்களுக்காக நடத்தியதுபோல் பார்வையாளர்கள் இல்லாமல் நடந்தன.

பார்வையாளர்களிடையே பத்து வயதுப் பையன், துண்டுப் பிர சுரம் கொடுத்தான். அதில் முக்கியக் கேள்வி :

"இந்து முன்னணி, ஆர். எஸ். எஸ். போன்றவை நம் விடு தலைக்கானதாக எப்படி இருக்க முடியாதோ, அப்படியே கிருத் துவ நிறுவனங்கள் சார்ந்த அமைப்புகளும் நம் விடுதலைக்கான தாக இருக்க முடியாது."

பெ. அய்யனார்
ayyapillai@yahoo.com



படிப்பகம்

www.padippakam.com



## —:வானகமே இளவெயிலே மரச்செறிவே :—

# முத்துலிங்கத்தின் சந்திப்பு



அ. முத்துலிங்கம்

சென்ற வாரம் திரு. அ. முத்துலிங்கம் அவர்களைச் சந்தித்தேன். நான் கலிஃபோர்னியாவில் சாந்தாக் குருசில் (Santa Cruz) இருந்தேன். அவர் ஹாஃப் மூன் பே (Half Moon Bay) யில் இருந்தார். அங்கிருந்து சாந்தாக் குருசிற்கு அமெரிக்க பாஷையில் சொன்னால் ஒரு மணி நேரம் தூரம். ஐந்தாறு மணி நேரம் நாங்கள் ஒன்றாக இருந்தோம். தமிழ் வாசகர்கள் அவசியம் அறிந்திருக்க வேண்டிய ருசிகரமான பல விஷயங்களைச் சொன்னார். அவற்றில் ஒரு சிலவேனும் அவசியம் எழுதப்பட வேண்டியவை. எழுதும்படி முத்துலிங்கத்தை இரண்டு மூன்று சந்தர்ப்பங்களில் தூண்டினேன். மறைமுகமாகவும் அதன்பின் நேராகவும். எழுத்துக்கு ஒதுக்க தன் கைவசமிருக்கும் நேரம் குறைவு என்றும் அந்த நேரத்தை தன் படைப்பிற்கு முன்னுரிமை தந்து ஒதுக்கவே விரும்புவதாகவும் சொன்னார். இந்த மனோபாவம் எனக்கு ஏமாற்றத்தை அளித்தது. என் இளமையில் இதே மனோபாவம்தான் எனக்கும் இருந்தது. இன்று அந்த எண்ணம் இல்லை. எவற்றை முக்கியம் என்று ஒரு எழுத்தாளன் கருதுகிறானோ அவற்றையெல்லாம் அவன் எழுத முயலவேண்டும். வாசகர்களுடன் எழுத்தாளன் பகிர்ந்துகொள்ள வேண்டியவற்றை அவன் வாழும் சூழலில் நிகழ்த்த வேண்டிய மாற்றத்தை வைத்தே தீர்மானிக்க முடியும். அப்போது அவனுடைய எழுத்து படைப்பாகவோ படைப்புக்கு வெளியே ஏதேனும் ஒரு துறை சார்ந்தோ இருக்கலாம். முத்துலிங்கம் என்னுடன் பகிர்ந்துகொண்ட ஒரு விஷயத்தை அவருடைய விருப்பத்திற்கு விடாமல் நானே எழுத வேண்டும் என்று எனக்குத் தோன்றிற்று.

சாந்தாக் குருசில் என்னைச் சந்திப்பதற்குச் சில வாரங்களுக்கு முன் பாஸ்டனிலிருந்து அவர் என்னுடன் பேசியபோது, அந்த நேரத்தில் நான் சற்றும் எதிர்பார்த்திருக்க முடியாத கேள்வியாக அவர், 'அமரந்தாவை உங்களுக்குத் தெரியுமா?' என்று கேட்டார். அமரந்தாவைப் பற்றிய விபரங்களை அவசரமாகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆர்வம் அவர் குரலில் தெறித்தது. ஒரு மொழிபெயர்ப்பாளராக அமரந்தாவைப் பற்றி நான் அறிந்திருந்த விஷயங்களைச் சொன்னேன். அமரந்தா தமிழில் மொழிபெயர்த்துள்ள மார்தா த்ராபாவின் *நிழல்களின் உரையாடலைத்*, தான் படித்ததாகவும் அவரது மொழிபெயர்ப்பாற்றல் வியக்கத்தக்கதாக இருப்பதாகவும் சொன்னார். மிகுந்த பாராட்டுணர்வுடன் அவர் இருப்பதை என்னால் உணர முடிந்தது.

**சுந்தர ராமசாமி**

முத்துலிங்கம் சாந்தா குருசு வந்தபோது முதல் வேலையாக *நிழல்களின் உரையாடல்* தமிழ் மொழிபெயர்ப்பையும் அந்நாவலின் ஆங்கில மூலத்தையும் என்னிடம் காட்டினார். அந்நாவலை தமிழ் மொழிபெயர்ப்பில் நான் படித்திருப்பதாகவும் நுட்பமான படைப்பாற்றலை அந்நாவல் வெளிப்படுத்துவதாகவும் அதன் ஆங்கில மூலத்தை (Mothers And Shadows - Martha Traba) இப்போதுதான் பார்ப்பதாகவும் நான் கூறினேன். ஆங்கில மூலத்தையும் தமிழ் மொழிபெயர்ப்பையும் கையில் வாங்கிப் புரட்டிப் பார்த்தேன்.

இரண்டு நூல்களிலும் முதலிலிருந்து கடைசிப் பக்கம் வரை பத்திகளுக்கு எண்கள் போடப்பட்டிருந்தன. பத்திகளின் எண்ணிக்கை இரண்டு நாவல்களிலும் முன்னூறைத் தாண்டிச் சென்று கொண்டிருந்ததாக ஞாபகம். தமிழ் மொழிபெயர்ப்பிலும் மூல நாவலிலும் பல பக்கங்களில் பல வரிகளில் அடிவரைகள் போடப்பட்டிருந்தன. 'என்ன விஷயம்?' என்று நான் கேட்டேன். தமிழ் மொழிபெயர்ப்பை ஆங்கில மூலத்துடன் பாரா பாராவாகவும் வரி வரியாகவும் ஒப்பிட்டுப் பார்த்ததாகவும் அந்தப் பணியை முன்னிட்டு எண்களும் அடிவரைகளும் போட்டதாகவும் கூறினார். அடிவரைகள் ஆங்கில மூலத்திலிருந்து மிகச் சிக்கலான இடங்களைக்கூட மிக நேர்த்தியாக அமரந்தா மொழிபெயர்த்திருக்கும் இடங்களைச் சுட்டுவதாகவும் கூறி ஒன்றிரண்டு உதாரணங்களையும் எனக்குக் காட்டினார். அவை சிறப்பாக மொழியாக்கம் செய்திருப்பவையாக எனக்குப்பட்டன. மொழிபெயர்ப்பில் அமரந்தா எடுத்துக் கொண்டிருக்கும் கடுமையான முயற்சியை ஊக்கப்படுத்தியும், அம்முயற்சியில் அடைந்திருக்கும் வெற்றியைப் பாராட்டியும் அவருக்குக் கடிதம் எழுதப்போவதாகவும் முத்துலிங்கம் கூறினார். அமரந்தாவுக்கு கடிதம் எழுதுவது நல்ல காரியம்தான் என்றும், ஆனால் அமரந்தாவின் ஆற்றலின்மீது முத்துலிங்கம் கொண்டிருக்கும் மதிப்பைத் தமிழ் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதுதான் அதைவிடவும் முக்கியமான காரியமென்றும் நான் சொன்னேன். இரண்டாவதாக நான் கூறிய விஷயத்தை முத்துலிங்கம் நிறைவேற்றுவார் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்படாததால் இந்தக் குறிப்பை எழுதுகிறேன்.

ஒரு வாசகனாக தமிழ் மொழிபெயர்ப்பாளர்கள்மீது மிகுந்த விமர்சனத்துடன் வளர்ந்து வந்தவன் நான். ஒரு தமிழ் மொழிபெயர்ப்பு நூலைப் படிக்கும்போது உள்ளூர அவநம்பிக்கையுடனேயே நான் அதை இன்றும் படித்துக் கொண்டி






படிப்பகம்

www.padippakam.com



ருக்கிறேன். மூலமொழியில் போதிய பிடிப்பில்லாதவர்களும், மொழி பெயர்ப்பை அசிரத்தையாகச் செய் பவர்களும், பிரதியைச் செப்பனிட்டுச் செம்மை செய்வதில் நம்பிக்கையில் லாதவர்களும், மூலப்பொருளை அதற்குரிய நுட்பங்களைச் சிரைத்து விட்டு சாராம்சப்படுத்திக் கூறுகிறவர் களும் தமிழ் மொழிபெயர்ப்புத் துறை யில் பெரும் கூத்தடிப்புகளை நிகழ்த் தியிருக்கிறார்கள். 'தமிழில் எழுதி யதுபோல் சரளமாகப் படிக்க முடி கிறது' என்று தொடர்ந்து எவ்வித மதிப்பீடுமின்றி கூறி வந்திருப்பது தான் ஒரு மொழிபெயர்ப்பைப் பற்றி மதிப்புரையாளனின் அதிகபட்சப் பாராட்டின் இலக்கணமாக இன்றள வும் தமிழில் இருந்துவருகிறது. க. நா. சு. போன்ற அறிவாளிகள்கூட எவ்வளவு அசிரத்தையாக மொழி பெயர்த்திருக்கிறார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். விதிவிலக் காக கு. அழகிரிசாமி (முக்கியமாக மாக்சிம் கார்க்கியின் 'அமெரிக்கா விலே') தொ. மு. சி. ரகுநாதன் (மாக் சிம் கார்க்கியின் 'தாய்') போன்றவர் கள் மிகுந்த சிரத்தையுடனும் ஆற்ற லுடனும் மொழிபெயர்த்திருக்கிறார் கள். இன்று எஸ். வி. ஆர், வ. கீதா, ஸ்ரீராம் போன்றவர்களின் மொழி பெயர்ப்புப் பணியில் நான் மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கிறேன்.

நூற்றுக்கு நூறு சரியாக, தவறே தும் இல்லாமல் ஒரு மொழி பெயர்ப்பைச் செய்வது சாத்திய மில்லை என்பதே என் எண்ணம். இருப்பினும் இயன்றளவு சிரத்தை யுடன் ஒரு மொழிபெயர்ப்பை உரு வாக்குவது சாத்தியம்தான். மொழி பெயர்ப்பு என்பது மிகப் பெரிய படைப்புக் கலை. வாசகர்கள் தன் மொழிபெயர்ப்பை ஒரு நாளும் மூல பாடத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கப் போவதில்லை என்ற தைரியத்தில் செய்யப்படும் பொறுப்பற்ற அற்ப காரியமாக மொழியாக்கம் தாழ்ந்து போகவிடுவது நம் கலாச்சாரத்திற்கே பெரிய இழப்பாகும்.

அமரந்தாவின் மொழிபெயர்ப் பாற்றலை மூலப்படைப்புடன் திட்ட வட்டமாக ஒப்பிட்டுப் பார்த்து அவ ரது மொழிபெயர்ப்பை பற்றி மிக உயர்வான எண்ணத்திற்கு முத்துலிங் கம் வந்து சேர்ந்திருக்கிறார். ஒரு தீவிர மன நிலையில் இந்தப் பணியைச் செய்திருப்பது தமிழில் அபூர்வமாக நடந்திருக்கும் காரியம். முதன் முறையாக இந்தச் சோதனை நடந்திருக்கிறது என்றுகூட நான் சொல்வேன். ■


அடையாளத்தின் புதிய நூல்கள்

**இந்துத்துவம் :**
**ஒரு பன்முக ஆய்வு**
[விரிவாக்கப்பட்ட இரண்டாம் (ஏப்ரல் 2001) பதிப்பு]
அ. மார்க்ஸ்

சிறுபான்மையினர், ஒடுக்கப்பட்டோர் மீதான இந்துத்துவம் தொடுத்துவரும் பாசிச வன்முறைகள் குறித்து அ. மார்க்ஸ் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு

விலை ரூ. 75

○

**நான் ஏன் இந்து அல்ல**
காஞ்சா அய்லய்யா
*தமிழில் :* மு. தங்கவேலு, ராஜமுருக பாண்டியன்

தத்துவம், பண்பாடு மற்றும் அரசியல் பொருளாதார அடிப்படையில் இந்துத் துவா பற்றிய ஒரு சூத்திர விமர்சனம்

விலை ரூ. 75

○

**கலாச்சாரத்தின் வன்முறை**
அ. மார்க்ஸ்

கலாச்சாரம், அரசியல், நீதி, அறம், ஒழுக்கம் ஆகியவற்றின் மீதான ஒரு பின் நவீன விமர்சனம்

விலை ரூ. 85

○

**பவளக்கொடி**
அல்லது
**குடும்ப வழக்கு**
முனைவர். கரு. அழ. குணசேகரன்

சங்கரதாஸ் சுவாமிகள் எழுதிய இந் நாடகத்தை ஒரு பெண்ணிய நோக் கிலான மீள் புனைவு

விலை ரூ. 25

○

**பெரியார் ?**
அ. மார்க்ஸ்

பெரியாரின் கண்டுகொள்ளப்படாத சிந்தனைகளின் மீதான ஒரு கவன ஈர்ப்பு

விலை ரூ. 25

○

**முஸ்லிம்களின் தேசமும் எதிர்காலமும்**
விக்ரர்

ஒரு தேசத்திற்கென ஸ்டாலின் வரை யறுத்த பிரதேசம், மொழி, பொருளா தாரம், கலாச்சாரம் என்பனவற்றிலி ருந்து திமிலும் தமிழ் பேசும் இலங்கை முஸ்லிம்கள் குறித்த ஆய்வு

விலை ரூ. 70

**சனதருமபோதினி**
சின்னக்கதையாடல்கள்
தொகுப்பு : சுகன் & ஷோபாசக்தி (பிரான்ஸ்)

மின்கம்பங்களில் தமிழீழப் போராளி களால் கொல்லப்பட்ட திருடர்கள், பாலியல் தொழிலாளர்கள், மன நோயாளர்களுக்கு சமர்பிக்கப்பட்ட இலக்கியச் சிறப்பிதழ்

விலை ரூ. 100

வெளியீடு : அடையாளம்
15 / 193 2வது தளம், கருப்பூர் சாலை,
புத்தாநத்தம் 621 310
email : adaiyalam@yahoo.com

இலங்கையில் கிடைக்குமிடம்
மூன்றாவது மனிதன் பதிப்பகம்
53, வாக்செல் லேன்
கொழும்பு-02
email : 3 man@sltnet.lk

**பலஸ்தீனக் கவிதைகள்**
தேர்வும் மொழியாக்கமும்
எம். ஏ. நுஃமான்

15 பலஸ்தீனக் கவிஞர்களின் 71 கவிதைகளின் தமிழாக்கம். பலஸ் தீனர்களின் கண்ணீரும் குருதியும் பெருகும் சித்திரங்கள்

விலை ரூ. 75 (இந்தியா)

**ஈழத்து இலக்கியத் தடம்**
(1980 – 2000 பார்வையும் விமர்சனமும்)
கார்த்திகேசு சிவதம்பி

விலை ரூ. 75 (இந்தியா)

வெளியீடு : மூன்றாவது மனிதன் பதிப்பகம்
53, வாக்செல் லேன்
கொழும்பு – 02
email : 3 man@sltnet.lk

இந்திய விற்பனை உரிமை :
அடையாளம்
15 / 193 2வது தளம், கருப்பூர் சாலை,
புத்தாநத்தம் 621 310
email : adaiyalam@yahoo.com

**மூன்றாவது மனிதன்**
(காலாண்டு இதழ்)
ஆசிரியர் : எம். பௌசர்
தொடர்புகளுக்கு : 37/14 Vauxhall lane
Colombo - 02, Sri Lanka.
T.P.: 01-300919
email : tman@dynanet.lk
ஆண்டுச் சந்தா (இலங்கை) ரூ. 230
காசு கட்டளை அனுப்புவோர்
M. Fowzer, Slave Island Post Office
எனக் குறிப்பிடவும்




படிப்பகம்

www.padippakam.com



# அதிகார அரசியல்



இரா. செழியன்

**இந்தத் தேர்தலில் முன்னெப்போதும் இல்லாத அளவில் கொள்கையற்ற கூட்டணிகளைத் தமிழகம் கண்டது. கொள்கை சார்ந்த பாவனை கூட வேண்டாம்; வெற்றிக் கணக்கு மட்டுமே முக்கியம் என்ற வெட்கமற்ற நிலைபாட்டின் உச்சம் இந்தத் தேர்தலில்தான் சாத்தியமாயிற்று. இந்த நிலைகுறித்து மூத்த அரசியல்வாதியும் பத்திரிகையாளருமான இரா. செழியனை காலச்சுவடு சார்பில் அரவிந்தன் சந்தித்துப் பேசினார். செழியனின் கருத்துக்கள் கட்டுரை வடிவில் இங்கே தரப்பட்டுள்ளன.**

இந்திய அரசியலை எடுத்துக் கொண்டால் அரசியல் போக்கு ஆரம்பத்தில் கொள்கை வழி அரசியலாகத்தான் இருந்தது. விடுதலைப் போராட்டக் காலத்திலும் சுதந்திரத்திற்குப் பிந்தைய சில ஆண்டுகளிலும் இந்த நிலைதான் இருந்தது. ஒரு லட்சியம், அதற்கேற்ற கொள்கை, அதைச் செயல்படுத்த கட்சி, அந்தக் கட்சிக்கு மக்களிடத்தில் ஏற்படும் செல்வாக்கு, அதன் அடிப்படையில் ஆட்சி அதிகாரத்தைப் பிடித்தல் - இப்படித்தான் இருந்தது. காங்கிரஸ், கம்யூனிஸ்ட், ஜனசங்கம் ஆகிய எல்லாக் கட்சிகளுமே இப்படித்தான் இருந்தன. கொள்கை வழி அரசியல் என்று இதைக் குறிப்பிடலாம்.

ஆனால் காலம் செல்லச் செல்ல இந்த நிலை மாற ஆரம்பித்தது. அதிகாரம் கையில் இருந்தால்தான் கொள்கைகளையும் திட்டங்களையும் நிறைவேற்ற முடியும் என்பதால் எல்லாக் கட்சிகளுக்குமே தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்று ஆட்சியைப் பிடிக்கவேண்டும் என்பது அவசியமாகிறது. இதில் தவறில்லை. ஆனால் ஆட்சியே பிரதான நோக்கமாக மாற ஆரம்பித்தது. பிறகு ஆட்சி மட்டுமே முக்கியம் என்ற போக்காக இது வளர்ந்தது. இங்குதான் பிரச்சனை ஆரம்பமாயிற்று.

இந்தப் போக்கு வளர வேறு சில காரணங்களும் உள்ளன. ஆரம்பத்தில் இந்திய அரசியலில் தலைவர் கட்சிக்குக் கட்டுப்பட்டவராக இருந்தார். கட்சிக்கு மக்களிடம் நெருங்கிய தொடர்பு இருந்தது. விடுதலைப் போராட்ட காலத்தில் காங்கிரஸ் வெறும் அரசியல் கட்சி அல்ல. அது மக்கள் இயக்கம். கிராமப்புற மேம்பாடு, தீண்டாமை ஒழிப்பு, கள்ளுண்ணாமை, ஹரிஜனங்கள் ஆலயப் பிரவேசம் போன்ற பல ஆக்கப் பணிகளில் அது ஈடுபட்டது. தேர்தலோ பதவியோ அதன் நோக்கமாக இல்லை. தேர்தல் முறையே 1937ல் தான் இந்தியாவில் அறிமுகமாயிற்று. அந்தத் தேர்தலில்கூட லட்சியம் - கொள்கை - திட்டம் - நிறைவேற்றம் என்ற அடிப்படையில்தான் போட்டி நடைபெற்றது. காங்கிரஸ் மட்டுமன்றி காங்கிரஸை எதிர்த்த கட்சிகளும் இப்படித்தான் தேர்தலை அணுகின.

1947க்குப் பிறகு இதில் மாற்றம் ஏற்பட்டது. ஆங்கிலேயர்கள் இருந்த வரை அவர்களை வெளியேற்ற வேண்டும் என்ற முனைப்பு எல்லோருக்குமே இருந்தது. சுதந்திரத்திற்குப் பிறகு அந்த முனைப்பு ஆட்சியே முக்கியம் என்பதாக மாறியது. இதன் பிறகுதான் கொள்கை வழி அரசியல் என்ற நிலை மாறி தனிநபர் வழி அரசியல் உருவாக ஆரம்பித்தது. ஒவ்வொரு கட்சியும் தனக்கென்று ஒரு கொள்கையை வைத்திருந்த நிலை மாறியது. ஒரே கொள்கை கொண்ட பல கட்சிகள் தோன்ற ஆரம்பித்தன. தனி நபர் மோதல்களின் அடிப்படையில் கட்சிகள் உடைந்ததால் ஒரே கொள்கையை முன்னிறுத்தி பல கட்சிகள் செயல்பட ஆரம்பித்தன. காங்கிரஸ் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் இப்படித்தான் உடைந்தன. சுதந்திரத்திற்கு முன்பு மாறுபட்ட கருத்துள்ள பலர் ஒரே இயக்கத்தில் இருந்தார்கள். கிராமப் பொருளாதாரம் போன்ற விஷயங்களில் காந்தியாருக்கும் நேருவுக்கும் கருத்து வேறுபாடு இருந்தது. சர்தார் படேலின் அணுகு முறையும் நேருவின் அணுகுமுறையும் வேறு. சோஷலிஸ அடிப்படையில் சமதர்ம சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்று நினைத்த ஜெயப்பிரகாஷ் நாராயணனும் காங்கிரஸில் இருந்தார். ஆனால் எல்லோரும் சேர்ந்து ஒரு பொதுத் திட்டத்தை முன்னிறுத்தி செயல்பட்டார்கள். தனி நபர் மோதல்களின் அடிப்படையில் கட்சிகள் உடைந்தபோது கொள்கையில் வேறுபாடு இல்லாமல் கட்சிகள் பலவாகப் பெருக ஆரம்பித்தன. கட்சியைச் சார்ந்து தலைவர் இருந்த நிலைமாறி தலைவரை சார்ந்து கட்சி செயல்பட ஆரம்பித்தது. ஆட்சியைப் பிடிப்பது தான் பிரதான நோக்கம் என்ற நிலையும் தனிநபரை நம்பி கட்சி என்ற நிலையும் சேர்ந்து கொள்கை வழி அரசியலை தேர்தல் அரசியலாக மாற்றியது. இந்நிலையில் வெற்றி பெறுவதுதான் முக்கியம் என்று ஆனது. அதன் விளைவாக கொள்கையை அடிப்படையாகக் கொள்ளாமல் வெற்றியை அடிப்படையாகக் கொண்ட கூட்டணிகள் உருவாக ஆரம்பித்தன. இன்று இந்திய அளவிலும் தமிழகத்திலும் நிலவும் கூட்டணிகளின் தன்மைக்கு இதுதான் காரணம்.

இந்த மாற்றம் 1969க்குப் பிறகுதான் ஏற்பட்டது. அதாவது இந்திரா காந்தி ஆட்சிக்கு வந்த பிறகு. நேரு பிரதமராக இருந்தபோது அவர் நினைத்திருந்தால் மிகச் சுலபமாக ஒரு யதேச்சாதிகாரியாக மாறியிருக்கலாம். அவருக்கு இருந்த செல்வாக்கும் மதிப்பும் அப்படிப்பட்டது. 1962ல் நான் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தேன். நேரு உண்மையிலேயே ஒரு ஜனநாயகவாதி என்பதை நான் நேரில் கண்டு உணர்ந்திருக்கிறேன். அதுமட்டுமல்ல. பிரிவினைக்குப் பிந்திய கொந்தளிப்பான காலகட்டத்தில் அவர் மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு செயல்பட்டு மக்களிடம் வெறுப்புணர்வு வளராமல் பார்த்துக் கொண்டார்.

இந்திரா காந்தியின் காலத்தில் இதெல்லாம் மாறத்தொடங்கியது. கட்சி முக்கியமில்லை; தலைவர்தான் முக்கியம் என்று ஆனது. கட்சி முன்னிறுத்திய ஜனாதிபதி வேட்பாளரை எதிர்த்து கட்சித் தலைவரான இந்திரா காந்தியே வேலை செய்கிறார். தனி நபரே முக்கியம் என்பதால் அமைப்பு வலுவிழந்தது. உள்கட்சி ஜனநாயகம் சீரழிந்தது. இந்த தனி நபர் வழி அரசியலின் தாக்கத்தை எம். ஜி. ஆர்., என்.டி.ஆர். வரையிலும் பார்க்கலாம். -



படிப்பகம்

www.padippakam.com



கொள்கை வழி அரசியல் தனி நபர் அரசியலாக மாறியதோடு வேறொரு முக்கியமான மாற்றமும் நிகழ்ந்தது. இந்தியக் கூட்டாட்சியில் மாநிலங்களின் தனிப்பட்ட நலன்களும் உணர்வுகளும் புறக்கணிக்கப் பட்டதால் தேசியக்கட்சிகளின் செல்வாக்கு குறைந்து மாநிலக் கட்சிகளின் செல்வாக்கு அதிகரிக்க ஆரம்பித்தது. சைதாப்பேட்டையில் நான் போட்டியிட வேண்டும் என்றால் தில்லியில் இருக்கும் தலைவரின் அனுமதி வேண்டும். மாநிலங்களின் வளர்ச்சிப் பணிகளுக்கு மத்திய அரசை அளவுக்கதிகமாக சார்ந்திருக்கும் நிலை இருக்கிறது. அமெரிக்காவில் இரண்டே பிரதான கட்சிகள் தான் இருக்கின்றன. இரண்டும் தேசியக் கட்சிகள். ஆனால் அந்தக் கட்சிகளின் பிராந்திய உறுப்பினர்கள் தங்கள் பகுதிகளின் முன்னேற்றத்திற்காகத்தான் வேலை செய்வார்கள். அதற்குத் தேவையான அதிகாரமும் வசதிகளும் அவர்களுக்கு இருக்கின்றன. அதிகாரப் பரவல் அங்கு முழுமையாக இருக்கிறது. இந்தியாவில் அதிகாரம் மையத்தில் அளவுக்கதிகமாகக் குவிக்கப்பட்டிருப்பதால் மாநில நலன்கள் புறக்கணிக்கப்படுகின்றன. இதன் விளைவாக மாநிலக் கட்சிகள் பெருக ஆரம்பித்தன.

இப்படிப் பெருகிய மாநிலக் கட்சிகள் மக்களிடத்தில் செல்வாக்குப் பெற்றதால் தேசியக் கட்சிகள் தேர்தலில் வெற்றி பெற மாநிலக் கட்சிகளின் துணையை நாட ஆரம்பித்தன. அதன் உச்சகட்டத்தை இன்று பார்க்கிறோம். இன்று காங்கிரஸ், பா. ஜ. க. ஆகிய இரு பெரிய தேசியக் கட்சிகளும் தங்கள் சொந்த பலத்தால் *100 - 120* இடங்களுக்கு மேல் வெல்ல முடியாது. மாநிலக் கட்சிகளின் துணையோடுதான் தேர்தலில் வெற்றி பெற முடியும். மாநிலக் கட்சிகளை சார்ந்துதான் ஆட்சி அமைக்கவும் முடியும் என்ற நிலை உருவாகியிருக்கிறது.

இதே காரணம்தான் ஒரு குறிப்பிட்ட வட்டாரம், ஜாதி, சமூகம் ஆகியவற்றைப் பிரதிநிதித்துவப் படுத்தும் கட்சிகள் தோன்றவும் அடிப்படையாக அமைந்தது. ஆட்சியில் இருப்பவர்கள் மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்துவதில் தோல்வி அடைந்தார்கள். முன்னுரிமைகள் குழம்பின. சில பகுதிகள் வேகமாக வளர்ந்தன. பல பகுதிகள் புறக்கணிக்கப்படுகின்றன. வறுமை ஒழிப்பு முதற்கொண்டு எல்லாப் பெரிய திட்டங்களுக்கும் இதே கதிதான் ஏற்பட்டது. புறக்கணிக்கப் பட்டவர்களின் பிரதிநிதிகளாக உருவாகிய மாநிலக் கட்சிகளும் இதே போக்கில் சென்றதால் ஜாதிக் கட்சிகளும் வட்டாரக் கட்சிகளும் தோன்றுகின்றன. மாநிலக் கட்சிகள் வலுப்பெற்றதும் தேசியக் கட்சிகளுக்கு மாநிலக்கட்சிகள் தேவைப் பட்டது போல மாநிலக் கட்சிகளுக்கு ஜாதி / வட்டாரக் கட்சிகள் தேவைப் படுகின்றன. எனவே கூட்டணிகளின் கணக்குகள் மாறுகின்றன.

ஒரு புறம் கொள்கை வழி அரசியல் தனிநபர் வழி அரசியலாக மாறியது. மறுபுறம் மையத்தில் அதிகாரக் குவிப்பின் மறுவிளைவாக மாநில, ஜாதி, வட்டாரக் கட்சிகள் வளர்ந்து செல்வாக்குப் பெற்றுவிட்டன. கொள்கை வழி அரசியல் சென்று ஆட்சியைப் பிடிப்பது மட்டுமே முக்கியம் என்று ஆகிவிட்ட நிலையில் வெற்றி பெற எது தேவையோ அதைச் செய்யலாம் என்று ஆகிவிட்டது. இதனால் கூட்டணி அமைப்பதில் எந்தக் கொள்கையும் தேவை யில்லை என்று ஆனது. இதன் விளைவுதான் தமிழகத்தில் நாம் இன்று பார்க்கும் காட்சி.

இது ஒன்றும் புதிதல்ல. ஆரம்பத்தில் காங்கிரஸ் முஸ்லீம் லீகைக் கடுமையாக எதிர்த்தது. தேசப் பிரிவினைக்கு முஸ்லீம் லீக்தான் காரணம் என்று சொன்னது. ஆனால் தேர்தல் வெற்றிக்காக அதே கட்சியுடன் கூட்டணி வைத்துக் கொண்டது. தமிழகத்திலும் ஆரம்பத்தில் Toilers Party, Commonwheel Party ஆகிய ஜாதிக் கட்சிகளுடன் தேர்தல் கூட்டணி வைத்துக் கொண்டது. காங்கிரஸை தி.மு.க. எதிர்த்தது, பிறகு அதனுடன் *1980*ல் கூட்டணி வைத்துக் கொண்டது, பிறகு மீண்டும் பிரிந்தது என்றெல்லாம் நடந்தது. இந்திராவின் நெருக்கடி நிலையை எதிர்த்த சரண்சிங் அதே இந்திரா காந்தியின் துணையுடன் சிறிது காலம் பிரதமராக இருந்தார். சந்திரசேகரின் காங்கிரஸ் எதிர்ப்பு நிலையும் இப்படித்தான். ஆக, கொள்கையற்ற கூட்டணி என்பது புதிதல்ல.

இன்றைய தமிழக சூழ்நிலையில் வேறொரு விஷயத்தையும் கவனிக்க வேண்டும். கட்சிகள் தேர்தலுக்குத் தேர்தல் அணி மாறுவதில் சிறிய கட்சிகளைவிட பெரிய கட்சிகளுக்குத்தான் பொறுப்பு அதிகம். அவைதான் சிறிய கட்சிகளுக்குத் தூண்டில் போடுகின்றன; அல்லது வெட்டி விடுகின்றன. எல்லாமே அதிகாரம், பதவியை அடிப்படையாக வைத்துத்தான் நடக்கிறது. இந்த நிலை மாறவேண்டுமென்றால் மேலே சொன்ன காரணிகள் மாற வேண்டும். அல்லது இந்த சீரழிவு முற்றிப்போன நிலையில் மக்களிடம் உருவாகும் கொந்தளிப்பு இதற்கெல்லாம் ஒரு முடிவு கட்டும். நெருக்கடி நிலைக்குப் பிறகு அதுதான் நடந்தது. ஆனால் அந்த எழுச்சி நேர்மையான தலைமையால் திறமையாக நெறிப் படுத்தப்படாவிட்டால் விரைவில் வடிந்து போகும். ஆக இதுவும் நீண்டகாலத் தீர்வு அல்ல. கல்வியறிவு, விழிப்புணர்வு ஆகியவை மக்களிடையே பெருமளவில் பரவினால் தான் இதற்கு நிரந்தரத் தீர்வு உண்டாகும். கல்வியறிவு அதிகமுள்ள கேரளத்தில் மற்ற மாநிலங்களைவிட அரசியல் ஆரோக்கியமானதாக இருக்கிறது. ஆகவே கல்வியைப் பரவலாக்கும் முயற்சியை அதிகரிப்பதில்தான் தீர்வு அடங்கியிருக்கிறது. அது நடக்காதவரை இந்த நிலை தான் தொடரும். ■


மெய்ஞ்ஞானச் செல்வம்! அறிவுக் களஞ்சியம்!

இல்லந்தோறும் இருக்க வேண்டிய நன்னூல்.

தமிழகத்தில் 18, 19ஆம் நூற்றாண்டுகளில் நிலவிய கலை, இலக்கிய, சமய, சமூக, அரசியல், பொருளியல், நடப்புகளை இந்திய, உலக வரலாறுகளுடன் ப. சிவனடி ஒப்பிட்டுக் காட்டும் ஒப்பற்ற வரலாற்றுக் களஞ்சியம். ஆற்றொழுக்குப் போன்ற எளிய தமிழ்நடையிலமைந்த

**இந்திய சரித்திரக் களஞ்சியம்**

தொகுதி 1 முதல் தொகுதி 14 வரை (தொகுதி 7 நீங்கலாய்)

விலை ரூ. 1730 (சலுகை விலை ரூ. 1000)

முன்பணம் அனுப்புவோருக்குத் தபால் செலவு இலவசம்.

கல்விக்கூடங்களுக்குச் சிறப்புச் சலுகை உண்டு

**சித்தார்த்தன் புத்தகங்கள்**

புது எண் 103, நாலாவது அவென்யூ, அசோக் நகர்

சென்னை 600 083 தொலைபேசி : 4740562




படிப்பகம்

www.padippakam.com

மைக்கூடு

## சேவியர் தனிநாயகம் அடிகள் (1913-1980)



தமிழ்மொழி பண்பாடு வரலாறு சமூகம் குறித்த செய்திகளை ஆரம்பகாலத்தில் மேலைநாடுகளில்அறிமுகப்படுத்திய ஐரோப்பியர்களுக்கு உள்நோக்கம் இருந்தது என்ற விமர்சனம் இன்று முன்வைக்கப்படுகிறது. தென்னிந்திய குலங்கள், குடிகள், நாட்டுப்புறத் தெய்வங்கள் குறித்து பரவலாகச் செய்தி சேகரித்து எழுதிய எட்கார் தர்ஸ்டன், ஒயிட் ஹெட் போன்றோர்கள் இன்று பரிசோதனைக்கு ஆளாகி விட்டனர். இவர்களைக் குறித்த குற்றச்சாட்டுகளில் இவர்கள் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குச் சாதகமான செய்திப்பரப்பாளர்கள் என்பதும் ஒன்று.

மேலைநாடுகளில் தமிழக வரலாற்றையும், சமூகச் செயல்பாடுகளையும் கொண்டு சென்றவர்களில் பெரும்பாலோர் ஆங்கிலம் வழியே அதை அறிமுகப்படுத்தினர். இவர்களில் தமிழ் இலக்கியங்களையோ, மரபு வழிக் கவித்துவத்தையோ முழுமையாகக் கொண்டு சென்றவர்கள் மிகக் குறைவு. தமிழ் சமூகத்தின் குறைபாடுகளையும், சுவையான ஆச்சரியம் அளிக்கும் விஷயங்களை விவரிப்பதிலும் இவர்கள் ஆர்வம் காட்டினார்கள். இவர்களில் மிக மிக வித்தியாசமானவர் சேவியர் தனிநாயகம் அடிகள். இவர்தான் (முதல் முதலில் என்றுகூடக் கூறலாம்) 2500 ஆண்டுகள் பாரம்பரியம் உள்ள தமிழ் இலக்கியங்களை மேலைநாட்டு மக்களின் தாய்மொழிகளிலேயே கொண்டு சேர்த்தவர்.

தமிழகத்தில் மறக்கப்பட்ட அல்லது நியாயமான இடம் கிடைக்காத அறிஞர்களின் வரிசையில் இவரையும் சேர்த்துக் கொள்ளலாம். இவர் இலங்கையில் பிறந்து மலேசியாவில் வாழ்ந்து மறைந்த கத்தோலிக்கர் என்பதும் ஒரு காரணமாயிருந்திருக்கலாம்.

சேவியர் எஸ். தனிநாயகம் அடிகள் யாழ்பாணத்தில் கயக் என்ற இடத்தில் 1913 ஆகஸ்ட் 2ல் பிறந்தார். இவரது ஆரம்பக் கல்வி தூய பேட்ரிக் கல்லூரியில் நடந்தது. பின் ஜூனியர் கேம்பிரிட்ஜில் ஆங்கிலம் வரலாறு படித்து இளம் கலை பட்டம் பெற்றார். பின் கொழும்பு பொர்நார்டு செமினரியில் கத்தோலிக்க பாதிரி பயிற்சிக்குச் சென்றார். அங்கு உலக சமயங்களையும் தத்துவத்தையும் ஒப்பிட்டுப் படிப்பதில் ஆர்வம் ஏற்பட்டபோதுதான் சைவ சித்தாந்தத்தில் கவனம் திரும்பி தமிழ் இலக்கியத்தில் ஆர்வம் ஏற்பட்டது. இந்த ஆர்வம் 1934–39ல் ரோம் நகரம் சென்ற பிறகும் தொடர்ந்தது. அங்கு இறையியல் படிப்பின்போது தத்துவத்தில் ஒரு ஆய்வேட்டை சமர்ப்பித்தார். மேலும் ஐரோப்பிய கலை குறித்தும் படித்தார். ஹிப்ரு, இத்தாலி மொழிகளைப் பயின்றது இங்கேதான். இவர் முறைப் படித் தமிழ் படிக்க விரும்பி 1945ல் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. வகுப்பில் சேர்ந்தார். அப்போது அங்கு தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் ஆசிரியராக இருந்தார். எம். ஏ. முடித்ததும் தொடர்ந்து எம். லிட் பட்டத்திற்காக அங்கேயே ஆய்வு செய்தார். அப்போது அவருக்கு ஆய்வு வழி காட்டி எ. சி. செட்டியார். அவர் ஆய்வுக்காக எடுத்துக்கொண்டது சங்க இலக்கியங்களில் இயற்கை குறித்தது. இதே விசயம் பின்னர் Landscape and Poetry என்ற தலைப்பில் புத்தகமாக வந்தது. 55ல் லண்டன் பல்கலைக் கழகத்தில் Ancient European and Indian System of Education compared with special reference to ancient Tamil Eduction என்ற தலைப்பில் பிஎச். டி ஆய்வு செய்தார்.

தனிநாயகத்தின் ஆசிரிய வாழ்க்கை இன்றைய திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள வடக்கன்குளம், புனித தெரசா பள்ளியில் ஆரம்பமானது (1940–45). இங்கு தமிழ் ஆங்கிலம் இரண்டையும் கற்பித்தார். பின்னர் சிலோன் பல்கலைக்கழகத்தில் கல்வித்துறைப் பேராசிரியர் (52–55, 61–69) மலேசியப் பல்கலைக்கழகத்தில் மொழிப் பேராசிரியர் (55–56) என இவர் பணியாற்றியபோது சிறந்த கல்வியாளராக இவர் மதிப்பிடப்பட்டார்.

தனிநாயகம் ஆங்கிலம் லத்தீன், பிரெஞ்ச், ஸ்பானிஷ், ஜெர்மன் ஆகிய ஐந்து மொழிகளிலும் மிகச் சரளமாகப் பேசுவார். இம்மொழிகளின் இலக்கியங்களும் இவருக்குத் தெரியும். ஹிப்ரு, கிரீஸ், சமஸ்கிருதம், போர்ச்சுக்கீசு, ரஷயன், மலாய், சிங்களம் போன்ற மொழிகளை ஓரளவுக்கு – தமிழ் இலக்கிய மொழி ஒப்பீட்டிற்காக இவற்றைப் பயன்படுத்தும் அளவுக்கு – அறிந்திருந்தார்.

தனிநாயகம் உலகெங்கும் கல்வியாளராகச் சொற்பொழிவாற்றச் சென்றிருக்கிறார். இந்த இடங்களில் தமிழ் இலக்கியங்களைக் கொண்டு சேர்ப்பதில் முனைப்போடு செயல்பட்டிருக்கிறார். 50–51ல் அமெரிக்காவில் உள்ள பல்கலைக் கழகங்கள்; 55ல் மலேசியா, இந்தோனேஷ்யா, கம்போடியா, வியட்நாம் ஆகிய இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்கள்; 60ல் ஐரோப்பிய நாடுகளில் உள்ள பல்கலைக் கழகங்கள் என்று இவர் ஆற்றிய சொற்பொழிவுகள் எல்லாமே தமிழ் மொழி பண்பாடு வரலாறு குறித்தவை. அந்தக் காலங்களில் (50–60) இவருக்கு ஒரு சொற்பொழிவுக்கு 200 டாலர்கள் கிடைத்ததாம். மேலை கீழை நாடுகளில் ஏறத்தாழ 200 சொற்பொழிவுகள் நிகழ்த்தியிருக்கிறார்.

தனிநாயகம் தமிழ் பற்றி பேசிய சொற்பொழிவுகள் எல்லாமே ஆங்கிலத்தில் அமைந்தவை அல்ல. பிரஞ்சு, ஜெர்மன், லத்தீன், இத்தாலி, ஸ்பானிஷ் மொழிகளில் – அந்தந்த மொழி இலக்கியங்களை தமிழுடன் ஒப்பிட்டு பேசியதுதான் அவருடைய தனித்தன்மை. அதோடு உண்மையான தகவல்களை ஆதாரத்துடன் சிரத்தையுடன் கொடுத்ததும். அவருடைய நோக்கம் உயர்ந்ததாக இருந்தது.

இவர் மேல்நாட்டு பாதிரியார்களிடம்கூட தமிழைக் கொண்டு சேர்த்தவர். இன்று தமிழக நாட்டுப்புற இயல் குறித்து சேகரிக்க வருகின்ற ஜெர்மன், பிரஞ்சு, அமெரிக்க அறிஞர்களுக்கு உண்மையான தூண்டுதலாக இருந்தவர் இவர். அதோடு கீழைநாட்டுத் தமிழ் பாதிரிகளிடமும் தமிழ் உணர்வைக் கொடுத்தவர்.

சென்னையில் தமிழ் பண்பாட்டுக் கழகம் உருவாக்கியது, தூத்துக்குடியில் தமிழ் இலக்கியச் சங்க அமைப்பு உருவாக்கியது எல்லாம் தமிழகக் கத்தோலிக்க பாதிரிகளிடம் தமிழ் விழிப்புணர்வை உண்டாக்கியிருக்கின்றது. 64ல் புதுதில்லியில் இவர் சிந்தித்த முடிவே உலகத் தமிழ் மாநாடு உருவாகக் காரணமாயிற்று. 66ல் கோலாலம்பூரில், 68ல் சென்னையில், 70ல் பாரீசில், 74ல் யாழ்ப்பாணத்தில், 81ல் சென்னையில் நடந்த மாநாடுகளில் இவருடைய பங்கு மிக முக்கியமானது.

இவருடைய செயல்பாடுகளில் Tamil Culture மும்மாத இதழை நடத்தியது குறிப்பிடத்தகுந்தது.

67 வயதே வாழ்ந்த இவர் எழுதிய நூற்கள் மிகக் குறைவுதான். இவர் எழுதி அச்சில் வந்தவையாக The Casthaginian Clergy (1942), Landscape and Poetry (1953), ஒரு உலகம் (1966), தமிழ்த்தூது (1962), A Reference Guide to Tamil studies (1966), Tamil Studies Abroad (1968), Tamil-Portuguese Dictionary of Proenca (இதன் முதல் பதிப்பு 1679ல் வந்தது. இதை திருந்திய பதிப்பாக அடிகள் 1966ல் கொண்டுவந்தார்) ஆகியவற்றைக் கூறலாம்.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் அமுதன் அடிகள் தனிநாயகம் அடிகள் அறக்கட்டளை நிறுவிய பின்பு அடிகளின் சொற்பொழிவுகளையும், அச்சில் வந்த பழைய நூற்களையும் வெளியிட்டுள்ளனர்.

இந்தியச் சிந்தனை ஆரியச் சிந்தனை வழி வந்தது என்ற கருத்துக்கு (முக்கியமாக Charles Eliot போன்றவர்களின் கணிப்பு) எதிரானவற்றை அறிவியல் பூர்வமாகத் தொகுத்துக் காட்டியிருக்கிறார். இந்தியச் சிந்தனையாளர்களின் வரிசையில் சமயத் தத்துவப் பள்ளி நிறுவனர்களைச் சேர்ப்பதைவிட வள்ளுவரைச் சேர்ப்பது முதன்மையானது என்று முதலில் குரல் கொடுத்தவர் இவர்.

அ. கா. பெருமாள்


படிப்பகம்

www.padippakam.com


# பிளாக் டிக்கட்



நகரத்தின் அகலசாலை நடைபாதையின் ஓரத்தில் மலர் படுத்திருந்தாள். காலை வெயில் தார்சாலை எங்கும் படிந்திருந்தது. அவளது மகன் டீக்கடையிலிருந்து திரும்பி வந்தான். வட்ட வடிவ பன்னையும் தேனீரையும் அவள் தலையருகே வைத்து அவளை பலமாகத் தட்டி எழுப்பிவிட்டுச் சென்றான். பயம் தரும் கனவிலிருந்து மீண்டவள் போல் திடுக்கிட்டு எழுந்தாள், ஆடைகளை குருட்டாம்போக்காய் பாதுகாத்தபடி. அவள் மகன் பட்டறைக்குச் சென்று கொண்டிருந்தான். அவனைப் பார்த்துக் கொண்டிருந்தாள். நோஞ்சான் உருவம். வேலைக்குச் செல்லும் விதவிதமான மனித அவசரங்

## ஜே. பி. சாணக்யா

களுக்கு மத்தியில் மந்தகதியில் சென்று கொண்டிருந் தான். அதிகமும் அவனை அனைவரும் கடந்து சென்று கொண்டிருந்தார்கள். அவன் யாரையும் கடக்காமல் நிதானமாய் சென்றுகொண்டிருந்தான்.

உடலைத் திருகி முறித்தபடி அருகில் பார்த்தாள். அழுக்கு மூட்டைகள் போல் உறங்கிக்கொண்டிருந்தார் கள். நடைமேடை இறக்கத்தில் நின்றுகொண்டிருந்த உலகிலேயே அதிக நம்பகமான பற்பசை விளம்பரப் பலகையின் நிழல் அவர்களின் மேல் சரிந்து விழுந்து கொண்டிருந்தது.

சாலையில் அன்றைக்கான வாகனச்சீற்றம் இன்னும் தொடங்காதிருந்தது பூரணமாய். அனுமதி விளக்கு குறுக்கத்தில் பாதசாரிகள் கடப்பது மிக உதிரியாய் இருந்ததில் வாகன தாரிகளும் அலுப்புடன் காத்துக் கொண்டிருந்தார்கள்.

வளைவில் ஆட்டோக்களையும், வேலைக்குச் செல்லும் சிறுவர்களை யும் கழுவிக் கொண்டிருந்தார்கள் சிலர். ஒரு கிழவனை ஒருத்தி முதுகுத் தேய்க்கத்தேய்க்க உணக்கையாய் அசைந்து கொடுத்துக் கொண்டிருந் தான். தண்ணீர் சாலையோரம் ஓடிக் கொண்டிருந்தது. வளைவில் பெண் களும் ஆண்களுமாய் வசைமொழி யில் பேசிக்கொண்டிருந்தார்கள்.

மலரின் முகம் இந்த ஒரு வாரத் தில் இருட்டுபோல் கறுத்துவிட்டிருந் தது. இது பட்டுவின் இடம். அவளது இடம் திரையரங்கத்தின் பின்புறம் உள்ள அழுக்கு படிந்துவிட்ட தடுப்புச்சந்து ஒன்றில் இருக்கிறது. இரண்டு துணி முடிச்சுகளும் கொஞ் சம் பாத்திரங்களும் மூடுவதற்கு ஒரு போர்வையும் போட்டு வைத்திருந் தாள் பட்டு. போர்வை அலிபாபா கொடுத்தது. முடிச்சுக்களை மூடிய பிறகு ஒரு பிய்ந்த ஜோடி செருப்பை மூட்டைக்கு காவல் போல் எப் போதும் பட்டு போட்டு வைத்திருப் பாள். படுக்கையில் தட்டையாகிப் போன சடையைக் கழற்றி கொண்டை யிட்டபடி சாலையில் எச்சில் துப்பி னாள். மலர் தனக்கு அரசாங்கம் கட்டிக் கொடுத்த வீட்டை வாட கைக்கு விட்டிருந்தாள். பட்டுவின் வீட்டை போலிஸ் நெருக்கடிகளின் போது அலிபாபாவின் கூட்டாளி கள் பயன்படுத்தி வந்தார்கள்.

கிழவனிடத்தில் சென்று தண் ணீர் வாங்கி நடைமேடை ஓரத்தில் தொற்றி அமர்ந்து முகம் கழுவினாள். வாய்க்கொப்பளித்து பாத்திரத்தைத் தூக்கிப்போட, கிழவன் ஒரு இளை ஞனின் உற்சாகத்தோடு பிடித்தான். அருகேயிருந்த கிறித்துவப் பள்ளிக்கு குழந்தைகளை இறக்கிச் செல்வதற்கு விதவிதமான வாகனங்கள் வந்து கொண்டிருந்தன. முந்தானையால் முகம் துடைத்தாள். ஒருவன் அவளைப் பார்த்துக் கொண்டு சென்றான். அவன் மறுபடியும் இச் சாலையைக் கடக்கும் போது அவனைத் தேடிச் செல்லும்படி தன் பார்வையை வைத்துக்கொண்டு பார்த்தாள். அவன் திரும்பித் திரும்பி பார்த்தபடி சென்று கொண்டிருந் தான். மலர் தேனீரை எடுத்து உறிஞ்சி பன்னைத் தொட்டுத் தின்னத் தொடங்கினாள். தேனீர் சொட்டிய புடவையை கையால் தட்டினாள்.


படிப்பகம்

www.padippakam.com

மீந்தத் தேனீரை அண்ணாந்து குடித்துவிட்டு துணி மூட்டையினுள் பாத்திரத்தைத் தூக்கிப் போட்டு விட்டு எழுந்து நடக்க ஆரம்பித்தாள். அப்பொருட்கள் முடங்கிய மூட்டை யும் காவல் செருப்பும் வெயிலில் அமைதியாய் கிடந்தன.

வாகனங்கள் பழுது பார்க்கும் கறுப்புப் படிந்த கடைகள் நீளும் தெரு வில் மலர் நடந்து சென்று கொண்டி ருந்தபோது, பூட்டிய கடை ஒன்றின் படிக்கட்டில் உட்கார்ந்து சிகரெட் பிடித்துக் கொண்டிருந்தான் ஒத்தக் கை சண்முகம். மலரைப் பார்த்தவு டன் எழுந்து வந்து "அலிபாபாவ பாத்தியா?" என்றான். அலிபாபா வீட்டுக்குத்தான் செல்வதாகக் கூறி னாள். இருவரும் சேர்ந்து நடந்தார் கள். தானும் அலிபாபாவை வீட் டுக்குச் சென்று பார்க்கும் திட்டத் தோடுதான் வந்ததாகவும், காலையி லேயே செல்வது அலிபாபாவின் மனைவிக்கு எரிச்சலை ஏற்படுத்தும் என்பதால் காத்திருந்ததாகவும் கூறி னான். இருவரின் நடையிலும் சற்று வேகம் கூடியிருந்தது. தோள்பட்டை சரியுமிடத்தில் இடது கரம் துண் டாடப்பட்டு, கை இருந்த இடத்தில் சட்டையின் கைப்பகுதி அவனது நடைக்கு எதிர்ப்புறமாக ஆடிக் கொண்டு சென்றது.

வளையும் முடுக்கில் லாட்டரி சீட்டுக்கடை முன்னால் காலையி லேயே அதிர்ஷ்டம் இழந்த ஆட்கள் நின்று கொண்டிருந்தார்கள், கீழே டூப்ளிகேட் பணத்தை மிதித்துக் கொண்டு. சண்முகம் பீடாக்கடை யில் விசாரித்துவிட்டு வந்தான். பீடாக்கடைக்காரன் பாயி காலை யிலிருந்து வரவில்லை எனக்கூறி னான். பீடாக் கடைக்காரனுக்கு இவர்களுடைய திண்டாட்டம் சற்று சந்தோஷமாக இருந்தது. அதிகமும் அலிபாபா ஒரு பழைய விடுதி யொன்றில்தான் உறங்குவான். அங்கு இருவரும் ஒருவர் மாற்றி ஒருவராக முன்பே தேடியிருந்தார்கள். மலருக் கும் அலிபாபாவை வீட்டில் சென்று பார்ப்பது அசௌகர்யமாகத்தானி ருந்தது. வழியிலேயே எங்காவது கிடைத்துவிட்டால் பரவாயில்லை யென இருவரும் நினைத்தார்கள். இந்த ஒரு வாரமாகத்தான் அலி பாபாவும் இரவில் வீடு தங்குகின் றான் என்பது அவர்களுக்குத் தெரியும்.

பீடாக்கடை அலிபாபாவினுடை யதுதான். ஆனால் ஒருபோதும் அதில் அவனை உட்கார்ந்து பார்க்க முடியாது. ஒரு வகையில் உறங்கும் போது மட்டும்தான் அவன் அதிக நேரம் ஓரிடத்தில் இருக்கின்றான். கடைப் பொருட்களை வாடகைக்கு விட்டிருந்தான். இட வாடகைதான் மிக முக்கியமானது. அலிபாபாவின் கூட்டாளிகள் யாராகிலும் வந்து அலிபாபாவுக்கு என பீடா வாங்கிச் செல்வார்கள். அதெல்லாம் கணக் கில் வைத்துக் கொள்ள முடியாது. கடை நடத்துபவனும் அலிபாபா வால் தனக்கு நஷ்டம் எனக்கூறி வேறிடத்தில் கடை போட முயற் சித்துக் கொண்டிருந்தான். இது போன்ற தோதான இடம் அவனுக்கு கிடைக்காது எனவும் எண்ணிக் கொண்டிருந்தான். அப்பிராந்தியத் தில் எங்கு கடை போட்டாலும் அலிபாபாவுக்கான இலவசம் இருந்து கொண்டிருக்கும் என்பதை நன்கு அறிவான். மேலும் கடை நடத்துவதற்குண்டான பணத்தை சேர்த்து வைக்கும் இடத்தின் வாசனை அலிபாபவுக்குத் தெரிந்து விடுவது அவனது துரதிருஷ்டம்.

சின்னதான நீள் சந்தில் இருள் நிரம்பிக்கிடந்தது. மூத்திர நெடி குப் பென்று பரவிக் கொண்டிருந்தது. தாண்டி வளைந்தவுடன் அழுக்கான அரசாங்கத் தொகுப்பு மாடி வீடுகள் நிறைந்த மஞ்சள் கட்டிட உலகம். வயதான வண்ணம் பெயர்ந்து கொண்டிருக்கும் சுவர்கள். புடவை கள் சரஞ்சரமாகத் தொங்கிக் கொண்டிருந்தன. சிறுவர்களின் கூச் சல் நிரம்பியிருந்தது. யாரோ ஒரு பெண் ஒருவனை சிரித்துக் களித்த படி இவர்களைத் தாண்டி தூரத்திக் கொண்டு ஓடினாள். வரிசையாக நின்ற ரிக்ஷாவில் கடைசியில் உட் கார்ந்திருந்தக் கிழவன் "விடாத, பிடி" என்று உற்சாகப்படுத்திக் கத்தினான்.

நான்கு அமைப்பு வீடுகள் தாண் டியதும் சண்முகம் கீழிருந்து "பாபா! பாபா!" எனக் கத்தினான். சில வினாடிகளில் முக்காடு போட்ட ஒரு பெண் எட்டிப் பார்த்தாள்.

"பாபா இல்லியா?"

"சலூன் கடைக்குப் போயிருக்கு."

இருவரும் தலையாட்டிக்கொண்டு கிளம்பினார்கள். அவள் மேலிருந்து இருவரும் செல்வதைப் பார்த்து கொண்டிருந்தாள்.

தையல் எந்திரங்கள் விற்கும் ஷோரூம் முன்பு வந்து நின்றார்கள் சண்முகமும் மலரும். பட்டு, கவிழ்த்தி அடுக்கியிருந்த மூங்கில் கட்டைமேல் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள். பட்டு வுக்கு மிகவும் வயதாகிவிட்டிருந்தது. அருகே கள்ளிப்பலகைப் பெட்டிகள் அடுக்கிக் கிடந்தன. பட்டுவின் பேத்தி பூத்தொடுத்துக் கொண்டிருந் தாள். திரையரங்கத்திற்குச் செல்லும் பாதையின் ஒதுக்குப்புறமாக இருந் தது அது. பட்டுவின் அருகே மலர் சென்று அமர்ந்தவுடன் சிறுமி சிரித்தாள். பட்டு புலம்ப ஆரம்பித் தாள், திரையரங்க நிர்வாகம் பற்றி. சண்முகம் ஒரு பெட்டி மேல் ஏறி உட்கார்ந்து சிகரெட் பற்றவைத்துக் கொண்டான். தீப்பெட்டியை தோளில் வைத்து தாடைப் பகுதியால் அழுத்தி பாக்குப் பொட்டலம் ஒன்றைக் கிழித்துப் போட்டுக் கொண்டு, மலருக்கு ஒன்றைத் தூக்கிப் போட்டான். கிழவியும் மல ரும் பாதிப் பாதி எடுத்துக் கொண் டார்கள். சிறுமி விளையாட்டாய் "எனக்கு?" என்று கேட்டபோது கிழவி அதட்டினாள் கண்டிப்பான முகத்துடன்.

போக்குவரத்து இரைச்சலும் அருகே நீளும் கடைக்காரர்களின் கூக்குரலும் அவ்விடத்தில் எப் போதும் நிரம்பியிருந்தன.

மலர் திரையரங்கத்தை உற்றுப் பார்த்தாள்.

அந்த நான்கடுக்குத் திரையரங் கம் மௌனமாக நின்று கொண்டு அதன் வசீகரங்களை ஒரு மந்திர வாதி போல் கசியவிட்டுக் கொண்டி ருந்தது. முன்புறத்து பெரிய முகப்பும், நிழல் தரும் வேப்பமரமும், அலாதி யான காற்றும் அதன் தீரா அழகு. கடும் கோடைகாலங்களில் கூட முகப்பில் நல்ல காற்று வீசிக் கொண் டிருக்கும். கார்கள் நிறுத்த போடப் பட்டிருந்த வெள்ளை வண்ண நீள் செவ்வகக் கட்டங்களில் காகங்கள் விளையாடிக் கொண்டிருந்தன. மேலே நீர்த்தேக்கத் தொட்டிக்குச் செல்லும் நீர் எங்கோ கசிந்து டப்டப்பென தரையில் சொட்டிக் கொண்டிருந்தது. கீழே விழுந்த நீர் தரையில் வட்டமான ஈரத்தை உரு வாக்கியிருந்தது.

திரையரங்கத்தில் வேலை செய்த பழைய ஆட்கள் எல்லோரும் மாற்றப்பட்டுவிட்ட நிலையில், அழ வம்மாளையும் முத்துவையும் மட் டும் பெருக்குவதற்கு வைத்துக் கொண்டது போலவே, செக்யூரிட்டி ஆட்களை புதிதாக நியமித்ததில் சர வணனையும் ராஜாவையும் திரை யரங்க நிர்வாகம் விசுவாசிகளாகக்


படிப்பகம்

www.padippakam.com



கருதி நிறுத்தி வைத்துக்கொண்டு, அவர்களுக்கு சீனியாரிட்டி பிரகாரம் அதிக உரிமையும் சம்பளமும் வழங்கி வந்தது. ராஜாவையும் சரவணனையும் திரையரங்க நிர்வாகம் வேலைக்கு வைத்துக் கொண்டதில் எத்தனையோ சௌகர்யங்கள் இருந்தன என்பது எல்லோருக்கும் தெரியும். ஒரு வகையில் அது நிர்வாகத்தின் தந்திரந்தான்.

காலைக் காட்சிக்கு ஆட்கள் வரத் தொடங்கி இருந்தார்கள். டிக்கெட் முன்பதிவு நேரம் தொடங்கியது. கார்களும் இரு சக்கர வாகனங்களும் ஒவ்வொன்றாய் கட்டடத்திற்குள் வந்து நின்றுகொண்டிருந்தன.

ஆயுதங்களோடு 'போஸ்' கொடுக்கும் கதாநாயகர்களின் அழகில் லயித்தபடி சிறு கூட்டம் நின்று பேசிக் கொண்டிருந்தது.

திரையரங்க உரிமத்தை புதுப்பித்துக் கொண்ட அறிவிப்பு பலகையின் கீழ் புகார் பெட்டி மாட்டியிருந்தது. புகார் பெட்டி முறையை தற்போதுதான் அமுல்படுத்தியிருந்தார்கள்.

கௌண்டர் வரிசைக்கம்பிகளில் இளைஞர்கள் குரங்குகள் போல் தொற்றிக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். ஆறு – ஐம்பது டிக்கெட்டுக்கான வரிசையில் அடிமைகளின் கூட்டம்போல் தரையில் வரிசையாக உட்கார்ந்திருந்தார்கள். அவ்வரிசை இளைஞர்களிடமும் சில உதிரிக் கூட்ட இளைஞர்களிடமும் விதவிதமான தலை கிராப்புகள், ஆடை வகைகள், தொனியில் கரையும் சினிமா வசனங்கள் என அக்கூட்டத்தின் செயல்பாடுகள் அனைத்திலும் சினிமா கதாநாயகர்களின் பிரித்துவிட முடியாத சாயல்கள் துருத்திக்கொண்டு தெரிந்தன.



நான்கு மாடிக் கட்டிடத்தின் தலையைத் தட்டிக்கொண்டு முகப்பின் நுனியில் வெயில் ஒரு நீள் கோடாய் விழுந்தது.

வெளிர்பச்சைக் காரைப் பார்த்ததும் ராஜா மேல் படிக்கட்டிலிருந்து இறங்கி ஓடி வந்தான். கூட்டத்தை அதட்டி ஒதுங்கச் சொன்னான். கூட்டம் அவன் அதட்டலில் ஊர்ந்து நகர்ந்து காரின் முக்கியத்துவத்தை வேடிக்கைப் பார்த்தது. கார் முகப்பின் தனியிடத்தை அடைந்து நின்றது. சின்னவர் இறங்கினார். ராஜா சல்யூட் வைத்தான். அவர் அவனை பார்த்திராதவராய் சென்றார். மூலைக்கு மூலை செக்யூரிட்டிகள் சல்யூட் வைத்தார்கள். யாரையும் பொருட்படுத்தாது உள்ளே சென்று கொண்டிருந்தார். பச்சை நிற ஒயர் கூடையைத் தூக்கிக் கொண்டு கதவடைத்துப் பூட்டிச் சென்றான் ராஜா. அவர் இவர்களின் வணக்கங்களைக் கவனிக்கவில்லை என்று நினைத்தால் தவறு. யார் யார் சல்யூட் வைக்கவில்லையென அவருக்குத் தெரியும். கேபினில் கூப்பிட்டு விசாரித்து மிரட்டி மறுநாள் அவ்வணக்கத்தை வாங்கிக்கொண்டு, வாங்கிக் கொள்ளாதவர் போலச் செல்வார்.

செக்யூரிட்டிகள், கார் வந்த பிறகு புதிய ரத்தம் பாய்ச்சப்பட்டதுபோல் கூட்டத்தையும் வாகனங்களையும் ஒழுங்கு செய்தார்கள். அவர்களின் செயலின் பரபரப்பை கழியால் தரையில் தட்டி சப்தமெழுப்பியபடி அலைந்து காட்டிக் கொண்டிருந்தார்கள்.

அழவம்மாளும் முத்துவும் துடைப்பங்களையும், வாளியையும் உள்ளே சென்று வைத்துவிட்டு காக்கி யூனிபார்ம் கணக்கிற்காக மேல் சட்டை மட்டும் காக்கி வண்ணத்தில் போட்டுக் கொண்டு வந்தார்கள், இரண்டு மூங்கில் குச்சுகளுடன். அவர்களிருவருக்கும், வயதுக்கு வந்தவர்கள் மட்டும் கௌன்டருக்கு பிரித்து விட்டிருந்ததில் சிறு சங்கடம் இருந்தது. அழவம்மாளோ, முத்துவோ தனியாக இருந்தால் சுத்தமாக மறுத்திருப்பார்கள், வேறு கௌன்டர் கேட்டு. பத்துப் பத்து ஆட்களாய் தடுத்து நிறுத்தி அனுப்பிக் கொண்டிருக்கும் வேலை. உள்ளே ஓடும் அப்படத்தின் மீதான கவனத்துடன் விழும் பார்வை, சிறு அளவாவது அவர்கள் மீது பிரயோகிக்கப்படுவதுதான் காரணமாக இருந்தது.

சின்னவர் உள்ளே செல்வதற்காகக் காத்திருந்ததுபோல் டிக்கட் கொடுக்க ஆரம்பித்தார்கள்.

மலர் எழுந்து வந்தாள். பின்னாலேயே ஒரு மனிதப் பல்லி போல் பட்டு எழுந்து தன் சதைகளை தூக்க முடியாது அசைந்தசைந்து வந்தாள். சண்முகம் 6.50 ரூபாய் வரிசையின் இடையில் புகுந்தான். பட்டு டிக்கெட் கொடுக்கும் அறையின் முன்பு நின்று கொண்டு டிக்கெட் கொடுக்கும் பாரியைப் பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் இவளைக் கவனியாதவன் போலிருந்தான். வரிசை முண்டியடித்து நெளிந்ததை கால்களில் அடிப்பதான பாவனையில் தரையில் கழியால் தட்டினான் மீசை. சண்முகத்திற்கு அவமானப்படுத்தப்பட்டது போலிருந்தது ஒரு வாரமாய். அவன் அதிகமும் வரிசையில் வந்து நின்று டிக்கட் எடுப்பவன் அல்ல. பட்டு சிறுசிறு சதுரங்களாலான கம்பி சன்னலில் விரல் பாதித்து "பாரி" என்றாள் கெஞ்சலான குரலில். செக்யூரிட்டி பட்டுவையும் சண்முகத்தையும் மாறிமாறி பார்த்துக் கொண்டிருந்தான். திரையரங்க நிர்வாகத்தில் இவர்களின் முகங்கள் பிளாக் டிக்கட் விற்பதின் பெரிய தலைகளாக அடையாளப்படுத்தப்பட்டிருந்தன.

ஆறு – ஐம்பது ரூபாய் டிக்கட்டில் மட்டும் நபருக்கு ஒரு டிக்கெட் என்ற விதியை தற்போது நிர்வாகம் மிகவும் கெட்டிப்படுத்தியிருந்தது. பட்டுவின் கெஞ்சல்கள் முற்றிப்போனபோது செக்யூரிட்டி "இந்தப்பக்கம் வா" என்று கண்டித்தான். பட்டு அவனை ஒருமுறை திரும்பிப்பார்த்து முறைத்தபோது சிறிது அதிர்ந்து போனான்.

சண்முகம் கௌன்டரில் கைகளை நுழைக்கும் தருணம். வந்தபோது


படிப்பகம்

நூறு ரூபாய் தாளை நீட்டி நுழைக்கப் பட்ட கரத்தால் இருமுறை ஐந்து ஐந்தாக அசைத்துக் காட்டினான்.

பாரி சண்முகத்தின் முகத்தைப் பார்க்காமல் ஒரு டிக்கெட்டை கிழித்து கையில் திணித்து, சில்லரை கொடுத்து சண்முகத்திற்கும் பின் இருக்கும் முகத்தைப் பார்த்து "ம்... ம்" என்றான்.

"என்ன பாரி?" என்றான் சண்முகம்.

"தப்பா எடுத்துக்காத. மேனேஜர் மாறிட்டாரு. முன்ன மாதிரி இல்ல. வேலைக்காவாது, நவுரு" என்றான் பாரி.

"என்ன பாரி ஒரு வாரமா... இதையே சொல்ற?"

"ஒரு வாரத்துக்கு முந்தி சொன்னனா? இப்பதான சொல்றேங். புரிஞ்சிக்க மாட்றீயே."

"பாரீ..." என்றான் சண்முகம்.

"என் வேலைக்கி ஒலை வச்சிராத ஆமாம். நவுரு." பின்புறம் முண்டியடிக்கும் கூட்டத்தைப் பார்த்து குரல் கொடுத்து மிரட்டினான் சண்முகம்.

"பஸ்ட் அன் லாஸ்ட் என்ன சொல்ற?" என்றான்.

"எனக்கு வேல போயிடும்" என்றான் பாரி.

"இந்த கேபின்லே தின்னுட்டு இங்கியே தூங்கிடுவியா?"

"என்ன மெரட்றியா?"

பாரி சண்முகத்தை உற்றுப் பார்த்தான். சண்முகம் பாரியை ஏளனமாகப் பார்த்தான்.

"பழசெல்லாம் மறந்திராத பாரி."

"யோவ் செக்யூரிட்டி" என்று கத்தினான் பாரி.

"அந்த அளவுக்கு ஆயிடிச்சா. சரி தாங் ஓகே. ஓகேப்பா" என்று வெளியில் வந்தான். செக்யூரிட்டியை ஒரு முறை முறைத்தான். பட்டு பரிதாபமாக நின்று கொண்டிருந்தாள். சண்முகத்திற்கே இன்றும் ஒரே டிக்கட் தான் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று உணர்ந்தவுடன் பட்டு கத்த ஆரம்பித்தாள்.

"டே பாரீ... நாங்களும் பாத்திட்டுதாம் இருக்கோம். எத்தினி பேர பாத்திருப்போங் இந்த கௌன்டர்ல."

"நீதாங் அதிசயமா டிக்கெட்டு குடுக்குறியா?"

"பொறந்ததிலிருந்து டிக்கட்டு குடுக்குற மாதிரி பேசற?"

"பழசெல்லாம் மறுத்துடாத."

"போம்மா அந்தப் பக்கம்" என்று கத்தினான் செக்யூரிட்டி.

"என்னப்பா? முறுக்கு மீச வச்சிருந்தா பயிந்திருவோமா? ஒன்ன மாதிரி தொளாயிரத்து தொண்ணத் தொம்பது மீசைய பாத்தவ நாங்."

சண்முகம் சிகரெட் ஒன்றை பற்ற வைத்துக்கொண்டு வேகமாக நடந்தான்.

"இதே தேட்டர்ல எத்தினி நாளைக்கு இதே மீசையோட இருக்கேன்னு பாத்துர்றோம்" என்றபோது "ஆங் பாத்துக்க பாத்துக்க" என்று ஏளனமாக சிரித்தபடி சொன்னான் செக்யூரிட்டி. அவனால் ஏளனத்தை முழுமையாக கொண்டுவர முடியவில்லை.

நிர்வாகம் நினைக்கும் பட்சத்தில் பிளாக் டிக்கட் விற்பவர்களை ஒரு மணி நேரத்திற்குள் எதுவும் செய்து விட முடியும். முன்பு அதுபோல் செய்தும் இருக்கிறது. அது நீண்ட பலனை தராது போயிருப்பதை புதியவர்கள் உணர்ந்திருந்தார்கள். ஆனால், பிளாக் டிக்கட் விற்கும் இவர்கள் மட்டும் நிர்வாகத்தோடு நேரிடையாக மோதாமல் மலின தந்திரங்களுடன் அடிமட்ட ஊழியர்களோடு தனிநபர் சண்டைகளாக உருமாற்றிக்கொண்டிருந்தார்கள்.

சீசனில் பிளாக் டிக்கட் விற்பவர்கள் நிர்வாகத்தின் சாதாரண போலிஸ் நடவடிக்கையிலேயே காணாமல் சென்று விட்டிருந்தார்கள்.

நிர்வாகம் குறிப்பிட்ட தருணங்களிற்காக காத்துக் கொண்டிருந்தது. தன்னளவில் ஒழுங்குகளை சரிசெய்தது.

பிளாக் டிக்கட் விற்பதினூடாக அவர்களுக்கு எளிதில் வசமாகி விட்ட பணப்புழக்கம் அவர்களை ஒரு வகையான மயக்கத்திற்கு ஆட்படுத்தியிருந்தது. இம்மயக்கத்தின் பொருட்டு அவர்கள் அதிக நெருக்கடிகளையும், சில சமயங்களில் அதீத வறுமைகளையும் பொருட்படுத்தாதிருந்தார்கள். எத்தனைக் கெடுபிடி வந்தாலும் ஒருவாரத்திற்குள் மெல்லிய ஓட்டை விழும். விரல் நுழைத்து பெரிதாக்கிக் கொள்வார்கள். சண்முகம் மற்றும் அவன் சார்ந்த சகாக்களின் புகைப்படங்கள் ரயில் நிலையங்கள், பேருந்துகள், பொதுமக்கள் நெரிசலாக கூடுமிடங்களில் பொது மக்களுக்கு எச்சரிக்கை என்ற பெயரில் பாதுகாப்பாக ஒட்டப்பட்டிருந்தன. சண்முகம் சூழ்நிலைகளுக்கேற்ப சிறு கள்வு முதல் பிளாக் டிக்கட் விற்பது வரை செய்து கொண்டிருந்தான். அவன் யாரைப் பற்றியும், பொதுவாக மனிதர்கள் பற்றியே நல்ல அபிப்ராயங்கள் எதுவுமில்லாதவனாகவே இருந்தான். அது அவன் அத்தொழில்களை நீட்டித்துக் கொண்டிருக்க வசதியாக இருந்தது. பட்டு முழுநேர பிளாக் டிக்கட் விற்பதற்கு முன் வேசைத் தொழில் செய்து கொண்டிருந்தாள் என்பது திரையரங்க தொழிலாளர்கள் அனைவருக்கும் தெரியும். அவளிடம் யாரும் பேச்சுக் கொடுக்க விரும்பாததின் காரணமும் அதுவாகத்தானிருந்தது. அவளுக்கு ஆண்கள் பற்றிய மனோபாவத்திலும், வேசைத்தனத்தில் உடலுறவு குறித்த மனோபாவத்திலும் ஏற்பட்டிருந்த மாற்றங்களினால், எந்த இடத்திலும் சிறிதும் யோசிக்காமல் குறிகளின் பெயரை அழுத்தம் திருத்தமாக சொல்லித் திட்ட முடிந்தது. மலரும் சாந்தியும் தம் உடல்கள் மீதான அவநம்பிக்கையை அடைந்தபின் பிளாக் டிக்கட் விற்க வந்தார்கள். இருப்பினும் அவசரம் மற்றும் நிதானமிழந்தவர்களின் உடலுறவுக் கணங்கள் அவர்களுக்கு சாதகமாக இருந்தன.

தற்போதும் நிர்வாகம் நெளிந்து கொடுக்கும் என எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் இந்த முறை கெடுபிடி அவர்கள் இதுவரை அனுபவித்து வந்ததைக் காட்டிலும் தீவிரமானது என்பதை உணர்ந்திருந்தார்கள். அதை உணர்ந்ததின் அடையாளமாய்தான் அலிபாபா இன்னும் தலையிடாமல் வேவு பார்த்துக் கொண்டும் இருந்தான். சற்று பெரிய களவுகளும், உயிர் சேதமில்லாத கத்திக்குத்துகளிலும், சிறு தரகு வேளைகளிலும் ஈடுபட்டுக் கொண்டிருந்த அவனுக்கு, புத்திமதிகள் கூறி பீடாக்கடை வைத்துக்கொடுத்த அப்பகுதி போலிஸ்காரர் இறந்துவிட்ட பின் மீண்டும் அவைகளைச் செய்ய ஆரம்பித்திருந்தான். அவனுக்கு பிளாக் டிக்கட் விற்று தனக்கு வந்து சேரும் பணம் தேவையானதாக இருந்தபோதும் அப்பணம் தனக்கு தேவையில்லாதது போல நடித்துக் கொண்டிருந்தான் தனக்காக டிக்கட் விற்பவர்களிடம். சில படங்கள் திரையிடப்படும் சூழலில் அவன் சிறிதும் எதிர்பார்க்காத பணம் வந்து சேர்ந்துவிடுவதால் கைவிடாதிருந்தான். மற்ற பிளாக் டிக்கட் விற்பவர்கள் அதிகமும் கும்பலைப் பார்த்து டிக்கட் எடுத்து விற்பவர்களாகவும், மற்ற சமயங்களில் கம்பெனிகளில்

www.padippakam.com




பட்டறைகளில் வேலை செய்பவர்களாகவும் இருந்தார்கள்.

இவ்வேலை தரும் இரட்டிப்புப் பணம் சில நாகரிக வேடமணிந்த அல்லது குறைந்தபட்ச நாகரிகத்தோடு சினிமாவுக்கு வரும் நபர்கள் கூட விற்கும் அளவுக்கு ஆக்கிவிட்டிருந்தது. இதில் உச்சபட்ச அபத்தங்க்ள் நிகழ்ந்துவிடுவதுண்டு. சிவானந்த குருகுலத்திற்காகத்தான் நான் டிக்கட்டுகள் விற்கிறேன் என்று சொல்லிக் கொண்டு விற்றுக் கொண்டிருந்தான் ஒருவன். உயர்தர கார்கள் திரையரங்க வளாகத்திற்குள் நுழையும் போதே காரை வளைத்துவிடுவான் சண்முகம் எதிர் நின்று. சண்முகம் இல்லாத பட்சத்தில்தான் கார்களுக்குரிய நபர்களிடம் மற்றவர்கள் நெருங்க முடியும் என்பதை ஒரு மாய பலத்தின் மூலம் உருவாக்கியிருந்தான். அந்நேரத்தில் டிக்கெட்களின் விலை மும்மடங்கைத் தாண்டிச் சென்று விட்டிருக்கும். சிவானந்த குருகுலத்திற்கு டிக்கெட் விற்பதாகச் சொல்லிக்கொண்டு திரிந்தவன் காரை மறித்து டிக்கெட் விற்க முனைந்து கொண்டிருந்தான். காட்சி ஆரம்பிக்கும்வரைக் காத்திருந்த சகாக்கள் விற்ற முழுபணத்தையும் அவன் பார்ப்பதற்கு வைத்திருந்த கடைசி டிக்கெட்டையும் பிடுங்கி அறைந்து அனுப்பி வைத்தார்கள். அவன் இன்னும் அபத்தமாக இதற்காகப் போலீசிடம் புகார் கொடுக்கப்போவதாகச் சொல்லிக் கொண்டு ஆவேசமாக கிளம்பிய போது அனைவரும் சிரித்தார்கள்.

அலிபாபா தன் சகாக்களுக்கு, அவர்கள் நினைப்பது போலவே தன்னைப் ஒரு புத்திசாலியாகக் காட்டிக்கொண்டு இதுவரை செயல்பட்டுக் கொண்டிருந்தான். இதில் தலையிடாமல் இருப்பதுபோல ஒரு பாவனையை உருவாக்கிவிட்டு என்ன செய்வதென்று யோசித்துக் கொண்டிருந்தான். அவன் வீட்டுக்குச் செல்லாமல் ஊர் சுற்றிக் கொண்டிருந்தாலும் வீட்டுக்குச் சென்றுவிடும் தினப்படி வருமானத்தை இழக்க விரும்பாதிருந்தான். கொஞ்சம் விட்டுப்பிடிப்போம் என அவன் யூகித்தாலும் அவன் பயந்து விட்டதாகக் கருதிக்கொள்வார்கள் என எண்ணிக் கொண்டிருந்தான்.

அலிபாபா மனித பலவீனங்களில் கை வைப்பவன். ஒரு வகையில் அதுதான் அவன் கண்ட மானுட தரிசனம். மனிதர்கள் பலவீனம் இல்லாமல் இருப்பதில்லை என



**நள்ளிரவில் மலிவு வாடகை விடுதியறையில் மலரும் சண்முகமும் காத்திருந்தார்கள். சண்முகம் தொடர்ந்து புகைத்துக் கொண்டிருந்தான். அவ்வப்போது மலர் அவனிடமிருந்து வாங்கிப் புகைத்து திருப்பிக் கொடுத்தாள். குளித்து பூ வைத்து மலர்ச்சியாக இருந்தாள். அறையில் அதிக வசிப்பற்ற வறட்சி காணப்பட்டது. மட்கிய வாடை வந்து கொண்டிருந்தது. பழங்கால இரட்டைக் கதவு போடப்பட்ட விடுதி. சன்னல் கதவுகளுக்கு பச்சை வண்ணம் அடித்திருந்தார்கள். சுற்றிலும் நவீன வசதிகள் பெருக்கத்துடன் கட்டிடங்கள் எழும்பி நின்று கொண்டிருக்க, எல்லாக் கட்டிடங்களுக்கும் பின்புறம் குள்ளமாய் சிக்கிக் கொண்டிருந்தது. பழங்கால மின்விசிறி அபாயத்தன்மையோடு முறுக்கிக் கொண்டு சுற்றிக் கொண்டிருந்தது.**

அவன் தீர்க்கமாக நம்பிக்கொண்டிருந்தான். ஒவ்வொரு காலத்திலும் அவனுக்கு இது சாதகமான முடிவுகளை அளித்துள்ளதை அறிவான்.

பெரியவர் இருந்த காலத்தில் தொழிலாளர்களும் ஒரு வகையில் பிளாக் டிக்கெட் விற்பவர்கள் எனும் படியாகவே நடந்து கொண்டார்கள். அவருக்கு நல்ல படங்கள் எடுத்து வருவதும் திறம்பட ஓட்டுவதும்தான் பெரிய கவலையாக இருந்தது. அவர் ஒரு நல்ல ரசனைவாதியாகவும் இருந்தார். "என்ன செய்யறது? நம்ம பையங்களே சரியில்ல. இதுல அவனுகள என்னத்தைச் சொல்லறது" என சொல்லி விட்டுவிடுவார், இந்தப் பிரச்சினை தலையெடுக்கும் போதெல்லாம். சில படங்களுக்கு இயல்பாகவே கூட்டம் கூடிவிடும் போது இரண்டு மூன்று போலிஸ்காரர்களை வரவழைப்பார். அதுவும் பிரச்சினைகள் எதுவுமற்று காட்சிகள் ஓட்டப்பட வேண்டும் என்பதற்காகத்தான். பிளாக் டிக்கெட் விற்பவர்கள் அனைவரையும் அவருக்குத் தெரியும். அவர்கள் அனைவரும் பெரியவருக்கு வணக்கம் வைப்பார்கள். சிரித்துக் கொள்வார். "இவனுங்க எதுக்கு தெரியுமா வணக்கம் வைக்கிறாங்க. இதே போல இருன்னு சொல்லாம சொல்றதுக்குத் தாங்" என்று களங்கமில்லாமல் சிரிப்பார். திரையரங்கத் தொழிலாளர்கள் அவருடன் பிரிக்க முடியாதபடி ஒட்டிக் கொண்டதற்கு அவரின் களங்கமற்ற மனம்தான் காரணம். இன்னும் பட்டுவும், மலரும், சாந்தியும் பெரியவரை போற்றாத நாளிருக்க முடியாது. அவர்களைப் பொறுத்தவரை அது அவர்களுக்கு மிகவும் பிடித்தமான காலம்.

பிரம்மாண்டமான ஆங்கிலப் படம் போட்டிருந்தார்கள். பட்டுவும் மலரும் காலையிலேயே வந்திருந்தார்கள். மலர் அப்போது கொஞ்சம் சேதமடையாத உருவமாக இருந்தாள். ஒன்பதரை மணிக்கெல்லாம் கூட்டம் வரத்தொடங்கியதும் உற்சாகம் தொற்றத் தொடங்கியிருந்தது. முன் பதிவு வரிசை நீண்டு கொண்டிருந்தது. மலர் திரையரங்கத்தினுள் சென்றபோது பட்டு காத்திருந்தாள். வந்தவுடன் பட்டு உள்ளே சென்றாள். மலர் கத்தையாக வாங்கி வந்திருந்த டிக்கட்டுகளை இடுப்பிலும் மார்பிலும் கைகளிலும் பிரித்து பிரித்து வைத்துக் கொண்டாள். அவளுக்கு திருப்தியாக இருந்தது. பட்டுவுக்கு திருப்தியென்றால் சிரித்துக்



படிப்பகம்

கொண்டேயிருப்பாள். திருப்தியில்லையெனில் திட்டிக் கொண்டிருப்பாள். பட்டு தன் உருவத்தை கவனமாகப் படியிறக்கி வந்து திரையரங்கத்தின் வலது பக்க பகுதிக்கு சென்றாள். மலர் கைகளைத் தூக்கித் திமிர் முறித்து பின் கைகளை பின்புறத்தில் கட்டிக் கொண்டு கடற்கரையில் உலவுவதுபோல் நடக்க ஆரம்பித்தாள் குறுக்கும் நெடுக்குமாய். ஆட்களை, சிறு கூட்டத்தைக் கடக்கையில் சுலோகம் முணுமுணுப்பது போல் சொல்லிக் கொண்டிருந்தாள். அவளுக்குத்தெரியும் படியும் நபர்களை, பிசிறும் நபர்களை. துண்டடியாக வெட்டிப் பேசி வியாபாரம் நிகழும். பிசிறும் கூட்டத்திற்கு டிக்கட் கிடைப்பதில் நம்பிக்கையின்மை, நெரிசலின் அவதி போன்றவைகளை போதிப்பாள். சாந்தி, மலரிடம் கமிஷன் விகிதத்தில் டிக்கட்டுகள் வாங்கிக் கொண்டாள். டிக்கட் விற்றதும் வேசைத் தொழிலுக்கான ஆட்களை வளைப்பதை செய்ய அவளுக்கு சைக்கிள் ஸ்டாண்டு பொருத்தமான இடமாகத் தேர்வு செய்திருந்தாள். ஒடுபோல் உருவம். காற்றில் மிதந்து வருவது போல் வருவாள். சாந்தி இப்போதெல்லாம் கௌண்டருக்குச் சென்று டிக்கட் வாங்குவதை விட்டிருந்தாள். செல்லதுரைக்கும் பாரிக்கும் சண்டை மூட்டிப் போட்டுக் கொடுத்துவிட்டாள் என்று ஆயிரம் விளக்கு சுரங்கப் பாதையில் வைத்து அடித்து மண்டையை உடைத்துவிட்டார்கள். ஆனால் அப்பிரச்சினைப் பற்றி இது வரை மூச்சு விடாதிருந்தது கெட்டிக்காரத்தனம் என்று அவளை அவளே மெச்சிக் கொண்டிருந்தாள். அப்பிரச்சினை முழுதும் வெளிவரும் சமயத்தில் சாந்தி எல்லோரின் நம்பிக்கையையும் இழக்க வேண்டி வருமென அஞ்சினாள். குளியலறையில் பாடும் நிதானமான குரலில் பட்டு கரகரத்துக் கூவுவாள். ஒத்தக்கை சண்முகம் தன் சிறுவர் சகாக்களுடனும் பாக்கு மெல்லும் தோரணையுடனும் திரையரங்க வளாகத்தினுள் நுழைந்தான். கார்களின் மந்தையில் ஒரு அம்பாசிடர் கார்மீது சாய்ந்து நின்று கொண்டான். சிறுவர் குழுக்கள் பிரிந்து உலாவ ஆரம்பித்தார்கள். சண்முகம் விற்கும் டிக்கட்டுகள் அனைத்தும் அலிபாபாவினுடையது. கமிஷனும் தந்து செலவுகளும் செய்யும் அலிபாபாவிற்குத் தீவிரமான விசுவாசியாக இருந்தான் சண்முகம். சண்முகத்தின் கண்கள் சதா மேய்ந்தபடி இருக்கும். புதிய போலிஸ்காரர்கள் யாராவது நியமிக்கப்படும் பட்சத்தில் அனைவரும் அனுமதி விளக்கு நிறுத்த நடையோரம் சென்று விற்றுக் கொண்டிருப்பார்கள். ஆனால் அதிகமும் புதியவர்கள் வருவதில்லை. எப்போதும் "ரூல்தடி"தான் வருவார் சைக்கிளைத் தள்ளிக் கொண்டு. சண்முகத்தைச் சுற்றி வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும் கூட்டத்தைப் பொருட்படுத்தாது தெனாவட்டாகப் புகைத்துக் கொண்டிருந்தான். கும்பல் அதிகமானபோது நாகரீகமாகத் திட்டினான். கும்பல் அசைந்து கொடுத்தது. செக்யூரிட்டிகள் கழிகளைத் தரையில் தட்டிக் கொண்டு கை மடிப்பில் பதுக்கிய டிக்கட்டுக்களை ஆட்கள் கடக்கும் போது கேட்டு விற்றுக்கொண்டிருந்தார்கள். அந்நேரத்தில் மட்டும் அவர்களிடம் கையூட்டு பெறும் களை வந்து போய்க் கொண்டிருந்தது.



காட்சி ஆரம்பிக்க சிறிது நேரத்திற்கு முன் "ரூல்தடி" வந்தார் சைக்கிள் பின்னிருக்கையில் செருகப்பட்ட தடியுடன். நிர்வாகம் காட்சி ஆரம்பிக்கும் வரை கடமை ஆற்ற வேண்டும் என்று அனுமதி வாங்கிய நபர். பிளாக் டிக்கட் விற்பவர்களிடையே புழங்கும் அவரின் அடைமொழிப் பெயர் அவரின் நிஜப்பெயரை நிர்வாகம் வரை மறக்கடித்திருந்தது. நீள வாகில் கழுகு போல் இருக்கும் முகம். சீருடையில்லாமல் வருவது அவருக்கு வசதியாக இருந்தது. வந்தவுடன் பெரிய தலைகள் மெதுவாகக் கழன்று கொள்ளும். சிறுவர்கள் டிக்கட்டுகளை விற்று ஒப்படைத்துவிட்டது போல் சுவரோரம் போய் உட்கார்ந்து கொள்வார்கள். அதில் அவருக்கு குமார் மீது ஒரு கண் இருந்துகொண்டேயிருந்தது. அவரும் ஒரு காரின் மீது சாய்ந்து கொண்டார். நோட்டம் விட்டுக் கொண்டிருந்தார். சிறுவர்கள் அவர் பார்க்காத நேரமாய் கூவுவதும் அவரை மறைமுகமாகக் கிண்டலடிப்பதுமாக இருந்தார்கள். அவருக்குத் தெரியும் அவர்கள் தன்னை கிண்டல் செய்கிறார்கள் என்று. அதற்கு எதிர்வினையாக மாதத்திற்கு ஒருவன் வீதம் கேஸ் பதிவு செய்து வஞ்சம் தீர்த்துக் கொள்வார். கேஸ் பதிவிற்கு அழைத்துச் செல்லும் போது தகப்பன் மகன் மீது போட்டிருப்பது போல் தோள்மீது கை போட்டு அழைத்துச் செல்வார். சாந்தியின் தம்பி தலையில் கட்டுடன் சைக்கிளில் பெல்லடித்தபடி வந்து கொண்டிருந்தான், கூட்டத்தைப் பார்த்தபடி. அவனைக் கூப்பிட்டார். அவன் இவரைப் பார்த்தவுடன் வெடுக்கென்று வணக்கம் வைத்தான்.

"என்னடா கட்டு?" என்றார்.

"ஒண்ணுமில்ல சார்."

"ஒண்ணுமில்லையா தேவ்டியா மொவ்ன இழுத்துருவேங் இழுத்து" என்றார்.

"விழுந்திட்டேங் சார்" என்றான்.

"எங்கேருந்து?"

"படிக்கட்லேர்ந்து."

"எந்தப் படிக்கட்லேர்ந்து?" என்றபோது திணறி யோசித்தான்.



படிப்பகம்

www.padippakam.com



"தேவ்டியாப் பயலே எல்.ஐ.சி லேந்தா விழுந்த இந்தப் பெரிய கட்டு போட்ருக்கு? எங்கிட்டியே பொய் சொல்றியா? ஒரு கேஸ் ஒண்ணு போடுவமா?"

"வேணாம் சார்" என்றான் வர வழைத்துக் கொண்ட பரிதாபத்து டன். அவனைப் பார்த்தார். பின்பு அவனே, "அலிபாபா அடிச்சிருச்சி சார்" என்றான்.

"நாறத்தேவ்டியாப் பயலுவளா திருந்தவே மாட்டீங்கடா?... ஆமாம் எங்க போற?" என்றார்.

"வண்ணாரப்பேட்டைக்கு சார்."

"அங்கென்ன வேல?"

"ப்ளாஸ்டிக் கம்பெனில வேலை சார்" என்றான். உண்மையிலேயே அவருக்கு ஆச்சர்யம் வந்தது.

"அதாங் ஆளப் பார்க்க முடி யலையா?" என்றார்.

"ஆமா சார்."

யோசனையாய் வானத்தைப் பார்த்தபடி வலது கை மடிப்பிலி ருந்து ஒரு டிக்கட்டை உருவி எடுத்து அவனிடம் கமுக்கமாகக் கொடுத் தார். அவன் மறுக்க முடியாத பரிதாபத்துடன் விழித்தான்.

"இத மட்டும் மாத்திக் குடுத் துட்டுப் போ. ஒண்ணே ஒண்ணு தாங்" என்றார்.

வாங்கிக்கொண்டு கம்மென்று நின்றான்.

"கூவுடா" என்றார்.

சுவரோரமாய் உட்கார்ந்திருந்த சிறுவர்கள் கமுக்கமாக சிரிப்பதை சாடையாக கவனித்தவராய் கருவிக் கொண்டு லேசாக தலையாட்டிக் கொண்டார்.

சாந்தியின் தம்பி தலைக் கட்டில் ஒரு கரம் வைத்துக் கொண்டு கடப் பவர்களைப் பகிரங்கமாக நிறுத்தி "டிக்கட் வேணுமா?" என்றான்.

"ஹோய் அப்படிப் போய் கூவு" என்றார்.

சைக்கிளை நிறுத்திக் கூட்டத்தில் அலைய ஆரம்பித்தான். அவர் அளித்து விற்கச் சொல்லும் டிக்கட்டு களை அவருக்கான ஒரு ரகசிய தொலைவில் விற்க வேண்டும் என்று கட்டாயத்தை ஏற்படுத்தும் அள வுக்கு சிறுவர்கள் அவருக்குப் பாடம் சொல்லிக் கொடுத்திருந்தார்கள். ஏனெனில் சிறுவர்கள் டிக்கட்டு களோடு மறைந்து விடுவார்கள். ஒரு வாரமில்லை ஒரு மாதமில்லை பிடிக்க முடியாது. கண்ணெதிரே நின்றாலும் பிடிக்கவரும் நேரம் சிரித்துக் கொண்டு தும்பியாய்ப் பறப்பார்கள். ஆத்திரம் முட்டிக் கொண்டு வரும் அவருக்கு. அதில் அவர்கள் ஆனந்தமடைவார்கள். பழிப்புக் காட்டுவார்கள். அவர் முகத்தைப் போல. தடியை எடுத்து விட்டு வீசுவார். தடியை எடுத்து வந்து கொடுத்துவிட்டு ஓடுவார்கள்.

ஒன்றும் இயலாமல் "தேவ்டியா மொவ்னே" என்றால், சிரித்துக் கொள்வார்கள் சிரிப்பு வார்த்தை சொன்னது போல். அவர் எல்லா வார்த்தைகளைவிடவும் அவ்வார்த் தையைதான் அதிகமும் பயன் படுத்துவார்.

சாந்தியின் தம்பி டிக்கட்டை விற்றுக் கொண்டு வந்து கொடுத்தான். அவர் நிதானமாகப் பிரித்துப் பார்த்து விட்டு சொக்காயிலிருந்து ஐம்பது காசு எடுத்துக் கொடுத்தார். அவன் அவரையும் காசையும் பார்த்தான். சிரித்துக் கொண்டார். அவன் சைக் கிளை நெட்டிக் கொண்டு கிளம்பி னான். ரூல்தடி ஒருமுறை அவனைத் திரும்பிப் பார்த்துக் கொண்டார். குற்ற உணர்வு நிமிண்ட அவன் சென்று கொண்டிருந்தான். பின் அருகில் உள்ள உணவு விடுதிக்குச் சென்று தேநீர் குடித்துவிட்டு வந் தார். அதற்குள் சிறுவர்கள் ஒரு வட் டம் அடித்துவிட்டு வந்து உட்கார்ந் தார்கள். ரூல்தடி வந்ததும் சுவ ரோரம் நின்று கொண்டிருந்த குமாரைக் கூப்பிட்டார்.

"நானா?" என்றான்.

"ஒன்னத்தாண்டா வாடா"

"எதுக்கு சார்?" என்றான் அங்கி ருந்தபடியே சத்தமாக. "வாடாங் கிறேங்" என்றார். அவன் போட்டி ருந்த மேல் சட்டை கால் முட்டி கடந்து தொங்கிக் கொண்டிருந்தது. அவர் எட்டிப் பிடிக்க முடியாத தூரத்தில் வந்து நின்று சிரித்தான், காரை படிந்த பற்களைக் காட்டிக் கொண்டு. அவன் எட்டிப் பிடுங்கிக் கொண்டான் அவர் நீட்டிய டிக் கட்டை. ஒரு கும்பல் கடந்த போது "கூவு கூவு" என்று துரிதப்படுத்தி னார். வேறெங்கோ பார்ப்பது போல் அவனைக் கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தார். மலரும் சண்முக மும் திரையரங்கத்தைவிட்டுச் சென்றி ருந்தார்கள். குமார் அவனையொத்த வயதுடைய சிறுவன் ஒருவனிடம் விற்பதைப் பார்த்து நெருங்கி வந் தார். ரூல்தடி வருவதை யூகித்த குமார் பணத்தை வாங்கிக்கொண்டு கார்களின் மந்தை சந்துக்களில் நுழைந்து ஒரு காரின் பின்புறத்தில் சிரிப்பை அடக்க முடியாமல் அடக்கிக்கொண்டு உட்கார்ந்தான். "டேய் டேய்" எனக் கத்திக்கொண்டு வந்தார். பிறகு இருவரும் அந்தக் காரைச் சுற்றிச்சுற்றி வந்தார்கள். அவர் அவனைத் திட்டினார். அவன் சிரித்துக் கொண்டே ஓடினான். சிறு வர்கள் சத்தம் போட்டுச் சிரித்தார் கள். ரூல்தடி அதைப் பொருட்படுத் தாது பரிதாபமாக அவனைப் பின் தொடர்ந்து கொண்டிருந்தார். சிறு குழந்தையின் விளையாட்டுப் பொருளைத் தூக்கிக் கொண்டு பெரியவர்கள் வம்பு செய்வது போலி ருந்தது. பிறகு குமார் எட்டி நின்று கொடுத்தான். நின்று சரிபார்த்தார். மற்ற சமயமாக இருந்தால் அவனைப் பிடிக்கவேண்டுமென்று முனைந் திருப்பார். பணம் கைக்கு கிடைத் தால் போதுமென்ற நிலைக்கு ஆக்கி விட்டிருந்தான் அவரை. குமார் கை நீட்டினான். "ஒரு மயிரும் கிடை யாது போடா" என்றார். அவன் சிரித்துக்கொண்டே கை நீட்டிக் கொண்டிருந்தான். சொக்காயிலி ருந்து ஐம்பது பைசா எடுத்துக் கொடுத்தார். "ஒரு டீ ரெண்ரூபா சார்" என்றான். "ஒத விழும்" என் றார். குமார் காசைச் சொக்காயில் செருகியபடி தன் சகாக்களுடன் சென்று அமர்ந்து கொண்டான். உள் கதவு திறக்க ஆரம்பித்தபோது கூட் டம் திமுதிமுவென முட்டிக்கொண்டு ஓடியது. சாந்தி பின்கேட் வழியாகச் சென்றாள் வெளியே. ரூல்தடி உள்ளே சென்று ஊழியர்களிடம் பேசிக் கொண்டிருந்தார். டிக்கட்டு கள் கிழித்து அனுப்பப்பட்டவுடன் சிறிதுநேரத்தில் அவரும் சினிமா பார்க்க உரிமையாகக் கதவைத் திறந்துகொண்டு உள்ளே நுழைந்தார்.

*ம*றுநாளும் பிளாக் டிக்கட் விற்பவர் களுக்கு சோகமாகத்தான் விடிந்தது. சிறைச்சாலையிலிருந்து சாந்தி வந்தி ருந்தாள். தையல் எந்திர ஷோரூம் முன்பு பட்டு சாந்தியிடம் நிர்வா கத்தைப் பற்றிச் சொல்லிக் கொண்டி ருந்தாள். மலர் லேசான போதையில் இருந்தாள். சண்முகம் அருகிலுள்ள லாட்டரிக் கடையில் அதிர்ஷ்டம் சோதித்துக் கொண்டிருந்தான்.

"ஒன்ன காலைலதாங் உட்டா னுங்களா?" என்றாள் பட்டு. "முன் னூர்பா பைனு வேற" என்று அலுத்துக் கொண்டாள் சாந்தி. "நீ ஜட்ஜைய கிட்ட சொல்ல வேண்டியதுதான். ஐயா இந்த மாதிரி சும்மாச்சிக்கும்



படிப்பகம்

கேஸ் போட்டு இளுத்திட்டு வரானு வன்னு" என்றாள் பட்டு. கம்மென்றிருந்தாள் சாந்தி.

"அது அவுங்களுக்கா தெரியணும். மொலையுமில்லாம சூத்துமில்லாம எதப்பாத்து ஒக்கவருவானுங்கன்னு" என்றாள்.

"ஓம்மொவன் பட்டறைக்கிப் போவாம அந்த தேட்ராண்ட சுத்திக் கிட்டிருக்கானாம்" என்றாள் சாந்தி.

"யார் சொன்னா?" என்றாள் மலர்.

"குமார் சொன்னங்."

அதை நம்புவதற்குப் பிரியப்படாமல் "சும்மா சொல்லிருப்பாங்" என்றாள் பட்டு. மலரும் அதையே ஆமோதித்தாள்.

"ம் அவனுக்கு ஆசை புளுவுறதுக்கு" என்றாள் சாந்தி.

காலைக் காட்சிக்கு மலரும் பட்டுவும் டிக்கெட்டுக்கு முயற்சித்து தோற்றார்கள். சாந்தி ஒரு டிக்கட் எடுத்துக்கொண்டு சைக்கிள் ஸ்டாண்ட் பக்கம் சென்று நின்று கொண்டிருந்தாள்.

பாரி கௌண்டர் கதவை யடைத்து வெளிச்செல்லும்போது "என்ன பாரி வாட்ச்மேனெல்லாம் டிக்கெட் விக்கிறாங், நீ கேக்குற கமிஷன நாங்க தரமாட்டமா?" என்றாள் பட்டு.

"சும்மா ஒளறாத பட்டு... யார் சொன்னா வாட்ச்மேன் விக்கிறான்னு?... யார்னு காட்டு வா" என்றான்.

"எல்லாம் எங்களுக்குத் தெரியும்" என்றாள் அழுத்தமாக. "ஒரு கைக்கி பத்து ரூபா மேனி கெடச்சாப் போதுங்கிறாங்? எத வச்சி சொல்றாங்."

"யாரு கிட்ட சொன்னாங்?" என்றான் பாரி.

"எங்கிட்டயா சொல்வாங் பூனப் பய" என்றாள் பட்டு.

"யாரு மகாலிங்கமா?"

"அத நாங்க சொல்லிதாங் நீ தெரிஞ்சிக்கணுமா? டிக்கட்டு குடுத்த ஒனக்குத் தெரியாதா?" என்றாள்.

"கடுப்பு வந்திரும் ஆமா" என்றான் பாரி ஆத்திரத்துடன். "சும்மா எதையாவது புளுவிகிட்டு நிக்க வேண்டியது."

சரவணன் படிக்கட்டிலிருந்து இதைப் பார்த்தபடியே கீழிறங்கி வந்தான். சரவணன் வருவதைப் பார்த்தவுடன் பாரி கிளம்பினான். அதற்குள் "என்ன பிரச்சினை?" என்றான் வந்தபடியே.

"வாட்ச்மேன் டிக்கட் விக்கிறானாம்" என்றான் பாரி சலிப்புடனும் சத்தத்துடனும்.

"நீ வேணா வாட்ச்மேனா வந்திடேங் பட்டு" என்றான் சரவணன் நக்கலாக. பட்டு அவமானப்பட்டவள் போல நின்று கொண்டிருந்தாள். மலரும் எதுவும் சொல்ல இயலாதவளாய்ப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"புதுசெட்டியார்கிட்ட சொல்லி சம்பளம் கூட்டிப்போட சொல்றேங். மாசத்துக்கு ஒனக்கு குளிக்கிறதுக்கு ஒரு பெரிய லைபாய் சோப்புப் ஃபிரீ. என்ன சொல்ற?" என்றான் சரவணன். அனைவரும் சிரித்தார்கள்.

"போடா பொட்ட பிச்சோத்திப் பயல" என்றுவிட்டு திரும்பி நடந்தாள். மலரும் அவளுடன் திரும்பி வந்தாள். இந்த சமயத்தில் அவர்களோடு சண்டை போடுவது சரியல்ல என்பது போல வந்து கொண்டிருந்தாள். சரவணனுக்கு பட்டுவின் பூர்வீகம் தெரியும். இது அவனுக்கு ஒரு வசையே கிடையாது. இதைவிட மோசமாகத் திட்டியிருக்கிறாள். அவளிடம் திரும்பிப் பேசினால் வசைகள் கூடுதல் ஒலித்திறனில் கூடிக் கொண்டே போவதை இறந்துபோன பெரியவரே வந்தாலும் நிறுத்த முடியாது என்பதை அவர்கள் அறிவார்கள்.

திரையரங்கத்தினுள் நுழைந்த சாந்தியின் கண்கள் அலைந்து கொண்டிருந்தன, இருக்கையிலுள்ள ஆண்களின் முகங்களைத் தடவியபடி.

உலகின் நம்பகமான உயவு எண்ணெய்கள், சொகுசுக் கார்கள், நகரத்தின் பிரம்மாண்டமான ஜவுளிக் கடைகள், ஊது குழலிலும், வீணையிலும் தொங்கும் பொன் நகைகள், மணலில் பாதி புதைந்து கிடக்கும் வைரங்கள், விளையாட்டு வீரர்கள் சிபாரிசு செய்யும் ஊட்டச்சத்துப் பானங்கள், குளிர்பானங்களுக்காக தோழியையும் தோழனையும் மாற்றிக் கொள்ளும் நபர்கள் என விளம்பரங்கள் விரிந்து கொண்டிருந்தன. சாந்தி தனக்கான காரியத்தில் இரண்டு மூன்று இருக்கைகள் மாறி மாறி அமர்ந்தாள். மூலையில் ஒருவன் எதற்கோ பயந்துகொண்டு உட்கார்ந்திருப்பவனைப்போல விளம்பரம் பார்த்துக் கொண்டிருந்தான். அவனிடம் சென்று அருகில் "ஆள் வருகிறார்களா?" என்றாள். அவன் "இல்லை" என்றான். அவள் அருகில் அமர்ந்துகொண்டு விளம்பரம் பார்த்தாள். செய்தித்துறை விவரணை ஒன்று போட்டார்கள். சாந்தி அவன் கண்பட தன் மேல் சட்டை பித்தான்களை கழற்றி மீண்டும் மாட்டினாள். இருளில் அவனைப் பார்த்துச் சிரித்தாள். இருக்கையைப் பார்த்துக் கொள்ளும்படி பெண்கள் பக்க கழிவறைக்கு சென்று நின்று கொண்டிருந்தாள். படம் ஆரம்பித்த பிறகு உள் நுழைந்து வந்து அவனருகில் உட்கார்ந்து அவனைப் பார்த்தாள். அவன் தீவிரமாகப் படம் பார்த்துக் கொண்டிருப்பதாக பாவனை செய்து கொண்டிருந்தான். எதேச்சையாகத் தொடுவதுபோல் அவன் கைகளை உரசி விலகினாள். சட்டென்று உரிமையுடன் அவன் தொடைகளில் கை வைத்தாள்.

அவன் முழுதாய் இவளிடம் வசமாகிப் போன பிறகு அவனை விடுதிக்குப் போகலாம் என்று அழைத்துப் பார்த்தாள். அவன் ஊருக்கு செல்லவேண்டும் என்றும், செல்லும் வழியில் சினிமா பார்க்க வந்ததாகவும் கூறினான். அவன் இவளின் மார்புகளை தொட முயன்ற போதெல்லாம் லாவகமாக தட்டி விட்டுக் கொண்டிருந்தாள். எல்லாவற்றிற்கும் இயைந்துவிட்டபின் மார்பை மட்டும் தொடவிடாமல் செய்து கொண்டிருந்தது வியப்பாகவும் கேள்விக்குறியாகவும் இருந்தது. அவனைக் கழிவறைக்குச் செல்லும்படி பணித்தாள். சற்று நேரம் கழித்து இவளும் சென்றாள்.

ஆண்கள் கழிவறையில் சளசளவென நீர் வடியும் சப்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது. இவள் உள் நுழைந்ததும் அவனை அழைத்தபடி ஒரு அறைக்குள் புகுந்தாள். கதவு சாத்தப்பட்டதும் துளியும் வெளிச்சமற்ற அவ்வறையில் அவனுக்கு திக்கென்றிருந்தது. அவன் "எவ்வளவு வேண்டும்?" என்றான். "கொடுப்பதைக் கொடு" என்றாள். மார்பைத் தொட்டான். பித்தான்களை பிரிக்க முயன்றபோது அவனை சீக்கிரம் அனுப்பும் முயற்சியாக பேசி தட்டி விட்டாள். ஒரு குயுக்தியுடன் ஆங்காரமாகத் தழுவி பித்தானை விடுவித்தான். இருளில் எது எதுவோ மெல்லிய சப்தத்துடன் விழுந்தன. அவள் சிரித்தாள். இருளில் பற்கள் மங்கலாகத் தெரிந்தன. கீழே குனிந்து அவள் தன் மணிப்பர்ஸை எடுத்துக் கொண்டாள். அவளின் சூம்பிப் போன மார்பகத்தை தடவிப்பார்த்து ஏமாந்தான். அவள் அவனைக் கட்டிப்பிடித்தாள்.

கதவைத் திறந்து வெளிவந்த போது உள் நுழைந்த வெளிச்சத்தில்



படிப்பகம்

www.padippakam.com



பார்த்தான். அவள் கதவைச் சாத்திக் கொண்டாள். உள்ளே நிறைய சுருட்டப்பட்ட காகிதங்களும் மடிப்பு மடிப்பான காகிதங்களும் கிடந்தன. அவள் எதிர்பார்த்திருந் ததைவிட அவன் அதிகமாகவே தந்திருந்தது அவளுக்குத் திருப் தியைத் தந்தது. அவன் வெளியேறிய பிறகு ஆடைகளை சரிசெய்தபடி உள்ளேயிருந்த கண்ணாடியில் பார்த்துக்கொண்டு வெளியே வந் தாள். சுருட்டிய காகிதங்களை குப்பைக்கூடையில் கொட்டிவிட்டு திரையரங்கை விட்டு வெளியே வந்தாள். அவளுக்கு இனந்தெரியாத திருப்தியும் வேதனையும் இருந்தது.

நள்ளிரவில் மலிவு வாடகை விடுதி யறையில் மலரும் சண்முகமும் காத் திருந்தார்கள். சண்முகம் தொடர்ந்து புகைத்துக் கொண்டிருந்தான். அவ் வப்போது மலர் அவனிடமிருந்து வாங்கிப் புகைத்து திருப்பிக் கொடுத் தாள். குளித்து பூ வைத்து மலர்ச்சி யாக இருந்தாள். அறையில் அதிக வசிப்பற்ற வறட்சி காணப்பட்டது. மட்கிய வாடை வந்து கொண்டிருந் தது. பழங்கால இரட்டைக் கதவு போடப்பட்ட விடுதி. சன்னல் கதவு களுக்கு பச்சை வண்ணம் அடித்தி ருந்தார்கள். சுற்றிலும் நவீன வசதி கள் பெருக்கத்துடன் கட்டிடங்கள் எழும்பி நின்று கொண்டிருக்க, எல்லாக் கட்டிடங்களுக்கும் பின் புறம் குள்ளமாய் சிக்கிக் கொண்டி ருந்தது. பழங்கால மின்விசிறி அபா யத்தன்மையோடு முறுக்கிக்கொண்டு சுற்றிக் கொண்டிருந்தது. படிக்கட் டில் சப்தம் கேட்டவுடன் வாசனைப் பாக்கைக் கிழித்துப் போட்டுக் கொண்டாள் மலர். கதவு தட்டப் பட்டவுடன் சண்முகம் எழுந்து சென்று திறந்தான். அலிபாபா பாரியை அழைத்து வந்திருந்தான். பாரியின் முகம் இறுக்கமாயிருந்தது. சண்முகம் கதவைச் சாத்தி தாழிட் டான். மலர் நன்றாகப் புன்னகைத்து "உட்கார் பாரி" என்றாள். பாரி சகஜமாக இருக்க முடியாமல் தத் தளித்துக் கொண்டிருந்தான். சண் முகம் கட்டிலுக்கு அடியிலிருந்து மது பாட்டில்களை எடுத்தான் "எதுக்கு பாபா இதெல்லாம்?" என் றான் பாரி. "சும்மா" என்றான் அலி பாபா. பாட்டில்களைத் திறந்து ஒரு முறை உபயோக வெள்ளைப் பிளாஸ்டிக் டப்பாக்களில் ஊற்றி னான் சண்முகம்.


"செட்டியார் ஆளுங்க யாராவது பார்த்தா பிரச்சினையாயிடும்" என் றான் பாரி. "ஒண்ணும் ஆவாது" என்றான் அலிபாபா. "என்னோட பிரண்டுக்கு நான் பார்ட்டி குடுக் குறேங். இதுல யார் என்ன சொல்ல முடியும்?"

வெளியிலிருந்து "பாபா" என்று ஒரு பெண்குரல் கேட்டது. அனை வரும் கதவைப் பாரத்தார்கள். அலி பாபா சண்முகத்திடம் "தொறந்து விடு" என்றான். சண்முகம் தாழ்நீக்கி திறந்தபோது வசந்தி கைப்பையுட னும் மடக்கிய குடையுடனும் உள்ளே நுழைந்தாள். அவளும் மலர்ச்சியாக இருந்தாள். வரும்போதே "சண்முகம் மழை வருதா பாரு. என்ன, பாரி யெல்லாம் இந்தப் பக்கம்?" என்றாள். பாரிக்குள் வசந்தியின் வார்த்தைகள் ஊடுருவிச் சென்றன. அதைப் பெருமையாக நினைத்தான். அவன் சிலமுறை வசந்தியோடு உடலுறவு கொண்டிருந்தாலும் எத்தனை முறை அனுபவித்தாலும் தீராத அழகு அவ ளிடம் இருப்பதாக எண்ணிக் கொண்டிருந்தான். வசந்தி இடைக் காலத்தில் பாரியை ஒரு பொருட் டாக மதிக்காத அளவிற்கு அவளின் அழகும் வனப்பும் பெரிய ஆட்களை மடிய வைத்துக் கொண்டிருந்தது. இன்றுவரையும் அப்படித்தான்.

"ஒத்தக்கை நவுரு... நவுரு... எத்தன நாளாச்சி பாரிகூட ஒக் காந்து பேசி" என்று பாரியின் அரு கில் வந்து உட்கார்ந்து கொண்டாள். "எனக்கு ஒரு கை போடுங்கப்பா."

சண்முகம் இன்னொரு டப் பாவை எடுத்து வைத்து ஊற்றினான். மிச்சமிருந்த டப்பாக்களை அலி பாபா வாங்கி முன்னால் வைத்த திற்கு முக்கிய காரணம் இருந்தது. அதில் இன்னும் நான்கைந்து டப் பாக்கள் வரிவரியாய் இருந்தன. மது அருந்தப்போகும் நபர்களின் எண் ணிக்கையை முன்கூட்டியே உணர்ந்து டப்பாக்கள் வாங்கவில்லை என் பதை நிரூபித்திருந்தான் கணக்கற்ற டப்பாக்களை வாங்கியதன்மூலம்.

அலிபாபா முதலில் ஒரு டப் பாவை எடுத்து அவர்கள் முன் தூக்கிக் காட்டிவிட்டு குடித்தான். அனைவரும் குடித்தார்கள். பாரி முழுமையாய் சந்தேகிக்க முடியாத படியும் எச்சரிக்கை உணர்வோடும் குடித்தான். அலிபாபா கனைத்துக் கொண்டு காராசேவை அள்ளி வாயில் கொட்டிக்கொண்டான். வசந்தி பாரியின் தொடைமேல் தன் தொடையை தூக்கிவைத்து நெருங்கி அமர்ந்தாள்.



**பட்டு முழுநேர பிளாக் டிக்கட் விற்பதற்கு முன் வேசைத் தொழில் செய்து கொண்டிருந்தாள் என்பது திரையரங்க தொழிலாளர்கள் அனைவருக்கும் தெரியும். அவ ளிடம் யாரும் பேச்சுக் கொடுக்க விரும்பாததின் காரணமும் அது வாகத்தானிருந்தது. அவளுக்கு ஆண்கள் பற்றிய மனோபாவத் திலும், வேசைத்தனத்தில் உடலுறவு குறித்த மனோபாவத்திலும் ஏற்பட் டிருந்த மாற்றங்களினால், எந்த இடத்திலும் சிறிதும் யோசிக்காமல் குறிகளின் பெயரை அழுத்தம் திருத்தமாக சொல்லித் திட்ட முடிந் தது. மலரும் சாந்தியும் தம் உடல் கள் மீதான அவநம்பிக்கையை அடைந்தபின் பிளாக் டிக்கட் விற்க வந்தார்கள். இருப்பினும் அவசரம் மற்றும் நிதானமிழந்தவர்களின் உட லுறவுக் கணங்கள் அவர்களுக்கு சாதகமாக இருந்தன.**



படிப்பகம்

www.padippakam.com



"சில விஷயம் பேசணும்னுதாங் பாரி ஒன்ன கூட்டியாந்தது" என்று ஆரம்பித்தான் அலிபாபா. பாரி அவனைப் பார்த்தான்.

"வீட்லயும் ஒரே தொல்ல. பழகின நாமெல்லாம் ஒருத்ர ஒருத்தர் மொறைச்சிகிட்டு. நீ என்ன நெனச்சாலும் நெனச்சிக்க. எனக்கு உண்மையிலே மனசு ரொம்ப கஷ்டமா இருந்திச்சி. சின்னவருக்கு என்ன? ஒன்னயும் என்னையும் தட்டிவுட்டுட்டு, காரியம் பாத்துட்டு போய்டு வாரு. ஆனா இத்தன வருஷமா பழகின நாமதாங் சண்டை போட்டுக்கணும்."

"ஒனக்கேத் தெரியும் மூர்மார்க்கெட்ல கார்ஸ்டாண்ல ஒருத்தன சண்முகம் குத்தினது. அதுக்காக சண்முகத்த விட்டுற முடியுமா? பாவம் ஒரு கை இல்லாதவங். சரி ஓடுற வரைக்கும் ஓடட்டும்னு பார்த்தேன்."

இரண்டாவது சுற்று அலிபாபா எடுத்து இறக்கிக் கொண்டான். பாரியை கையமர்த்தி "ஒனக்குப் போதும்னு நெனக்கிறப்ப நிறுத்திக்க" என்றான். பாரியின் உள்தடை மெல்ல விலக ஆரம்பித்தது. "நம்மளுக்குள்ள பிரச்சனை வேணாம். நல்லபடியா எப்போதும் போல இருக்கணும்ங்கிறத சொல்லத்தாங் இந்த பார்ட்டியே." பாரி இரண்டாவது சுற்றுக் குடித்தான்.

வசந்தி டக்கென்று பாரியின் கன்னத்தில் அழுத்தி முத்தம் கொடுத்தாள். பாரி அலிபாபாவைப் பார்த்து சிரித்தான். அலிபாபா சண்முகத்திடமிருந்து ஒரு சிகரெட் வாங்கி உதட்டில் தொற்றினான். பாரி லைட்டரைப் பற்ற வைத்து நீட்டினான். சண்முகம் மூன்றாவது சுற்று ஊற்றினான். அலிபாபா புகையை மேல் நோக்கிவிட்டான். சுவற்றில் சாய்ந்து கால்களை நீட்டிப்போட்டுக் கொண்டான்.

"என்னோட ஆசையெல்லாம் படிப்படியா முன்னேறி நீ மேனேஜரா ஆயிடணும்ங்கிறதுதாங்" என்றான் அலிபாபா. பாரி தோழமை உணர்வுடன் சிரித்தான்.

வசந்தி பாரியின் கையைக் கோர்த்துப் பிடித்துக் கொண்டபடி மதுவருந்தினாள்.

பாரி இரண்டுமுறை இருமிவிட்டுப் பேசினான். "பாபா பழைய படி இல்ல. தியேட்டர்ல ரஷ் கொறைஞ்சிருச்சி. அவுங்க சில நடவடிக்கை எடுக்குறாங்க. என்னால ஒண்ணும் செய்ய முடியல."

"சின்னவரு ரொம்ப ஸ்ட்ரிக்ட். ஆனா நல்ல டைப். தங்கச்சி கல்யாணத்துக்கு பணம் தரேன்னு சொல்லியிருக்கார். ஒனக்கு என்ன வேணுமோ கேள். செஞ்சி தர்றேங். ஆனா ஒழுங்கா நடந்துக்கணும்ங்கிறார்."

"காலம் வரைக்கும் நாங் கமிஷனுக்கு டிக்கட் வித்தும், சம்பளத்தப் போட்டும் பாத்தாகூட மொத்தமா பணத்தப்போட்டு கல்யாணத்த பண்ண முடியாது. ஒனக்கேத் தெரியும் சிஸ்டருக்கு வயிசு ஏறிக்கிட்டேப் போவுது."

"இந்த எடத்துல நீயா இருந்தா என்ன பண்ணுவ சொல்லு?" என்றான் பாரி. அலிபாபா புகையை விட்டபடி ஆமோதிப்பதாய் தலையாட்டினான்.

சிறிது நேரம் அமைதி நிலவியது.

வசந்தி பாரியின் முகத்தில் அவள் முகத்தை வைத்துத் தேய்த்தாள். அலிபாபா புன்னகைத்து எழுந்தான். வசந்தி முத்தமிட்டாள்.

"வசந்திக்கு ஒம்மேல லவ்வு. நீதாங் கண்டுக்க மாட்டங்குற" என்றான் சண்முகம், சிரித்தபடி எழுந்து.

"நான் என்ன கல்யாணமா பண்ணச் சொல்றேங். அப்பப்ப கண்டுகிட்டா போதும்னுதானே சொல்றேங்" என்றாள் வசந்தி குறும்புடன். அனைவரும் சிரித்தார்கள்.

பிறகு அலிபாபா உல்லாசத்திற்கான கண்ணசைப்பை வெளியிட்டு வெளியே சென்றான். சண்முகம் கூடவே சென்றான். மலர் எழுந்து சென்று கதவை சாத்திவிட்டு வந்தாள். வசந்தி பாரியை சிறு குழந்தை போல் கட்டிப்பிடித்தாள். மலர் மற்றொரு சுற்று ஊற்றிக் குடித்தாள். அருகாமையிலுள்ள இசை மையக் கடையிலிருந்து ஒரு ஹிந்திப் பாடல் தாள அதிகாரத்துடன் மிதந்து வந்தது. வசந்தி தலையை சிலுப்பி மார்புகளை ஆட்டி "சரிதானா நான் ஆடுறது" என்றாள் மலரைப் பார்த்து. "அவளுங்க சூப்பரா ஆடுறாளுவ" என்றாள் மலர். பாரி வசந்தியை கட்டிலில் சாய்த்து மொய்த்தான். பாரிக்கு மீண்டும் அந்த எச்சரிக்கை உணர்வு வந்து போனது.

படிக்கட்டில் உட்கார்ந்திருந்த அலிபாபா புகையை ஆழ உள்ளிழுத்துவிட்டான். சண்முகம் கீழ்படியில் உட்கார்ந்திருந்தான். மலர் மிச்சமுள்ளதை காலி செய்து கொண்டிருந்தாள்.

"போவுமா?" என அலிபாபா எழுந்தான்.

"பாரி?" என்றான் சண்முகம்.

"அவனால இன்னைக்கி எந்திரிக்க முடியாது" என்று கூறி நடந்தான். சண்முகம் அவன் வால் போல் ஒட்டிக்கொண்டு சென்றான்.

அலிபாபா, டிக்கட் கொடு அல்லது வேண்டாம் என எதுவும் சொல்லாமல் சென்றுவிட்டதில் பாரி ஏதோ ஒரு சலனத்தை, அலிபாவுக்கு சாதமான சலனத்தை உணர்ந்து கொண்டிருந்தான் தனக்குள்.

மறுநாள் காலையில் பாரி மிகுந்த உற்சாகத்துடன் அலிபாபவை நெரிசல் மிகுந்த அப்பகுதிக்கு சென்று அவன் வீட்டில் சந்தித்தான். பாரி தன் வீடு தேடி வந்ததில் மிகுந்த மகிழ்ச்சியென்றான் அலிபாபா. பாரி இதுவரை அலிபாபாவை தவறாகப் புரிந்து கொண்டதாகவும் அதற்கு மன்னிப்பு கேட்டுப் போகத்தான் வந்திருப்பதாகவும் கூறினான். தேனீர் சாப்பிட்டுச் செல்லும்படி கட்டாயப் படுத்தினான் அலிபாபா. மௌனமாக இருந்தாலும் எவ்வளவோ பேசிவிட்டதாக உணர்ந்தான் பாரி. அலிபாபாவின் மனைவி தேனீர் எடுத்து வந்தாள். பாரி தேனீரை சுவைத்து "நல்லாருக்கு" என்றான். "இஞ்சி டீ" என்றான் அலிபாபா.

மனைவி உள் சென்ற பிறகு "வசந்தி என்ன சொன்னாள்?" என்றான் அலிபாபா. இன்றைக்கும் வரச் சொல்லியிருப்பதாக கூறினான் பாரி சிரித்தபடி.

"லாட்ஜிக்கு நீ எதுவும் குடுக்க வேணாம். நான் சொல்லியிருக்கேங். உனக்கு எப்போ சௌர்யமோ அப்ப வந்து போ. எதுனா பிரச்சனைன்னா எதுவும் நெனைக்காம பீடா கடைக்கி வா" என்றான் அலிபாபா.

பாரி நெகிழ்ச்சியுடன் கிளம்பினான்.

மூன்றாவது இரவு வசந்தியுடன் விடுதியில் தங்கியிருந்தபோது, போலிஸ் வந்து பாரியைப் பிடித்துக் கொண்டு போனது. வசந்தி எதுவும் சொல்லாமல் கிளம்பி தெருவில் வந்து கொண்டிருந்தாள். பின் ஒரு சந்தில் சட்டென ஓடி மறைந்தவளை காவலர்கள் பெயருக்காக துரத்துவது போலிருந்தது பாரிக்கு. பாரியை போலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லாமல் நேராக திரையரங்கத்திற்கு அழைத்துச் சென்றவுடன் ஏதோ திட்டமிட்டு நடப்பதாக யூகித்துக் கொண்டிருந்தான். குழம்பியபடி சென்று கொண்டிருந்தான்.



படிப்பகம்

www.padippakam.com



கேபின் வாசலில் உட்கார்ந்திருந்த சின்னவர் அவனைக் கண்டவுடன் கோர்பமாக கத்தியபடி எழுந்து வந்தார். பாரியின் சமாதானங்கள் எதுவும் எடுபடாமல் போய்க் கொண்டிருந்தன.

"இன்னும் அழகானத் தேவ்டியா கெடைச்சா டிக்கட்டெல்லாம் அந்த லாட்ஜிலே வித்துட்டு வந்திருவே இல்லியா" என்றபோது குனிந்து கொண்டு நின்றான்.

அவனுக்கு அந்நொடியிலிருந்து வேலை கிடையாது எனக்கூறி அவர் அறைக் கதவை சாத்திக் கொண்டார். கண்ணாடிக் கதவின் வழி கெஞ்சிக் கொண்டிருந்தான் பாரி. அவர் உள்ளிருந்து கத்துவது மௌனமாக வெளித் தெரிந்தது. அவன் அழுகையும் அவருக்கு அப்படியே தெரிந்தது. அவர் காரை எடுத்துக் கொண்டு சென்றுவிட்ட பிறகு சரியான பொறியில் சிக்கிக் கொண்டதாக உணர்ந்தபடி நின்றவனிடம் காவலர்கள் அறிவுரைக் கூறிக் கொண்டிருந்தார்கள். பிறகு அவனை வீட்டுக்குச் செல்லும்படிக் கூறிக் கிளம்பினார்கள்.

மறுநாள் தூங்கிக் கொண்டிருந்த மலரைத் தட்டி எழுப்பிய பட்டுக் கூறியதைக் கேட்டு கலவரமடைந்தவளாய் உட்கார்ந்திருந்தாள் மலர்.

போலிஸ்காரர்கள் பிடித்துச் சென்றுவிட்ட அவளது மகனையும், சண்முகத்தையும் எப்படி மீட்பது என்று தெரியாமல் அழ ஆரம்பித்தாள். பட்டு ஆறுதல் கூறிக் கொண்டிருந்தாள்.

பிறகு இருவரும் எழுந்து அலிபாபா அனுமதிக்கப்பட்டிருக்கும் தர்ம மருத்துவமனைக்கு செல்லத் தொடங்கினார்கள். "வேலையை விட்டுத் தூக்கின ஆத்திரத்தில பாரி தாங் ஆளு வச்சி செஞ்சிருப்பாங் கிறாங் சரவணன். எனக்குத் தெரியாதா? இவனுவ புளுவறதெல்லாம்" என்றாள் பட்டு, "பாரி ஒரு தொட நடுங்கிப் பய" என்றாள் மலர். ஆமோதித்தாள் பட்டு. பின்பு அலிபாபா பிழைத்துக் கொள்ள வேண்டும் என்று வாய்விட்டு வேண்டிக் கொண்ட பட்டு, "திட்டம் போட்டு செஞ்சிட்டானுவ தேவ்டியாப்பயலுவ" என்றாள். மலரும் அதை யூகித்தவளாய் விரக்தியாய் "ஆமாம்" என்றபடியே தலையாட்டிக் கொண்டு நடந்தாள்.

ஓவியங்கள் : பிரபுராம்

# வரப்பெற்றோம்

இயல்பு (கவிதைகள்); பொன். குமார்; Salem District Contemporary Painters & Writers Association, 14-1, Mariamman Koil Street, No.6, Sanjeevirayanpet, Dadagapatty, Salem 636 006; பக் : 48; ரூ. 20

மரபுவழித் திறனாய்வும் ஈழத்துத் தமிழ் இலக்கியமும்; கே. எஸ். சிவகுமாரன்; மீரா பதிப்பகம், 191/23, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06, பக் : 126; ரூ. 125

இரவு மழை; பா. செயப்பிரகாசம்; புதுமலர் படைப்பகம், வெண்முகில் வளாகம், 33, திருவள்ளுவர் நகர் (கிழக்கு), கோவை 641 045; பக் : 139; ரூ. 45

விண்ணும் மண்ணும்; நாஞ்சில். ஆனந்தன் பிள்ளை; கண்மணி பதிப்பகம், 22A, சங்கரன் பிள்ளை சாலை, என். எஸ். பங்களா, திருச்சி 620 002; பக் : 100; ரூ. 30

எந்தப் பாதை ? (கட்டுரைகள்); ஆ. சிவசுப்பிரமணியன்; மக்கள் வெளியீடு, 24 உனிசு அலி சாகிப் தெரு, எல்லிசு சாலை, சென்னை 600 002; பக் : 160; ரூ. 50

கருஞ்சுழி; முனைவர். வ. ஆறுமுகம்; தலைக் கோல், 11, இரண்டாவது குறுக்குத் தெரு, எழில் நகர், புதுவை 605 014; பக் : 160; ரூ. 75

உதிரி மனிதர்கள் (சிறுகதைகள்); புதுவை ரா. ரஜனி; புதுவை ரா. ரஜனி, 26 நவசக்தி கோயில் அருகில், வழுதாவூர் சாலை, பேட்டையான் சத்திரம், புதுச்சேரி 605 009; பக். 112; ரூ. 30

சோசலிசக் கவிதைகள் (தொ); சூரியதீபன்; அலைகள் வெளியீட்டகம், 25 தெற்கு சிவன் கோயில் தெரு, கோடம்பாக்கம், சென்னை 600 024; பக் : 108; ரூ. 35

பிறிதொரு நதிக்கரை (சிறுகதைகள்); சூத்ரதாரி; வைகறை, 4அ ஐடியல் பள்ளிச் சாலை, நரசிம்மநாயக்கன் பாளையம், கோவை 641 031; பக் : 142; ரூ. 50

நட்சத்திரப் பூ (குழந்தைப் பாடல்கள்); பூபால், தமிழில் : சாந்தா தத்; கனவு, 8/176 பாண்டியன் நகர், திருப்பூர் 641 602; பக் : 48; ரூ. 13

நெருப்புக்குழியில் குருவி; ச. முகமது அலி; மலைபடு கடாம், 93 அப்பர் வீதி, வெங்கடேசா குடியமைப்பு, பொள்ளாச்சி 642 001; பக் : 104; ரூ. 40

தொல்காப்பிய நோக்கில் புதுக்கவிதை; முனை. வெ. இராமமூர்த்தி; தமிழாய்வு மய்யம்; பக் : 236; ரூ. 75

விற்பனை : தமிழோசைப் பதிப்பகம், 797–ஈ, சிறீராம் மோகன் வணிகவளாகம், சக்திசாலை, காந்திபுரம், கோவை 641 012

அதிகாலை (கவிதைகள்); விஷ்ணு நாகராஜன்; கிருஷ்ணா பதிப்பகம், 8, திருமலை சாலை, தி. நகர், சென்னை 600 017; பக் : 80; ரூ. 37

விழித்தெழு விடியும் (கவிதைகள்); காரை மைந்தன்; பக் : 96; ரூ. 25

உயிரின் முகங்கள் (கவிதைகள்); காரை மைந்தன்; பக். 96, ரூ. 25

வெளியீடு : விழுதுகள் வெளியீடு, 8, தென்கரை வீதி, கோட்டுச் சேரி, காரைக்கால் 609 609

மஹா வாக்கியம் (கவிதைகள்); பிரம்மராஜன்; பக் : 108; ரூ. 45

சாதத் ஹஸன் மண்ட்டோ (கதைகள்); (தொ.) ரவி இளங்கோவன்; பக் : 128; ரூ. 50

சுயம் (கவிதைகள்); வத்ஸலா; பக் : 96; ரூ.40

வெளியீடு : ஸ்நேகா, 348 டி.டி.கே.சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014

ஈழத்துத் தமிழிலக்கியத் தடம் 1980–2000 பார்வையும் விமர்சனங்களும்; கார்த்திகேசு சிவத்தம்பி; மூன்றாவது மனிதன் பதிப்பகம், 37/14, வாக்ஸெல் லேன், கொழும்பு–2; பக் : 172; ரூ. 75

செதுக்கத் துடிக்கும் சிறகுகள் (கவிதைகள்); ம. திருவள்ளுவர்; பக் : 80; ரூ. 30

நதிநீர்த் தேக்கத்தின் முகங்கள் (கவிதைகள்); கள்ளழகர்; பக் : 48; ரூ. 20

வெளியீடு : தாமரைச் செல்வி பதிப்பகம், 31/48, இராணி அண்ணா நகர், சென்னை 600 078

செம்பழுப்பாய்ச் சூர்யன் (கவிதைகள்); அன்பாதவன்; பக் : 108; ரூ. 30

மதிலுகள் (நவீன மலையாள இலக்கியம்); (மொ. பெ.) நீல பத்மநாபன்; பக் : 234; ரூ. 75

உயிரிழை (சிறுகதைகள்); விழி. பா. இதயவேந்தன்; பக் : 138; ரூ. 30

வெளியீடு : காவ்யா, 16,17வது ஈ கிராஸ், இந்திரா நகர் II ஸ்டேஜ், பெங்களூர் 560 038

தமிழ் சினிமாவில்... (விமர்சனக் கட்டுரைகள்); ஜெ. பிஸ்மி; போதி, 4, வேதாசலம் தெரு, சாலி கிராமம், சென்னை 600 093; பக் : 152, ரூ. 60

விழுது (சிறுகதைகள்); தேனீ சீருடையான்; பக் : 168; ரூ. 45

நடைவழிக் குறிப்புகள் (கட்டுரைகள்); சி. மோகன், பக் : 120, ரூ. 50

மழைக்குப் பிறகும் மழை (கவிதைகள்); எம். அய்யப்பன்; பக் : 64; ரூ. 30

வெளியீடு : அகரம், 15B–1 சரவணா காம்ப்ளக்ஸ், வெள்ளப் பண்டாரத்தெரு, கும்பகோணம் 612 001

முத்தாரம் (கட்டுரைகள்); சின்னக்குத்தூசி; புதுமைப்பித்தன் பதிப்பகம், 52, 7, முதல் தளம், நான்காவது தெரு, அஞ்சுகம் நகர், அசோக் நகர், சென்னை 600 083; பக் : 160; ரூ. 75

மௌன நதி (நாவல்); வே. எழிலரசு; நந்தினி பதிப்பகம், 31, மாதவரம் நெடுஞ்சாலை (வடக்கு), பெரம்பூர், சென்னை 600 011; பக் : 240; ரூ. 60

எழுசுடர்ப்பொழுது (கவிதைகள்); ந. பாசுகரன்; சிந்து பதிப்பகம், குறளகம், 47/1167 கூட்டுறவு நகர், பாதிரிக்குப்பம், கடலூர் 607 401; பக் : 82; ரூ. 20

சிலம்பு மடல்கள்; நாக. இளங்கோவன்; அல்லிராணி மின்–பதிப்பகம், 27/ஐ2 பழைய பரோடா வங்கித் தெரு, அம்பத்தூர், சென்னை 600 035; பக் : 168; ரூ. 50



படிப்பகம்

www.padippakam.com



# புதுமைப்பித்தன் அரங்கு

மதுரையில் வெளிச்சுற்றில் உள்ள கரடிப்பட்டிக்கு அருகே அமைந்திருக்கிறது பில்லர் ஹோம் என்ற கத்தோலிக்க ஆசிரமம். காலச்சுவடு அறக்கட்டளையினால் ஒழுங்கு செய்யப்பட்ட 'புதுமைப்பித்தன் அரங்கு' பிப்ரவரி 24, 25 தேதிகளில் இங்கு நிகழ்ந்தது. காலையில் பில்லர் ஹோமிறகுச் சென்றோம். சிறு குன்றுகள் சூழ்ந்த அதிகம் மரங்கள் இல்லாத வெளியில் அமைந்திருந்தது.

காலை நாலு மணிக்கு கரடிப்பட்டியையும் ஆசிரமத்தையும் தமது முதல் 'வருகை'யால் அ. ராமசாமியும் முருகேச பாண்டியனும் சலசலக்க வைத்தனர். பதினோரு மணிக்குள் அழைக்கப்பட்டிருந்த சுமார் 35 நண்பர்கள் வந்து சேர்ந்தனர்.

முதல் அமர்வை – புதுமைப்பித்தன் பதிப்புப் பணி – ஆ. இரா. வேங்கடாசலபதி ஒருங்கிணைத்தார். புதுமைப்பித்தன் சிறுகதைகள் நீங்கலாக மீதமிருக்கும் சுமார் 2000 அச்சுப் பக்கங்களை மூன்று தொகுதிகளாக பிரித்து வெளியிடுவது என்பது பற்றியும், பு. பி. பிறருடன் இணைந்து செய்திருக்கும் பணிகளை எவ்வாறு தொகுப்பது போன்ற பொருட்களும் முக்கியமாக விவாதிக்கப்பட்டன.

மதிய உணவிற்குப் பிறகு மாலை 4.30க்கு புதுமைப்பித்தன் சிறுகதைகள் பற்றிய சல்மா, தேவிபாரதி ஆகியோருடைய கட்டுரைகளும், புதுமைப்பித்தனின் சமகால மதிப்பீடுகள் பற்றிய சலபதியின் கட்டுரையும் விவாதிக்கப்பட்டன. இந்த அமர்வை தொ. பரமசிவன் ஒருங்கிணைத்தார்.



சல்மாவின் கட்டுரை தொடர்பாக நீண்ட விவாதம் நடந்தது. புதுமைப்பித்தனின் அரசியலைச் சுட்டிக்காட்ட அவர் பயன்படுத்திய அடிப்படைவாதம், இந்துத்துவம் போன்ற சொற்களின் பொருத்தப்பாட்டை பலரும் கேள்விக்கு உள்ளாக்கினர். மதமாற்றம், சிறுபான்மையினர் தொடர்பாக அவரிடம் வெளிப்படும் ஒவ்வாமையைச் சுட்டவே இந்தச் சொற்களை பயன்படுத்தியதாக குறிப்பிட்ட சல்மா, அவர் எந்தத் தத்துவத்திற்கும் விசுவாசமாக நடந்து கொள்ளவில்லை என்பதையும் தான் சுட்டிக் காட்டியிருப்பதை கவனப்படுத்தினார். இராசேந்திரச்சோழன் மேற்படி பதங்களுக்குரிய தெளிவான விளக்கத்தை முன் வைத்தார். எந்தப் படைப்பாளியும் தன்னுடைய பிறப்பு, சாதி, மதம், பிராந்தியம் சார்ந்த சிந்தனைகளிலிருந்து முழுமையாக விடுபட முடியாது; ஓர்மையற்ற நிலையிலேனும் இது வெளிப்படத்தான் செய்யும் என்றார். தொ. ப. கோட்பாடுகளை விட நெல்லை சூழலின் அழுத்தங்களே புதுமைப்பித்தனை அதிகம் பாதித்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

தேவிபாரதியின் கட்டுரை பற்றி சிறிது நேரம் விவாதம் நடைபெற்றது. ஆ. இரா. வேங்கடாசலபதியின் கட்டுரை பல புதிய தகவல்களை முன்வைத்தது. இப்போதைய விமர்சனங்களை கட்டுரை கணக்கிலெடுத்துக் கொள்ளவில்லை என்ற விமர்சனத்திற்கு சலபதி கட்டுரையின் மையம் புதுமைப்பித்தன் பற்றிய சமகால விமர்சனங்களை கவனப்படுத்துவது தான் என்று குறிப்பிட்டார். இந்த அமர்வை இரவு சுமார் எட்டு மணிக்கு தொ. ப. முடித்து வைத்தார்.

மறுநாள் காலை அமர்வு பத்து மணிக்குத் துவங்கியது. ஒருங்கிணைப்பாளர் பிரபஞ்சன் சாரதி வேஷ்டியும் தூய வெள்ளைச் சட்டையும் அணிந்து ஒருங்கிணைப்பாளருக்குரிய தோரணையோடு பணியைத் துவங்கினார். *தமிழினி* வெளியிட்ட ராஜமார்த்தாண்டன், ராஜ் கௌதமன், வேதசகாய குமார் ஆகியோரின் விமர்சன நூல்கள் பற்றிய தன்னுடைய மதிப்பீட்டை முன் வைத்தார். புதுமைப்பித்தன் பற்றிய விவாதம் அவருடைய கலைத்தன்மையைக் கவனப்படுத்தாமல் சமூகவியல் பார்வையில் மட்டுமே செல்வதாக எம். யுவன் கருத்துத் தெரிவித்தார். இந்தக் கருத்தைப் பகிர்ந்து கொண்ட அப்பாஸின் சிறு குறிப்பொன்றும் வினியோகிக்கப்பட்டது. இது பற்றி சுமார் ஒரு மணி நேரம் விறுவிறுப்பான விவாதம் நடைபெற்றது.

பின்னர் ராஜமார்த்தாண்டன், ராஜ் கௌதமன் ஆகியோரிடம் தங்கள் நூல்கள் தொடர்பான சில தெளிவுகள் பெறப்பட்டன.

மதிய உணவுக்குப் பின்னர் 2.30க்கு மீண்டும் அடுத்த அமர்வு துவங்கியது. இதை ஒருங்கிணைத்தவர் ராஜ் கௌதமன். அவருடைய முன் குறிப்பு அனைவருக்கும் அனுப்பப்பட்டிருந்தது. முதல் மூன்று அமர்வுகளில் பேசப்பட்டவற்றையும் பொதுவாக பு. பி. விவாதத்தை ஒட்டி எழுப்பட்டிருக்கும் பொதுக் கருத்தாக்கங்களையும் மீண்டுமொருமுறை ராஜ் கௌதமன் தொகுத்துப் பேசினார். இது பற்றிய கருத்துப் பரிமாற்றங்கள் மாலை 5.30 வரை நடைபெற்றன. இந்த அமர்வு மிகவும் செறிவானதாக இருந்தது.

கருத்தரங்கில் குறிப்பிடத்தக்க அம்சங்களாக இவற்றைக் குறிப்பிடலாம்.

1. வழக்கமாக இது போன்ற அரங்குகளில் ஏற்படும் கலைப் பார்வை, சமூகவியல் பார்வை என்ற பிளவு இதில் ஏற்படவில்லை. இரண்டு நிலைப்பாடுகளிலிருந்தும் தீவிரமான கருத்துகள் முன்வைக்கப்பட்டன என்றாலும் ராஜ் கௌதமன், இராஜேந்திரச் சோழன், பிரபஞ்சன் ஆகியோர் இருபக்க கருத்துகளையும் எதிர்கொண்டு விவாதத்திற்கான சம நிலையை உருவாக்கியபடி இருந்தனர்.

2. அரங்கிற்கு வந்திருந்த அனைவரும் புதுமைப்பித்தன் கதைகள், பு. பி. பற்றிய விமர்சன நூல்கள் ஆகியவற்றை படித்து விவாதத்திற்கான தயாரிப்போடு வந்திருந்தனர்.

3. விவாதங்கள் விறுவிறுப்பாக நடந்தன என்றபோதிலும் அவை வாக்குவாதமாக மாறவில்லை. தன்முனைப்பும், விரோதமும் இருக்கவில்லை. இரண்டுநாள் விவாதங்களும் வன்முறையின் சாயலுமின்றிக் கடந்து சென்றன. பு. பி. யின் எழுத்துகள் பற்றிய விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டபோது பலர் அவசரமாக மறுக்க முயன்றது விவாதப்போக்கில் சில இடர்பாடுகளை ஏற்படுத்தியது.

4. இருப்பினும் பு. பி. பற்றிய பார்வையில் வேறொரு பிளவு ஏற்படுவதை அவதானிக்க முடிந்தது. பொதுவாக விமர்சகர்கள், ஆய்வாளர்கள் புதுமைப்பித்தன் சார்பாக நின்று பேசியதையும், படைப்பாளிகள் அதிலும் இளம் படைப்பாளிகள் மௌனி, கு. ப. ரா. ஆகியோரை முன்னிறுத்தி புதுமைப்பித்தன் காலத்தில் பின்னகர்வதாக கருதுவதையும் பார்க்க முடிந்தது. எம். யுவன், பா. வெங்கடேசன், தளவாய் சுந்தரம், சுரேஷ்குமார இந்திரஜித், அப்பாஸ் ஆகியோர் புதுமைப்பித்தன் உருவாக்கும் அக உலகம் மிக பலவீனமானது என்று கருதினர்.

சமகால நிகழ்வுகளை எதிர்கொண்டு அவற்றிற்குக் கலைத்தன்மையோடு இலக்கியத்தில் எதிர்வினை செய்வது ஆபத்துகள் நிரம்பிய பாதை என்றும், அதில் புதுமைப்பித்தன் கணிசமான சாதனையை நிகழ்த்தியிருக்கிறார் என்றும் ராஜ் கௌதமன் கருத்து தெரிவித்தார்.

சந்திப்பில் கலந்து கொண்டவர்கள் :

நாஞ்சில் நாடன், தேவிபாரதி, சல்மா, இராஜேந்திரச் சோழன், களந்தை பீர் முகம்மது, ராஜ் கௌதமன், ந. முருகேச பாண்டியன், அ. ராமசாமி, பிரபஞ்சன், ஆ. இரா. வேங்கடாசலபதி, ப. மதிவாணன், பெ. அய்யனார், சுரேஷ்குமார இந்திரஜித், தளவாய் சுந்தரம், பொதியவெற்பன், பா. வெங்கடேசன், அ. ராஜமார்த்தாண்டன், சிபிச்செல்வன், பழ. அதியமான், தொ. பரமசிவன், அரவிந்தன், சி. உமாபதி, சூத்ரதாரி, அப்பாஸ், கண்ணன், எம். எஸ்., மகாதேவன்...

தமிழ் இனிக்கு பின்னர் பல நண்பர்கள் காலச்சுவடு பொது அரங்குகளை நடத்துவதோடு இது போன்ற தீவிரமான விவாதங்களுக்கான சிறிய அரங்குகளையும் நிகழ்த்த வேண்டும் என்று ஆலோசனை கூறியதின் பேரில் தொடர்ச்சியாக சில சிற்றரங்குகளுக்கு ஒழுங்கு செய்ய திட்டமிட்டிருக்கிறோம்.

**கண்ணன்**



படிப்பகம்


www.padippakam.com



# INDO - SWISS

## THE REAL LEADER IN SYNTHETIC GEMS

The Indo - Swiss synthetic gem manufacturing company is a pioneer in the manufacture of a variety of rough synthetic gem stones for different applications : to add beauty, brilliance and colour to jewellery, to add precision and sharpness to the manufacture of Jewel bearings for watches & electrical meters, watch glasses, knife edges, spherical balls for ball bearings, rods, plates, thread guides, orifices and so on.



**THE INDO - SWISS SYNTHETIC GEM MANUFACTURING COMPANY LIMITED**

REGD. OFFICE :

21-1-60 & 61, Main Road
Mettupalayam - 641 301
Phone - Office : 22136

Factory : Vellipalayam Road
Mettupalayam - 641 301
Phone : 22087 & 22137

*Fax*: 91-4254-26266, *E-Mail*: indoswiss@eth.net *Grams*: "Indoswiss"

SELLING AGENT

**G.P. & COMPANY**

HEAD OFFICE

No.6, Jaffer Sahib Street, Tiruchirapalli - 620 008.

Phone : 702960 & 704006, Grams : "Geepeeco"

**MANUFACTURERS OF ROUGH SYNTHETIC GEM STONES ( SPINAL AND CORUNDUM ) IN VARIOUS COLOURS**


படிப்பகம்

www.padippakam.com

காலச்சுவடு : விவாத அரங்கு

# சாதியமும் கலப்புத் திருமணமும்

சென்ற நூற்றாண்டில் தமிழ்ச் சமூகம் சந்தித்த பல முக்கிய கேள்விகளில் சாதியமும் ஒன்று. சுயமரியாதை இயக்கத்தின் எழுச்சி சாதிய அமைப்பின் மீதும் கருத்தாக்கத்தின் மீதும் கடும் தாக்குதல்களை தொடுத்தது. சாதியத்தை நிலை நிறுத்தும் முக்கிய காரணிகளில் ஒன்றான அகமண முறைக்கு எதிரான பிரச்சாரங்களும் செயல்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. காந்தியின் தாக்கத்தையும் இங்கு குறிப்பிட வேண்டும். கலப்புத் திருமணம் சாதி ஒழிப்பிற்கான ஒரு புரட்சிகர செயல்பாடாக முன்வைக்கப்பட்டது. திராவிட இயக்கத்தின் சமூக சீர்திருத்த பணபுகள் வீரியத்தோடு இருந்த காலம்வரை கலப்புத் திருமணங்கள் திராவிட இயக்க குடும்பங்களில் பெருமிதத்துடன் முன்னெடுக்கப்பட்டன. கலப்புத் திருமணங்கள் சட்ட அந்தஸ்து பெற்றன. கலப்புத் திருமணம் செய்வோருக்கு பரிசுகளும் சான்றிதழ்களும் அளிக்கப்பட்டன. கலப்புத் திருமணத் தம்பதிகளுக்கு பிறக்கும் குழந்தைகள் சாதியமற்ற எதிர்காலத்தின் பிரஜைகளாக வளர்வார்கள் என்று நம்பப்பட்டது.



இன்னொரு புறம், கல்வியின் பரவலாக்கம், நகர்புற வளர்ச்சி, தொழில்துறை வளர்ச்சி, பாரம்பரிய குடும்ப, சாதியத் தொழில்களின் அழிவு போன்ற காரணங்களால் பல்வேறு சாதிகளிலிருந்தும் 'படித்த – உத்தியோகம் பார்க்கிற' வகுப்பு ஒன்று உருவானது. ஆண் – பெண் இரு பாலரும் தம்மை சுயேச்சையாக உணர்கிற இக்காலமாற்றத்தை ஒட்டி வெவ்வேறு சாதிகளைச் சேர்ந்தவர்களுக்கு இடையே காதல் திருமணங்கள் நடக்கத் தொடங்கின. மேலும் சில சாதிகளில் வரதட்சிணை கொடுமையின் அதிகரிப்பும், சுய சாதி அடையாளத்தைக் காட்டிலும் பொருளாதார ரீதியான அடையாளத்தின் முக்கியத்துவம் அதிகரித்ததும் கலப்புத் திருமணங்களுக்கான சாத்தியத்தை அதிகப்படுத்தியுள்ளன. இந்நிலையில் கலப்புத் திருமணங்கள் சாதிய சமூக உறவுகளில் எத்தகைய பரிவர்த்தனைகளைக் கொண்டிருக்கின்றன என்பதை யோசிக்கும்போது நம் மனதில் பல கேள்விகள் எழுகின்றன.

1. தமிழ்ச் சமூகத்தில் கலப்புத் திருமணங்கள் சாதிய அமைப்பில் ஒரு உடைவை ஏற்படுத்தும் சக்தி கொண்டதாக இருந்திருக்கின்றனவா?

2. கலப்புத் திருமணங்கள் வழி உருவாகும் குடும்பங்களில் சாதிய ரீதியான, சடங்கு ரீதியான, மரபு சார்ந்த வாழ்க்கை முறையில் மாற்றங்கள் ஏற்படுகின்றனவா?

3. ஆண் ஆதிக்க மையத்தில் கட்டமைக்கப்பட்ட சாதிய வெளியில் நிகழும் கலப்புத் திருமணங்களில் பெண்ணின் அடையாளமும் இருப்பும் ஆணின் அடையாளத்தோடும் இருப்போடும் சமத்துவமான ஜனநாயக ரீதியிலான இடத்தைப் பெறுகிறதா?

4. கலப்புத் திருமணங்கள் வழியாக பிறக்கும் குழந்தைகள் எத்தகைய சமூக அடையாளங்களைப் பேணுகிறார்கள்?

5. தமிழகத்தில் நடக்கும் கலப்புத் திருமணங்கள் பொதுவாக, இணையான அந்தஸ்துள்ள சாதிகளுக்கு இடையிலான ஒரு பரிவர்த்தனையா அல்லது சாதிய அமைப்பை குலைக்கும் ஒரு செயல்முறையா? கலப்புத் திருமணங்கள் குறித்த 'சமூக சீர்திருத்த நடவடிக்கைகளில்' தலித்களின் இடம் என்ன?

6. இன்றும் கலப்புத் திருமணங்கள் பல சந்தர்ப்பங்களில் குடும்ப மற்றும் சாதிய விலக்கத்திற்கான ஒன்றாகவும் சமூக மோதல்களை உருவாக்கக்கூடியதாகவும் இருந்து வருகிறது. இதில் பெண் எந்த சாதியைச் சேர்ந்தவள் என்பது ஒரு முக்கிய பிரச்சினையாகிவிடுகிறது. சாதிய அடுக்கில் 'கீழே'யுள்ள ஒரு ஆண் மேலேயுள்ள ஒரு பெண்ணை திருமணம் செய்யும்போது ஏற்படும் பதட்டம், 'மேலே'யுள்ள ஒரு ஆண் 'கீழே'யுள்ள ஒரு பெண்ணை திருமணம் செய்யும்போது அதே அளவு ஏற்படுவதில்லை. இதற்குப் பின்னிருக்கும் சாதிய மற்றும் பாலியல் அரசியலை எவ்வாறு புரிந்துகொள்வது?

7. கலப்புத் திருமணம் இன்றும் ஒரு சீர்திருத்த நடவடிக்கை என்னும் அர்த்தத்தைக் கொண்டிருக்கிறதா? அல்லது சாதிய சமூகத்தின் மேலாதிக்க மதிப்பீடுகளால் உள்ளிழுத்துக் கொள்ளப்பட்டுவிட்டதா?

8. சாதிகளுக்கு இடையிலான கலப்புத் திருமணங்களுக்கும் மதங்களுக்கு இடையிலான கலப்புத் திருமணங்களுக்கும் இடையே உள்ள முக்கியமான வேறுபாடுகளும் விளைவுகளும் என்ன?

9. காதல் கலப்புத் திருமணங்களில் பெண்களின் மீறலே முதன்மையானதாக இருப்பதன் காரணம் என்ன? அதாவது மேலானதாக கருதப்படும் சாதியிலிருந்தும், மதத்திலிருந்தும் வெளியேறி, ஒரு உடைவை அல்லது ஒரு கலகத்தை நிகழ்த்துவது அதிகமும் பெண்களாக இருப்பதற்கு என்ன காரணம்?

10. கலப்புத் திருமணம் வழி உருவாகும் குடும்ப அடையாளம், சம்பந்தப்பட்ட சாதிகளில் 'மேலானதாக' கருதப்படும் அடையாளத்தை நோக்கி நகர எத்தனிக்கிறதா? அப்படியெனில் இதற்கு என்ன காரணம்?

இவ்வாறு தமிழ்ச் சமூகத்தில் கலப்புத் திருமணத்தின் அர்த்தம் மற்றும் விளைவுகள் குறித்து உங்களின் முக்கியமான மனப்பதிவுகள் மற்றும் சிந்தனைகளை காலச்சுவடில் பகிர்ந்து கொள்ள வேண்டுகிறோம்.

உங்கள் எண்ணங்களை சுமார் 250 சொற்களில் மே 30 தேதிக்குள் அனுப்பி உதவுமாறு வேண்டுகிறோம்.

மாலதி மைத்ரி, வ. கீதா ஆகியோர் இது தொடர்பாக தங்கள் பார்வைகளை இந்த இதழில் முன் வைக்கிறார்கள்.

ஆ. கு.


மதுரையில் நல்லதோர் புத்தக மையம்

**பாரதி புக் ஹவுஸ்**

D–28, மாநகராட்சி ஷாப்பிங் காம்ப்ளெக்ஸ்
பஸ் ஸ்டாண்ட் (உட்புறம் – தென்புறம்)
பெரியார் பஸ் நிலையம்
மதுரை 625 001
தொலைபேசி : 736416

காலச்சுவடு வெளியீடுகள், காவ்யா, அன்னம், அகரம், விடியல் வைகை வெளியீடுகள், தாமரைச்செல்வி பதிப்பகம், அடையாளம் வெளியீடுகள், அலைகள் வெளியீட்டகம், ஸ்நேகா, தமிழினி, விஜயா பதிப்பகம், வைகறை, சவுத் விஷன், கீழைக் காற்று பதிப்பகம், நிறப்பிரிகை, நியூ செஞ்சுரி, திணை வெளியீடுகள், நேஷனல் புக் டிரஸ்ட், சாகித்ய அகாதெமி வெளியீடுகள், பெரியார் பகுத்தறிவு பிரச்சார நிறுவன வெளியீடுகள் மற்றும் இலக்கியம், சமூகவியல், நுண்கலைகள் சார்ந்த அனைத்துப் புத்தகங்களும் அனைத்துச் சிற்றிதழ்களும் கிடைக்கும்.

ஞாயிறு விற்பனை உண்டு



படிப்பகம்

www.padippakam.com



# கலப்புத் திருமணம் : ஒரு பார்வை



**இந்திய தமிழ்ச் சமூகத்தின் மனம், நினைவு, கலாச்சார மதிப்பீடு என்பவை உள்ளும் புறமுமாய் மாறாதவரையில் 'சாதியத்தன்னிலை' அழிவது சாத்தியமில்லை.**

**மாலதி மைத்ரி**

சாதிய அமைப்பின் உள்ளிருந்தபடி இன்றுள்ள சமூக வன்முறைகளைப் பட்டியலிட்டால் அவை சாதியத்தை பாதுகாப்பதற்கான வன்முறைகளாக இருப்பது தெரியவருகிறது. ஒவ்வொரு சமூகத்திலும் ஒடுக்குதலும் விலக்குதலும் வெவ்வேறு உத்திகளால், அமைப்புகளால் செயல்படுத்தப் படுகின்றன. இந்திய தமிழ்ச் சூழலில் இந்த ஒடுக்குதல், விலக்குதல் வன்முறைகள் சாதிய அமைப்பைக் கொண்டு நிகழ்த்தப்படுகின்றன.

இச்சாதிய அமைப்பின் அடிப்படைகளாக சிலவற்றை நாம் காணமுடிகிறது; குறிப்பாக, சமூகம் என்ற தளத்தில் சாதிகள் சமமானவை அல்ல. அவை தனித்தனி உரிமைகளும்; அதேபோல கடமைகளும் உடையவை. மேலதிக உரிமை உடைய சாதிகள் மிகக் குறைந்த சமூகப் பங்களிப்பையும், மிகக் குறைந்த உரிமைகள் உடைய சாதிகள் மிக அதிக சமூகப் பங்களிப்பையும் உழைப்பையும் தர வேண்டிய நிலையில் உள்ளன. பிறப்பு என்பது ஒரு தனி மனிதரின் முழு வாழ்வையும் நிர்ணயித்துவிடக் கூடியதாக உள்ளது. இதில், சாதி நிலையில் இடப்பெயர்ச்சியும் நிலை மாற்றமும் சாத்தியமில்லை. ஏற்கனவே நிர்ப்பந்திக்கப்பட்ட சமூக இடம் எந்த காரணத்தாலும் மாற்றக் கூடியதாக இல்லை. இதன் ஆகக் கொடூரமான வடிவம் 'தீண்டாமை' மற்றும் 'இழிபிறப்பு' என்ற சமூக அடையாளம்.

இந்திய தமிழ்ச் சமூகத்தின் எல்லா கருத்தாக்க, மதிப்பீட்டு வடிவங்களையும் புரிந்துகொள்ள இந்தத் தீண்டாமையும் இழிபிறப்பும் மிக முக்கிய அடித்தளங்களாக உள்ளன. தீண்டாமை என்பது மனிதநிலை மறுத்தல் என்பதில் தொடங்கி சமூக வாழ்வின் ஒவ்வொரு கட்டத்திலும் மறுத்தல், விலக்குதல், வெளியேற்றுதல், ஒதுக்குதல், பொருளழித்தல் எனப் பல வடிவங்களை எடுக்கிறது. தீண்டாமைக்குட்பட்ட சமூகத்திலிருந்து ஒரு சாதி எவ்வளவு தூரம் விலகி எவ்வளவு கூடுதல் சமூக முக்கியத்துவத்தை, பங்கைப் பெறுகிறது என்பதை வைத்தே அதன் சமூக இடம், உயர்வு என்பது அளவிடப்படுகிறது. மனித இருத்தல், பொருள்படுத்துதல் இவை யாவும் இந்தக் கூறுகளால் பிளவுபட்டுக் கிடக்கின்றன. மனம், உடல், கருத்தாக்கங்கள், மொழி அமைப்புகள், வேட்கைகள், விகாரங்கள் என அனைத்தையும் இச்சாதிசார் தன்னிலையாக்க முறை ஊடுருவி நிற்கிறது. இதன் கொடூரம் பற்றி மிகத் தொன்மையான மாற்று மரபுகளான லோகாயதம், பௌத்தம் தொடங்கி அம்பேத்கர் வரை பல்வேறு விளக்கங்களும் எதிர்ப்புகளும் முன்வைக்கப்பட்டு போராட்டங்கள் தொடரப்படுகின்றன. ஆனால், நவீன மாற்றங்கள் இந்திய சமூகப் பரப்பை ஊடுருவி பல்வேறு புதிய அமைப்புச் செயல்களை நிகழ்த்தி உலகமயமான அரசியல் வேரமைப்புகளுடன் பிணைந்த இயக்கத்தை நம் சமூகங்களின் மீது திணித்த பின்பும், இன்று சாதிய அமைப்பும் செயலும் பல புதிய வடிவங்களை எடுத்திருக்கிறது.

சாதி அமைப்பானது தோன்றி வளர்ந்த கால அரசியல் அமைப்போ, மத அமைப்போ, பொருளாதார உற்பத்தியமைப்போ பண்பாட்டு அமைப்போ, மொழி மற்றும் மன அமைப்போ, பொருள் சூழல் மற்றும் இயற்கைச் சூழல் அமைப்போ இன்று இல்லை. ஆனால், சாதி அமைப்பும் அதன் கொடூர நாசத்தன்மையும் இன்றும் இன்னும் பலமாக இருக்கிறது. தீண்டாமையை அடிப்படையாகக் கொண்ட பல புதிய வன்முறைகள் வளர்ந்து கொண்டிருக்கின்றன. இச்சூழலில் சாதி ஒழிப்பு எவ்வாறு இந்தியச் சூழலில் நிகழும்? அதற்கான கோட்பாட்டு செயலாக்க முன்தேவைகள் என்ன? இதற்கான தொடக்கம் எந்தத் தளத்தில் முதலில் நிகழ வேண்டும் என்ற கேள்விகள் நம் முன் கடுமையாக எழுகின்றன.

இந்திய மனம் என்பது பரவலாகப் பேசப்படும் தேசியம், மொழி, பண்பாடு, அறிவு, நவீன சிந்தனை, கலையாக்கம், இயற்கைசார் மனத்தகவு, மதிப்பீடுகள், ஒழுக்கங்கள், அறங்கள் என எந்த ஒன்றாலும் பாதிப்படையாததாகவே உள்ளது. இதில் பொது, பிற என்பதற்கான அறம் இல்லை. சுதந்திரம் என்கிற, இணை இருப்பு என்கிற ஒரு மனக்கூறு சமூகப் பொது மனதில் இங்கு சாத்தியமற்றதாக உள்ளது. பொதுக் கருத்து மற்றும் மரபு மனம் என்பது ஒடுக்குதலை, தீண்டாமையை நியாயப்படுத்தும் அத்தனை மதிப்பீட்டு அழகியல் கூறுகளையும் கொண்டிருக்கிறது. இந்திய மத மனம் என்பது இந்த மனித மறுப்பு மதிப்பீடுகளுக்கு மிகப் பலமான நியாய தர்க்கங்களை உருவாக்கித் தந்து கொண்டே இருக்கிறது.

அம்பேத்கர் குறிப்பிட்டதுபோல இந்திய கிராம அமைப்பு என்பது சாதி ஒடுக்கத்தை, பிற சாதி வெறுப்பைத் தனது இரத்தமாகக் கொண்டிருக்கிறது. இந்த சமூகத் தீமையானது நகர அமைப்பு என்ற ஒன்றால் சில விகிதங்கள் மாறியது போல ஒரு தோற்றத்தைத் தந்தாலும்; தற்போது முன்னிலும் தீவிரமாக, கொடுமையாக இந்திய சாதியச் செயல்பாடு புதிய வடிவங்களுடன் வளர்ந்துகொண்டிருக்கிறது. ஜனநாயகம், சுதந்திரச் சமூகம், அடிப்படை மனித உரிமைகள், சமூகமயமாதல் போன்ற கருத்தாக்க எதிர்பார்ப்புகள் இந்தப் பின்னணியில் கொஞ்சமும் அர்த்தமற்ற அபத்தமாகவே மீந்து நிற்கின்றன.

இன்றைய நவீன மாற்றங்கள் சாதியப் பிரிவுகளுக்கும், ஒடுக்குமுறைகளுக்கும் புதிய பாசிசத் தன்மையை, வீரியத்தை அளித்திருக்கின்றன. வெளிநாடுகளுக்குச் சென்று நிதி திரட்டி சாதிய அமைப்புக்களைப் பலப்படுத்தும் சூழலில் சாதி ஒழிப்புப் பற்றி சிந்திப்பது அவ்வளவு இலகுவாகத் தோன்றவில்லை.

ஒடுக்கப்பட்ட சாதிகள் தமது அடிமைத்தனத்தை, தம்மீது சுமத்தப்பட்ட கொடுமைகளை உணர்ந்து அமைப்பாகி தமது சாதி அடையாளத்துடன் போராடவும், எதிர்த்து நிற்கவும், அழிந்துபோகாமல் தம்மை பாதுகாக்கவும் அய்ரோப்பிய ஆட்சிமுறையும் ஆங்கில அரசுப் பின்னணியும் ஊக்கமளித்திருக்கின்றன. இந்தச் சாதிகளின் ஒவ்வொரு போராட்டமும் கொடுமைக்கெதிரான போராட்டமாக, தமது ஒடுக்குதலுக்கெதிரான போராட்டமாகவே இருக்கிறது. சில இடங்களில் சாவுக்கு எதிரான,



படிப்பகம்

www.padippakam.com



கொலைக்கு எதிரான தற்காப்பாகவும் இருக்கிறது. தீண்டாமை என்பது கருத்தாக்கத் தளத்திலும், செயல்பாட்டுத் தளத்திலும் அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிரானதாக உள்ளபொழுது, தலித் சமூகங்கள், இயக்கங்கள், கட்சிகளின் போராட்டம் ஒரு வகையில் அடிப்படை மனித உரிமைப் போராட்டமாகவும் இருக்கிறது. எவ்வளவு பலம் குறைந்த கோட்பாட்டுப் பின்னணியுடன் அமைந்திருந்தாலும்கூட தலித் அரசியலும், இயக்கப்போக்குகளும் இந்திய சமூகத்தை மனித சமூகமாக மாற்றுவதற்கான அமைப்புகள் என்றே புரிந்துகொள்ளப்பட வேண்டியவை.

இந்த அமைப்பாதலும் குறைந்தபட்ச விழிப்புணர்வும்கூட ஆதிக்கச் சாதிகளுக்கும், ஆதிக்க நிலையை அடைவதையே தமது காலகால முயற்சியாகக் கொண்டிருக்கும் இடைநிலை பிற்பட்ட சாதிகளுக்கும் தாளமுடியாத வெறுப்பைத் தோற்றுவித்து, புதிய அரசியல் தந்திரங்களை உருவாக்கத் தூண்டுதலாக அமைகின்றது. சாதி மறுப்பு அரசியலின் குறைந்தபட்ச தேவையையும், நியாயத்தையும்கூட புரிந்துகொள்ள முடியாத இந்த சமூக சக்திகள் புதிய பாசிச உருவாக்கத்தைத் தீவிரப்படுத்தும் நிலையை அடைந்திருக்கின்றன.

இந்நிலையில் சாதி ஒழிப்பு என்பது நீண்டகாலக் கனவாகத் தோன்றுகிறது. இதில் இரண்டுகட்ட மாற்றங்களை மட்டும் நாம் உடனடித் தேவைகளாகக் கொள்ள வேண்டி இருக்கிறது.

ஒன்று : தலித் சாதிகள் பிற சாதிகளுக்கு இணையான அரசியல், சமூக, ஆட்சி வகை பொருளாதாரப் பங்குகளை பெறுவதற்கான போராட்டங்களும் அவற்றை நடைமுறைப்படுத்துவதற்கான செயல்திட்டங்களும்.

இரண்டு : சாதிகளுக்கிடையிலான ஜனநாயகச் சமநிலையைத் தோற்றுவிக்கும் இயக்கங்களைத் தோற்றுவிப்பது. இந்நிலையில் ஏற்படும் சமூகப் போர் மற்றும் மோதல், ஆதிக்க அதிகாரப்போட்டி இவற்றில் சாதிகளின் வன்முறையும் எதிர்வினைகளும் புதிய வடிவம் கொள்ள நேரும். ஆனால் இது தவிர்க்கக் கூடியதாகத் தோன்றவில்லை.

இந்திய தமிழ்ச் சமூகத்தின் மனம், நினைவு, கலாச்சார மதிப்பீடு என்பவை உள்ளும் புறமுமாய் மாறாதவரையில் 'சாதியத் தன்னிலை' அழிவது சாத்தியமில்லை. தற்போது உள்ள நிலையில் சாதியத் தன்னிலை உருவாக்கத்திற்கு மாற்றாக எந்த இந்திய முறையும் நடைமுறைத் தத்துவமும் இல்லை.

இந்தப் பின்னணியில் இருந்தபடி ஒரு பெண்ணாகவும் இருந்து சிந்திக்கும்பொழுது எனக்குத் தோன்றுவது கலப்புத் திருமணம் என்பது சாதி ஒழிப்பையோ, சாதியச் சமத்துவத்தையோ தோற்றுவிக்காது என்பதுதான். இது சிறுபான்மையாக எந்த காலத்திலும் நடந்து முடியக் கூடிய ஒரு விலகல்முறை மட்டுமே. இது தனிமனிதரின் சுதந்திரம் என்ற அளவில் மட்டுமே முக்கியத்துவமுடையது. அகமணமுறை சாதியத் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் ஒரு முக்கிய அடிப்படை என அம்பேத்கர் விளக்குகிறார். இதிலும் ஆண்மைய அகமணமுறை என்பதை நாம் கூடுதலாகப் புரிந்துகொள்ள வேண்டும். மேலும் பெண்களுக்கு சாதி இல்லை. அதாவது, ஒரு சாதி கொண்டிருக்கும் உரிமையும் அடையாளமும் பெண்ணை அடிப்படையாகக் கொண்டு அமைவதில்லை. வேறு சாதி ஆணை மணந்துகொள்ளும் ஒரு பெண், ஆணின் சாதிக்குள் செல்வது என்பது ஆணாதிக்கச் சமூகத்தில் தவிர்க்கக்கூடியதாக இல்லை. மேலும், குடும்பம் என்பதும், திருமண அமைப்பு என்பதும் சுதந்திரமான பால் புரிந்துணர்வில் இந்தியச் சூழலில் ஏற்படுவதில்லை. நட்பு, சகவுணர்வு என்பவை இந்த அமைப்புகளின் அடிப்படையாக இல்லாதபோது கலப்புமணம் என்பது ஏற்கனவே உள்ள குடும்பம் என்ற மதிப்பீட்டு வன்முறையின் ஒரு பகுதியாகவே செயல்படும். அதாவது சமூகப் பின்புலத்தில். அப்படியெனில் ஏற்கனவே உள்ள இந்திய மதிப்பீட்டை மறு உற்பத்தி செய்யாத ஒரு பெண் ஆண் உறவிலோ, இணைவாழ்வு முறையிலோ ஏற்படும் சாதி அடையாளத் தகர்ப்பு புதிய கருத்தாக்கங்களுக்கு ஆரம்பமாக அமையலாம்.

மண உறவு கலப்பு என்பது இரு மொழியாளர்களிடமான கலப்பு, இரு இனங்களிடமான கலப்பு, இரு தேசிய மனிதர்களிடமான கலப்பு, இரு வேறு மத மனிதர்களிடமான கலப்பு, இரு வேறு நிற மனிதர்களிடமான கலப்பு என விரிந்து செல்லக் கூடியவை. இவை சமூக மேலாதிக்கத்தை, வன்முறையைக் குறைக்கும் என்பதற்கு தற்போது சான்றுகள் இல்லை. 'பெண் பரிமாற்றம்' என்ற ஆண்மையக் கருத்தாக்கமே இதில் காணப்படுவது. எந்த இனப் பெண்ணையும், எந்த மதப் பெண்ணையும், எந்த சாதிப் பெண்ணையும் அடிமை கொள்ளும் அதிகாரமும் உரிமையும் 'சமூக ஆண்' என்ற நிலைக்கு ஏற்கனவே வழங்கப்பட்டிருக்கிறது. இந்த வகை கலப்பிற்கும் திருமணக் கலப்பிற்கும் நுண்தளத்தில் அதிக வித்தியாசமில்லை என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. ஆண்வழி வம்சாவளி உள்ள நிலையிலும், கலப்புச் சந்ததியினர் கொள்ள வேண்டிய பண்பாட்டு, நம்பிக்கை, மதிப்பீட்டுச் சட்டகங்கள் தெளிவுபடாத நிலையிலும் கலப்புமணம் என்பது எந்தவித ஆக்கபூர்வமான தொடக்கமாகவும் அமையாது. ஆனால், பொதுச் சமூகவுணர்வுடைய தனிமனிதர்கள் சாதி மறுத்த இணையைத் தேர்ந்தெடுப்பது அவசியம் என்பதையும் நாம் நினைவுகொள்ள வேண்டும்.

பெண்ணின் தனித்த அடையாளம் ஒடுக்கப்படும் ஒரு சமூகத்தில், பால் இணைவு என்பது வன்முறையை அடிப்படையாகக் கொண்ட சமூகத்தில், பயமும் அச்சுறுத்தலும் சுதந்திர மறுப்பும் இணைந்து குடும்ப அமைப்பைத் தோற்றுவிக்கும் ஒரு பண்பாட்டுப் பின்புலத்தில், எந்த சாதியின் உள்கட்டமைப்பிலும் பெண் ஒடுக்குதல், பெண் சுதந்திர மறுப்பு என்பது ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவுள்ள ஒரு கூட்டு ஆண்மையச் சமூகத்தில், ஒழுக்கம் என்பது பாசிச கண்காணிப்பு உத்தியாகச் செயல்படும் பேரமைப்பிற்குள், அறம் என்பது பொதுக்களத்தில் இல்லாத ஒரு புராதன அமைப்பிற்குள் ஒரு பெண்ணாக இருந்தபடி சிந்திக்கும்பொழுது இன்னும் விளக்க முடியாத, விளங்கிக்கொள்ள முடியாத கேள்விகள் என்முன் எழுகின்றன. ■

---

**நான்காவது ஆணி**

காலச்சுவடு இதழ் 34இல் வெளியான *நான்காவது ஆணி* குறுநாவல் மலையாளத்திலிருந்து மொழிபெயர்க்கப்பட்டது. ஆசிரியர் ஆனந்த் நவீன மலையாள உரைநடையை அறுபதுகளின் இறுதியில் புதிய திசையில் திருப்பிய முக்கிய படைப்பாளிகளில் ஒருவர். பி. சச்சிதானந்தன் என்ற இயற்பெயர் கொண்ட ஆனந்த் 1936ல் பிறந்தவர். தில்லியில் மத்திய அரசின் நீர்வளத் துறையில் பொறியாளராக பணியாற்றி ஓய்வு பெற்றவர். ஆனந்தின் முதல் நாவல் *ஆள்கூட்டம்* 1970ல் வெளியானது. 1974ல் வெளியான *மரண சர்டிபிகேட்* பரவலாக விவாதிக்கப்பட்ட நாவல். *அபயார்த்திகள்*, *மருபூமிகள் உண்டாக்குன்னது* இவரது பிற நாவல்கள். *மரண சர்டிபிகேட்* மற்றும் சில சிறுகதைகள் தமிழில் வந்துள்ளன. இவரது படைப்புகள் கதைத் தன்மையைத் தாண்டி, மனித வாழ்வை ஆழ்ந்த விவாதத்திற்குள்ளாக்கும் தத்துவச் செறிவும் மொழி அடர்த்தியும் கொண்டவை.

ஆ. கு.



படிப்பகம்

www.padippakam.com



# தேவை ஒரு புதிய பாலியல் பண்பாடு



**சாதி நீங்கிய மணவாழ்வுக்குரிய மன மாற்றமும், உளவியல் மாற்றமும் எந்தளவுக்கு ஏற்பட்டிருக்கின்றன, அதற்கான அறிகுறிகள் யாவை என்பன கேள்விகளாகவே உள்ளன.**

**வ. கீதா**

சாதி சமுதாயத்தை பிடித்து ஆட்டும் பயங்களில் மிக முக்கியமானதாக உள்ளது வர்ணக்குழப்பம் பற்றிய அச்சம்தான். வேறு வேறு சாதிகளை சேர்ந்த ஆணும் பெண்ணும் மணந்து கொள்வதை ஒரு அவலமாக, தவறாக, கெடுதியாக சாதி சமுதாயம் அடையாளப்படுத்துகிறது. இரு சாதிகளை சேர்ந்தவர்கள் ஒன்று சேர்வதால், புணர்வதால் உண்டாகக் கூடிய 'இரத்தக் கலப்பை' குறிப்பிட்ட சாதியின் ஆளுமைக்கு, பரிசுத்தத்துக்கு ஏற்பட்டுவிட்ட களங்கமாக சாதிச் சமுதாயம் கருதுகிறது.

இந்த அச்சத்திற்கான பொருளாதார, சமுதாய, பண்பாட்டு அடிப்படைகளைக் குறித்து அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் போன்றவர்கள் பேசியும் எழுதியும் உள்ளார்கள்.

இந்த அச்சத்தின் உளவியல் அடிப்படைகளை, உளவியல் பாங்கைப் பற்றிப் பேச வேண்டியது அவசியமாகிறது :

காதல், புணர்ச்சி: இவற்றுக்குரிய அந்தரங்கத் தன்மையை மறுதலித்து அவற்றை வெறும் சம்பிரதாயங்களாக, சமுதாய சௌகரியங்களின் பொருட்டு மேற்கொள்ளப்படும் புனைவுகளாகத்தான் சாதிய சமுதாயம் காண்கிறது. இச்சம்பிரதாயங்கள், புனைவுகள் ஆகியவற்றை முறைப்படுத்தி அவற்றிற்குரிய ஒழுங்குகளை வரையறுத்து, பண்பாட்டு ரீதியான விளக்கங்களை வகுத்துக் கொடுத்து, 'அகமணமுறை' என்ற திணைக்குள் அவற்றைக் கொண்டு வந்துள்ளது.

ஆனால் இந்த அகமணமுறை மறுக்கும், தவறாக காணும் காதல் உறவுகள் - சாதி கடந்த மதம் கடந்த உறவுகள் - ஏதோவொரு வகையில் நமது பண்பாட்டில் மீண்டும் மீண்டும் தமது இருப்பை வலியுறுத்திக் கொண்டுதான் இருக்கின்றன - திரைப் படங்களில் சித்திரிக்கப்படும் மக்கிப் போன, தட்டையான உறவுகள் முதல் களவியல் போற்றும் காவிய உறவுகள் வரை - பல்வேறு வடிவங்களில் மறுக்கப்பட்ட உணர்வுகளும், உறவுகளும் நமது சமுதாய வாழ்வின் வரையறைகளை கடந்து, அவ்வரையறைகளை சீண்டி நகையாடிக் கொண்டுதான் இருக்கின்றன.

காதலுறவுகளுக்கு வகுக்கப்பட்ட அரசியல் இலக்கணம்தான் 'கலப்பு மணம்' என்ற கொள்கை. வர்ணக் குழப்பம் ஏற்படாதிருக்க உருவாக்கப் பட்டுள்ள நியதிகளுக்கு ஒரு மாற்றீடாக, வருணதருமத்தையும் நியாயத்தையும் குலைக்கும் நிகழ்வாக பெரியார், அம்பேத்கர் ஆகியோர் 'கலப்பு மண' வைபவத்தை புரிந்து கொண்டனர்.

ஆனால் உறவு என்பது கொள்கைக்கோ, சாத்திரத்துகோ ஆட்படக் கூடியதல்ல என்பதையும் பெரியார் அறிந்திருந்தார். எனவேதான் கலப்பு மணத்தை கருத்தியல் ரீதியாகவும், சுயமரியாதை இயக்கத்தின் நடைமுறை கொள்கையாகவும் அவர் ஆதரித்தபோதிலும், உறவு என்பது அவரவரது மனத்தேர்வு, விருப்பம், ஆசை முதலியவற்றை பொறுத்துதான் என்பதையும் வலியுறுத்தினார். ஆனால் தனிமனித ஆசைகளுக்கும் வேட்கைகளுக்கும் உரிய வெகுமதியை சாதி, சமுதாயம் வழங்க பல நூற்றாண்டுகள் பிடிக்கும் என்றும் அவர் நினைத்ததால் கலப்பு மணம் என்ற கொள்கையில் மூலம் சாதி அரணில் சில உடைப்புகளை ஏற்படுத்தி தனிமனித விடுதலைக்கான வெளிகளை உருவாக்க முனைந்தார்.

அத்தகைய உடைப்புகள் ஆங்காங்கே தொடர்ந்து ஏற்பட்டு வருகின்றன என்றாலும், சாதி நீங்கிய மணவாழ்வுக்குரிய மன மாற்றமும், உளவியல் மாற்றமும் எந்தளவுக்கு ஏற்பட்டிருக்கின்றன, அதற்கான அறிகுறிகள் யாவை என்பன கேள்விகளாகவே உள்ளன.

உடல் பரிசுத்தம், சாதி தனித்தன்மை இவற்றைப் பற்றிய பொது மனப்பாங்கு மாறியுள்ளதாகத் தெரியவில்லை. இன்னும் சொல்லப் போனால், இவற்றை அப்படியே தக்கவைத்துக் கொண்டு கலப்புமணத்தை அரசியல் சடங்காகப் பின்பற்றும் புதிய மோசடிகள் கடந்த அரை நூற்றாண்டில் தோன்றியுள்ளன.

முடிவாக, கலப்புமணத்தின் அரசியல் சமுதாய தேவையை முன் நிறுத்தும் அதே வேளையில், அத்தகைய மணவாழ்க்கை, அல்லது காதல் வாழ்க்கைக்குரிய புதிய பாலியல் பண்பாட்டையும், உள்ளடக்கத்தையும் உருவாக்குவதைப் பற்றியும் சிந்திக்க வேண்டும். ■


இணையத்தில் தமிழ் நூல்களைத் தேடுக

மின்னம்பலத்தில் உள்ள மிகப் பெரியதும் 20,000த்துக்கும் அதிகமான தலைப்புகளைக் கொண்டதுமான தமிழ்நூல் அங்காடி இதுதான்

tamilnool.com

விளம்பரம்




படிப்பகம்

www.padippakam.com







இந்துத்துவம் – ஒரு பனமுக ஆய்வு
பெருமாள் முருகன்

அன்புள்ள டாக்டர் மார்க்ஸ்
சுந்தர ராமசாமி

பெண் – மொழி – புனைவு
பாமா

சங்கருக்கு கதவற்ற வீடு
சூத்ரதாரி

நாளை இன்னொரு நாடு
சல்மா

புதுமைப்பித்தனும் கயிற்றரவும்
ந. முருகேச பாண்டியன்

யுத்தத்தைத் தின்போம்
க. மோகன ரங்கன்

நெரிந்து...
ப்ரதிபா ஜெயச்சந்திரன்

மைலாஞ்சி
அழகிய பெரியவன்

## இந்துத்துவம் – ஒரு பன்முக ஆய்வு



ஆசிரியர் : *அ. மார்க்ஸ்*

வெளியீடு : *அடையாளம், எச் – 15/193, 2வது தளம் கருப்பூர் சாலை, புத்தாநத்தம் 621 310*

பக்.*160* ; விலை ரூ.*60* *(1999)*

பெருமாள் முருகன்

இன்றைய நடுத்தர வர்க்கத்தின் கருத்தியல் முழுமையாக இந்துத்துவத்திற்கு ஆதரவாக மாறி வருகிறது. நியாயம் போலத் தோற்றம் தரும் பல கருத்துக்கள் தொடர்புச் சாதனங்களின் வழியாக நேரடியாகவும் மறைமுகமாகவும் பரப்பப்பட்டு இந்தக் கருத்தியல் உருவாக்கப்படுகிறது. மதம் என்றால் என்னவென்றே அறியாத பெற்றோர்களின் பிள்ளைகள் 'இந்து' என்னும் அடையாளத்தை எளிதாக ஏற்றுக் கொள்கிறார்கள். வாழ்வைச் சீர்குலைத்துக் கொண்டிருக்கும் பிரச்சினைகளை எல்லாம் புறந்தள்ளிவிட்டு அண்டை நாட்டுச் சதி, தீவிரவாதம் பற்றி 'தேசபக்தி'யோடு மிகுந்த கவலை கொண்டிருக்கிறார்கள். இடஒதுக்கீட்டின் பலனை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள் தகுதி, திறமைதான் முக்கியம் என்று பேசுகிறார்கள். எல்லா விதமான ஆபாசங்களையும் அனுமதித்துக் கொண்டே 'இந்தியப் பண்பாடு' பற்றி ரொம்பவும் கவலைப்படுகிறார்கள். மேலோட்டமான தர்க்கம் கொண்டிருக்கும் கேள்விகளே இவர்களுக்குப் போதுமானவையாயிருக்கின்றன. தொலைக்காட்சித் திரைச் சட்டகத்தைத் தாண்டிய சிந்தனைகளை அறிந்து கொள்ளும் ஆவல்கூட இல்லை.

நடுத்தர வர்க்கம் எப்போதும் பாதுகாப்புப் பற்றி மிகவும் கவலை கொண்டிருப்பதாகும். இன்று அந்தப் பாதுகாப்பை 'இந்து' என்னும் அடையாளந்தான் வழங்கும் என்று கருதி அதற்குள் போய்ச் சுருண்டு கொண்டிருக்கிறது. என்றுமில்லாத அளவுக்கு இந்துத்துவ அமைப்புகளின் வளர்ச்சி பெருகிக் கொண்டிருக்கிறது. அவை கடைபிடிக்கும் ஒழுங்கு, தியானம், செயல்திறன், பக்தி ஆகியவை சாதிக்கத் துடிக்கும் இளைஞர்களுக்கு ஆதர்சமாக இருக்கின்றன. 'தறி கெட்டுப்' போய் விடுவதற்கு ஏராளமான வாய்ப்புகள் இருக்கும் சூழலில் இத்தகைய அமைப்புகள் தம் பிள்ளைகளைச் சரியாக வழிப்படுத்துவதற்கு ஏற்றவை என்று பெற்றோர்கள் கருதுகின்றனர். பெற்றோர்களின் மதிப்பீடுகள் இந்த அமைப்புகளால் கேள்விகளற்று வலியுறுத்தப்படுவதும் முக்கிய காரணங்களாகும். இவற்றின் அடிப்படை நோக்கம், செல்லும் இலக்கு, சமூகத்தில் உண்டாகும் பிரச்சினைகளுக்கும் இவற்றின் செயல்பாடுகளுக்கும் உள்ள தொடர்பு, முன்னிறுத்துவோர் நலன் முதலியவை பற்றிய அறிதல் ஏதுமற்ற, அறியும் ஆர்வமற்ற மனங்களை அணுகுவது எவ்விதம் ?

○

இந்துத்துவ சக்திகளைப் பற்றிய ஆய்வு நூல்களில் 'விடுதலை இராசேந்திரன்' எழுதிய *ஆர். எஸ். எஸ். ஓர் அபாயம்*, ஓரியண்ட் லாங்மேன் வெளியீடான *காக்கி உடையும் காவிக் கொடியும்* ஆகிய நூல்கள் முக்கியமானவை. இந்த வகையில் இப்போது வெளியாகியிருக்கும் அ. மார்க்ஸ் எழுதிய *இந்துத்துவம் – ஒரு பன்முக ஆய்வு* என்னும் நூல் குறிப்பிடத் தக்கதாகும். அவ்வப்போதைய பிரச்சினைகளை ஒட்டி அ. மார்க்ஸ் எழுதிய கட்டுரைகளின் தொகுப்பு இது. "இஸ்லாமியருக்கு எதிரான கட்டுக்கதைகள்" என்னும் கட்டுரை ஏற்கனவே சிறுநூலாக வெளியிடப்பட்டு பெரும் ஆதரவைப் பெற்றது. அதுபோலவே, இந்துத்துவ சக்திகளின் ஒவ்வொரு அடிவைப்பையும் உன்னிப்பாகக் கவனித்து அவற்றை அம்பலப்படுத்தும் விதமாகப் பல கட்டுரைகளை எழுதியுள்ளார்.

இக்கட்டுரைகள் வெகுஜனத் தளத்திற்குச் செல்லவில்லை என்றாலும் வெளியானபோது உரிய கவனிப்பிற்கு உள்ளாகி விவாதிக்கப்பட்டவையாகும்.

○

இந்துத்துவம் என்பது மதப் பிரச்சினையல்ல; அரசியல். இந்து உயர் சாதியினரின் ஆதிக்கத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கான அரசியல் அது. 'இந்து தர்மத்தைக் காப்போம்' என்னும் கோஷத்திற்குள் அடங்கியிருப்பது அதுதான். தமது நலனைப் பேணி, தமது ஆதிக்கத்தைத் தொடர்ந்து செலுத்த விரும்பும் சக்திகள் 'இந்து' என்னும் அடையாளத்தை முன்னிறுத்துகின்றன. இந்து மதத்தின் பழமை பற்றியும் இந்துப் பண்பாடு குறித்தும் ஏராளமான புனைந்துரைகள் உருவாக்கப்படுகின்றன. இதனுடைய குறைகள் வெளிப்பட்டு விடாமல் இருக்கச் சிறுபான்மையினர் எதிரிகளாகக் கட்டமைக்கப்படுகின்றனர். இந்து – பரந்த மனப்பான்மையின் சின்னமாகவும், சிறுபான்மையினர் அதைச் சீர் குலைக்கும் குறுகிய நோக்கத்தினராகவும் திட்டமிட்டு வெகுஜன மனத்தளத்தில் பதியப்பட்டுள்ளது. இந்தக் கருத்தியலை உருவாக்குவதற்கு இந்துத்துவ சக்திகள் கையாளும் சுதந்திர நடைமுறைகள், திசை திரும்பும் பேச்சுக்கள், ஆகியவற்றைப் பலவித ஆதாரங்களோடு கோட்பாட்டுரீதியில் ஆய்வு செய்துள்ளார் அ. மார்க்ஸ்.

இந்துத்துவ அமைப்புகளின் வரலாறு, அவை தலித்துகள், பெண்கள் பற்றிக் கொண்டிருக்கும் அணுகுமுறை அவை திட்டமிட்டு நடத்தும் வகுப்புக் கலவரங்களின் பின்னணி, இஸ்லாமியர்களை 'எதிரி'களாகக் கட்டமைக்கும் அவற்றின் முயற்சிகள், அணுகுண்டு வெடிப்பு, பொடா சட்டம் முதலியவற்றில் அரசு சார்ந்த இந்துத்துவச் சொல்லாடல்கள் – என இந்துத்துவத்தின் பல முகங்கள் வெளிப்படுத்தப் பட்டுள்ளன. கட்டுடைப்பு, மார்க்சியம்,



படிப்பகம்

www.padippakam.com



தலித்தியம், பெண்ணியம் முதலிய நோக்குகளில் இவற்றை அணுகி ஆராய்ந்திருக்கிறார். அணுகுண்டு வெடிப்பு பற்றிய கட்டுரையில் இயற்பியல் அறிஞர் நோக்கிலும் அவருடைய அணுகுமுறை அமைந்துள்ளது. இஸ்லாமியர்களை அடுத்துக் கிறித்தவர்கள் மீது தாக்குதலைத் தொடுக்கும் இந்துத்துவத்தின் சமீபகால நிகழ்ச்சிகள் குறித்தும் அவற்றை நியாயப்படுத்தும் விதத்தில் 'மதமாற்றம் பற்றிய தேசிய விவாதம்' என்னும் சொல்லாடல்கள் பற்றியும் தனித்தனிக் கட்டுரைகள் உள்ளன.

நாளிதழ் செய்திகள், இந்துத்துவ அமைப்புகளின் வெளியீட்டு நூல்கள், ஆங்கிலக் கட்டுரைகள், நூல்கள் ஆகியவற்றை நுணுகிக் கற்று ஆதாரங்கள் எடுக்கப்பட்டுள்ளன. ஆதாரங்களைச் சேகரித்தல் என்பதைவிட அவற்றை விவாதிக்கும், அணுகும் பார்வைதான் முக்கியமானது. இந்துத்துவத்தின் சிறு அசைவுகளையும் கணக்கில் கொண்டு அவற்றை எதிர்க்க வேண்டிய அவசியத்தைத் தம் பார்வையின் மூலமாக வலியுறுத்துகிறார். 'இந்துத்துவ எதிர்ப்பு' என்பது அடிப்படையில் தலித் பார்வை சார்ந்தது. அ. மார்க்ஸின் விவாதங்களில் இப்பார்வை நீக்கமற நிறைந்துள்ளது.

உலகமயமாக்கலுக்கும் சுதேசிக் கொள்கை பேசும் இந்துத்துவ சக்திகளுக்கும் உள்ள உறவு பற்றி இன்னும் விரிவாக ஆராய்ந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. உலக மயமாக்கல் காரணமாக ஒடுக்கப்பட்டவர்களுக்கான வாய்ப்புக்கள் அடைபட்டு வருகின்றன. கல்வியையும் ஒரு தொழிலாகப் பாவித்து 'அது வருமானம் ஏதுமற்ற துறை' என்று அரசு கருதுகிறது. தனியார் பள்ளிகள், கல்லூரிகள் ஏராளமாகத் தொடங்கப்படுகின்றன. அவை ஒடுக்கப்பட்டோருக்கான கல்வி வாய்ப்புகளைப் பறிக்கும் வேலையைச் செவ்வனே செய்கின்றன. அதேபோல் அரசு வேலை வாய்ப்புகள் அருகி வருகின்றன. இட ஒதுக்கீட்டு உரிமை என்பது ஏட்டளவிலானதாக மாறப்போகிறது. தனியார், பன்னாட்டு நிறுவன வேலை வாய்ப்புக்களை இந்து உயர் சாதியினரே ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றனர். சுதேசிக் கொள்கையைப் பேசுவதன் மூலமாகப் பழம் பெருமை, தேசபக்தி பற்றிய கனவுகளை மற்றவர்களுக்குக் கொடுத்துவிட்டு வாய்ப்புக்களைத் தாங்கள் பெற்றுக் கொள்ளும் நடைமுறைத் தந்திரம் இது.

இன்றைய உலகமயமாக்கலால் பாதிப்பு அடையும் பிரிவினர் ஒடுக்கப்பட்ட மக்கள்தான். பன்மைக் கலாச்சாரக் கூறுகள் அழிக்கப்படுதல், சிறு தொழில் நிறுவனங்கள் அழிக்கப்படுதல், ஒடுக்கப்பட்டோருக்கான கல்வி, மருத்துவ வசதிகள் நீக்கப்படுதல் – என இந்துத்துவத்தின் விளைவுகளைப் பட்டியலிட்டுக் காட்டும் அ. மார்க்ஸ், இது உலகமயமாக்கலோடு தொடர்புபட்டிருத்தலை விரிவாக விளக்கியிருக்கலாம்.

இந்நூல் இந்துத்துவம் பற்றிய பல்வேறு செய்திகளை பார்வைகளை வழங்கக் கூடியதாகும். ஆகவே இது கற்கப்பட்டு பல தளங்களில் விரிவான விவாதங்களுக்கு உள்ளாக்கப்பட வேண்டும். அவ்விவாதங்கள் இந்துத்துவத்திற்கு எதிரான கருத்தியலைச் சிறிதேனும் உருவாக்கப் பயன்படும்.

## அன்புள்ள டாக்டர் மார்க்ஸ்

ஆசிரியர் : *ஷீலா ரௌபாத்தம்*

தமிழாக்கம், அறிமுகம், விளக்கக் குறிப்புகள் : *வ. கீதா, எஸ். வி. ராஜதுரை*

வெளியீடு : *விடியல் பதிப்பகம், கோவை 641 015*

பக்.125; விலை ரூ.40 *(1999)*

சுந்தர ராமசாமி

இந்நூல் இன்றைய தமிழ் வாசகர்களின் ஆர்வம், ஆர்வமின்மை, தேவை, வரையறை ஆகியவற்றைக் கணக்கிலெடுத்துக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு சிக்கலான விஷயத்தைத் தங்கள் மூளைகள் புரிந்துகொண்டுவிட்டதான பாவனையை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காக படைக்கப்பட்டுள்ள நூல் அல்ல இது. வரலாறு சார்ந்த சில முக்கிய சிந்தனைகளைத் தமிழ் வாசகர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து அவர்களது சமூக உணர்வையும், வரலாற்றறிவையும், விமர்சன மனோபாவத்தையும் தூண்டி, கூர்மைப்படுத்தும் நோக்கம் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. இந்தப் புத்தகத்தை ஒழுங்கு செய்வதில் மொழிபெயர்ப்பாசிரியர்கள் எடுத்துக் கொண்டிருக்கும் கவனம் தமிழ் பதிப்புலகில் மிக அபூர்வமாகக் காணக் கிடைப்பது. ஆங்கில அறிவையும் வாசிப்பையும் தமிழ் வாசகர்களிடம் ஒரு முன்விதியாக எடுத்துக்கொள்ளாமல் தாய்மொழி மட்டுமே அறிந்த வாசகனும் தெளிவாகப் புரிந்துகொள்ளும் வகையில் இம்மொழிபெயர்ப்பு நூல் உருவாக்கப்பட்டுள்ளது. கட்டுரையாசிரியர்களும் மொழிபெயர்ப்பாளர்களும் பெரும்பாலும் பின்பற்றத் தவறி விடும் ஒழுக்கம் இது.

ஷீலா ரௌபாத்தம் நீண்ட நாட்களாகவே பிரிட்டிஷ் சோசலிச இயக்கங்களுடன் தொடர்பு கொண்டவர். பெண்ணிய ஆய்வாளர். வரலாற்றாசிரியர். இவர் மார்க்சுக்கு ஒரு கற்பனைக் கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதத்தை மொழிபெயர்த்து தமிழ் வாசகனுக்கு அவசியமான விளக்கங்கள் அளித்து வழங்குவதே மொழிபெயர்ப்பாசிரியர்களின் குறிக்கோள். இக்குறிக்கோளை இந்நூல் மிகச் சிறப்பாக நிறைவேற்றியுள்ளது.

ஷீலா ரௌபாத்தம் மார்க்சுக்கு ஒரு கடிதம் எழுத வேண்டிய முகாந்திரம் என்ன ? மொழிபெயர்ப்பாசிரியர்கள் தரும் விளக்கத்தைப் பார்ப்போம்:

"கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கை பற்றி அவர் (ஷீலா ரௌபாத்தம்) எழுதியுள்ள மதிப்பீடு டாக்டர் மார்க்சுக்கு எழுதிய ஒரு கடிதமாக அமைந்துள்ளது. 19ஆம் நூற்றாண்டின் கடைசிப்பகுதியில் வாழ்ந்திருக்கக்கூடிய, பெண்ணிய நோக்குடைய ஒரு பெண் கதாபாத்திரத்தை உருவாக்கி, அப்பெண் மார்க்சுக்கு கம்யூனிஸ்ட் அறிக்கையைப்பற்றி ஒரு கடிதம் எழுதியுள்ளதாகக் கற்பனை செய்து, அக்கடிதத்தை அறிக்கை பற்றிய தனது மதிப்பீடாக ஷீலா ரௌபாத்தம் வழங்கியுள்ளார். இதில் மார்க்சுக்குக் கடிதம் எழுதும் அன்னெத் தெவ்ரு (Annette Deveraux), அவரது கணவர் விக்டர், அவர்களது நண்பர்களான துக்ரோக் தம்பதியர் ஆகியோர் மட்டுமே கற்பனைப் பாத்திரங்கள். அவர் எழுதியதாகச் சொல்லப்படும் கடிதம் விவரிக்கும் வரலாற்றுச் சூழலும் நிகழ்வுகளும், அக்கடிதத்தில் குறிப்பிடப்படும் பிற ஆண்களும் பெண்களும் உண்மையானவர்களே."

நூற்றியிருபத்தைந்து பக்கங்கள் கொண்ட நூல் இது. இதில ஷீலா ரௌபாத்தம் மார்க்சுக்கு எழுதிய கடிதம் இருபத்தியேழு பக்கங்கள் மட்டுமே. இக்கடிதம் சுமார் முப்பது பக்கங்கள் கொண்ட முன்னுரை மூலம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது. ஷீலா ரௌபாத்தத்தின் கடிதத்தை வரலாற்றுப் பின்னணியில் பொருத்திப் புரிந்துகொள்ள வாசகர்களுக்குப் பெரிதும் பயன்படும் முன்னுரை இது. கடிதத்தில் குறிப்பிடப்படும் வரலாற்றுப் பாத்திரங்கள் பற்றி விரிவான விளக்கங்களும் தரப்பட்டுள்ளன. இவை பிற்சேர்க்கையாக, மூன்று விளக்கக் குறிப்புகளாக, சுமார் ஐம்பது பக்க அளவுக்குச் சேர்க்கப்பட்டுள்ளன.

இதில் முதல் குறிப்பு கம்யூனிஸ்ட் அறிக்கை வெளிவந்த பின்னணியையும், இரண்டாவது குறிப்பு 'விமர்சன–கற்பனைவாத சோசலிசமும் கம்யூனிசமும்' என்ற தலைப்பில் மார்க்சுக்கு முற்பட்ட சோசலிச சிந்தனையாளர்களான சேன் சிமோன் (Claude-Henri de Saint Simon, 1760-1825), ஷார்ல் ஃபூரியே (Charles Fourier, 1772-1837), இராபர்ட் ஓவன் (Robert Owen, 1771-1858), விமர்சன கற்பனைவாத சோஷலிசம் பற்றிய கம்யூனிஸ்ட் கட்சி அறிக்கையின் விமர்சனம், சாசன இயக்கம் (Chartist movement) பற்றியும் உள்ளது.

அறிமுகக் கட்டுரையும் பிற்சேர்க்கை விளக்கக் கட்டுரைகளும், மேலதிகத் தெளிவை முன்னிட்டு ஷீலா ரௌபாத்தத்தின் கடிதத்திற்கு மொழிபெயர்ப்பாளர்கள் தனியாகத் தந்துள்ள அடிக்குறிப்புகளும் சிறப்பாகவும் தெளிவாகவும் அமைந்துள்ளன. தம் கடிதத்தை உருவாக்க ஷீலா ரௌபாத்தத்திற்குத் துணை நின்ற நூல்களின் பட்டியலும், மொழிபெயர்ப்பாளர்கள் தங்கள் பதிப்புப் பணியை முன்னிட்டுப் பயன்படுத்திய புத்தகங்களின் விபரங்களும் தரப்பட்டுள்ளன. இந்நூல் முன்வைக்கும் சிந்தனைகள் பற்றி மேலும் விரிவாகத் தெரிந்து கொள்ள விரும்பும் வாசகர்களுக்கு துணை நூல்கள் பற்றிய செய்திகள் முக்கியமானவையாகும்.

ஷீலா ரௌபாத்தம் மார்க்ஸ்மீது மிகுந்த மதிப்புக் கொண்டவர். அவரது



படிப்பகம்

சிந்தனைகள் பற்றியும் அவை வரலாற்றில் ஆற்றியிருக்கும் பங்குபற்றியும் அறிந்தவர். அன்னெத் தெவ்ரு மார்க்சுக்கு கனடாவிலிருந்து எழுதுவதாகப் புனைவு செய்துள்ள கடிதத்தின் ஒரு பகுதியில் ஷீலா ரௌபாத்தம் எழுதுகிறார்:

"உங்களை நேரில் சந்தித்து உங்கள் கருத்துகளைக் கேட்பதற்கு எனக்கு விருப்பம்தான். ஆனால் ஒரு கடிதம் மூலம் அவற்றைத் தெரிந்துகொள்வது தான் எனக்கு நல்லது என்று நினைக்கிறேன். ஏனெனில் உங்கள் கருத்துகளுக்குக் கூறப்படும் மறுப்புரைகளைப் பொழிந்துதள்ளும் நாவன்மையால் மூழ்கடிக்கக் கூடியவர் நீங்கள். நேருக்கு நேர் நின்று உங்கள் கருத்துகளை எதிர்த்து மாற்றுக் கருத்துகளை நிலைநிறுத்தச் செய்வதென்பது எளிதான செயலல்ல. உங்களுடைய பேராற்றலும் ஆழ்ந்த படிப்பும் அத்தகையன. நம் இருவருக்குமிடையே அட்லாண்டிக் மாக்கடல் இருப்பது நல்லதாய்ப் போயிற்று."

மார்க்சு தன் கம்யூனிஸ்ட் அறிக்கையை (மார்க்சு, ஏங்கல்ஸ் ஆகிய இருவர் பெயரிலும் அறிக்கை வெளிவந்தது என்றாலும் மார்க்சு மட்டுமே உருவாக்கிய அறிக்கை அது) எழுதுவதற்கு முன்னரே முக்கியமாக பிரஞ்சு நாட்டிலும் பிற ஐரோப்பிய நாடுகளிலும் பெண்கள் தங்கள் விடுதலையை முன்னிட்டுத் தொடர்ந்து போராடிக்கொண்டு வந்திருக்கின்றனர். இந்தப் போராட்டங்களில் ஈடுபட்டவர்கள் அதிகமும் ஏழை எளியவர்களான சலவைத் தொழிலாளிகள், தையல் வேலை செய்து வந்த பெண்கள், மருத்துவச்சிகள், பட்டுத் தொழிலில் வேலை செய்து வந்தவர்கள். கல்வி அறிவு குறைந்த, உடல் உழைப்பு மிகுந்த இவர்களுக்கு எதிராகச் செயல்பட்ட சமூக அநீதிகளும் சுமைகளும் இவர்களை நசுக்கிக்கொண்டிருந்ததால் விடுதலை வேட்கை இவர்களை ஆட்கொண்டு அலைக்கழிக்கத் தொடங்கியிருந்தது. பல்வேறு பார்வைகள் சார்ந்த கருத்து மோதல்களினூடே இவர்கள் போராடிக் கொண்டிருந்தனர். சமூக மாற்றத்திற்கான சிந்தனைகள் இவ்வகையிலான போராட்டங்கள் வழியாகவே தெளிவும் திடமும் கொள்கின்றன.

சமூக மாற்றத்திற்கான சிந்தனைகளின் தொகுப்பை எந்த மேதையும் தன் அறிவையும் ஆராய்ச்சியையும் மட்டுமே சார்ந்து முழுமையாக உருவாக்கிவிட முடியாது என்பது நாம் நினைவில் கொள்ள வேண்டிய உண்மை. மார்க்சியச் சிந்தனைகளை முற்றும் முடிவாக மார்க்சு உருவாக்கி அளித்தார் என்ற கற்பனை வரலாற்றுண்மைக்கு மாறுபட்டது. ஒரு நாவல் படைப்பது போல் தத்துவங்களை முற்றும் முழுவதுமாக ஒரு தனிமனித மூளை பூத்துக் குலுங்கச் செய்துவிடுவதில்லை. வரலாற்றில் ஆதிகாலத்திலிருந்து தொடர்ந்து நிகழ்ந்த போராட்டங்கள் அளிக்கும் படிப்பினைகள்தான் தத்துவத்தைச் செழுமைப்படுத்துகின்றன. தத்துவங்கள் எவையும் விடுதல்களின்றி முழுமை பெற்றுவிடுவதில்லை. முழுமையான ஒன்றுக்கு, பரிபூர்ணமான ஒன்றுக்கு, மறுபரிசீலனைக்கோ ஐயத்திற்கோ இடமற்ற ஒன்றுக்கு விழையும் சமய சிந்தனை முழு வரலாற்றிலும் வேரோடி ஆழம் பெற்றுள்ளது. இந்தச் சமய மனத்தின் எச்சம்தான் மார்க்சியத்தையும் பிழைகளற்றதாக, விடுதல்கள் அற்றதாக அதன் ஒவ்வொரு எழுத்தும் கருத்தும் மாறிவரும் காலங்களுக்கும், மாறி வரும் தேசங்களுக்கும், மாறி வரும் கலாச்சாரங்களுக்கும் பொருந்தி நிற்கக்கூடியவையாக கற்பனை செய்துகொள்கிறது. இந்தக் கற்பனை சார்ந்த பிடிவாதமும் அதனை அமல்படுத்த முயன்ற அதிகாரமும் மிகப் பெரிய நெருக்கடிகளை வரலாற்றில் உருவாக்கி மூலத் தத்துவமான மார்க்சியத்தை முற்றாக நிராகரிக்கத் தூண்டும் நிலைகுலைவுகளை பல ஐரோப்பிய தேசங்களில் உருவாக்கியது சமீபகால வரலாறு. சமகால வரலாற்றில் நிகழ்ந்த நிலைகுலைவுகளிலிருந்து இயக்கம் சார்ந்த நம் அரசியல் தத்துவவாதிகள் என்னென்ன பாடங்களைக் கற்றுக்கொண்டிருக்கின்றனர் என்பது இன்றுகூட தெளிவாகாத மூடுமந்திரமாகவே இருக்கிறது.

பெண்களுடைய போராட்டங்களைப் போதுமான அளவு கணக்கிலெடுத்துக் கொள்ளவோ வரலாற்றில் அவர்கள் ஆற்ற வேண்டிய பங்கு பற்றி தனது கம்யூனிஸ்ட் அறிக்கையில் போதிய அளவு சுட்டவோ மார்க்சு தவறிவிட்டதான விமர்சனமே ஷீலா ரௌபாத்தம் மார்க்சுக்கு எழுதியுள்ள கடிதத்தில் முன்வைத்துள்ள முக்கிய கருத்தாகும். இந்தக் கருத்திற்கு வலிமையூட்டும் வகையில் அக்காலத்தில் நடைபெற்ற பெண்களின் போராட்டங்களை மிகச் சிறப்பாகத் தொகுத்துச் சொல்கிறார் ஷீலா ரௌபாத்தம். அவருடைய மையமான குறைபாடு கடிதத்தில் இவ்வாறு வெளிப்பட்டுள்ளது:

"உங்கள் அறிக்கையில் பெண்கள், குடும்பம் பற்றிய பகுதி பெருத்த ஏமாற்றம் தரக்கூடியதாக உள்ளது என்பதை அழுத்தமாகச் சொல்ல விரும்புகிறேன். கடந்த பத்து ஆண்டுகளாக சமூகப் புத்துயிர்ப்பு பற்றிப் பெண்களுக்கிடையே நடந்து வந்துள்ள விவாதங்களில் நான் முழுமையாக ஈடுபட்டிருந்ததால் இதை நான் வற்புறுத்திச் சொல்ல வேண்டியுள்ளது... பாட்டாளிகளின் இந்த அறிக்கையில் பெண்களாகிய எங்கள் சிந்தனை வளத்திற்கும் செறிவுக்கும் இடமளிக்கப்படவில்லை."

முற்பட்ட காலத்தைச் சேர்ந்த பெரும் படைப்புகள் அனைத்திற்கும் காலமும் சூழலும் சார்ந்த மறுபரிசீலனை தேவைதான். இந்த மறுபரிசீலனையும் விமர்சனமுமே பெரும் படைப்புகள் உள்ளடக்கியிருக்கும் கருத்துகளுக்கு நிகழ்கால வாழ்வுடன் ஜீவ உறவை உருவாக்கித் தருகிறது. பெரும் படைப்புகளைச் சாகாமல் காப்பாற்றுகிறது.

மேல்நாட்டு அறிஞர்களின் பெயர்களை அதிகமும் ஆங்கிலம் வழியாகத் தெரிந்துகொள்ளும் நாம் தொடர்ந்து அவர்களது பெயர்களைத் தவறாக உச்சரித்து வருகிறோம். இப்பழக்கம் நம் கூச்சத்தையும் நாள்பட மரத்துப்போக வைத்துவிட்டது. இந்நூலில் பிரஞ்சு சொற்களையும் பெயர்ச்சொற்களையும் தமிழுக்கு நெருங்கி வரும் வகையில் சரியான உச்சரிப்பைத் தர கவனம் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

மிகச் சிறப்பாக இந்நூலை மொழிபெயர்த்து விளக்கக் குறிப்புகளுடன் அளித்துள்ள வ. கீதாவும் எஸ். வி. ராஜதுரையும் தமிழ் வாசகனை வளர்க்கும் மிகச் சிறப்பான பணியைச் செய்துள்ளனர்.

இந்நூலை வெளியிட்டுள்ள விடியல் பதிப்பகத்தினர் பாராட்டுக்குரியவர்கள். இந்நூலில் பொருளடக்கம் சேர்க்கப்படாமல் போனது ஒரு விடுதல். நூலின் ஒழுங்கான கட்டமைப்பு இக்குறையைப் பெரிதுபடுத்திக் காட்டுகிறது.

## பெண் – மொழி – புனைவு

**(பெண்ணியக் கட்டுரைகள்)**



ஆசிரியர் : *டாக்டர் க. பஞ்சாங்கம்*

வெளியீடு: Kaavya, 16, 17th 'E' Cross, Indira Nagar 2nd Stage, Bangalore 560 038

பக்.: *152;* விலை ரூ. *60 (1999)*

பாமா

தான் ஏன் பாதிக்கப்பட்டவர்களைப் பற்றிச் சிந்திக்கிறேன், பேசுகிறேன், எழுதுகிறேன் என்பதற்கான காரணங்களாக தனது வாழ்க்கையில் நடந்த ஒரு சில நிகழ்வுகளை முன்னுரையில் சொல்லி, 'பெண்–மொழி–புனைவு' என்ற நூலில், பதினாறு பெண்ணியக் கட்டுரைகளைத் தொகுத்து தந்துள்ளார் முனைவர் க. பஞ்சாங்கம். இதுவரையில் பலரால், பல சந்தர்ப்பங்களில், பல இடங்களில் பேசப்பட்ட, எழுதப்பட்ட, விவாதிக்கப்பட்ட பெண்ணின் பிரச்சினைகள், பெண்ணியச் சிந்தனைகள் கட்டுரைகளில் இடம் பெறுகின்றன. தொல்காப்பியம், புறநானூறு, சிலப்பதிகாரம் முதற்கொண்டு, இன்றுவரை பெண் அடிமையாக்கப்பட்ட வரலாற்றைச் சொல்லும் அதே வேளையில், பெண் விடுதலை பெற வேண்டும் என்ற வேட்கையையும் வேகத்தோடு வெளிப்படுத்துகிறார்.

விடுதலையுணர்வை ஊட்டாத கல்வித் திட்டம், பெண்களின் உளவியலை ஊனப்படுத்தும் மத நிறுவனங்கள்,

www.padippakam.com



பெண்ணடிமைத்தனத்தைப் பறைசாற்றும் தகவல் தொடர்புக் கருவிகள், திரைப்படப் பாடல்கள், கணவனுக்குத் தொண்டு செய்ய சிறந்த அடிமைகளை உற்பத்தி செய்யும் குடும்ப அமைப்பு, இளம் பெண்களின் சிக்கல்கள், பாலியல் உறவில் வன்முறைகள், ஆணாதிக்கத்தைக் கட்டமைக்கும் ஆண்மொழி, பெண்ணை அடிமைப்படுத்தப் பயன்படும் தாய்மைப் பற்றிய கொண்டாட்டம், ஆணுக்காகத் தன்னை அழித்துக்கொள்ளும் பத்தினித் தன்மை போன்ற பல விஷயங்களைப் பற்றித் திரும்பத் திரும்பச் சொல்கிறார்.

பெண் விடுதலைக்கான வழிகளாக, பாலின வேறுபாடற்ற, பொருளாதார மேம்பாட்டிற்கான கல்வித் திட்டம், பெண் தனக்கான மொழியை உருவாக்குதல், மரபு எனப் போற்றப்படும் அனைத்தின் மேலும் போர் தொடுத்தல், பெண்களை அடிமைப்படுத்தும் புனைவுகள், கருத்தாக்கங்களை நிராகரித்தல், தனது சக்தியை உணர்ந்து செயல்படுதல் போன்றவற்றைப் பரிந்துரை செய்கிறார்.

சமூகத்தில் அங்கீகரிக்கப்பட்ட குண நலன்களோடு வளர்வதுதான் ஒரு பெண்ணுக்குப் பாதுகாப்பு என்றும், பிரச்சினைகள் வராமல் தடுக்க தனது நடமாட்டத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டுமென்ற நிலைதான் நிலவுகிறது என்றும் ஆசிரியர் கூறுவது பெண்களின் அவல நிலையை, மன உளச்சலை, அவஸ்தையை, உளச் சிக்கல்களைச் சரியாகப் புரிந்துகொள்ள உதவுகிறது. தங்களுக்கான ஆளுமைகளையோ, உரிமைகளையோ, கனவுகளையோ, ஆசைகளையோ வளர்த்துக்கொள்ள வழியில்லாத இச் சமூகத்தில், தனது தனித்துவத்தை உணர்வதற்குக்கூட பெண்ணுக்கு உரிமையில்லை. "எல்லாத் தளங்களிலும் பெண்ணை ஆண் மேலாண்மை புரிவதற்கு அடித்தளம் அமைத்துக் கொடுக்கக்கூடிய ஓர் அரசியல் நிறுவனம் 'தாய்மை' " என அட்ரெய்னே ரீச் என்பவரின் கூற்றாக ஆசிரியர் பதிவு செய்திருப்பது ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய உண்மையாகும்.

முற்போக்கு எழுத்தாளர் என்று கருதப்படும் பிரபஞ்சனின் படைப்புக்களில் பெண்விடுதலைக் கூறுகளை ஆய்ந்தறிந்து கூறும் ஆசிரியர், பெண் எழுத்தாளர்கள் பற்றிய பிரபஞ்சனின் கருத்தினையும் கூறுகிறார். ஆண்களால் உருவாக்கப்பட்ட இலக்கியச் சட்டகங்கள், வரைமுறைகளுக்குள்ளே, ஆண்களின் அங்கீகாரம் பெறத்தக்க வகையிலேதான் பெண்கள் இலக்கியம் படைக்க வேண்டும் என்ற நிலைதான் இன்னும் நிலவுகிறது என்பதையே இது காட்டுகிறது. சமூகத் தளைகளால் பிணைக்கப்பட்டு, நொறுக்கப்பட்டுக் கிடக்கும் பெண்களால் சுயமாகச் சிந்திப்பதற்கும், தன் உணர்வுகளை உள்ளபடி வெளிப்படுத்துவதற்கும் அவர்களுக்குச் சுதந்திரம் இல்லை என்பதையும் மறுக்க இயலாது.

'பெண்ணின் பிரச்சினை என்பதாக ஒன்று இல்லை. அது மானுடப் பிரச்சினை' என்ற பிரபஞ்சனின் கூற்று, பெண்ணின் பிரச்சினையைக் கூர்மைப்படுத்துவதாக அமையவில்லை. கு. சின்னப்ப பாரதியின் படைப்புகளைப் பற்றிப் பேசும்போதும், "பெண்களுக்கான பிரச்சினை என்பது தனியானது அல்ல; அதுவும் மனிதப் பிரச்சனைதான்; இந்த மனிதப் பிரச்சினை வர்க்க வேறுபாடுகளுக்குள் இருந்து முளைக்கிறது" என கு. சி. பா. வின் கருத்தாக ஆசிரியர் கூறுகிறார். பெண்களின் பிரச்சினைகளை இவ்வளவு எளிதாகப் பொதுமைப்படுத்திவிட முடியாது. நமது சாதிச் சமூகத்தில், மேல்சாதியினர் என்போர் எந்த அளவுக்கு கீழ்ச்சாதியினர் எனப்படுவோர் மீது எல்லையற்ற ஆளுமையும், அதிகாரமும் கொண்டு அவர்களை ஒடுக்குகின்றார்களோ, அதே அளவுக்கு ஆண்கள், பெண்கள்மீது அதிகாரமும் ஆக்கிரமிப்பும் செலுத்துகிறார்கள். எனவே இதனை தனித்தேப் பார்க்க வேண்டியது அவசியமாகிறது. அதுதான் நியாயமுங்கூட.

புத்தகத்தை வாசித்து முடித்தபோது, மனதில் ஏற்பட்ட ஆற்றாமையையும், வருத்தத்தையும் தவிர்க்க இயலவில்லை. பக்கம் பக்கமாக பெண்களின் பிரச்சினைகளை எழுதிச் செல்லும் ஆசிரியர், தலித் பெண்களைப் பற்றி போகிற போக்கில் ஒரு வரி, 'தலித் பெண்களுக்கு இத்தகைய பாரங்களோடு கூடவே சாதி வேறுபாட்டினால் ஏற்படும் மரியாதைக் குறைவுகளையும் தாங்க வேண்டிய நிலை வேறு இருக்கிறது' என்பதாக மட்டும் சொல்கிறார். வர்க்கம், பால், சாதி என்று மும்முனை ஒடுக்கு முறைகளால் அவதியுறும் தலித் பெண்கள் தாங்க வேண்டியவை வெறும் மரியாதைக் குறைவுகள் மட்டும்தானா? மனித மாண்பும், சமூக அந்தஸ்தும் இல்லாதவர்களாக ஆக்கப்பட்டு, வாழ்வதற்காகச் செத்துக் கொண்டும், சாவதற்காக வாழ்ந்து கொண்டும் இருக்கின்ற தலித் பெண்களின் அவலத்தைக் குறிக்க இந்த வார்த்தைக்குப் போதுமான அளவு வீரியமோ வீச்சோ இல்லையென்றுதான் சொல்லவேண்டும். இது ஒரு பெருங்குறையாகவே மனசை நெருடுகிறது.

## சங்கருக்கு கதவற்ற வீடு



ஆசிரியர் : *லஷ்மி மணிவண்ணன்*

வெளியீடு : *ஜுபிட்டர், 4அ, குஞ்சன் விளை, மணிக்கட்டிப் பொட்டல், நாகர்கோவில் 629 501*

பக்.: *46*, விலை ரூ.*20 (2000)*

**சூத்ரதாரி**

எல்லாவற்றிலிருந்தும் ஒதுங்கி ஒடுங்கிக் கிடக்க விழைகிற ஒருவனின் குரலில் கனவுகளையோ, கலை வனப்புகளையோ எதிர்பார்க்க முடியாது. தன் வலியையும், இருளையும், பின் வாங்குதலையும் அக்குரல் வெளிப்படுத்த முனையும்போது மொழியும், செறிவும் கைகூடிவிடாது, பெரும்பாலும். லஷ்மி மணிவண்ணனின் கவிதைகள் அத்தகையவையே. எதுவுமே ரசிக்கவில்லை; உவப்பாயில்லை; எல்லாவற்றிலிருந்தும் தன்னைத் துண்டித்துக் கொள்ள வேண்டுமென்கிற பெரும் பதட்டத்தையே உணர முடிகிறது. புறவுலகின் அமைதியும், ஒழுங்குகளும், தூய்மையும், அழகும் இவரைக் கேலி செய்கின்றன. அதேயளவு இரைச்சலும், ஒழுங்கின்மையும், அசுத்தமும், அருவருப்பும் கழிவிரக்கம் கொள்ள வைக்கின்றன. யாரையும் சந்தேகமின்றி அணுககுமுடியவில்லை; வாழ்வின் ஒரு கணங்கூட உத்தரவாதம் தருவதாயில்லை.

இவ்விதமான ஒட்டுமொத்த விரக்தியின் சாயலை முழுமையாக உள்ளடக்கியுள்ள இக்கவிதைகளில் வந்து விழுகிற வார்த்தைகளும் படிமங்களும், கவிதையின் அமைப்பும், முரணும்கூட இம்மனோநிலையைத் தக்க வைத்துக் கொள்கிற பாங்கைக் கொண்டிருக்கின்றன. (வெக்கை, கரிந்த பகல், சாம்பல் மரம், அழுகிக் கொண்டிருக்கும் இரவும், தென்னைகளும் . . .)

மணிவண்ணனின் கவிதை மொழி, பொதுவாகக் கவிதைகளுக்கான மொழியென கொள்ளப்பட்டுள்ள தன்மைகள் அனைத்தையும் துறக்க முனைந்தது; தன் தாள, இசை ஒழுங்குகளைக் குலைத்துக் கொண்டு கிட்டத்தட்ட உரைநடைக்கு அருகில் நகர்ந்திருப்பது. விரக்தியும், கழிவிரக்கமும், ஏமாற்றங்களும் கவிந்து ததும்பும் கவிதைகளை வாசிப்பதில் வழக்கமாய் ஏற்படும் சலிப்பையும் ஒவ்வாமையையும் உணரவிடாமல் கை கொடுத்திருப்பது இந்த உரையாடல் தன்மை கொண்ட மொழி அமைப்புதான்.

இவ்வாறான வலிந்து உருவாக்கிய தட்டையானதொரு மொழியில் பதுங்கி மறையும் இருள்வெளியை கவிதையாக்கும்போது குறிப்பிட்ட ஒரு சில படிமங்கள் மட்டும் ஆக்கிரமித்துக் கொள்வதைத் தவிர்க்க முடியாது. மணிவண்ணனின் கவிதைகளில் இருளும், மஞ்சள் ஒளியும், அழுக்கும், அருவருப்பும் மனித உடலைக் களமாக்கிக் கொண்டு வெவ்வேறு அடுக்குகளில் உருப்பெற்று, திரண்டு, கரைந்து, அழிந்து தொண்டுள்ளன. உடலின் மீதான வன்மமாகவோ, வக்கிரமாகவோ, வசீகரமாகவோதான் அனைத்தும் பரிணமிப்பது போன்றதொரு மயக்கத்தை இக்கவிதைகள் தராமல் இல்லை. உடலின் அனைத்து சாத்தியங்களையும் அதன் பரிமாண எல்லைகளுக்கு வெளியே நிறுத்திவிடும் ஆர்வத்தைப் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் குறிப்பிட்ட ஒரு வலுவான படிமம் கவிதையின் நிழல் வரிகளைச் செறிவூட்டுவதற்கு பதிலாக, சிதைந்து பலவீனமாக்கி விடுகிற அபாயத்தையும் கணக்கிலெடுத்துக் கொள்ள வேண்டும்.

கவிதையின் மொழியை சிதைக்கும் போது படிமம் சுதந்திரமாக மேலெழ



படிப்பகம்

www.padippakam.com

விட்டுவிடுவது; அல்லது படிமத்தை சிதைத்து மொழியின் சாத்தியத்தில் அத்தகையதொரு சிதைவை வெளித்தெரியாமல் கடத்துவது – இவ்விரண்டையும் ஒரே சமயத்தில் நிகழ்த்தும்போது படிமம், மொழி இரண்டுமே அதனதன் வீச்சை இழந்து கவிதையை அந்தரத்தில் இருத்தி விடுகின்றன. தனித் தனிக் கவிதைகளாக (அவைகளின் சித்தரிப்பு வலுவில்) வசப்படும் மணிவண்ணனின் கவிதைகள், ஒட்டுமொத்தத் தொகுப்பையும் அணுகும் போது அந்தரத்தில் நின்றுவிடுவதை இவ்வாறுதான் புரிந்து கொள்ள முடிகிறது.

இத்தன்மையைத் தவிர்த்த கவிதைகள் – சங்கருக்குக் கதவற்ற வீடு, பஷீரும் ஜெயாவும், கரிந்த பகல், சலனம்... ஆகியவை மேற்சொன்ன இரண்டு நிலைகளிலும் புதிய அனுபவங்களைத் தருபவைகளாய் உள்ளன.

## நாளை இன்னொரு நாடு



ஆசிரியர் : *எம். கே. எம். ஷகீப்*

வெளியீடு : *நிகரி, 4, ஜய ரட்ன அவென்யூ, கொழும்பு 5*

பக். : *54;* விலை ரூ. *50 (1997)*

**சல்மா**

போரால் சூழப்பட்ட உலகில், போராட்ட வரலாற்றினைக் கொண்ட இனங்கள் ஏராளம். போராட்டக் களத்தில் துப்பாக்கிக்கும் போராளிக்கும் ஈடான செயல்பாடு கவிஞனுக்கும் கவிதைக்கும் உண்டென்பதைத் தொடர்ந்து வரலாறு நிரூபித்து வந்திருக்கிறது. கவிஞனுக்கும் போராட்டத்துக்குமான உறவு தவிர்க்க முடியாதவாறு பிணைக்கப்பட்டிருப்பதோடு யுத்த பூமியில் அவனுடைய சமூகப் பங்களிப்பு வரலாறைப் பதிவு செய்வதிலிருந்து தொடர்ந்து வந்திருக்கிறது. கெரில்லாப் போராளிகளுக்கு நிகரானவன் அவன் என்பதை யுத்த பூமியிலிருந்து எழுதப்பட்ட கவிதைகளை வாசிக்க நேரும் சமயங்களில் நம்மால் உறுதிசெய்து கொள்ள முடிகிறது.

கவிதையின் செயல்பாடு நேரடியானது அல்ல. இருப்பினும் தன் மொழியை ஆயுதத்தைக் காட்டிலும் வல்லமையோடும் வீரியத்தோடும் கையாள அவனால் முடியும். புற ரீதியான செயல்பாடுகளிலிருந்து முற்றிலும் வேறான அக உணர்வுகளாலான போராட்டம் அவனுடையது. தன் மொழியின் வழியே தம் மண்ணின் மீதான ஈடுபாட்டை வெகுவான பிரயாசையினூடே தேடி அடைகிறான். தம் மண்ணின் தம் மக்களின் வரலாற்றுப் பின்புலங்களையும் கலாச்சார மேன்மைகளையும் உணர்வுபூர்வமாக வெளிப்படுத்தும்போது போராளியைக் காட்டிலும் மேலான இடத்தைப் பூர்த்தி செய்ய அவனால் முடிகிறது. ஈழத்திலிருந்து வெளிவந்திருக்கும் மொழிபெயர்ப்புக் கவிதைகளைக் கொண்ட இச்சிறுதொகுப்பு உலகின் பல்வேறு நாடுகளில் போரின் விளைவுகளை மையப்படுத்தும் கவிதைகளையே பிரதானமாகக் கொண்டு தொகுக்கப்பட்டிருக்கிறது. தொகுப்பாளர் ஷகீப் கூறுவதைப்போல கவிதைத் தேர்வுகள் திட்டமிட்டு நிகழ்ந்தது அல்ல என்றாலும் அவர் சொல்வதைப் போல ஈழத்து அரசியல் சூழலுக்கும் இலக்கியத்திற்கும் இடையேயான பிணைப்பு தவிர்க்க இயலாதபடி அவருக்குள் தேர்வுகளை நிகழ்த்தியிருக்கிறது.

தொகுப்பின் அனேக கவிதைகள் போர்ச்சூழலை, போர் உண்டாக்கிய நாசங்களை நினைவூட்டுவன. போரால் எல்லாவற்றையும் இழந்து அகதியாக்கப்பட்டவர்களின் வாழ்வினை பல்வேறு உணர்வு நிலைகளின் வழியே இக்கவிதைகள் வெளிப்படுத்துகின்றன. எங்களிடம் ஒரு தாய் நாடு இருந்தது என்கிற கவிதையில் கடந்த காலமாகிப்போன தம் மண்ணின் மீதான ஏக்கமும், தாம் அகதியாக்கப்பட்டதற்கான கேள்விகளும் தேடல்களும் புதைந்திருக்கும் வரிகளின் துயரமும் நம்மை உலுக்கியெடுக்கவே செய்கின்றன. புலம்பெயர்ந்த துக்கத்தை நமக்குள் உருவாக்கும் அக்கவிதையின் கேள்விகளுக்கான பதில்கள் நம் யாரிடமும் இல்லாமல் இருப்பதே நிதர்சனம். 'மன்னிக்கவும் என்னை' என்கிற கவிதை சித்தரிப்பது ஈழ மக்களின் அவலம் மிகுந்த வாழ்வை மட்டுமின்றி அவர்களின் நிராதரவான நிலையையும்.

அவ்வாறே 'வீடுகளும் புத்தகங்கள் எரிக்கப்படவும்' என்கிற வரிகளின் பின் ஒளிந்துள்ள நிராதரவின், தனிமையின் நிலை மிக மிகக் கொடுமையானது. இதன் பின்னுள்ள சோகத்தை முழுவதுமாக கிரகித்துக் கொள்ள நம்மால் முடியுமெனில் அது தாங்க இயலாத ஒன்றாக இருக்கும்.

தொகுப்பின் ஏனைய கவிதைகளைக் காட்டிலும் கோபக்காரரான நிஸார் கப்பானியின் கவிதையை அதி முக்கியத்துவம் வாய்ந்ததாகச் சொல்லலாம். ஒடுக்குமுறைக்கு எதிராகவும் தம் மக்களின் மீதான அக்கறையை வெளிப்படுத்தக் கூடிய பெரும் போராட்டத்தின் நீட்சியாகவும் அவரது கவிதை அமைந்திருக்கிறது. கடந்த கால வரலாற்றில் பாலஸ்தீனியர்கள் சந்திக்க நேர்ந்த துயரங்களை, இழப்பை உடன்படிக்கை எனும் பெயரில் அவர்களுக்கு உண்டாக்கப்பட்ட துரோகத்தை தன் நெடுங்கவிதையின் வழியே பெரும் வலியோடு நினைவு கூர்கிறார். தம் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியைச் சுட்டிக் காட்டி உடன்படிக்கையினைத் தூக்கிக் கடாசும் அவரது துணிவு போராளியின் மூர்க்கத்துடன் வெளிப்பட்டிருக்கிறது. அமெரிக்கா உடன்படிக்கை எனும் பெயரில் உருவாக்கிய நிர்ப்பந்தங்களுக்கு இணங்க மறுக்கும் அவர், உடன்படிக்கைகளின் பின்னுள்ள நோக்கங்களை இந்த நெடுங்கவிதையில் வெளிப்படுத்துகிறார். அவரைப் பொறுத்தவரை கண்கள் பறிக்கப்பட்ட ஒரு சமூகம் அழ முடியாது. பாலஸ்தீனியர்களின் வரலாற்றுப் பின் புலங்களாலும் அவரது பல்வேறுபட்ட உணர்வுகளாலும் கட்டப்பட்டது இந்தக் கவிதை.

தம் கலாச்சாரத்தைத் தம் வேர்களைத் துறந்து பிற தேசங்களில் அடைக்கலம் தேடுவோரின் துயரம் மிகுந்த ஓயாத குரல்கள் இக்கவிதைகள். இவற்றின் சாரத்தைப் புரிந்துகொள்ள எத்தனிப்பின் வழியே தான் நமது பங்களிப்பினைச் சாத்தியமாக்க இயலும். ஒடுக்கப்படும் சமூகத்தின் பிரதிநிதியாகத் தன்னைப் பிரகடனம் செய்து கொண்ட தம் மக்களின் கனவுகளையும், இழப்புகளையும் கவிதைகளில் வெளிப்படுத்தும் கவிஞனின் பங்களிப்பினை உணர்த்த முயல்பவை இக்கவிதைகள். போராட்டகளத்திலிருந்து எழுதப்பட்டதாலேயே புரட்சிகர வார்த்தைகள் ஓங்கி ஒலிக்காத இக்கவிதைகளில் வெளிப்பட்டிருக்கும் வடிவ அமைதியினைக் குலைக்காமல் மொழிபெயர்த்திருக்கும் ஷகீப், இம் முயற்சியின் மூலம் திறந்து விட்டிருக்கும் ஜன்னலின் வழியே உலகெங்கிலுமிருந்தும் அவதியுறுவோரின் பல்வேறுவிதமான உணர்வுபூர்வமான குரல்கள் நம்மை வந்தடையச் செய்திருக்கிறார். மிகச் சிறியதெனினும் மிகச் சிறந்த கவிதைகளைத் தேர்வு செய்திருப்பதும் நேர்த்தியான புத்தக வடிவமும் குறிப்பிட்டு சொல்லக்கூடியவை.

## புதுமைப்பித்தனும் கயிற்றரவும்



ஆசிரியர் : *ராஜமார்த்தாண்டன்*

வெளியீடு : *தமிழினி, 342, டிடிகே சாலை, ராயப்பேட்டை, சென்னை 600 014*

பக். : *168,* விலை ரூ.*60 (2000)*

**ந. முருகேச பாண்டியன்**

நவீனத் தமிழ்ப் புனைகதை ஆக்கத்தில் முன்னோடியாக விளங்கும் புதுமைப்பித்தன் மறைந்து 52 ஆண்டுகள் கடந்துவிட்டன. எனினும் அவரது படைப்புகள் தொடர்ந்து வாசிக்கப்படுவதுடன், பல்வேறு விமர்சனங்களுக்கு இடம் தருவதன் மூலம் தமது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளன. இருபதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கியத்தில் முக்கியமான ஆளுமைகளாகப் பாரதியும் புதுமைப்பித்தனும் உள்ளனர் என்ற கருத்து தீவிரமான வாசகர்களால் முன்வைக்கப்படுகிறது. எதிர்நிலையில் பு.பி. வேளாள மரபு, இந்துத்துவப் பற்றாளர், தலித் எதிர்ப்பாளர் போன்ற அபிப்பிராயங்களும் ஆய்வாளர்களால் முன்னிலைப்படுத்தப்படுகின்றன. பு.பி. தழுவல் எழுத்தாளர் என்ற குற்றச்சாட்டும் உள்ளது. இத்தகைய விமர்சனங்கள் / குற்றச்சாட்டுக்களுக்குப் பதிலளிக்கும் வகையில் ஆழமான விவாதத்தைத்


படிப்பகம்

www.padippakam.com



தொடங்கி வைப்பதாகப் 'புதுமைப்பித்தனும் கயிற்றரவும்' நூலானது ராஜமார்த்தாண்டனால் எழுதப்பட்டுள்ளது. தற்சமயம் பு.பி. உயிரோடிருந்தால் மேற்படி விமர்சனங்களை எவ்வாறு எதிர்கொள்வாரோ, அதுபோல நூலானது பு.பி.யின் கருத்தோட்டத்திலே விரிகிறது. அதுவே இந்நூலின் சிறப்பாகும்.

விமர்சன நூலானது இரு பிரிவுகளாகப் பகுக்கப்பட்டுள்ளது. முற்பகுதியில் பு.பி.யின் இலக்கியத் தகுதியும் கலை மேதைமையும் நுணுக்கமாக மதிப்பிடப்பட்டுள்ளன. பு.பி. பற்றிய தனது அபிப்பிராயங்களை முன்வைத்து பின்னர், பிறரது விமர்சனங்களை மதிப்பிடும் ராஜமார்த்தாண்டனின் அணுகுமுறை, ஆய்வினை சரியான திசைவழிக்கு இட்டுச் செல்லுகிறது.

பிற்பகுதியில் பு.பி.யின் எழுத்து குறித்து க.நா.சு., சி.சு. செல்லப்பா, சுந்தர ராமசாமி, அசோகமித்திரன், ஜெயமோகன், அ. மார்க்ஸ், ராஜ் கௌதமன், தொ. மு. சி. ரகுநாதன் போன்ற விமர்சகர்கள் முன்வைக்கும் கருத்துக்களும் அவற்றுக்கு ராஜமார்த்தாண்டனின் எதிர்வினைகளும் இடம் பெற்றுள்ளன. ஒரு படைப்பாளி மீது பல்வேறு காலகட்டங்களில் வெளிப்பட்ட விமர்சனங்கள் / கண்டனங்களைத் தொகுத்து தருக்க முறையில் விளக்கமளித்திருப்பது தமிழுக்கு ரொம்பப் புதுசு. விமர்சனம் என்றாலே இறக்குமதி செய்யப்பட்ட கலைச்சொற்களின் பின்னால் நின்று சுழற்றப்படும் அட்டைக் கத்தி வீச்சுகள், முளை வீங்கிகளின் வாய்ச் சவடால்கள், நலம் பாராட்டுரைகள் என்பதான சூழலில் பு.பி. யின் வாழ்க்கை, படைப்புகள், சமூக அக்கறை, சமூகச் சூழல், சக மனிதர்களின் எதிர்வினைகள் ஆகியவற்றை உள்ளடக்கி அலசி ஆராய்ந்து ராஜமார்த்தாண்டன் வெளியிட்டுள்ள கருத்துகள் முக்கியமானவையாக உள்ளன.

பு.பி. யின் கதைகளின் கலைத்தன்மை, வடிவ நேர்த்தி கூடி வரவில்லை என்று ஆதங்கப்படும் க.நா.சு, சி.சு. செல்லப்பா, அசோகமித்திரன் போன்றோரின் கருத்துகளை மறுத்து, அவரது கலை ஆளுமையைச் சிறப்பித்து ஒப்பற்ற கலைஞனாகச் சித்தரிப்பது ஏற்புடையதாக உள்ளது. படைப்பாளியை வெறுமனே உயர்த்திப் பிடித்தல் அல்லது திட்டமிட்டு நசுக்குதல் போன்ற போக்குகள் இலக்கியத்திற்கு புறம்பானவை. அவை கால ஓட்டத்தில் காணாமல் போய்விடும். ஏனெனில் மணிக்கொடி எழுத்தாளர்களாக பி. எஸ். ராமையா, ந. பிச்சமூர்த்தி, ந. சிதம்பர சுப்ரமண்யம் (இவரை பு.பி.யும் போற்றுகிறார்) ஆகியோர் இன்று இலக்கியத்தில் பெறுமிடம் கேள்விக்குள்ளாகியுள்ளது. இந்நிலையில் விமர்சனங்களைத் தொடர்ந்து எதிர்கொண்டு வாசகத் தளத்தில் பரவிடும் பு.பி.யின் படைப்புகள், அவற்றின் சுயபலத்திலே நிலைத்து நிற்கின்றன. ராஜமார்த்தாண்டன் தனது ஆய்வில் அதனை உறுதிப்படுத்தியுள்ளார்.

பு.பி.யின் எழுத்து குறித்து அரசியல், சித்தாந்த ரீதியில் விமர்சிக்கும் அ. மார்க்ஸ், ராஜ் கௌதமன் நிலைப்பாடுகள் ஆழ்ந்த விவாதத்திற்குரியன. பு.பி.யை 'சைவப் பிள்ளைமார்' என்று குறுக்கி 'இந்துத்துவவாதி' என்று தூக்கியெறியும் முயற்சி பல்வேறு ஆவணங்கள் மூலம் மறுதலிக்கப்பட்டுள்ளது. பு.பி. மீதான கடும் குற்றச்சாட்டினை 'அவதூறு' என்று ஒதுக்காமல், தரவுகள்/தகவல்கள் அடிப்படையில் காரண காரியத்துடன் மறுத்துரைப்பதுடன் அவரை கலைஞன் என்று நிறுவுவது நுணுக்கமான ஆய்வாகும். ஒரு படைப்பாளியை மதிப்பீடும்போது, அவரது மொத்தப் படைப்புகளையும் அவதானித்து, அதில் அடியோட்டமான கருத்தியலையே முதன்மையானதாகக் கருத வேண்டும். துண்டு துக்காணியுமான அம்சங்களைத் தனியே வெட்டியெடுத்து ஏதாவது 'ஒரு கல்லில் உரசி, ஏதாவது ஒரு 'முத்திரை' குத்தி ஒதுக்குவது ஏற்புடையதன்று. பு.பி.யின் பிரதிகள் இன்றும் மாறுபட்ட வாசிப்புகளுக்கும் இடம் தருகின்ற நிலையில், ஒற்றைப் போக்கை வலியுறுத்தும் அ. மார்க்ஸின் விமர்சனம் முன்கூட்டிய முடிவு அடிப்படையிலானது. இத்தகைய விமர்சனப்போக்கு வெறுமனக் கலகம் செய்திட முயலுகின்றது. எனினும் பு.பி. யின் பிரதிகளை சைவ வேளாளர், தலித், பெண்ணியம், இந்துத்துவம் போன்ற கருத்தியல்கள் மூலம் விமர்சிக்க முயன்றது, புதிய சொல்லாடல்களுக்கு வழிவகுத்துள்ளது என்பதையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும்.

தழுவல் கதை விவகாரத்தில் பல்வேறு தகவல்களையும் அலசி ஆராய்வதுடன் பு.பி.யின் இக்கட்டான நிலையையும் அப்பட்டமாக விவரித்திருப்பது ராஜமார்த்தாண்டனின் நேர்மையான அணுகுமுறையை வெளிப்படுத்துகிறது.

பு.பி.யை விமர்சிக்கும் விமர்சகர்களில் சுந்தர ராமசாமியின் அபிப்பிராயங்கள் தனித்துவமுடையன. பு.பி.யின் பலமும் பலவீனமும் குறித்து அக்கறை கொண்டுள்ள சுந்தர ராமசாமி, அவரது கலை மேதமையைச் சரியாக அறிந்துள்ளார். அதனால்தான் 'படைப்பு நேர்த்தி' குறித்துக் கூடுதல் கவனம் செலுத்தும் சுந்தர ராமசாமியின் அளவுகோல், பு.பி.யை நெருங்கும்போது மாறுபடுகிறது.

இலக்கிய விமர்சனம் என்றால் வறட்சியானது – வாசிப்பதற்குச் சுவராசியமற்றது – என்ற கருத்தினை மாற்றும் வகையில் வாசகரிடம் நேரிடையாகப் பேசுவதுபோல, மனதில் பொதிந்துள்ள கருத்துகளைச் சரளமாக எளிய தமிழில் வெளியிட்டுள்ள ராஜமார்த்தாண்டனின் நடையானது வாசிப்பில் லயிப்பைத் தருகிறது. பு.பி. என்ற கலைஞனின் பல்வேறுபட்ட அம்சங்களையும் 'காய்த்தல் உவத்தல்' இன்றி நுட்பமாக ஆராய்ந்து சுவராசியமாக விளக்கும் இந்நூலானது விமர்சனத் தளத்தில் முக்கியமானதாக விளங்கும்.

## யுத்தத்தைத் தின்போம்

ஆசிரியர்கள் : *பிரதீபா தில்லைநாதன்*<br>*திருமாவளவன்*<br>*சக்ரவர்த்தி*

வெளியீடு : *அருவி வெளியீட்டகம்*<br>75, Brimley Road<br>Scarborough ON<br>MIM 3H7. Canada.

பக். : 44; விலை : *குறிப்பிடப்படவில்லை*

**க. மோகனரங்கன்**

தேசியத்தின் பெயராலான அரசாங்கத்தின் அடக்கு முறைகளாகட்டும், அதை எதிர்க்கும் தனிநபர், இயக்கம் சார்ந்த கிளர்ச்சிகளாகட்டும், வன்முறையை எந்த நியாயமான காரணத்திற்காகவும், தவிர்க்கவியலாத ஒரு சூழ்நிலையில் கைக்கொள்ள நேர்ந்தாலும், அதன் பரிணாமப் போக்கில் அந்நியாயத்தையும் சூழ்நிலையையும் தாண்டி தலைமுறைகளுக்கும் அப்பால் கலாச்சார ரீதியாகவும், உளவியல் ரீதியாகவும் கடுமையான துவேஷத்தையும், ஜீரணிக்க முடியாத கசப்பையும் மனிதர்களிடையே உண்டாக்கிவிடுகிறது. யுத்தத்தை ஆதரிப்பவர்களானாலும் சரி, எதிர்ப்பவர்களானாலும் சரி அவர்களின் எல்லா தர்க்கங்களுக்கப்பாலும் அது ஒரு குரூரமான நிஜம். அந்த நிஜம் குறித்த புனைவுகள் கலைந்து அதன் குரூரம் உணரப்படுவதின் அடையாளங்களை சமீபத்திய ஈழத் தமிழ்க் கவிதைகளில் காண முடிகிறது.

பிரதீபா தில்லைநாதன், திருமாவளவன், சக்ரவர்த்தி மூவரின் கவிதைகளடங்கியது இத்தொகுப்பு. இருப்பு குறித்த நிரந்தரமான பதற்றமும், நிலம் பெயர்ந்து வாழ்தலின் காரணமான வேரற்றத் தன்மையும் கூடி ஒரு வகை தனி மொழியாக உருவாகியிருக்கும் இக்கவிதை வரிகளினூடாக அர்த்தமாகின்ற முகம் தெரியாத கோபமும் தேறுதலற்ற ஆற்றாமையும் மனதை கலைக்கிறது. பிரதீபாவின் நீண்ட கவிதை அதன் மிகையற்ற அடங்கிய தொனி காரணமாக நெகிழ்வான வடிவத்தை சமன் செய்து கொண்டுவிடுகிறது, திருமாவளவனின் 'முல்லைத்தீவு' கவிதையின் ஒற்றைப் படிமம் அவரது பிற கவிதை வரிகளைக் காட்டிலும் அதிகம் வெளிப்படுத்துகிறது.

சக்ரவர்த்தியின் தலைப்பு கவிதையில் வெளிப்படும் மனோபாவம் நிஜத்தில் யுத்தத்தை முன்னெடுத்துச் செல்பவர்களிடம் இயங்கும் அதே ஆதிக்க மனோபாவமே என்பது ஆச்சரியம். அமைதிகாக்கும் படையிலிருந்த ஒரு சீக்கியன் (அ) ஹிந்தியன் இழைத்ததாகக் கூறும் பாலியல் கொடூரத்தை அவர்களுக்கு எவ்வித சம்பந்தமுமில்லாத கனடாவில் வசிக்கும் மொத்த சீக்கியர்கள் (அ) ஹிந்துக்கள் மீதான துவேஷமாக ஏற்றிக்கூறுவது அடிப்படையில் இனவாதம் சார்ந்த ஒரு பார்வையே.



படிப்பகம்

www.padippakam.com

தன் சூழலின்றும் கவிஞன் பெறும் அனுபவத்தின் தீவிரம் என்பது, அவ் விஷயத்தினுடனான அவனது உணர்ச்சி பூர்வமான ஈடுபாடு, விருப்பு வெறுப்பு கலந்த முன் முடிவுகள், பார்வைக் கோணம் முதலியவற்றை சார்ந்திருக்கும். அதே அனுபவம் கவிதையில் இடம் பெயர்கையில், மேற்குறிப்பிட்ட காரணிகளின்றும் எந்த அளவு விலகி அவ்வனுபவம் பொதுமைப்படுத்தப்படுகிறதோ அந்த அளவிற்கு அதன் தீவிரம் வாசிப்பில் உணரப்படும். இச்செயல்பாட்டில் கவிஞன் பயன்படுத்தும் பிரக்ஞை பூர்வமான மொழியும் பிரதானமான பங்களிப்பைச்' செய்கிறது. அவ்வகையில் நோக்கும்போது, உணர்ச்சிவசப்பட்ட மேலெழுந்தவாரியான எதிர்கொள்ளல்களாகவும், சில இடங்களில் கருத்து ரீதியான எதிர்ப்பு வரிகளாகவுமே இக்கவிதைகளில் யுத்த எதிர்ப்பு வெளிப்படுகிறது.

## நெரிந்து. . .



ஆசிரியர் : *ம. மதிவண்ணன்*

வெளியீடு : *வேறுவேறு, 111ஆ, காந்தி நகர், (பழைய எண் 89ஆ), ஆத்தூர் 636 102*

பக். : *48*, விலை ரூ. *20 (2000)*

**ப்ரதிபா ஜெயச்சந்திரன்**

ம. மதிவண்ணனின் 36 கவிதைகள் அடங்கிய தொகுப்பு 'நெரிந்து'. தமிழ் தலித் இலக்கியத்தின் புது வரவு. ஓவியர் சந்ருவின் அட்டை ஓவியம் மிகவும் நன்றாக உள்ளது. உள்ளே ஆங்காங்கே லோகநாதனின் ஓவியங்கள், மிகவும் சாதாரணமான தளத்தில் தம்மை வெளிப்படுத்துகின்றன.

தமிழில், தலித் இலக்கியத்தின் தரவுகள் தம் பல்வேறு வாழ்வு முகங்களைக் காட்டாத இந்த நிலையில்; தலித் வாழ்வுகளின் புதிய முகங்களை கவிதைத் தளத்தில் கொண்டுவந்து நிறுத்தியுள்ளது நல்ல முயற்சி. ஆனாலும் இத் தொகுப்பிலுள்ள சில கவிதைகள் குறியீடு என்னும் ஒற்றைப் பரிமாணத்தில் இயங்குகின்றன.

கவிஞன் தன் வாழ்வில் பெற்ற வெளிச்சங்கள் கவித்துவத்தில் கவிதைகளாக்க் களமிறங்க வேண்டும். கவிஞனுக்கு மீளவில் முதலில் நம்பிக்கை வேண்டும். போராட்டத்தை அறிவுத் தளத்திலும் முன்னெடுத்துச் செலபவன் கவிஞனாக இருக்க வேண்டும்.

மதிவண்ணனின் இத்தொகுப்பிலுள்ள முதல் கவிதை, முதல் வரி:

'ஆகப் போவதொன்றுமில்லை' (பக்.5) என விரக்தியாக ஆரம்பிக்கிறது, ஊதுகிற சங்கை ஊதி வைப்போம் என்ற தொனியில் நம்பிக்கையற்று.

மேலும் அதை உறுதி செய்யும் வண்ணம் 'இந்த வெற்று வாய்ப்புரட்சிக் காரன் தாலி கட்டிக் கூட்டி வரப் போகும் நீயாவது' (பக்.7)என்று 3வது கவிதை தொடர்கிறது.

கவிஞர் பிரயோகிக்கும் சொல்லாடல்களின் மூலம்; இவர் உள் வாங்கிக் கொண்ட இந்து மதத்தின் சாராம்சங்களை அவரை அறியாமல் வெளியிடுகிறாரா அல்லது பழந்தமிழ் இலக்கியப் பதப் பிரயோகங்களை உள்வாங்கிக் கொண்டு கையாள்கிறாரா என்று புரியவில்லை. இது போன்ற பிரயோகங்கள் மினுமினுப்பாக பழைய வானம்பாடிக் கவிஞர்களையே நமக்கு நினைவுறுத்தும்.

'கோடு தாண்டி வரமுடியாக் கோழைக்கு யோக்கியப் பேர் மிச்ச மாச்சு' (பக்.7) என்ற வரிகளில், கவிஞர் தன்னை அயோத்தி ராமனின் தம்பியாக உருவகப்படுத்திக் கொள்ள முனைகிறாரோ – என்று தோன்றுகிறது. இந்தக் கணத்தில் கிடைத்த ஈவு இந்துத்துவமாகவும், மீதம் கவிதைகளாகவும் நின்றுவிடுவது கவிஞருக்குக் கிடைத்த தோல்வியா அல்லது இந்துத்துவத்தின் உள்முக ஆக்கிரமிப்புக்குக் கிடைத்த வெற்றியா என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்று.

மேலும், இத்தொகுப்பில் காணப்படும் சில கவிதைகள் (12, 18) நாயைக் குறியீடாக வைத்து இயங்குகின்றன. இந்த நாய்களின் காட்சிப் படுகைகளில் தலித்துகளின் உணர்வுப்பூர்வமான அடிமைத்தனமும், பயமும் நிறைந்த வாழ்க்கைப் படிமங்கள் நமக்கு விவரிக்கப்படுகிறது. ஆனால், இக் கவிதைகள் மீட்சிக்கான எந்தவித எத்தனமும் இன்றி தனக்குள் தானே முடங்கிக் கொள்கின்றன. 12–வது கவிதையில், தலித்தின் குறியீடாக நாயை நிறுத்திவிட்டு, 18–வது கவிதையில் உள்ளீடற்ற ஒரு நாயை நோக்கமின்றிக் கவிஞர் அறிமுகம் செய்யும்போது, இக்கவிதையில் முன்னர் வாசித்துப் பழகிய தளத்தில் இந்த நாயை தலித்தாக வைத்துப் பார்க்கையில், எதிர்முரணாகிவிடுகிறது. அல்லது, நாயை தலித் என்ற குறியீட்டளவில் நின்று பார்க்கையில் – ஒரு தலித் என்ற சொறி நாயின் மேல், தலித் அல்லாத ஒருவரின் அனுதாபம் என்ற அளவில் நின்று, பலவீனப்படுத்திவிடுகிறது.

பொதுவாக, மற்ற கவிஞர்களைவிட, தலித் என்று தன்னைப் பிரகடனப் படுத்திக்கொண்டு எழுதுபவர்களுக்குத் தங்களின் கவிதைக்கான சொற்தேர்வு முறையில் கவனம் இருக்க வேண்டும். இந்துத்துவத்தின் தரவுகளான புராண இதிகாச மொழி மற்றும் நவீன பார்ப்பனீய மொழி ஆகியவற்றை நீக்கிவிட்டு; தங்களின் கவிதைக்கான மொழியை, தலித் மொழிகளுக்குள் கண்டெடுத்து மீட்டுக்கொண்டு வர வேண்டும்.

திராவிட இலக்கியங்கள்கூட புராணச் சொல்லாடல்களை எதிர்முரண் (Negative) நிலைப்பாட்டில்தான் கையாண்டன.

படிதாண்டாப் பத்தினியுமல்ல
முற்றுந்துறந்த முனிவனுமல்ல–
போன்று.

ஆனால் இவரது கவிதை மொழி இத்தகைய பதப் பிரயோகங்களை சார்பு நிலைப்பாட்டில் (affirmative) முன் நிறுத்துகிறது.

இவை இவ்வாறிருக்க, இவரின் கவிதை மொழியில் ஆங்காங்கே புதைந்து கிடக்கும் கோபம் கொப்புளங்களாக வெளிப்படுகிறது. இதுவே அவருக்கான பலம். இவரின் அடுத்த தொகுப்பை நிச்சயம் பலமுள்ள தொகுப்பாக எதிர்பார்க்கலாம்.

## மைலாஞ்சி



ஆசிரியர் : *ஹெச். ஜி. ரசூல்*

வெளியீடு : *சரம், 21/77 ஞானியார் வீதி, தக்கலை 629 175*

பக். : *115*, விலை ரூ.*50 (2000)*

**அழகிய பெரியவன்**

அதிகம் எழுதும் கவிஞர்களில் ஒருவர் ஹெச். ஜி. ரசூல். பெரும்பாலான சிறு பத்திரிகைகளிலும் அவரின் படைப்புகள் காணக் கிடைக்கின்றன. செறிந்த வெளிப்பாடு வேண்டி மௌனம் காக்கின்றவர்களும், தன்னிச்சையாய் தொடர் இயக்கத்திலிருப்பவர்களுமாக பலரும் உண்டுதான். ரசூலின் முதல் தொகுப்பான 'ஜன கனமன' துவங்கி இன்றுவரையிலான பன்னிரண்டு ஆண்டுகளிலே அவரின் பிற மூன்று கவிதைத் தொகுப்புகளை விடவும் 'மைலாஞ்சி' ஒரு குறிப்பிடத் தகுந்த தொகுப்பாய் தெரிகிறது.

மிக நீண்ட கால தமிழ் இலக்கிய ஓட்டத்தில் எந்தெந்த அனுபவ உலகங்கள், வாழ்க்கையின் கூறுகள் கலந்திருக்கின்றன என்று அலசினால் சில வெற்றிடங்கள் தென்படும். தலித் வாழ்வுலகம், பெண் வாழ்வுலகம், கிறித்தவ இசுலாமிய வாழ்வுலகம் என தமிழ் மொழி வழங்கும் பரப்பில் அடங்கிய தனித்த அம்சங்களையுடைய மக்கள் கூட்டத்தின் பதிவுகள் சொற்பமே. அதிலும் ஓர் இரும்புத் திரை போன்ற மௌன (பழமையின் பிடிவாதம் என்றும் கூறலாம்) சீலையால் பொதிந்து வைக்கப்பட்டுள்ள இசுலாமியரின் வாழ்வுலகம் கவிதைகளில் இல்லை. மைலாஞ்சி இவ்வகையில் ஒரு இசுலாமிய பண்பாட்டுச் சீலையை விலக்குகிறது.

எந்த மதமும், வழிபாட்டு முறையும், நம்பிக்கையும் வேற்று கலாச்சார பிரதேசங்களில் நுழையும்போது அங்கிருக்கும் அதன் எதிர்மைகளுடன் ஏதோ ஒரு புள்ளியில் கைக்கோர்த்துக் கொள்கின்றன. விளைவாக தத்துவங்களும், ஒழுக்க முறைகளும் கிளை பிரிந்து புதுப் புது வடி


படிப்பகம்

www.padippakam.com



வங்களை மேற்கொள்கின்றது. 'சுதேசி சர்ச்சி', 'சுதேசி இசுலாம்' என்று இன்று அரசியலில் முழங்குவதற்கெல்லாம் ஏற்கனவே இக்கிளை பிரிந்த தத்துவங்களில் விடைகள் இருக்கின்றன.

பிறந்த குழந்தைக்கு சேனத்தண்ணி வைத்தல், தொட்டிலில் குழந்தை உறங்கு கிறபோது சிரித்தால் அதற்குச் சொல்லப்படும் கதை காரணங்கள், குழந்தை வளர்ப்பில் பின்பற்றப்படும் தொன்ம நம்பிக்கை சார்ந்த நடைமுறைகள், விளையாட்டுகள், செவிலி, மந்திரித்தல், ராசி பார்த்தல், கோயிலுக்கு நேர்ச்சைக்கென பால் ஊற்றுதல், விளக்கு வைத்தல், உணவு படைத்தல், பலியிடல், பொங்கலிடல், கோயில்களில் மரம் வளர்த்தல், தீர்த்தம் பருகுதல், தாயத்து, மாந்திரிகம், சாபம் குறித்தான நம்பிக்கைகள் என எல்லா வற்றிலும் இசுலாமுக்கும் இந்துத்துவத்துக்குமான நெருங்கிய தொடர்பு இருப்பதை இந்த நூலின் கவிதைகள் பகிர்ந்துக் கொள்கின்றன. இந்த இணைப்பின் அங்கமாகத் திகழும் தாகா என்கிற வழிபாட்டுத்தலம் கொண்டிருக்கும் பல இணைப்புக் கூறுகளை ஆ. சிவசுப்பிரமணியம் எழுதிய ஒரு சிறு பிரசுரம் விரிவாக சொல்கிறது (விசை வெளியீடு–1). அந்த வரிசையில் *மைலாஞ்சியையும்* சேர்த்துக் கொள்ளலாம். தொகுப்பின் பின்னுரை சொல்வதுபோல – 'தமிழகச் சூழலில் இசுலாமிய தத்துவ அறிவியல் கோட்பாட்டுருவாக்கம், மனிதகுல நேயம், சமத்துவ நோக்கு சார்ந்து இயங்கும் சூபிகளின் கவிதை மொழியில் தென்பட்டன – என்பதை இத் தொகுப்பின் கவிதைகளும் வழி மொழிவதாய் இருக்கின்றன.

தலைப்புக் கவிதையான *மைலாஞ்சி* (மருதாணி) .

**நெஞ்சின் தாள ஓசைகளில் / ஒன்றையொன்று நெருங்கி / உச்சிக்குளிர மோந்து / உயிரில் உயிர் கரையக் கரைய / கணந்தோறும் துளிர்க்கும் /ஒரு கொத்துக் கனவுகள்...**

என்று காதலையும்

**தூங்கிக் கிடக்கும் பிள்ளைகளின் / நழுவும் ரேகைகளில் / சின்னப் பிறையும் பொழுதும்**

என்று குழந்தைகள் மருதாணி இட்டுக கொள்ளும் குதூகலத்தையும் பேசுகிறது. கடல் கடந்த அப்பாவின் ஞாபகங்கள், கடந்த கடந்த கணவனின் தவிப்பு, உறவுகள் தொடர்பான நினைவுகள், இந்து, முஸ்லீம் நண்பர்களின் நட்பை அசைபோடும் இளமைகால மீட்டல், தர்கா, தொழுகை, மதம் சார்ந்த நடைமுறைகள் நம்பிக்கைகள், அல்லாவை துதிக்கும் பக்தி, இசுலாமின் எதிரிகளுக்கான விடை, இசுலாமியப் பெண்களுக்காய் கருணையுடன் பேசும் தன்மை இப்படியாக எல்லா கவிதைகளும் இருக்கின்றன.

**இறைவன் ஆணுமில்லை... பெண்ணுமில்லை... / அவனை யாரும் பெறவுமில்லை / அவன் யாரையும் பெறவு மில்லை (*அல்லாவின் மொழி*)**

என்று ஆண்மொழியிலேதான் பேச முடிகிறது ரதூலால். தொட்டில் சீலை, மைலாஞ்சி, தனி, சந்திப்பின் வதம்,

## "மைலாஞ்சி" எதிரொலி

என் இனிய – கவியரங்க நண்பர் எச். ஜி. ரசூல் அவர்களுக்கு,

கடந்த 12.5.1985லிருந்து 15.10.2000 வரை நாமிருவரும் தமிழ்நாட்டில் பல்வேறு பகுதிகளில், பல்வேறு கவியரங்குகளில் பங்கேற்று கவிதை வாசித்திருக்கிறோம். அந்தக் கவியரங்குகள் நம்மிடையே மலரச் செய்த நட்பின் உரிமையோடு உங்களுக்குச் சில உண்மைகளை எடுத்துரைக்க இந்தத் திறந்த மடலை எழுதுகிறேன். உங்களுடன் அரங்குகளில் கவிதை வாசித்த ஒரு கவிஞனாக யானிருந்தாலும், வெறும் கவிஞனாக இல்லாமல் ஒரு ஆலிமாகவும் இருப்பதால், சன்மார்க்கப் பார்வையில் உங்கள் கவிதை நூல், எந்த அளவுக்கு ஷரீஅத்துடன் மோதுகிறது என்பதைச் சமுதாய மக்களுக்கும் தெரிவிக்கும் நிலையில் உங்களுக்குச் சுட்டிக் காட்ட யான் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம் மாவட்ட மண்வாசனை கமழும் நிலையில் வட்டார வழக்குச் சொற்கள் அதிகமாக வலம் வரும் வண்ணம் உங்களால் அரைக்கப்பட்ட "மைலாஞ்சி" கவிதை நூலை, படித்துப் பார்த்ததும் துடித்துப் போனேன். சமுதாயத்தில் ஊடுருவிய சீர்கேடுகளைச் சீறுவது, கண்மூடிப்பழக்கங்களை மண்மூடச் செய்வது என்பன போன்ற நோக்கில் கவிதையெழுதி – சமுதாயத்தில் ஒரு 'சிந்தனைப் புரட்சி' (?)யை ஏற்படுத்துவதாக எண்ணிக் கொண்டு நீங்கள் அரைத்த மைலாஞ்சி – நம் சமுதாயம் தன் மனமெனும் விரல்களில் பூசி செம்மையெழுகு பெற்றிடத் துணை புரியுமென முதலில் எண்ணினேன். ஆனால் உங்களின் மைலாஞ்சிக் கிண்ணத்தைத் திறந்து பார்த்தபோது தான், அதற்குள்ளே இருப்பது கலப்பற்ற மைலாஞ்சியாக இல்லாமல் ஈமானின் உயிரைப் பறிக்கும் அரளி விதையின் அரவையாக அமைந்திருப்பதை உணர்ந்தேன்.

"ஒரு பெண் நபி ஏனில்லை" (பக்கம் 62)

"ஆகிகா கொடுப்பதற்கு – பெண் என்றால் ஒரு ஆடு ஆண் என்றால் இரண்டு ஆடு – என்பது பாரபட்சம்" (பக்கம் 59) ஆகிய உங்கள் கவிதை வரிகள்

"ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக" வாழ்வோம் இந்த நாட்டிலே எனும் பாரதி பாடலை வேதவரிகளாக மதித்து 'ஈமான் ?' கொண்ட உங்கள் இதயத்தைத் திறந்து காட்டுகிறது.

ஆண் பெண் சமத்துவம் எனும் வறட்டு வேதாந்தம் வாழ்வின் நடைமுறைக்கு சாத்தியமாகுமா ? நிச்சயமாக ஆகாது. ஏனெனில் ஆண் பெண்ணைப் படைத்த ஆண்டவனே, இந்த சமத்துவ வாதத்தை ஏற்கவில்லையென்பது திருகுர்ஆனின் தீர்ப்பாகும். (அதற்காக இஸ்லாம், பெண்களை ஆண்களுக்கு அடிமையாக்கிறது என்பது பொருளல்ல)

"(நபியே) உமக்கு முன்னரும் ஆண்களைத் தவிர (வேறொருவரையும்) நாம் 'வஹி' அறிவித்து தூதராக அனுப்பி வைக்கவில்லை" என்று அருள்மறை குர்ஆன் 12 : 109; – 16 : 43 – 21 : 7; மூன்று இடங்களில் வலியுறுத்திக் கூறுகிறது. "இத்தனை இத்தனை ஆண் நபிகளுக்கு மத்தியில் ஏன் வாப்பா இல்லை ஒரு பெண் நபி!" எனக்கேட்கும் உங்கள் செல்ல மகளுக்கு (பக்கம் 62) திருமறையின் பதிலைப் பளிச்செனச் சொல்லிவிடுங்கள். (பெண் – நபியாக அனுப்பி வைக்கப்பட்டால் எழும் பிரச்சனைகள் எவை யெவை என்பது, தனி விவாதத்திற்குரியது.)

'அகீகா'வில் ஆணுக்கும் பெண்ணுக்கும் மத்தியில் வித்தியாசத்தை சமுதாயம், தனக்குத் தானே ஏற்படுத்திக்கொள்ளவில்லை. இதோ அதற்கான மூல ஆதாரம். அண்ணல் நபி (ஸல்) அருளினார்கள். "ஆண் குழந்தை சார்பில் இரு ஆடுகளும், பெண் குழந்தை சார்பில் ஒரு ஆடும் அகீகா கொடுத்திடுவீர்" (அறிவிப்பாளர் உம்மு குர்ஸு அம்மையார் (ரலி) – தகவல் : திர்மதீ நஸயீ; அபூதாவூது ஆதாரம் மிஷ்காத் – பக்கம் 362, மேலும் மாநபி (ஸல்) பகர்ந்தார்கள். "ஒருவருக்குக் குழந்தை பிறந்து, அக்குழந்தை சார்பில் பலியிட அவர் விரும்பினால் ஆண்குழந்தை சார்பில் இரு ஆடுகளும், பெண் குழந்தை சார்பில் ஒரு ஆடும் பலியிடட்டும்" (அறிவிப்பாளர் : அம்று பின் ஷுஐப் (ரலி) – தகவல் நஸயீ – அபூதாவூது ஆதாரம் மிஷ்காத் பக்கம் 363)...

அல்லாஹ், மொழி கடந்தவன் தான். ஆனால் அவன் அனைத்துலகிற்கும் அனைத்து மொழியினர்க்கும் பொதுவாகத் தன் இறுதி மறையை இனிய அரபியில் அருளியிருப்பதாலும், அண்ணலாரின் மொழியாகவும் அருட்சுவன மொழியாகவும் அல்லாஹ் அமைத்திருக்கும் அரபி மொழியே அல்லாஹ்வின் ஆட்சிமொழி எனக் கொள்வோம். "ஆண் தன்மையும் பெண் தன்மையும் அற்ற என் அல்லாவை – எப்படி நான் அழைப்பேன் என் தமிழில் ? எனக் கேட்கிறீர்கள் (பக்கம் 60) – நம் கவிதைகளுக்கெல்லாம் மூல பிதாவாகிய நம் ஞான மாமேதை பீரப்பா போன்ற பெரு ஞானிகள் எப்படி அல்லாவை அழைத்தார்களோ அப்படி அழையுங்கள்! அதில் தடுமாற்றம் வேண்டாம்...

'ஆலிம் கவிஞர்' தேங்கை ஷறபுத்தீன் மிஸ்பாஹி
அரபி இலக்கிய மொழிபெயர்ப்பாளர், பாண்டிச்சேரி
தக்கலை திருநெறித்தொண்டர்குழு வெளியிட்ட ஒரு துண்டுப் பிரசுரத்தின் சில பகுதிகள்



படிப்பகம்

www.padippakam.com



பெத்தப்பா போன்ற கவிதைகள் நல்ல அனுபவம் தருகின்றன. எனக்கும் உனக்குமானவை, கதறல் ஆகிய கவிதைகள் நேரடியாய் மதவெறி தொடர்பான நிகழ்ச்சிகளைப் பேசுகின்றன. இசுலாம் பெண்களின் மீதான பரிவு அல்லது சார்பு குரலை உயிர்வாழ்தலின் கணங்கள் உள்ளிட்ட சில கவிதைகளில் கேட்க முடிகிறது.

சுமையாக்களின் பெண்ணுறுப்பில் /அம்பெய்து கொல்லும் அபுஜஹில்கள் /படுக்கைதோறும் (*வலை*)

கேஸ் அடுப்பில் கறி / கொதித்துக் கொண்டிருந்தது / முடிக்கணும் வேலையை /தொழுகை முடிஞ்சு வருவதற்குள் (*உள்ளும்புறமும்*)

அய்யூபு ஆம்பிள - முத்தலாக்கு சொன்னதால / புருஷன் பெண்டாட்டி உறவே முறிஞ்சு போச்சு / ஷரீ அத்துல இடமிருக்கு (*வார்த்தை*)

போன்ற இடங்கள் இசுலாம் பெண்களின் வேறுவேறு நிலைகளை சுட்டுபவை. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் எழுதிக் கொண்டிருந்த சித்தி ஜினைதா பேகம், இன்று இசுலாம் பெண்களுக்காக போராட நிற்கும் செரீஃபா போன்றவர்களிடம் மிகக் கடுமையான குரல்கள் இருக்கின்றன. *மைலாஞ்சி*யில் இக்குரல் பச்சாதாபத்துடனேயே நின்று போகிறது.

பால் சார்ந்த, மண் சார்ந்த, மதம் சார்ந்த வாழ்வனுபவங்களைச் சொல்லும் கவிதைகள் செய்கின்ற புலம்பல், பட்டிய லிடுதல், வறட்டு பெருமிதம் பேசுதல், பழமை லயிப்பு போன்ற பாவனைகளே *மைலாஞ்சி*யின் கவிதைகளுக்கும் நேர்ந்திருக்கின்றன. தேவைக்கதிகமான அரபுச் சொற்களை கவிதைகளில் கையாண்டுள்ளதால் அவைகளின் பொருள்தேடி கவிதைகளை அர்த்தப்படுத்திக்கொள்வதற்குள் மிகுந்த ஆயாசம் மேலிடுகிறது. சொற்களிலும் செய்திகளிலும் மட்டுமே கவிதை இல்லை; அது அவைகளைத் தாண்டி நிற்பது. எந்தக் கவிதையும் நிறைவானதொரு கவிதையனுபவத்தை தராமல் நின்று விடுகின்றன. பிரதியில் ரதுலையும் மீறி எழுகின்ற சில எதிரெதிர் குரல்கள் வலுவான இசுலாமியக் குரலால் முடங்கிப் போகின்றன. பின்னுரையில் ரதல் பயமுறுத்துகிற மாதிரியோ, பின் அட்டையில் – '*மைலாஞ்சி* நவீன கவிதைக்குப் பின் நிகழ்ந்துள்ள தமிழ்க் கவிதையின் புதுவித பாய்ச்சலுக்கான குறியீடு'– என்று சொல்கிற மாதிரியோ இத்தொகுப்பில் கருத அதிக இடமில்லை. ■


தமிழுக்கு புதியதொரு பருவ இதழ்

**ஒப்புரவு**

இளவேனில், முதுவேனில், கார், கூதிர், முன்பனி, பின்பனி ஆகிய அறுபருவ இதழாக . . .

தமிழர்தம் மரபுவழித் தொழில் நுட்பம், வரலாறு, அரசியல், மெய்யியல், சமூகவியல், பண்பாடு, சூழலியல், வேளாண்மை, கல்வி, பொருளியல் ஆகிய துறைகளில் செறிவான கட்டுரைகளைத் தாங்கி வெளிவருகிறது.

ஆண்டுக் கட்டணம் உரூ. 100

தொடர்புகளுக்கு :

செ. வேலுச்சாமி, 123, சௌராட்டிரா ஆசிரியர் குடியிருப்பு, பாண்டியன் நகர், அனுப்பானடி, மதுரை - 9

முதல் இதழ்

இளவேனில் பருவ வெளியீடாக . . .


*மௌனத்தின் சிறகடிப்பு*

# ஒரு இரயில் பயணம்

*குமுதம்* 29.3.2001 இதழில் கோணங்கியின் 'பாழி' நாவலுக்கு ரயிலில் நடந்த ஒரு விமர்சனக்கூட்டம் பற்றி இரண்டு பக்க கட்டுரை, சில புகைப்படங்கள், கோணங்கியின் சிறிய பேட்டி ஆகியவை இடம் பெற்றுள்ளன. இந்திய மனதிற்கும் ரயில் பயணத்திற்கும் இடையே ஏற்பட்டுள்ள உறவு நுட்பமும் அதிசயமும் நிறைந்தது. இந்த உறவின் கவர்ச்சியை இலக்கியச் செயல்பாட்டுடன் இணைத்த யோசனை அருமையானது.

*குமுதம்* பேட்டியில் கோணங்கி, அவருடைய எழுத்து,

'மீடியாவிற்கு எதிரான போர். கதை உட்பட எல்லாமே மீடியாவின் பகுதியாகிவிட்டது. எனவே மீடியா தனதாக்கிக் கொள்ள முடியாத ஒரு சொல்லை கதையாக்கியிருக்கிறேன் அல்லது ஒரு கதையை சொல்லாக்கிவிடுகிறேன். இந்த ரசவாத மாற்றத்தை மீடியாவால் கிரகித்துக்கொள்ள முடியாது'

என்று குறிப்பிடுகிறார்.

இந்த விமர்சனக் கூட்டம், அழைக்கப்பட்டவர்களுக்கும் 'பாழி'யைப் படித்தவர்களுக்கும் மட்டுமே என அழைப்பிதழ் அறிவிக்கிறது. சுமார் 30 பேர் கலந்து கொண்டதிலிருந்து இரண்டாவது தகுதி சிறிது நெகிழ்த்தப்பட்டிருக்கலாம் என ஊகிக்கிறேன். சிறு பத்திரிகை ஆசிரியர்கள் யாரும் கலந்து கொண்டதாகத் தெரியவில்லை. இருப்பினும் அழைப்பிதழ் குமுதத்திற்குப் போயிருக்கிறது. நான் அறிந்தவரை வேறு எந்த இலக்கிய கூட்டத்திற்கும் தராத முக்கியத்துவத்துடன் *குமுதத்தில்* இக்கூட்டம் பதிவு செய்யப்பட்டுள்ளது. முன்னர் *குமுதம்* வெளியிட்ட தீபாவளி இலக்கியச் சிறப்பிதழில் கோணங்கிக்கு முக்கியத்துவம் அளிக்கப் பட்டதை இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம்.

நமது கலகக்காரர்கள், குடிமக்கள், போராளிகள் எல்லோரும் வெகுஜன ஊடகங்களுக்கு exoticகான பொருள்களாக மாறி வரும் காலத்தில் இருக்கிறோம். 90களின் கடுமையான இலக்கிய, தத்துவ இயக்கம் *நிறப்பிரிகை, சுபமங்களா, காலச்சுவடு* மற்றும் பிற சிற்றிதழ்கள், *இந்திய டுடே* இலக்கிய மலர்கள், *தினமணி* தமிழ் மணி மற்றும் இலக்கிய மலர்கள் வழி வெகுஜன தளத்தில் ஏற்படுத்திய உடைவை வெகுஜன ஊடகங்கள் பல மாதிரிகளில் எதிர்கொள்கின்றன. கடந்த சில மாதங்களாக குமுதத்தைப் படித்துவரும் வாசகன் தீவிர இலக்கிய உலகைப் பற்றி கீழ்க்கண்ட முடிவுகளுக்கு வந்திருப்பான்.

இலக்கியவாதிகள்

1. வேலையற்ற ஊதாரிகள்
2. அசட்டு லட்சியவாதிகள்
3. குடிகாரர்கள் - குடிப்பதற்காகவே இலக்கியச் சந்திப்புகளை நிகழ்த்துபவர்கள்
4. அவுத்துப் போட்டுவிட்டு ஆடுபவர்கள்
5. குழுச் சண்டைக்காரர்கள்

இந்தப் பதிவுகள் அனைத்திலும் தீவிர இலக்கியத்தைத் தொட்டுக் கொண்டு வெகுஜன கலாச்சாரத்தை உண்டு வாழும் ஜீவன்களின் தீவிர இலக்கிய உலகு மீதான தீராத எரிச்சல் நிலத்தடி நீரைப்போல கசிந்து கொண்டிருப்பதைப் பார்க்கலாம்.

கோணங்கியின் செயல்பாடுகளை 'கோணாங்கி'த் தனங்களாக மாற்றி உள்வாங்குவதில் வெகுஜன ஊடகங்களுக்குப் பிரச்சினை இல்லை. அவர்களுக்கு மிகவும் பிடித்த 'வித்தியாசம்' இதில் இருக்கிறது. போர்?

**கண்ணன்**



படிப்பகம்

www.padippakam.com



# வடு

"அந்த எண்ணம் எனைவிட்டகல நீ தான்அருள்புரிய வேண்டும் பராபரமே" நொய்ம்பைப் பிண்டம் மெல்ல, மெல்ல மேலே எழுந்து சில நிமிடங்கள் இயங்க மறந்து, பின் தொப்பென்று கட்டிலில் விழுந்தது. அசைந்துப் பார்க்க அச்சம் வந்தது. பெருவிரல்கள் ஒன்று சேர்ந்து பிணம் போல் உருவம் அமைத்து அசையாது கிடந்தாள் மல்லிகா. கைவிரல்கள் குளிர்ந்து சொடுக்கிக் கொண்டன. தலைமுடியின் ரப்பர் கழன்று தரையில் கிடந்தது. வியர்த்திருக்க வேண்டும், ஆனால் இல்லை. சீதளமும், உஷ்ணமும் இல்லாதநிலையில் உடல் ஊசலாடியது. மெல்லிய மேல்ச் சொண்டும், தடித்த பருத்த கீழ்ச் சொண்டும் நீர் வற்றி வெடிப்புக் கண்டிருந்தது. நெற்றிப்பொட்டில் மீண்டும் அதே வலி தொடங்கி காதோரம் பரவத் தொடங்கியது. பிணைப்பு விடுத்துக் கால்கள் அகற்ற, தொடைகள் இரண்டும் விண், விண் என்றது. அலைகளுக்கு நடுவில் அகப்பட்டது போல் அந்த முகம் தெளிவற்று அவளைப் பார்த்துச் சிரித்தது. வலித்த இடம் தடவ ஈரம் தெரிந்தது. மெல்லிய பரிச்சயப் பட்ட நாற்றம் நாசியைத் தாக்கியது. குமட்டல் பித்தமாய் வழிந்தது. அசைவுகள் அகன்று மெல்ல, மெல்ல முகம் தெளிவுறத் திடுக்கிட்டாள் மல்லிகா - லண்டன் மாமா.




பெருஞ்சாலை கடக்கையில் வேகமாக வந்த குப்பை வண்டிச் சில்லுக்குள் சில நிமிடங்கள் அகப்பட்டுச் சிதைந்து கால்களில் கண்களும், காதும் பொருந்தியது போல் இரத்த வெள்ளத்தில் நெடுந்தூரம் தூக்கி எறியப்பட்ட உடல் கண்டெடுக்கப்பட்டு எரித்துச் சாம்பலாக்கி எத்தனை வருடங்கள் ஆகிவிட்டன. மீண்டும் இங்கு எப்படி? விசா எடுத்துப் பிண்டம் கனடா வந்து விட்டது போலொரு அதிர்வு அவளுக்குள். விடியற்காலைச் சொப்பனத்தின் விசேஷம் அறிந்ததால் பயம் கௌவ ஒரு மூக்கின் துவாரம் அழுத்தி, மூச்சிழுத்து மறு மூக்கால் சுவாசம் விட்டாள். சவர்க்காரம் போட்டு உடல் கழுவி, உடை மாற்றித் தன்னைத் தீவிரம் செய்தாள். ஆனாலும் பாழாய்ப் போன மனதில் மீண்டும் அதே கேள்வி. அஞ்சலி ஏன் கட்டில் நனைத்தாள்?

பத்து வயது. வயதுக்கு மீறிய வளர்ச்சி. குளிக்க வார்க்கும் போது கை பட சட்டென்று தட்டிவிட்டு மிரள மிரள முழித்துக் கொண்டு தலைகுனிந்து நின்ற விதம். சிக்கெடுக்க முடியாமல் முடிச்சுக்கள் நீண்டு கொண்டு போனது. "உன்னுடைய அந்தரங்க உறுப்பில் உன் சம்மதம் இன்றி யாராவது தொடும் பட்சத்தில் உனக்கு நம்பிக்கை உள்ள வயது வந்த ஒருவரிடம் நீ முறையிட வேண்டும்" பாடசாலையில் புகட்டப் பட்டது. "உன் சம்மதம் இன்றி" இந்த வரிகள் வைத்தியத்திற்காகக் கொடுக்கப்பட்டவை. நான் சம்மதம் கொடுத்தேனா? தெரியவில்லை ஆனால் தடுக்கவில்லை. இது எதில் சேர்த்தி? மல்லிகா குழம்பினாள். நேசனை வேறு இடம் பார்க்கச் சொல்ல வேண்டும். காரணம் கேட்டால் என்ன சொல்வது? என் காலைக் கனவும், அஞ்சலியின் கட்டில் நனைப்பும் போதுமானதா? சின்னத் தம்பி. பாவம் அப்பா, அம்மாவை பலி கொடுத்துவிட்டு அண்ணாதான் கதியென்று பல இலட்சங்கள் கொடுத்துக் கப்பலேறி பல மைல்கள் தாண்டித் தஞ்சம் புகுந்திருக்கிறான். அவனை என் சொப்பனம் சொல்லி விரட்டி அடிப்பதா? சாடை மாடையாக என்று தொடங்கிக் கொஞ்சம் பச்சையாகவே கேட்டும் பார்த்தாகி விட்டது. அஞ்சலி அசங்கவில்லை.

சுமதி ரூபன்
கனடா

"மாடு, மாடு என்ன நாத்தமடி உன்ர மூத்திரம். சின்னஞ் சிறுசெண்டால் கழுவிக் காயப் போட்டுப் பாவிக்கலாம் ரெண்டு கழுதை




படிப்பகம்

www.padippakam.com



வயசாகுது. உந்த வயசில காத்தால எழும்பி குசினி மெழுகி தேத்தண்ணி வைச்சு அப்பனைக் கமத்துக்கு அனுப்பி இருக்கிறேன் நான். இது இப்பத் தான் பாய் நனைக்குது." விடாத புறுபுறுப்போடு தண்ணி மோந்து கவிழ்த்துப் பாய் அலம்பும் பாட்டி நினைவிற்கு வந்தாள். 'மல்லிக் குட்டி இரவு ஒண்டுக்குப் போக வேணுமெண்டால் என்னை எழுப்பு" அம்மா ஆதரவு தருவதாக எண்ணிக் கூறினாள். ஒருவரும் கேட்கவில்லை அவள் பாய் நனைத்த காரணத்தை. ஆனால் மல்லிகா அஞ்சலியிடம் துருவித் துருவிக் கேட்கிறாளே. "தெரியாதம்மா... ஸொரிம்மா... இனிமேல் நனைக்க மாட்டன்." இவளுக்கும் பிடித்திருக்கோ? தனக்கு வேண்டிய பதில் வராததால் மல்லிகாவிற்குக் கோபம் வந்தது.



நான் சொல்லவில்லை. நான் அப்பா அம்மாவிடம் சொல்லவில்லை... பயமா? இல்லை எனக்கும் பிடித்திருந்ததா? பிடித்திருந்தால் இரவில் நடுநடுங்க ஏன் நான் பாய் நனைக்க வேண்டும்? தவறு என்று மட்டும் புரிந்தது, ஆனால் சொல்லும் துணிவு வரவில்லை. பக்கத்து வீட்டு வாசி முதுகில் குத்த அழுவதிலும் முந்திக் கொண்டு அம்மாவிடம் ஓடிச்சென்று கோள் சொல்ல முடிந்த எனக்கு, லண்டன் மாமா தன்னை என்னுடன் நோக நோகப் பிணைத்துக் கொள்வதை மட்டும் சொல்ல முடியவில்லை... "உன் அந்தரங்க உறுப்பில் யாராவது உன் சம்மதம் இன்றி" இந்தப் பாடம் எனக்குச் சொல்லித் தரப்படவில்லை... அம்மா கேட்டிருந்தால்... ஒரே ஒருமுறை அம்மா கேட்டிருந்தால்... ஓவென்று அழுது கொட்டித் தீர்த்திருக்கலாம்... அம்மாவிற்கு கால் வைக்கும் இடமெல்லாம் குழந்தைகள். நேரம் கிடைக்காமல் போயிருக்கலாம்... சரி கடைசி நானாவது லண்டன் மாமா வீடு ஓடியோடிச் செல்வதைத் தவிர்த்திருக்கலாம்.

லண்டன் மாமா வீட்டிற்கு மல்லிக்குட்டி ஓடியோடிச் செல்ல பல காரணங்கள் இருந்தன. அந்த ஊரிலேயே ஹோலிங் பெல் கொண்ட ஒரே வீடு அவர்களுடையது. கதவு பரப்பித் திறந்தாலும் தொங்கித் தொங்கி பெல் அடிப்பதில் சுவாரசியம் நிறையவே இருந்தது. மாமி வந்து "என்னடி மல்லிக்குட்டி" என்று கேட்ட பின்பும் அவள் தொங்குவதை விடமாட்டாள். பகல் நித்திரை கலைந்து லண்டன் மாமா எழுந்து வந்தாலும் சிரிப்பாரே தவிரத் திட்ட மாட்டார். வீட்டிற்குள் குஷன் போட்ட இருக்கை. மல்லிக்குட்டி வீட்டில் ஒரேயொரு மரஇருக்கை அப்பா இருப்பதற்கு, இல்லாவிட்டால் யாராவது வந்தால் இருப்பதற்கு. குஷன் போட்ட பஞ்சுக் கதிரையில் ஏறி நிண்டு துள்ளுவாள். மாமிக்குக் கோபம் வந்தாலும் "பாவம் சின்னப் பிள்ளை விடு" என்பார் லண்டன் மாமா சிரித்தபடியே. கை நிறைய நீளம் அகலம் வட்டம் சதுரம் என்று லண்டன் சொக்லேட்டை அவர்கள் வீட்டிற்குப் போகும் போதெல்லாம் கொடுப்பார்.

ரூபவாஹினியில் தமிழ்ப் படம் போடுகிறார்களாம். லண்டன் மாமா வீட்டில் கூட்டம் கூடிவிடும். வறுத்த கச்சான், பொரித்து, உப்பு மிளகாய்த்தூள் தூவிய பருப்பு சகிதம் ரீ.வி முன்னால் பெண்களும் சிறுவர்களும் இருந்துவிட லண்டன் மாமா மட்டும் பின்னால் கதிரையில் நிமிர்ந்து இருந்து ராஜா போல் ஆஜானுபாகுவாய்க் காட்சி அளிப்பார். லண்டன் மாமாவிடம் தனக்கு நெருங்கிய தொடர்பெனபதை சிறுமிகளிற்குத் தெரியப்படுத்த மல்லிக்குட்டி துடிப்பாள். "மல்லிக் குட்டி மாமாவிற்குத் தண்ணி கொண்டு வா" என்ற குரல் கேட்டால் போதும் எப்போது கேட்பார் என்று காத்திருந்தவளாய் பெருமை பொங்கும் முகத்துடன் ப்ரிஜ்ஜைத் திறந்து தண்ணீர் எடுத்து வருவாள். வேண்டுமென்றே தானும் கொஞ்சம் குடித்தும் வைப்பாள். கண்கள் அகல அவளையே வைத்த கண் வாங்காமல் ஏக்கத்துடன் பார்க்கும் சிறுமிகளை மல்லிக் குட்டி கண்டு கொள்ள மாட்டாள். லைட் அணையும். படம் தொடங்கும். லண்டன் மாமா மல்லிக் குட்டியின் கை பிடித்திழுத்து தன் மடியில் இருத்திக் கொள்வார். மெல்ல, மெல்ல அவர் கைகள் அவள் உடல் அளையும். பின்னர் அவள் பிஞ்சுக் கைபிடித்து தன்னுடல் துளாவுவார். மல்லிக் குட்டி நெளிவாள். கவலையால் நெஞ்சடைக்கும். ஆனால் பொறுத்துக் கொள்வாள்.

"ச்சீ. நாசமாப் போக என் தலையில இடி விழ... அப்பவே அம்மாவிடம் சொல்லி லண்டன் மாமாவை உண்டு இல்லை எண்டு பண்ணியிருக்க வேணும்" மல்லிகா வெம்மினாள். தான் சொல்லியிருந்தாலும் அம்மா நம்பியிருப்பாளா? கைச் செலவுக்கும் கறி உப்புக்கும் அவள் அடிக்கடி அவர்கள் வீட்டை நம்பி இருப்பவள். அம்மாவுக்கு எப்போதுமே லண்டன் மாமா மேல் ஒரு வெட்கம். முகம் பார்த்துக் கதைக்கமாட்டாள் அவள். ஒருவேளை அம்மாவுக்கும் அவருக்கும்... ச்சீ... இருக்காது.

எனக்கும் பிடித்திருந்ததா? இல்லை, பயத்தால் எழுந்த சம்மதமா? எட்டு வயதில் உணர்ச்சிகளுக்கு உடல் ஏங்குமா? பல வருடங்களாகப் பலவிதமாகச் சிந்தித்தாகிவிட்டது. பதில் கிடைக்கவில்லை. கூச்சம் விட்டுப் பிறருடன் அலசவும் பிடிக்கவில்லை. எனக்கு மட்டுமா இந்த நிலை; இல்லாவிட்டால் பல பெண்களுக்கும் இருக்குமா இப்படிப்பட்ட அனுபவங்கள். பார்க்கும் இடங்களெல்லாம் பிண்டங்கள் பிணைப்பதற்கு அலைவதாக அவளுக்குப்பட்டது. தன் சாபம், வேதனைதான் லண்டன் மாமா ரோட்டில் சிதைந்து போகக் காரணமோ?

அஞ்சலி கொஞ்ச நாளா விந்தி



படிப்பகம்

www.padippakam.com



விந்தி நடப்பது போலப்பட்டது மல்லிகாவிற்கு. தொடைகள் வலிக்கிறதோ? மல்லிகாவிற்கு நேசன் மேல் வெறுப்பு வந்தது. இவனை எப்படியும் கெதியாக வீட்டை விட்டு அகற்ற வேணும். தீர்மானமானாள். ஆனால் எப்படி? முடிந்த காரியமா? "அண்ணி, அஞ்சலி ரெடியா?" கேட்டபடியே நேசன் வந்தான். இவனுக்கென்ன அஞ்சலி மேல் இவ்வளவு அக்கறை. கார் வைத்திருப்பதால் மகளை அலுங்காமல் குலுங்காமல் பாடசாலையில் விட்டுவரும் பொறுப்பை நேசனிடம் ஒப்படைத்திருந்தார் அவன் அண்ணா. அலுங்காமல் குலுங்காமல் விட்டு வருகிறானா? இல்லை, குலுக்கி எடுக்கிறானா என் செல்லத்தை. மல்லிகா பல்லு நெருமினாள். இரண்டு பேர் உழைப்பை நம்பி வீடு வாங்கியாகி விட்டது. காருக்கும் மாசம் மாசம் கட்டுக்காசு. இனி வேலையை விட்டு விட்டு வீட்டில் நிற்பது என்பது நடக்காத காரியம். "நேசன் நல்லவன். அவன் லண்டன் மாமாவின் மறு உருவமல்ல" மந்திரமாய் மீண்டும், மீண்டும் உச்சரித்தாள் மல்லிகா.

அவனை நம்பியே ஆக வேண்டும். அஞ்சலியைப் பாடசாலைக்கு கூட்டிச்செல்வது, வருவது, சாப்பாடு கொடுப்பது என்று பல பொறுப்புகள் நேசனிற்கு. முகம் தூக்காமல் ஓடியோடிச் செய்கிறான். அண்ணாவிற்கு நன்றிக் கடனா, இல்லாவிட்டால்...? மீண்டும் வேதாளம் முருங்க மரத்தின் மேல் ஏறிக் கொண்டது.

அப்பா நோய்வாய்ப்பட்டு ஆஸ்பத்திரியில் படுத்தவிட சாப்பாட்டுப் பார்சலுடன் லண்டன் மாமா அலைந்தது ஞாபகத்திற்கு வந்தது. துணைக்கென்று அவர் மல்லிக் குட்டியையும் அழைத்துச் செல்ல மறந்ததில்லை. ஆஸ்பத்திரி சென்று இறங்கு முன்பே சைக்கிளின் முன் சுட்டில் இருக்கும் மல்லிக்குட்டியின் முதுகுப் புறச்சட்டை தேய்ந்து தேய்ந்து ஈரம்பட்டிருக்கும். பிள்ளை பெற்றுக் கொள்ள என்று மாமி போய்விட லண்டன் மாமாவிற்கென்று விதம், விதமாகச் சமைத்து மல்லிக்குட்டியிடம் கொடுத்துவிடுவாள் அவள் அம்மா. வெறும் வீடு. கேட்பதற்கு நாதியில்லை. விதம் விதமாய்ச் சொக்லேட்டுக்களைக் கைகளில் திணிப்பார் லண்டன் மாமா. ஒன்று, இரண்டை அவள் சாப்பிட்டு முடிக்கு முன்பே வினோதமான நிறத்தில் ஜூஸ் கொண்டு வந்து அவள் அருகில் வைப்பார். பொறுமையாக அவள் முடிக்குமட்டும் காத்திருந்து விட்டு அலாக்காக மல்லிக் குட்டியைத் தூக்கி உயரப் போட்டு விளையாட்டுக் காட்டுவார். அவள் வாய் விட்டுச் சிரிப்பாள். மெதுவாக அறைப்பக்கம் நகர்ந்து கட்டிலில் தொப்பெனப் போடுவார். வலிக்குப் பயந்து கண்களை இறுக மூடிக்கொள்வாள் மல்லிக் குட்டி. லண்டன் மாமாவை எதிர்க்க ஏனோ அவளிற்கு அன்று மனம் வரவில்லை. இருதயம் படபட என அடித்துக் கொள்ள அழுவதற்கும் பயம் வரும். லண்டன் மாமாவின் கனம் உடலில் சரியும்... மூச்சுத் திணறும்... வியர்வை மணக்கும், தொடைகள் வலிக்கும். பின்னர் ஈரமாகும். மாமா ஓய்ந்து போவார். மல்லிக் குட்டியின் முதுகு தடவி, தீபாவளிக்கு அவளிற்குத் தர இருக்கும் லண்டன் சட்டை பற்றிக் கூறுவார். ஈரத் துவாய் கொண்டு அவள் உடலைத் துடைப்பார். மணம் அகன்று உடல் சுத்தமாகும். அவளை ஊஞ்சலில் இருத்தி ஆட்டுவார். குழாய் கொண்டு ரோஜாவிற்கு தண்ணீர் பாய்ச்ச வைப்பார். மல்லிக் குட்டியின் முகத்தில் நோயின் சாயல்போய் சிரிப்பு வரும் வரையில் அவளை அங்கேயே வைத்திருப்பார். போனவளை என்ன இன்னும் காணோமே வீட்டில் தேடியது கிடையாது.

தன் கண் முன்னாலேயே அஞ்சலியை நேசன் அழைத்துக் கொண்டு போக பிரமை பிடித்தவள் போல் அமர்ந்திருந்தாள் மல்லிகா. தொலைபேசி அழைத்தது. லண்டனில் இருந்து மாமி. மாமாவின் நினைவு நாளாம். விக்கி விக்கி அழுதாள் "எவ்வளவு நல்ல மனுஷன். ஒருத்தருக்கும் ஒரு தீங்கும் செய்ததில்லை. இப்படிப்பட்ட சாவு வந்திட்டுதே" ஒவ்வொரு வருடமும் இதே புலம்பல்தான். மல்லிகா கண் கலங்கினாள். வெளியே சோவென்று மழை. ரோட்டுக் கரையோரம் நெளிந்தபடியே அலையலையாய் நீரோட்டம் இரும்புக் குழாய்க்குள் விழந்து கொண்டிருந்தது. "மல்லிக் குட்டி என்னைக் காப்பாத்து" கத்தியபடியே கைகளை நீட்டிய லண்டன் மாமா அலையோடு அள்ளப்பட்டு இரும்புக் குழாய்க்குள் முகம் சிக்கிச் சிதைந்து காணாமல் போனார். மல்லிகா அசையாது இருந்தாள்.

ஓவியங்கள் : எபனேசர் சுந்தர் சிங்

(சுமதி ரூபன் கனடாவில் வசிப்பவர். சிறுகதைகளும், கவிதைகளும் எழுதி வருகிறார். நாடகத்தில் ஆர்வம் உள்ளவர்)


**தமிழினி**


342, டிடிகே சாலை
ராயப்பேட்டை
சென்னை 600 014

| | ரூ. |
|---|---|
| **கவிதைகள்** | |
| சிலைகளின் காலம் *சுகுமாரன்* | 15 |
| விண்ணளவு பூமி *தேவதேவன்* | 25 |
| அனிச்சம் *கலாப்ரியா* | 20 |
| ஆம் நண்பர்களே அது தான் நடந்தது *மகாதேவன்* | 20 |
| அமுதபருவம் வலம்புரியாய் அணைந்ததொரு சங்கு *பூமா. வாசுகி* | 20 |
| கலாப்ரியா கவிதைகள் | 120 |
| இன்றைய மலையாளக் கவிதைகள் | 20 |
| **நாவல்கள்** | |
| சித்தார்த்தன் *ஹெர்மன் ஹெஸ்ஸே* | 45 |
| பின் தொடரும் நிழலின் குரல் *ஜெயமோகன்* | 290 |
| புயலிலே ஒரு தோணி கடலுக்கு அப்பால் *ப. சிங்காரம்* | 180 |
| கன்னியாகுமரி *ஜெயமோகன்* | 50 |
| கூள மாதாரி *பெருமாள் முருகன்* | 90 |
| ரத்த உறவு *யூமா. வாசுகி* | 120 |
| **சிறுகதைகள்** | |
| தூயோன் *கோபி கிருஷ்ணன்* | 40 |
| கன்னிவாடி *க. சீ. சிவகுமார்* | 50 |
| நுகம் *அ. எக்பர்ட் சச்சிதானந்தம்* | 60 |
| தீட்டு *அழகிய பெரியவன்* | 50 |
| பூமிக்குள் ஓடுகிறது நதி *சு. வேணுகோபால்* | 45 |
| ஆதண்டார் கோயில் குதிரை *கண்மணி குணசேகரன்* | 50 |
| **விமர்சனம்** | |
| புதுமைப்பித்தனும் கயிற்றரவும் *ராஜமார்த்தாண்டன்* | 60 |
| புதுமைப்பித்தனும் ஜெயகாந்தனும் *வேதசகாயகுமார்* | 60 |
| புதுமைப்பித்தன் எனும் பிரம்மராக்ஷஸ் *ராஜ் கௌதமன்* | 50 |
| **Marooning Thickets** *Marimuthu* | 40 |




படிப்பகம்

# பெரிய மீடியா மீது எனக்கு எதிர்பார்ப்பு கிடையாது



## ஞாநி

பாரதிய வித்யார்த்தி பரிஷத் என்ற மாணவர் அமைப்பிலிருந்து வீட்டுக்கு ஓயாமல் இரவெல்லாம் தொலைபேசி மிரட்டல்கள் வந்தன. 'கெட்ட' வார்த்தைகளில் வசவுகள். என் கையை உடைக்கப் போவதாகவும், நடமாடவிடாமல் செய்துவிடப் போவதாகவும் மிரட்டல்கள்.

I

*கண்ணன் : தமிழ் இதழியலில் புதிய முதலீடும் புதிய இதழ்களின் வருகையும் ஏன் இல்லை ? புதிய முதலீட்டுடன் வந்த 'விண்நாயகன்' நிறுவனத்தினர் கோடிக்கணக்கில் இழந்ததாகச் சொல்லப்படுவது உண்மையா ? 'விண்நாயகன்' தோல் விக்கு என்ன காரணம் ?*

நெருக்கடி நிலைக்குப் பிறகு எண்பது களில் இதழியல்துறை வர்த்தக ரீதியில் பெரிதாகத் தழைக்கும் சூழல் ஏற்பட் டது. அப்போது *விகடனிலிருந்து* வெளியேறிய மணியனும், கதிரிலி ருந்து வந்த சாவியும் தொடங்கிய பத்திரிகைகள் அடுத்த இருபதாண்டு களில் பலமடைந்தன. இவற்றுக்குப் பின்னால் முறையே அ.தி.மு.க. சார் பான பெரும் முதலாளிகளின் முதலீ டும், நடுத்தர வகுப்பை எட்ட விரும் பிய தி.மு.க. தலைவர்கள் கலைஞர், முரசொலி மாறன் ஆகியோரின் முனைப்பும் முதலீடும் இருந்தன. மற்றபடி தமிழக பெரு வணிகர்களின் கனவு எப்போதுமே சினிமாவாகத் தான் இருந்திருக்கிறது. அதில்தான் தொடர்ந்து முதலீடு செய்கிறார்கள். தவிர தொண்ணூறுகளில் தொலைக் காட்சி, செயற்கைகோள் தழைக்க ஆரம்பித்த தருணம். புதிய தலை முறை இளைஞர்கள் பலரும் எழுத்து, வாசிப்பு முதலிய ஆர்வங்களைவிட காட்சி சாதன ஆர்வங்கள் அதிகம் உள்ளவர்களாக இருப்பதால், திறமை யும் உழைப்பும் உடைய பலர் இந்தத் துறைக்கு வரவில்லை. கடந்த சுமார் முப்பதாண்டு கல்வி முறையும் முன் எப்போதையும்விட ஆங்கிலம் சார்ந்த தாக இருப்பதால், நடுத்தர வர்க்க இளை ஞர்கள் பலருக்கு தமிழ் சார்ந்த எந்தத் துறையிலும் அக்கறைகள் இல்லை. நான் *சுட்டி விகடன்* பொறுப்பேற்று அதை வெளிக்கொண்டு வந்த அதே சமயத்தில்தான் சேலம் விநாயகா மிஷனைச் சேர்ந்த டாக்டர் சரவண னால் *விண்நாயகன்* தொடங்கப்பட் டது. *விகடனிலிருந்து* வெளியேறி யிருந்த கார்ட்டூனிஸ்ட் மதனிடம் அதற்கான பிராஜெக்ட் ரிப்போர்ட் பெறப்பட்டது. *விகடனிலிருந்து* வில கிய மூத்த அரசியல் நிருபர் ராவ் அதன் ஆசிரியராகப் பொறுப்பேற்றார். *விண்நாயகன்* இதழுக்கு இவர்கள் இருவரும் செல்வதற்கு முன்பாக, *விகடனில்* இருந்தபோது இவர்களு

www.padippakam.com



டைய வடிவமைப்பிலும் பொறுப்பிலும் தொடங்கப்பட்ட *விகடன் பேப்பர்* போதிய வரவேற்பும் விற்பனையும் இன்றி மூடப்பட்டுவிட்டது. இதே இருவரின் பொறுப்பில் அதற்கு 17 ஆண்டுகளுக்கு முன்னால் தொடங்கப்பட்ட *ஜூனியர் விகடன்* வர்த்தக ரீதியில் பெரும் வெற்றி பெற்ற பத்திரிகை.

ஒரு பத்திரிகையின் வெற்றி தோல்விக்கு ஓரளவுதான் அதன் பின்னணியில் உள்ள நிறுவனம், அதன் பண பலம், விற்பனையாளர் வட்டம் எல்லாம் உதவ முடியும். அவை எல்லாம் இருந்ததால் *ஜூனியர் விகடன்* வென்றது. அவை இருந்தும் *விகடன் பேப்பர்* தோற்றது.

அப்படியானால் இவை தவிர வேறு ஏதோ ஒன்றும் தேவைப்படுகிறது. அதுதான் பத்திரிகைக்கான concept *ஜூனியர் விகடன்* concept. ஓரளவு அன்றைய காலத்தின் தேவையை நிரப்ப வந்தது. முதல் மூன்று ஆண்டுகளில் concept மெல்ல மெல்லவே ஒரு ஒழுங்குக்கு வந்தது. அந்த சரியான conceptஐ ஜெயிக்க வைக்க சுமார் நான்கு வருடங்கள் *விகடன்* ஆசிரியரும் உரிமையாளருமான பாலசுப்பிரமணியன் ஏராளமான பொருட் செலவு செய்ய வேண்டியிருந்தது என்பதை *ஜூனியர் விகடனின்* ஆரம்ப ஆண்டுகளில் அதில் நான் பணி புரிந்தவன் என்பதால் எனக்கு நேரடியாகவே தெரியும்.

*விகடன் பேப்பரின்* concept அடிப்படையிலேயே தவறாக இருந்தது. சென்னை நகரில் மாலை பேப்பர் என்பது செய்திகளை பிரதானப் படுத்தி மட்டுமே செய்தாக வேண்டிய தொழில். அதைச் செய்யாததால் *விகடன் பேப்பர்* தோற்றது.

*விண்நாயகன்* பிரச்சினையும் அது தான். அதற்கான concept சரியாக இல்லை. *Outlook* மாதிரி தமிழிலும் ஒரு தரமான பத்திரிகையாக அது வரவேண்டும் என்பது டாக்டர் சரவணனின் கனவு. ஆனால் அச்சு நேர்த்தியும் பல வண்ண லே-அவுட் கவர்ச்சியும் இருந்தனவே தவிர, உள்ளடக்கம் எந்த வாசகருக்காக என்பது பற்றிய தெளிவின்றி குழப்பமாக இருந்ததால் அதை வாசகர்கள் நிராகரித்துவிட்டனர்.

*சுட்டி விகடனை* விற்பனை ரீதியிலும் வாசகர் வரவேற்பிலும் ஓரளவு நிலை நிறுத்தியபிறகு, இனி முழுநேரப் பணிகள் செய்ய என் உடல் நிலையும் மனநிலையும் ஒத்துழைக்காததால் *விகடன்* நிறுவனத்திலிருந்து விலகினேன். அப்போது என்னுடன் நீண்ட காலப் பழக்கம் உள்ள ராவ் என்னை *விண்நாயகன்* இதழுக்கு வருமாறு அழைத்தார். பகுதி நேர ஆலோசகராகச் சென்றேன். மெல்ல சின்னச் சின்னதாக மாற்றங்கள் செய்யத் தொடங்கினோம். அதற்கு முன்னர் ஓராண்டு காலமாக மாதம் தோறும் சுமார் எட்டு லட்சம் ரூபாய் வரை நஷ்டம் ஏற்பட்டு வந்த நிலையில் இதழுக்குப் பொருளாதார நெருக்கடி இருந்தது. இந்த நஷ்டத்தை இனி மாதம் இரண்டு லட்சம் ரூபாய்களுக்குள்ளாக இருக்கும்படி அலுவலகச் செலவுகளைக் கட்டுப்படுத்த இயலுமா என்று பதிப்பாளர் கேட்டார். அப்படிச் சுருக்கப்பட்ட லோ-பட்ஜெட்டில் தன்னால் இதழை நடத்த இயலாது; அது ஞாநியால்தான் முடியும் என்று கூறினார் ராவ். அவர் விலகிக் கொண்டு *குமுதத்துக்குச்* சென்றார். நான் *விண்நாயகன்* ஆசிரியர் பொறுப்பேற்றேன்.

அந்தத் தருணத்தில் இதழ் விற்பனை சுமார் 15 ஆயிரம் பிரதிகள் வரை இருக்கும் என்று எனக்குக் கூறப்பட்டது. ஓராண்டுக்குள் அதை 25ஆயிரமாக்கினால் தொடர்ந்து நடத்த இயலும் என்று சொன்னார்கள். அடுத்த ஆறேழு இதழ்களில், *நாயகனுக்கென்று* ஒரு தனி கேரக்டரை உருவாக்க முயற்சித்தோம். வாசகர்கள் வரவேற்பு இருந்தது. ஆனால் ஜனவரி மத்தியில் விற்பனை விவரங்கள் பற்றிய உண்மைத் தகவல்கள் தெரிய வந்தபோது, அதிர்ச்சி ஏற்பட்டது. நான் சேர்ந்தபோதே இதழ் விற்பனை சுமார் 5 ஆயிரம் பிரதிகள்தான் இருந்திருக்கிறது. அடுத்த ஆறேழு இதழ்களில் இன்னொரு ஆயிரம் பிரதிகள் வரை உயர்ந்திருக்கிறது. அவ்வளவு தான். இந்த விற்பனை அளவில் தொடர்ந்து இன்னும் ஓராண்டு நடத்தினாலும் இதழைக் காப்பாற்ற முடியாது என்பது தெளிவு. எனவே இதழ் மூடப்பட்டது. சுமார் இரண்டு கோடி ரூபாய் வரை மொத்த இழப்பு என்று கூறப்படுகிறது.

*விண்நாயகனின்* தோல்விக்கு - தெளிவான editorial concept இல்லாமல் நடத்தியது, ஊதாரித்தனமான நியாயமற்ற அலுவலகச் செலவுகள், தவறுகளைத் திருத்துவதில் ஏற்பட்ட பெரும் நிர்வாகக் காலதாமதம், சில நபர்கள்மீது தகுதிக்கு மீறிய அபரிமிதமான நம்பிக்கை - எனப் பல காரணங்கள் உள்ளன. ஒரு வேளை ஆரம்பக் கட்டத்திலேயே நான் பொறுப்பேற்றிருந்தாலோ, அல்லது பொறுப்பேற்ற சமயத்தில் *விண்நாயகன்* என்று வாசகரிடையே மதிப்பிழந்த பெயரை கைவிட்டுவிட்டு வேறு பெயரில் புதிதாக இதழை நடத்தியிருந்தாலோ இதழ் வெற்றி பெற்றிருக்கக்கூடும்.

*க. : விஷுவல் மீடியா தமிழ் இதழ்களை பாதித்திருக்கிறதா ?*

விஷுவல் மீடியா தரும் அனுபவமும் பத்திரிகை தரும் அனுபவமும் அடிப்படையில் வேறுவேறானதுதான் இல்லையா...? ஆனால் தொலைக்காட்சி பரவலாக எல்லா வீடுகளுக்கும் வந்ததும் அதை எப்படி எதிர்கொள்வது என்று பத்திரிகைத் துறையினருக்குத் தெரியவில்லை. அதனால்தான் தொலைக்காட்சி சம்பந்தமான விஷயங்களைப் பத்திரிகையில் அதிகமாகத் தர ஆரம்பிக்கிறார்கள்.

*மனுஷ்ய புத்திரன் : குமுதம் கூடத் தற்போது அரசியல் மற்றும் பிற விவகாரங்களில் அதிக கவனம் செலுத்தத் தொடங்கி இருக்கிறார்களே...*

அப்படியும் ஒரு மாற்றம் நடக்கிறது. *குமுதத்தில்* சமீப காலமாக நடக்கும் மாறுதல்கள் நல்லதிற்கா கெட்டதிற்கா என்று இப்போது சொல்ல முடியாது. ஆனால் *குமுதத்தின்* நீண்ட வரலாற்றைப் பார்க்கும் போது அதன்மீது எனக்கு எந்தவித நம்பிக்கையும் கிடையாது. *குமுதம், ஆனந்த விகடன்* என்று எந்த பெரிய மீடியா மீதும் எனக்கு அதிக எதிர்பார்ப்பு கிடையாது. அடிப்படையில் எல்லா தரப்பு வாசகர்களையும் திருப்திப் படுத்த வேண்டும் என்ற நோக்கம் அவர்களுக்கு இருக்கிறது.

இதனால் அவற்றில் கிடைக்கும் ஜனநாயகப்பூர்வமான இடத்தைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்களுடன் தொடர்ந்து உறவாடுவதன் மூலமே இது சாத்தியம். விஷுவல் துறையுடன் பத்திரிகைத்துறை போட்டிபோட்டு ஜெயிக்கத் தேவை இல்லை . . . விஷுவல் மீடியாவில் ஒரு செய்தியை அறிமுகப்படுத்த மட்டுமே முடியும். அதைப் பற்றிய விரிவான அலசலை பத்திரிகையில்தான் சிறப்பாகச் செய்ய முடியும். இது தான் பத்திரிகைத்துறையின் பலம். இதை யாரும் பயன்படுத்திக் கொள்வதில்லை. நாங்கள் *ஜூனியர் போஸ்ட்டில்* அதைத்தான் செய்து பார்த்தோம். அது வெற்றிகரமாக நடந்தது. 92ல் நான் *ஜூனியர் போஸ்ட்டின்* பொறுப்பை ஏற்கும்போது *ஜூனியர்*

**நவீன மாற்றங்களுடன் தன்னை பொருத்திக் கொள்ளத் தயங்காதவர் முரசொலி மாறன்**



படிப்பகம்

www.padippakam.com

**சம்பந்தம் அளித்த பூரண சுதந்திரம் போல் அதற்கு முன்பும் பின்னரும் நான் பத்திரிகை துறையில் பெற்றதில்லை.**

விகடனில் வரும் விஷயங்களின் எஞ்சிய பகுதிகளை, அதில் இடநெருக்கடி காரணமாகப் போட முடியாதவற்றை வெளியிடும் ஒரு பத்திரிகையாகத்தான் இருந்தது.

*க.: இப்போது பத்திரிகையோடு சேர்ந்த இணையத் தளங்கள் இருக்கின்றனவே, அது போல இல்லையா...*

ஆமாம்... *ஜூனியர் போஸ்ட்*க்கான விஷயங்கள் எப்படி இருக்க வேண்டுமென்று நான் நினைத்தேன் என்றால், சமகால அரசியல் நிகழ்வுகளை உடனுக்குடன் வெளியிடும் பத்திரிகையாக *ஜூனியர் விகடன்* இருக்க வேண்டும். உதாரணத்திற்கு சட்டசபையில் ஒரு எம். எல். ஏ. செருப்பு வீசினார் என்றால் அவரைச் சந்தித்து பேட்டி கண்டு வெளியிடும் பொறுப்பை *ஜூனியர் விகடன்* பார்த்துக் கொள்ள வேண்டும். அதே சமயம் ஒரு எம்.எல்.ஏ. ஏன் சட்டசபையில் செருப்பு வீசுகிறார்... அதற்கு என்ன தேவை வந்தது? அதற்கான சமுதாயக் காரணங்கள் என்ன? இவை பற்றி விரிவாக அலசி ஆராயும் பணியை *ஜூனியர் போஸ்ட்* செய்ய வேண்டும் என்று முடிவு செய்தோம். அந்த அணுகுமுறை வெற்றிகரமாகச் செயல்படவும் செய்தது. ஒரு வருடம் இப்படி வெற்றிகரமாக நடந்தது. *ஆனந்த விகடனில்* குஷ்பு பற்றி கவிதைப் போட்டி நடத்தி வெற்றி பெற்றவருக்கு குஷ்புவுடன் விருந்து சாப்பிட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. விகடனில் அந்த விஷயம் வெளியான அதே வாரம் *ஜூனியர் போஸ்ட்டில்* 'என்று தணியும் இந்த குஷ்பு மோகம்' என்று ஒரு கட்டுரை, ஒரு ஆர்டிஸ்ட்டைச் சுற்றி ஏன் ஒரு cult உருவாகிறது? அந்த பினாமினனுக்குப் பின்னிருக்கும் உளவியல் காரணங்கள் என்ன என்று உளவியல் நிபுணரிடம் கருத்துக்கள் கேட்டுப் பிரசுரித்திருந்தோம். அதுவும் வெளியானது. அதுவும் வரவேற்கப்பட்டது. மக்களுக்கு இதை ஏற்றுக் கொள்வதில் எந்தப் பிரச்சனையும் இல்லை. தீவிரமான விஷயங்களுக்கு என்றுமே மதிப்பும் தேவையும் இருக்கிறது என்பதைத் தான் காட்டுகிறது.

*க.: பின் ஏன் எதுவும் தொடர்ந்து வளராமல் போய்விடுகிறது...?*

தீவிரமானவற்றை பெருவாரியான வாசகருக்கு ஏற்ற விதத்தில் எளிமையாக எழுதும் பத்திரிகையாளர்கள் குறைவு என்பது ஒரு காரணம். தவிர நிர்வாகத்தினர் அதை விரும்ப வேண்டுமே...

*ம. பு: வெற்றிகரமான ஒன்றை நிர்வாகத்தினர் வேண்டாம் என்று சொல்வார்களா என்ன?*

எல்லா வெற்றிகரமான விஷயங்களையும் விரும்புவார்கள் என்று சொல்ல முடியாதே... மக்கள் இடதுசாரிப் பார்வையுடைய பத்திரிகைகளை விரும்பினால் எல்லா பத்திரிகை நிர்வாகிகளும் இடதுசாரிகளாக மாறிவிடுவார்களா என்ன? இடதுசாரிக் கட்சிகள் ஆட்சிக்கு வந்தால்கூட அந்த ஆட்சியை எப்படி கவிழ்க்கலாம் என்று யோசிப்பார்களே தவிர தங்களை மாற்றிக்கொள்ள மாட்டார்கள்.

*ம. பு: ஜூனியர் போஸ்டில் இருந்து நீங்களாகவேதான் விலகினீர்களா...?*

ஆமாம். செய்ய வேண்டியதைச் செய்தாயிற்று என்று தோன்றியது. ஒரு பணியை எப்போதும் நானே செய்து கொண்டிருக்க வேண்டுமென்று நான் நினைக்க மாட்டேன். ஒரு குழுவை பயிற்றுவித்து அவர்கள் தயாரானதும் நான் விலகி வேறு விஷயங்கள் செய்யப் போய்விடுவேன். அப்போது நான் தொலைகாட்சியில் சிறுவர் நிகழ்ச்சி தயாரிக்கச் சென்றேன். சுரேஷ்பால், இரா. ஜவஹர் ஆகியோரிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு நான் போய்விட்டேன். பிறகு அவர்கள் இருவரும் விலகினார்கள். பிறகு இதழ் வேறு விதமாக மாறி கடைசியில் நிறுத்தப்பட்டது. *சுட்டி விகடன்* ஒரு மாற்று சிறுவர் இதழாக உறுதியாக நிலை நிறுத்தப்பட்டபிறகு நான் வெளியே வந்துவிட்டேன். அங்குள்ள டீம் தொடர்ந்து அதை ஓரளவு வெற்றிகரமாகவே நடத்திக் கொண்டிருக்கிறது.

*ம. பு.: புதிதாக ஆரம்பிக்கப்படும் ஒன்று அதன் பலனைத் தர ஆரம்பிப்பதற்குள் பாதியிலேயே நீங்கள் விட்டுவிட்டுப் போய்விடுவதாக இதை எடுத்துக் கொள்ளலாமா?*

அப்படிச் சொல்ல முடியாது. என் பணி மாற்று கட்டமைப்புகளை வடிவமைத்தல் மட்டுமே. வடிவமைக்கப்பட்ட பின் அது தானாகவே தொடர்ந்து வர வேண்டும். நான் முன்னெடுத்த விஷயங்கள் எல்லாமே பொருளாதார ரீதியாக பிறரைச் சார்ந்தவைதான். அவர்கள் அதைத் தொடராமல் போவதற்கு என்னைக் குறை சொல்ல முடியாது. வெற்றிகரமானதைக்கூட பல்வேறு காரணங்களுக்காக அவர்கள் கைவிடலாம். நான் அங்கு இருப்பதால் மட்டுமே அது தொடர்ந்து நடந்துவிடும் என்றும் நான் நம்பவில்லை. அது ஒருவிதமான இல்யூஷன்தான். எந்த நிர்வாகத்துக்கும் சில இயல்புகள் இருக்கின்றன. அதை மாற்றிக் கொள்ளச் சொல்லி நான் அவர்களை வற்புறுத்த முடியாது. அதுபோல் எனக்கென்று சில வழிமுறைகள் இருக்கின்றன. அதை நானும் மாற்றிக் கொள்ளமாட்டேன். தனியாக என்னால் எந்த நிறுவனத்தையும் சாராமல் பெரிய அளவில் எதையும் செய்ய முடியாது என்பதால் ஒத்த கருத்துடைய நிறுவனங்களுடன் கருத்தொற்றுமை உள்ளவரையில் போய்ப் பணிபுரிகிறேன்.

*ம.பு.: தமிழில் புலனாய்வு இதழ்களின் செயல்பாடு பற்றிய உங்கள் கருத்து என்ன?*

தமிழில் *Investigative journalism* என்பது சிறப்பாக நடைபெற்றதாக நான் கருதவில்லை. மூன்றே மூன்று புலனாய்வுகள்தான் குறிப்பிட்டுச் சொல்லும்படியாக இருக்கின்றன. உசிலம்பட்டி பெண் சிசு கொலைபற்றி *ஜூனியர் விகடனில்* சௌபா எழுதியது. இரண்டாவது, ஆட்டோ சங்கர் விவகாரத்தில் *நக்கீரனின்* பங்கு. மூன்றாவது வீரப்பன் பிரச்சனையில் ஆரம்ப காலகட்டத்தில் *நக்கீரனின்* செயல்பாடுகள். ஏனெனில் காவல்துறையினரால் பிடிக்க முடியாத நிலையில் காட்டிற்குள் பதுங்கி இருக்கும் ஒரு குற்றவாளியை சந்தித்து அவரது கருத்துக்களை பதிவு செய்தது என்பது குறிப்பிட வேண்டிய விஷயம் தான். இதுபோல் சில விஷயங்களைத்தான் குறிப்பிட முடியும்.

*க.: ஜெயலலிதா ஊழலில் நக்கீரனால் பெறப்பட்ட தகவல்களை இதில் சேர்க்க முடியாதா?*

இந்தியாவில் ஊழலைப் பொறுத்தவரை பெரிதாக புலனாய்வு எல்லாம் செய்யத் தேவையில்லை. ஒருவர் சிக்கினால் அவருக்கு எதிராக இருப்பவர்கள் தாமாகவே எல்லாத் தகவல்களையும் தந்துகொண்டே இருப்பார்கள். போபார்ஸ் பீரங்கி ஊழலில் அந்த ஆர்டர் கிடைக்காமல்போன ப்ரெஞ்சு கம்பெனி எல்லா தகவல்களையும் ஆர்வமாக தந்தது. அவ்வளவுதான். அதில் பெரிதாக எதுவும் செய்யத் தேவையில்லை. புலனாய்வு எனும் போது எல்லா தரவுகளையும் நீங்களே தேடிக் கண்டுபிடிக்க வேண்டியிருக்கும். தமிழில் இருக்கும் பத்திரிகைகளுக்கு அப்படித் தீவிரமாக ஒரு


படிப்பகம்

www.padippakam.com



நபரை அதற்கென்றே பணியில மர்த்தி, மூன்று நான்கு மாதங்கள் அவரைத் தகவல்கள் சேகரிக்க வைத்து அதை பரிசீலித்து வெளியிடும் பொறுமையும் பண பலமும் இல்லை. எதைப் புலனாய்வு செய்ய வேண்டும் என்பது எந்த காரணத்திற்காக நீங்கள் பத்திரிகைத் துறையில் இருக்கிறீர்கள், எந்தக் கொள்கைகள் சார்ந்து இருக்கிறீர்கள் என்பதைப் பொறுத்துதான் முடிவு செய்யப்படும். இங்குதான் பத்திரிகைத் துறையில் இருப்பவர்களுக்கு அப்படியான கொள்கைப் பிடிப்போ வேறெதுவுமோ கிடையாதே. எனவே இன்வெஸ்டிகேட்டிவ் ஜர்னலிசம் இங்கு வளரவில்லை. சுவாரஸியமான அக்கப்போராக அது குறுகிவிட்டது. பரபரப்பிற்காக, பொழுது போக்கிற்காக எழுதப்படுகிறது. இதுபோன்ற அணுகுமுறை சின்னக்குத்தூசி போன்றவர்களைக்கூடப் பாதித்திருக்கிறது. வீரப்பன் விவகாரம் பற்றி வாஸந்தி ஒரு கட்டுரை எழுதியிருந்தார். அதற்கு சின்னக்குத்தூசி பதில் எழுதுகிறார்: 'வாஸந்தி ஒரு பாட்டி. அவரை ஏன் இன்னும் *இந்தியா டுடே*யில் வைத்துக் கொண்டிருக்கிறார்கள்' என்று. எவ்வளவு தரக்குறைவாக போய்விட்டது பாருங்கள். வாஸந்தியின் கருத்துக்களை நீங்கள் மறுக்க வேண்டும். அதை விட்டுவிட்டு இப்படி எழுதுவது என்பது மிகவும் மோசமானது இல்லையா...? பதிலுக்கு யாரேனும் அதே வயசுடைய சின்னக்குத்தூசியும் தாத்தாதானே, அவரை ஏன் நக்கீரன் கோபால் வேலைக்கு வைத்துக் கொண்டிருக்கிறார் என்று எழுத முடியும். விவாதம் எப்படிப் போய்விடும் பாருங்கள். தமிழ்ச் சூழலில் இந்த சிக்கல்கள் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன.


*க.: சின்னக்குத்தூசி பற்றிய உங்கள் மதிப்பீடு என்ன?*

சின்னக்குத்தூசி பழகுவதற்கு மிகவும் இனிமையான மனிதர். நானும் அவரும் ஒன்றாக *எதிரொலி*யில் பணியாற்றியிருக்கிறோம். என்னைவிட 15 வருடங்கள் மூத்தவராக இருப்பார். எனக்கு விவரம் தெரிய ஆரம்பித்ததற்கு முந்தைய கால கட்டத்தின் அரசியல் செயல்பாடுகள் - பத்திரிகைகளில் வருமே அவை அல்ல - அதிகாரத்தின் உள்ளறைகளில் நடைபெறுமே அவை பற்றி என்னிடம் பகிர்ந்து கொள்வார். சின்னக்குத்தூசியை நடுநிலை விமர்சகர் என்று நான் கூறமாட்டேன். அடிப்படையில் நான் இடதுசாரிப் பார்வை கொண்டவன்தான், ஆனாலும் அவர்கள் தவறு செய்தால் அதை விமர்சிக்கவும் செய்வேன். அந்த வகையில் நான் நடுநிலையான விமர்சகன்தான். ஆனால் சின்னக்குத்தூசி அவர் சார்ந்து நிற்கும் தி.மு.க. மீது எந்த விமர்சனத்தையும் உள் வட்டத்தில்கூட வைக்க மாட்டார். அது எதிரியை பலப்படுத்தி விடும் என்று அவர் கருதுவதாகத் தோன்றுகிறது. நான் அப்படிக் கருதவில்லை. திமுகவிற்கு எதிராகவும் இடதுசாரிக் கருத்துக்களுக்கு, பெண்ணியக் கருத்துக்களுக்கு எதிராகவும் செயல்பட்டவர்களில் 'சோ'வை முக்கியமாகக் குறிப்பிடலாம். அவருக்கு எதிர்நிலையில் அவர் அளவுக்கு வெகுசனத் தளத்தில் செயல்பட்டவர்கள் தமிழகத்தில் அதிகம் பேர் இல்லை. அந்த வகையில் சின்னக்குத்தூசியின் பணி போற்றத்தகுந்த ஒன்றுதான். நான் என்ன நினைக்கிறேன் என்றால், திமுகவும் திராவிட இயக்கமும் தங்களை சுய பரிசீலனை செய்துகொள்ள வேண்டிய அவசியம் தற்போது இருக்கிறது. சின்னக்குத்தூசி போன்றவர்களின் திமுக மீதான அக்கறையான விமர்சனங்கள் அதற்கு அவசியம் தேவை என்று கருதுகிறேன்.

## II

*க.: நாடகத்துறையுடன் உங்களுக்கு எப்படி தொடர்பு ஏற்பட்டது?*

செங்கல்பட்டில் எங்கள் வீட்டுக்கு அருகில் தர்மராஜா கோவில் என்றொரு கோவில் இருந்தது. அந்தக் கோவில் மண்டபத்தில் வழக்கமாக கூத்து நடைபெறும். தர்மராஜா கோவில் என்பதே பாண்டவர்களை அடிப்படையாகக் கொண்டதுதான். ஆற்காடு பகுதியில் திரௌபதி அம்மன் கோவிலாக இருக்கும். எங்கள் பகுதிகளில் தர்மராஜா கோவிலாக இருக்கும். சிறுவயதில் என்னை வெகுவாகப் பாதித்தது அந்தக் கூத்துக்கள்தான். அதற்கு அடுத்ததாக எனது நாடக ஆர்வத்திற்குக் காரணமாக இருந்தது என் தாய் மாமா. அவர் ஒரு லாரி டிரைவர். அவருக்குப் படிப்பு வரவில்லை. அவர் படிக்க விரும்பவும் இல்லை. பள்ளிப் படிப்பை பாதியில் விட்டுவிட்டு லாரி டிரைவராக ஆகிவிட்டார். பெரிய குடிகாரரும்கூட. என் அப்பா ஒவ்வொரு இடத்திலும் வேலை வாங்கித் தருவார். இவர் குடித்துவிட்டு வேலையைத் தொலைப்பார். அவருக்குச் சிலம்பம் நன்றாகத் தெரியும். தசரா திருவிழா சமயம் புலி வேஷம் போடுவார். செங்கல்பட்டில் மைசூருக்கு அடுத்தபடியாக தசரா வெகு விமரிசையாகக் கொண்டாடப்படும். உடம்பெங்கும் பெயிண்ட் பூசிக்கொண்டு என் மாமா புலி வேஷம் போடுவதைப் பார்க்கும்போது பிரமிப்பாக இருக்கும். பிராமணக் குடும்பத்திலிருந்து ஒருவர் புலி வேஷம் போடுவது என்பது அன்றைக்குப் பெரிய ஆச்சரியம்தான். அவருடைய நண்பர்களில் பெரும்பாலோனோர் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்தவர்களும் தலித்துகளும் தான். சிறு வயதிலிருந்தே அவர் எனக்கு வசீகரமானவராகத் தெரிந்தார். அவர் மூலமாகவும் எனக்கு கூத்துக்கள் நாடகங்கள் அறிமுகமாயின. அதோடு நான் படித்த செங்கல்பட்டு செயின்ட் ஜோசப் பள்ளி எனக்கு நாடகத்தில் ஆர்வம் ஏற்படப் பெரிதும் காரணமாக இருந்தது எனலாம். டைரக்டர் ஸ்ரீதர், சித்ராலயா கோபு முதலானோர் படித்தது அந்தப் பள்ளியில்தான். நடிகர் நாசர் எனக்கு சில வருடங்கள் ஜூனியர். அந்தப் பள்ளியில் அனைத்துப் பிரிவு மாணவர்களும் நாடகம் போட வேண்டும். அதில் சிறப்பாக நடித்தவர்களை வைத்து ஆண்டு இறுதியில் நாடகம் நடத்துவார்கள். நான் முதன் முதலாக நாடகத்தில் நடித்த வேடமே பத்திரிகையாளர் வேடம்தான். அந்த நாடகம் எனக்கு நன்றாக நினைவிருக்கிறது. ஒரு செய்தி, ஒவ்வொருவர் மூலமாகப் போகும்போது எப்படியெல்லாம் மாற்றமடைகிறது என்பதை அடிப்படையாகக் கொண்ட நகைச்சுவை நாடகம் அது. அதில் ஒருவர் மாடிப்படியில் இருந்து தவறி விழுந்ததில் லேசாக அடிபட்டிருக்கும். அந்தச் செய்தி ஒவ்வொருத்தர் வழியாக மிகைப்படுத்தப்பட்டுக் கொண்டே போகும். கடைசியில் ஒரு பத்திரிகை நிருபர், மாடியில் இருந்து விழுந்த நபரிடமே போய் அவர் இறந்து போய்விட்டாராமே என்று கேட்பதாக முடியும். அந்த பத்திரிகை நிருபராக நடித்தது நான்தான்.





படிப்பகம்

www.padippakam.com



அதன் பிறகு கிறிஸ்தவக் கல்லூரியில் சேர்ந்தபோதும் நாடகங்களுடன் எனக்கு தொடர்பு இருந்தது. பூர்ணம் விஸ்வநாதன் முதல் பரிதிமாற் கலைஞர் வரை எழுதிய நாடகங்களை நடத்தியிருக்கிறோம்.

*க.: மாற்று நாடகத்துடனான பரிச்சயம் எப்படி ஏற்பட்டது...?*

சிறுபத்திரிகை வாசிப்பு ஒரு காரணம். அசோகமித்திரன்தான் என்னை முத்துசாமியை சந்திக்கச் சொன்னார். அப்போது கூத்துப் பட்டறையின் செயலாளராக வீராச்சாமி இருந்தார். கூத்துப் பட்டறையின் அப்போதைய இலக்கு அழிந்து வரும் கூத்துக் கலையை மீட்டெடுத்தல் என்பதாக இருந்தது. மாக்ஸ் முல்லர் பவன் புல்வெளிகளில், அல்லயன்ஸ் வளாகத்தில் என புரிசை கண்ணப்ப தம்பிரானின் கூத்துக்கள் நடத்தப்பட்டு வந்தன. வீராச்சாமி சில முக்கியமான கேள்விகளை எழுப்பினார். கூத்தை ஏன் மீட்டெடுக்க வேண்டும்? அதன் நிலப்பிரபுத்துவக் கூறுகளில் இருந்து அதைப் பிரித்து எடுக்க முடியுமா? அப்படி எடுக்கப்படும் கூத்து என்னவாக இருக்கும்? என்று சில கேள்விகளை முன்வைத்தார். *பிரக்ஞை*யில் அது பற்றி விரிவான விவாதம் நடந்தது. அப்போது காந்திகிராமத்தில் பேராசிரியர் ராமானுஜம் மாற்று நாடக முயற்சிகளில் ஈடுபட்டிருந்தார். பட்டறை ஒன்றுக்கு ஏற்பாடு செய்திருந்தார். அந்தப் பட்டறையில் கூத்துப் பட்டறை சார்பாக ஓவியர் கிருஷ்ணமூர்த்தியும் நானும் பங்கேற்றோம். முத்துசாமி, நடிப்பையே தனது வெளியீட்டு வடிவமாகக் கொண்டு முழு நேரமாக அதில் ஈடுபடக்கூடியவர்களை வைத்தே புதிய நாடகங்களை நடத்த வேண்டும் என்ற கொள்கையுடன் இருந்தார். இத்தனை காலம் கழித்துப் பார்க்கும்போது அவர் தன் கருத்தில் உறுதியாக இருந்து சாதித்துக் காட்டியிருக்கிறார் என்றுதான் தோன்றுகிறது. என்னுடைய கருத்து வேறுபட்டது. ஓரளவுக்கு கவனம் பெற்றிருக்கும் எழுத்துத் துறையைச் சேர்ந்தவர்களுக்கே அதை நம்பி ஜீவிப்பது சிரமமாக இருக்கும் போது, நாடகத்தை நம்பி, அதுவும் மாற்று நாடகத்தை நம்பி ஒருவர் ஜீவிப்பது என்பது நடைமுறையில் மிகவும் கடினமான ஒன்று என்று நான் நினைத்தேன். எனவே அமெச்சூர் நாடக அரங்கை நிர்மாணிப்பதுதான் அப்போது சாத்தியம் என்று நினைத்து *பரீக்ஷா*வை ஆரம்பித்தேன். இந்திரா பார்த்தசாரதியின் *போர்வை போர்த்திய உடல்கள்*, முத்துசாமியின் *நாற்காலிக்காரர்*, அம்பையின் *பயங்கள்* போன்ற நாடகங்களை நடத்தினோம். அசோகமித்திரன் கூட *போர்வை போர்த்திய உடல்கள்* நாடகத்தில் நடித்திருக்கிறார். மாணவராயிருந்த டாக்டர் ருத்ரன் பின்னணி இசைக் குழுவில் இருந்தார். இப்படி நண்பர்கள் அனைவரும் சேர்ந்துதான் நாடகங்கள் நடத்தினோம். அரசியல் இயக்கங்களோடு தொடர்புடைய நண்பர்களும் எனக்கு இருந்தார்கள். அக்னிபுத்திரன், பா.செயப்பிரகாசம், வீராச்சாமி, கே. எஸ். ராஜேந்திரன், மறைந்த திரு கே. வி.ராமசாமி, திருச்சி சாமிநாதன், வண்ணநிலவன், பூமணி போன்ற நண்பர்கள் அரசியல் ரீதியான கருத்துகளைச் சொல்ல நாடக வடிவத்தை உபயோகப்படுத்த வேண்டும்; நாடகத்தை மக்களிடம் கொண்டுசெல்ல வேண்டும் என்று *வீதி* நாடக அமைப்பை உருவாக்கினார்கள். *பரீக்ஷா*வும், *வீதி*யும் ஒரே வருடத்தில்-1978ல்-ஆரம்பிக்கப்பட்டன. *வீதி*யில் எல்லோரும் சேர்ந்து நாடகங்கள் போட்டோம். சென்னை மெரினா கடற்கரையில் ஒரு வாரம் விட்டு ஒரு வாரம் ஞாயிற்றுக்கிழமைகளில் கண்ணகி சிலை அருகில், காந்தி சிலை அருகில், உழைப்பாளர் சிலை அருகில் நாடகங்கள் நடத்தினோம். அப்போதுதான் கோ.ராஜாராம் மொழிபெயர்த்த பாதல் சர்க்காரின் நாடகம் அன்னம் வெளியீடாக வந்தது. *பரீக்ஷா*வில் பாதல் சர்க்கார் நாடகங்களை அரங்கேற்றினோம்.

*வீதி* மற்றும் *பரீக்ஷா* குழுக்களில் சிறுவயதிலிருந்தே நாடகத்துடன் பரிச்சயம் இருந்தது எனக்கு மட்டும்தான். பெரும்பாலானோர் வேறு துறைகளின் மீதான விமர்சனங்களை உடையவர்களாக, அதனால் நாடகத் துறைக்கு வந்தவர்களாக, இருந்தனர். வீதியில் நடத்தப்பட்ட முதல் நாடகம் நான் எழுதியது. அக்னிபுத்திரன் ஆசிரியராக இருந்த நந்தனம் கலைக் கல்லூரியில் நடிக்கப்பட்டது. குசேலர் கதையை parody செய்து நவீன குசேலர் என்று வேலையில்லாத் திண்டாட்டம் முதலான விஷயங்களைச் சொல்ல அந்த நாடகத்தை உபயோகித்திருந்தோம்.

*ம. பு.: உங்களது நாடகங்களுக்கு எத்தகைய வரவேற்பு இருந்தது...?*

*வீதி* நாடகங்களுக்கும் சரி, *பரீக்ஷா* நாடகங்களுக்கும் சரி, நல்ல வரவேற்பு இருந்தது. மாற்று நாடக முயற்சிகளிலேயே எந்தவித சபாவின் தயவையோ, ஸ்பான்சரின் தயவையோ நாடாமல் மக்களிடம் இருந்து வசூலாகும் தொகையை வைத்தே நாடகத் தயாரிப்புச் செலவை ஈடுகட்டிய ஒரே குழு *பரீக்ஷா*வாகத்தானிருக்கும். அதுவும் தொடர்ந்து நான்கு வருடங்களுக்கு. இதுபோன்ற விஷயங்கள் தொடர்ந்து வளர முடியாமல் போனதற்கான காரணம் இது போன்று பல அமைப்புகள் ஒரே நேரத்தில் இயங்கவில்லை என்பதுதான்.

*ம. பு.: கூத்துப் பட்டறை அப்போது இருந்ததே...?*

கூத்துப்பட்டறையில் அப்போது கூத்தை அழியாமல் பார்த்துக் கொள்ளும் முயற்சியில் மட்டுமே அதிக கவனம் செலுத்தி வந்தனர். புரிசை கண்ணப்ப தம்பிரானின் கூத்துக்களையே அதிகம் நிகழ்த்தி வந்தனர். *பரீக்ஷா* போல் இரண்டு மூன்று குழுக்கள் ஒரே நேரத்தில் இயங்கி இருந்தால் ஒரு கணிசமான பார்வையாளர் கூட்டத்தை உருவாக்கியிருக்க முடியும்.

*ம. பு.: உங்களுடைய பார்வையாளராக யார் இருந்தனர்...?*

*பரீக்ஷா*வில் அதைத் தெளிவாக பிரகடனமே செய்திருந்தோம். எங்களுக்கு அடித்தட்டு மக்களின் மீது அக்கறை இருக்கிறது. ஆனால் நாங்கள் அடித்தட்டு மக்களின் மத்தியில் போய் நாடகங்கள் போடவில்லை. வாழ்க்கை பற்றியும், நாடகங்கள் பற்றியும் நடுத்தட்டு மக்களுக்கு இருக்கும் போலியான கருத்துக்களை உடைப்பதுதான் *பரீக்ஷா*வின் நோக்கமாக இருந்தது. சபா நாடகக்காரர்கள் 70களைத் தங்கள் பொற்காலமாகச் சொல்வதுண்டு. அந்த மத்திய தர வர்க்கத்தினரை அவர்களது போலியான மயக்கத்திலிருந்து வெளியே கொண்டு வரவேண்டுமென்றுதான் நாங்கள் *பரீக்ஷா*வை ஆரம்பித்தோம். அதை எங்களால் ஓரளவுக்கு வெற்றிகரமாகச் செய்யவும் முடிந்திருந்தது.

*ம. பு.: ஒவ்வொரு நாடகத்திற்கும் எவ்வளவு பார்வையாளர்கள் வருவதுண்டு?*

அதிகபட்சமாக 500பேர் வந்ததுண்டு. சராசரியாக 300க்குக் குறையாமல் வருவதுண்டு. மியூசியம் தியேட்டரில்தான் பெரும்பாலான நாடகங்களை நடத்தினோம். மியூசியம் தியேட்ட

*விண்நாயகனில் சுமார் இரண்டு கோடி ரூபாய் மொத்த இழப்பு*



படிப்பகம்

www.padippakam.com



ரின் அன்றைய வாடகை 175ரூபாய் தான். இப்போது 4500 ஆக இருக்கிறது. 1978ன் 175 என்பதற்கு இன்றைய 4500 எந்தவிதத்தில் பார்த்தாலும் சமமில்லை. நாடகங்களுக்கான டிக்கெட் விலையை நிர்ணயித்ததிலும் ஒரு கொள்கை வைத்திருந்தோம். பொதுவாக 10, 20, 50 என்றுதான் டிக்கெட்கள் நிர்ணயிக்கப்படுவதுண்டு. ஒருவரது வாங்கும் சக்தியை வைத்து அவரது ரசனையை மதிப்பிடுவதை நாங்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. சிலருக்கு 50 ரூபாய் தருவதற்கான வசதி இருக்கும்; ஆனால் அவரது ரசனை சுமாராக இருக்கும். சிலருக்கு 2 ரூபாய்தான் தர வசதி இருக்கும்; ஆனால் அவரது ரசனையும் ஆர்வமும் போற்றத்தகுந்த ஒன்றாக இருக்கும். பாதல் சர்க்கார்கூடச் சொல்வதுண்டு: நாடகத்திற்கும்



பணத்திற்குமான உறவை முதலில் முறிக்க வேண்டும் என்று. மேடையில் நடத்தப்பட்டதால் *பரீக்ஷா*வால் அப்படி முற்று முழுதாகப் பணத்துடனான உறவைத் துண்டிக்க முடிந்திருக்கவில்லை. இருந்தாலும் எங்களால் முடிந்த முயற்சியாக டிக்கெட் விலையை ஒரே அளவினதாக அதாவது 2 ரூபாயாக வைத்திருந்தோம். இரண்டு ரூபாய் கொடுத்து டிக்கெட் எடுப்பவர் எங்கு வேண்டுமானாலும் உட்கார்ந்து பார்க்கலாம். முதலில் வருபவர்களுக்கு முன் பக்கத்து இருக்கைகள் கிடைக்கும். சற்று தாமதித்து வருபவர்கள் பின்புற இருக்கைகளில் அமர்ந்து கொள்ள வேண்டி வரும். ராணி சீதை ஹாலில் நாடகங்கள் நடத்தியபோதும் இதே பாணியைத்தான் பின்பற்றினோம். 300 பேர் வந்தால் 600 ரூபாய் வசூலாகும். அரங்க வாடகை 175 போக மீதித் தொகை பிற தயாரிப்புச் செலவுகளுக்கு போதுமானதாக இருக்கும்.

*க.: உங்களது திருமணம் நாடக மேடையிலா நடந்தது?*

78ல் *பரீக்ஷா* ஆரம்பிக்கப்பட்டபோது வைத்தியநாதன், நடராஜன் என்ற இரு நண்பர்கள் அதில் அதிக ஈடுபாட்டுடன் பங்கெடுத்துக் கொண்டிருந்தனர். அவர்களின் தங்கைதான் நான் திருமணம் செய்துகொண்ட ஏ. எஸ். பத்மாவதி. வைத்தியநாதன் குடும்பத்தினருக்கு இலக்கியத்தில் நல்ல ஆர்வம் உண்டு. பத்மா ஜர்னலிசம் படித்தபோது என் அப்பாவையும் என்னையும் ஆலோசனைகளுக்காக சந்திப்பார். அப்போதிருந்தே எங்களுக்குள் நல்ல பழக்கம் இருந்தது. பத்மாவிற்கு நாடகங்களிலும் நல்ல ஆர்வம் இருந்தது. 1983ல் நாங்கள் திருமணம் செய்துகொள்வது என முடிவு செய்தபோது எப்படி நடத்துவது என்பது பற்றிப் பேசினோம். பொதுவாக தனிப்பட்ட முறையில் நாம் கொண்டாடும் எல்லா விசேஷங்களுக்கும் அடிப்படை நோக்கம் நண்பர்கள், உற்றார் உறவினர்கள், இவர்களுடன் மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொள்ளுதல் என்பது தானே... எனவே எங்களது திருமணத்தைக் கொண்டாட பாதல் சர்க்காரின் *தேடுங்கள்* நாடகம் நடத்த முடிவு செய்தோம். அனைவருக்கும் அனுமதி இலவசம் என்று விளம்பரப்படுத்தினோம். நாடகம் ஆரம்பிப்பதற்கு முன்னால் மேடையின் ஒரு பக்கத்திலிருந்து நான் உள்ளே நுழைந்தேன். இன்னொரு பக்கத்திலிருந்து பத்மா வந்தார். அரங்கின் நடுவில் ஒரு ஸ்டூலில் இரண்டு மாலைகள் வைக்கப்பட்டிருந்தன. நாங்கள் இருவரும் மாலை மாற்றிக் கொண்டு அரங்கிலிருந்தவர்களைப் பார்த்து இன்று முதல் நாங்கள் இருவரும் கணவன் மனைவியாகிறோம் என்று அறிவித்துவிட்டு கீழே இறங்கிவிட்டோம். நான் நேராக அன்றைய நாடகத்தில் போடவேண்டிய வேடத்திற்கான ஒப்பனைக்காக பின் அறைக்குச் சென்றேன். பத்மா பார்வையாளர்கள் இருக்கையில் சென்று அமர்ந்தார். இப்படியாக நடந்தது எங்கள் திருமணம். அன்று நாடகத்திற்கு வந்திருந்தவர்களுக்கு எங்கள் திருமண விருந்தாக தேநீர் அளித்தோம். மியூஸியம் ஹாலில் நடந்த ஒரே. திருமணம் எங்களுடையதாகத்தானிருந்திருக்கும். அதே போல திருமணத்தை நாங்கள் முறித்துவிட்டதையும் ஒரு பொதுமேடையில் அறிவிக்கிற வாய்ப்பு அண்மையில் கிடைத்தது. *மா* என்ற பெயரில் பத்மா எழுதியுள்ள கட்டுரைத் தொகுப்பு நூலை நான் பதிப்பித்து வெளியிட்ட விழாவில் எங்கள் நட்பைக் காப்பாற்றிக் கொள்வதற்காக திருமண உறவை மூன்றாண்டுகள் முன்பே முடித்துக் கொண்டதைத் தெரிவித்துக்கொண்டோம்.

III

*ம. பு.: உங்களைப் பெரிதும் பாதித்த ஆளுமை யார் யார்?*

என்னை சிறு வயதிலிருந்தே பெரிதும் பாதித்தது பாரதிதான். இன்று வரை எனக்கு பெரும் உந்துசக்தியாக இருப்பதும் பாரதிதான். என் அப்பா நேருவின் ஜனநாயக சோஷலிச முற்போக்குக் கொள்கைகளில் ஆழ்ந்த ஈடுபாடு உடையவர். அவருக்குக் கடவுள் நம்பிக்கை உண்டு. ஆனால் மதச் சடங்குகளைப் பெரிதாக பின்பற்றுபவரல்ல. எங்கள் வீட்டில் தினமும் கோவிலுக்குப் போக வேண்டும், பூஜைகள் செய்ய வேண்டும் என்பது போன்ற நடைமுறைகளை அவர் ஏற்படுத்தவில்லை. குளிக்கும்போது மட்டும் காயத்ரி மந்திரத்தை உரக்கச் சொல்லுவார். அவர் குளித்து முடித்துவிட்டதை எங்களுக்கு அதுதான் தெரிவிக்கும். அப்போது அவர் சொல்வது பாஞ்சாலி சபதத்தில் பாரதி மொழிபெயர்த்து எழுதிய காயத்ரி மந்திரத்தைத்தான்: "செங்கதிர் தேவன் சிறந்த ஒளியினைத் தேர்கின்றோம். அவன் எங்கள் அறிவினைத் தூண்டி நடத்துக" என்று வரும்.

வீட்டில் விநாயக சதுர்த்தி, தீபாவளி, பொங்கல் மூன்றையும் பலகாரங்கள், புத்தாடை என்பதாகக் கொண்டாடுவோம். அப்போதும் விரிவான சடங்குகள் கிடையாது. பொங்கலுக்கு திறந்த வெளியில் நான்தான் சாக்பீஸால் சூரியன் வரும் பெரிய தேரை வரைவேன். விநாயகர் சதுர்த்திக்கு, பாரதியின் *நான்மணி மாலை*யை உரக்கப் படித்து பிள்ளையாருக்கு மலர் தூவுவேன். பாரதிக்கும் கடவுளுக்கும் இருந்த உறவு எனக்கு மிகவும் பிடித்திருந்தது. 'உலகத்துக்கு இன்னதையெல்லாம் நான் செய்யப்போகிறேன். அது அப்படியே ஆகட்டும் என்று மட்டும் நீ சொல்லிவிடு' என்று கடவுளுக்கு நண்பன் போல உத்தரவிடுவார். சிறு வயது முதல் பாரதி தவிர, *விகடன், தினமணி* முதலிய இதழ்களைத் தொடர்ந்து படிப்பேன். எழுத்தாளராக அப்போது என்னை பாதித்தவர் ஜெயகாந்தன்.

*ம. பு.: திராவிட இயக்க அரசியல் தலைவர்கள் யாரும் உங்களைப் பாதித்ததில்லையா...?*

கடவுள் நம்பிக்கை உடைய பாரதியைப் படிக்கப் படிக்க அவன்தான்



படிப்பகம்

www.padippakam.com

**சோவுக்கு எதிர்நிலையில் வெகுஜன தளத்தில் செயல்பட்டவர்களில் சின்னக்குத்தூசியின் பணி போற்றத்தகுந்த ஒன்றுதான்**

என்னை கடவுளிடமிருந்தும் மதத்திடமிருந்தும் விலகிச் செல்லத் தூண்டினான். அப்படித்தான் பெரியாரைப் படிக்க ஆரம்பித்தேன். கல்லூரி நாள்முதல் இன்றுவரை எனக்கு ஆதர்சமாக இருப்பவர்கள் பாரதியும் பெரியாரும்தான். ஓரளவு மார்க்ஸ்.

*ம. பு.: கலைஞருடன் உங்களுக்கு நல்ல பரிச்சயம் உண்டு இல்லையா...?*

உண்டு. அவர் போல சுறுசுறுப்பான அரசியல்வாதியைப் பார்க்கவே முடியாது. அரசியலில் காய்கள் நகர்த்துவதிலும் வல்லவர். தன்னைப் பற்றிய விமர்சனங்கள் பத்திரிகைகளில் வரும்போது, உடனே நேரடியாக அந்த ஆசிரியரைத் தொலைபேசியில் கூப்பிட்டுத் தன் அதிருப்தியைக் கடுமையாகவே தெரிவித்துவிடுவார். *இந்தியன் எக்ஸ்பிரஸ்* நிருபராக இருந்த காலத்தில் ஒருமுறை என் மீது கோபப்பட்டிருக்கிறார். *தினமணி* ஆசிரியர் சம்பந்தத்துக்கு இப்படி பலமுறை தொலைபேசியில் தன் கோபத்தைத் தெரிவித்திருக்கிறார். அதே சமயம், அதே பத்திரிகைக்கு பேட்டி என்று கேட்டால் முழுமையாக ஒத்துழைப்பார்.

மீடியாவின் பலத்தை முழுமையாக உணர்ந்த ஒரே அரசியல் தலைவர் அவர்தான். அவருடைய அரசியல் நிலைப்பாட்டுக்கு வலுசேர்க்கிற விதத்தில் நமது எழுத்து அமைந்திருந்தால்; அதைக் குறிப்பிட்டுப் பாராட்டவும் செய்வார். 1996 தேர்தல் வாக்குப் பதிவு தின்த்தன்று வெளியான *தினமணி* கதிரில், அப்போது பொதுவாக மீடியா ஒஹோ என்று தூக்கி வைத்துப் பேசிக்கொண்டிருந்த ரஜினி அலை என்பது ஒரு மாயை என்று அதை மறுத்து என் கட்டுரை வெளியாகியிருந்தது. மக்களுக்கு ஜெயலலிதாமீது ஏற்கனவே உருவாகிவிட்ட அதிருப்தியை ரஜினி பயன்படுத்துகிறாரே தவிர, அவர் அதை உருவாக்கவில்லை என்று நான் வாதிட்டிருந்தேன். தேர்தலில் கலைஞர் வென்றதும், *தினமணி* ஆசிரியர் சம்பந்தமும் நானும் கலைஞரை சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தோம். அப்போது கலைஞர் என்னிடம் ரஜினி கட்டுரை படித்தேன் என்று சொன்னார். படித்தேன் என்று சொன்னால் போதுமா? கட்டுரை எப்படி என்று கேட்டேன். அவர் பிடித்திருந்த என் கையை சங்கேதமாக அழுத்தியபடி சிரித்தார். அவருக்கு உடன்பாடான கருத்து என்று அதற்குப் பொருள்.

அதற்குப் பத்தாண்டுகளுக்கு முன்பே 1987ல் *முரசொலியின்* வார இணைப்பான *புதையலைத்* தொடங்கியபோது அதன் பொறுப்பாசிரியராக முதல் ஓராண்டு பணியாற்றியிருக்கிறேன். நான் பணியாற்றிய பத்திரிகை ஆசிரியர்களில் எனக்கு பெரும் சுதந்திரம் அளித்தவர்களில் முரசொலி மாறனும் ஒருவர். அப்போது மறைமலை நகரில் ராஜீவ் காந்தி தலைமையில் காங்கிரஸ் மாநாடு ஏற்பாடாகியிருந்தது. நானும் நாகார்ஜுனனும் ராஜீவ் காந்தியின் போபர்ஸ் ஊழலுக்கு எதிராக எங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்க திட்டமிட்டோம். அகில இந்திய போபர்ஸ் பீரங்கி ஊழல் ரசிகர் மன்ற மாநாட்டு சிறப்பிதழ் என்ற தலைப்பில் ஒரு நையாண்டி வெளியீட்டை வடிவமைத்தோம். அதை தைரியமாக அச்சடித்துத் தர ஒரு அச்சகம் தேடினோம். முரசொலி அச்சகத்தில் அடித்துத் தர முடியுமா என்று முரசொலி மாறனை சந்தித்துக் கேட்டோம். அவர் எவ்வளவு பிரதிகள் அடிப்பீர்கள் என்று கேட்டார். 5000 பிரதிகள் என்றோம். அது போதாதே. அதிகம் பேரை சென்றடைய முடியாதே என்ற மாறன், *முரசொலி* இப்போது 35 ஆயிரம் பிரதிகள் விற்பனையாகிறது. அதன் இலவச இணைப்பாக வெளியிட சம்மதிக்கிறீர்களா என்று கேட்டார். மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொண்டோம். அதன் பிறகு வாரா வாரம் *முரசொலி* இணைப்பாக ராஜீவ் காங்கிரஸ் அரசுக்கு எதிராகத் தொடர்ந்து ஒரு வெளியீடு செய்ய முடியுமா என்று என்னைக் கேட்டார். அப்படித்தான் *புதையல்* தொடங்கப்பட்டது. ஒரு வருடம் கழித்து 1988 தேர்தலில் தி. மு. க. வென்றதும், கலைஞருக்கும் மாறனுக்கும் பாராட்டு தெரிவித்துவிட்டு நான் விலகிக் கொண்டேன். மத்தியில் தொடர்ந்து ராஜீவ் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. இங்கே நீங்கள் ஆளும் கட்சியாகிவிட்ட நிலையில் பழையபடி உங்களால் எதிர்க்க முடியாது போகலாம். நமக்குள் கருத்து வேறுபாடு வரும் முன்பாகவே நான் விலகிக் கொள்கிறேன் என்று மாறனிடம் தெரிவித்தேன்.

பொதுவாக மாறன் யாருடனும் சுமுகமாகப் பழகமாட்டார், கோபக்காரர் என்றெல்லாம் விமர்சனங்கள் சொல்லப்படுகின்றன. ஆனால், என் அனுபவத்தில் அவர் பழகுவதற்கு இனிமையானவர். நம் கருத்தை முழுமையாகக் கேட்பார். விவாதிப்பார். அவர் கருத்தை மறுத்து விவாதிப்பதைக் கேட்டுக் கொள்வார். சில சமயம் நம் கருத்துக்களை ஏற்றுக்கொண்டு அவர் கட்டுரையில்கூட மாற்றம் செய்வார். அயராமல் நிறைய படிப்பார். மிகச் சிறந்த எடிட்டர் அவர். தி. மு. கவின் பலம், பலவீனம் இரண்டிற்கும் அவருடைய பங்கு முக்கியமானது. வெளியில் பலவீனத்தையொட்டிய அவர் பங்கு மட்டுமே பேசப்படுகிறது. நவீன மாற்றங்களைத் தெரிந்துகொண்டு அத்துடன் தன்னை பொருத்திக்கொள்ளத் தயங்காதவர்.

*க.: பத்திரிகை ஆசிரியர்களுடன் உங்கள் உறவு எப்படி?*

நான் பழகின இன்னொரு சிறந்த ஆசிரியர் *விகடன்* பாலசுப்ரமணியன். நமது கருத்து எதுவானாலும் அவரிடம் நம்பிக்கையோடு விவாதிக்க முடியும். சிறந்த நினைவாற்றல் உடையவர். நம் கட்டுரைகளில் முன்னுக்குப்பின் முரண்போல ஏதேனும் தென்பட்டால், கூர்மையாக அதைக் கண்டுபிடித்துக் காட்டுவார். என் அனுமதியில்லாமல், என் எழுத்துக்களில் எந்த மாற்றமும் செய்யக் கூடாது என்று ஆரம்ப காலத்தில் நான் தெரிவித்த நிபந்தனையை எப்போதும் நினைவு வைத்திருந்தவர். மாற்றம் தேவையென்றால் கூப்பிட்டு விவாதிப்பார். சரியான வாதங்களைச் சொல்ல நாம் தயாராயிருந்தால் பொறுமையாகக் கேட்டு தன் கருத்தை அவர் மாற்றிக் கொள்வதும் உண்டு. *ஜூனியர் விகடனில்* கூடங்குளம் அணுமின் நிலையத்தை எதிர்த்து எழுத வேண்டுமென்று அவரிடம் கேட்டேன். அணு ஆயுதம் தான் கூடாது. அணு மின்சாரத்தை ஏன் எதிர்க்க வேண்டும் என்று கேட்டார். ஐந்து பக்கங்களுக்கு காரணங்களை எழுதித் தந்தேன். படித்துவிட்டு, அதன் அடிப்படையில் விரிவான தொடர் எழுதச் சொன்னார். என்னால் எழுத முடியாமல் போய்விட்டது. ஆனால் அப்போது அணு எதிர்ப்பு இயக்கத்தில் எங்களுடன் (நாகார்ஜுனன், ரவி ஸ்ரீனிவாஸ் முதலியோர்) இருந்த பத்திரிகையாளர் ஏ. எஸ். பன்னீர் செல்வன் எழுதிய விரிவான கட்டுரைத்


படிப்பகம்

www.padippakam.com



தொடரை *ஜூனியர் விகடனிலும்* பின்னர் *ஜூனியர் போஸ்ட்டிலும்*, பால சுப்ரமணியன் வெளியிட்டார்.

நான் பணி புரிந்ததிலேயே மிக அதிக சுதந்திரத்துடன் பணி புரிந்தது *தினமணியில்*தான். ஒரு காலத்தில் *இந்தியன் எக்ஸ்பிரசில்* இருந்து நான் வேலை நீக்கம் செய்யப்பட்டபோது அதற்கு எதிர்ப்பு தெரிவிக்காமல் நிர்வாகத்துடன் ஒத்துழைத்த என் தலைமை நிருபர் சம்பந்தம் பின்னால் *தினமணி* ஆசிரியர் பொறுப்பேற்ற பிறகு என்னை அழைத்து *தினமணியின்* இதழாசிரியராக்கினார். இப்போது *தினமணி* வெளியிட்டு வரும் மலர்கள் எல்லாம் அந்த சமயத்தில் நான் வடிவமைத்து தொடங்கியவை தான். 'மனிதன் பதில்கள்' எழுதுவதில் சம்பந்தம் எனக்கு அளித்த பூரண சுதந்திரம்போல் அதற்கு முன்பும் பின்னரும் நான் பத்திரிகை துறையில் பெற்றதில்லை. உடல் நலக் குறைவால் நான் *தினமணியிலிருந்து* விலகி வந்த பிறகும் மேலும் இரண்டாண்டுகள் அந்தப் பகுதியை எழுதி வந்தேன்.

*க.: அது ஏன் நிறுத்தப்பட்டது?*

*தினமணி* கதிரை பெண் வாசகர்களுக்கான இதழாக மாற்றுவதென்று அதன் நிர்வாகம் முடிவு செய்த போது 'மனிதன் பதில்கள்' பெண்களுக்கு வேண்டாமென்று முடிவு செய்தார்கள்! அது ஒரு சாக்குதான். நீண்ட காலமாகவே 'மனிதன் பதில்கள்' பகுதியை நிறுத்தச் செய்ய, எக்ஸ்பிரஸ் நிர்வாகத்துக்கு நெருக்கமான பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ். ஆதரவாளர்கள் வலியுறுத்திக் கொண்டிருந்தார்கள். சம்பந்தம் வெகுகாலம் அத்தகைய நிர்ப்பந்தங்களை பிடிவாதமாக எதிர்த்துக் கொண்டிருந்தார். பெண்கள் பத்திரிகை சாக்கு வந்தபோது அவராலும் ஒன்றும் செய்ய முடியவில்லை.

*க.: தொடர்ந்து பி.ஜே.பி., ஆர்.எஸ்.எஸ். எதிர்ப்பில் நீங்கள் இருப்பதாகத் தோன்றுகிறது. உங்கள் அரசியல் நிலை என்ன?*

கல்லூரிப் பருவத்தில் என் பள்ளி நண்பன் ரவீந்திரன், என் அப்பா முதலியோரின் தாக்கத்தால், நான் தி.மு.க. சார்பாளனாகவும், நேரு சோஷலிசக் கருத்துள்ளவனாகவும் இருந்தேன். 1971 தேர்தலில் மாணவனாக தி.மு.க.-இந்திரா காங்கிரஸ் கூட்டணிக்கு பிரசாரம் செய்திருக்கிறேன். நெருக்கடி நிலைக்குப் பின் இந்திரா - சஞ்சய் - ராஜீவ் அரசியலின் எதிர்ப்பாளனாகி விட்டேன். 1988-89ல் தி.மு.க. - தேசிய முன்னணிக் கூட்டணிப் பிரச்சாரத்தில் வி.பி.சிங்கின் மொழிபெயர்ப்பாளனாகப் பங்காற்றினேன். என்னை ஜனநாயகத்திலும், தேசிய இனங்களின் கூட்டாட்சியிலும் நம்பிக்கையுள்ள ஒரு இடதுசாரியாக நான் கருதுகிறேன். தொடர்ந்து கலை இலக்கிய மக்கள் உரிமைத் துறைகளில் எல்லா இடதுசாரி அமைப்புகளின் நிகழ்ச்சிகளிலும் பங்கேற்று வருகிறேன். இன்று இந்த நாட்டிற்கு மிகவும் ஆபத்தான அரசியலாக எனக்கு ஆர்.எஸ்.எஸ். - பி.ஜே.பி. அரசியலே தோன்றுகிறது. ஃபெடரலிசம் நோக்கிச் செல்லுவதற்கான சிறந்த வாய்ப்பு நமக்கு 1989ல் வி.பி.சிங் காலத்தில் உருவாயிற்று. அதில் நம்பிக்கையில்லாத காங்கிரஸ், பி.ஜே.பி. இருவரும் அந்தப் போக்கைத் திட்டமிட்டு முறியடித்துவிட்டார்கள்.



*க.: கார்கில் போரின்போது நீங்கள் காஷ்மீர் சென்றிருந்தீர்கள். அங்கு நீங்கள் பெற்ற அனுபவம் என்ன?*

*சுட்டி விகடன்* தொடங்குவதற்காக விகடன் நிறுவனத்தில் நான் சேர்ந்து பத்திரிகை ஆயத்தப் பணிகள் நடந்து கொண்டிருந்த நேரம். *ஜூனியர் விகடன், ஆனந்தவிகடன்* இரண்டிற்காகவும் என்னை கார்கிலுக்கு அனுப்பினார்கள். தமிழிலிருந்து கார்கிலுக்கு தங்கள் நிருபரை முதலில் அனுப்பியது விகடன்தான். அந்தப் பயண அனுபவங்கள் விவரமாக *ஜூனியர் விகடனிலும் ஆனந்தவிகடனிலும்* வெளியிடப்பட்டன..

ஸ்ரீநகரில் என்னை முதலில் உறுத்திய விஷயம் அங்குள்ள மக்கள் சுமார் 300 கிலோமீட்டர் தொலைவில் நடந்துகொண்டிருந்த யுத்தம் பற்றி காட்டிய அலட்சியமும் அக்கறையின்மையும்தான். நான் சந்தித்துப் பேசிய பல தரப்பு காஷ்மீரிகளும் காஷ்மீரில் இந்தியா, பாகிஸ்தான் இருவருக்கும் எந்த உரிமையுமில்லை என்ற கருத்தையே அதிகம் தெரிவித்தார்கள். தவிர தினமும் நகரின் மையப் பகுதியில் சுமார் இருநூறு பேர் கூடி "இந்திய ராணுவமே திரும்பி வா. போரை நிறுத்து. காஷ்மீரைவிட்டு வெளியேறு" என்று முழக்கமிட்டுக் கொண்டிருந்தார்கள்.

அந்த ஆர்ப்பாட்டங்கள் அரசால் ஒன்றும் தடை செய்யப்படவில்லை. ஆர்ப்பாட்டக்காரர்களை சந்தித்து அவர்களின் தலைவர்களுடன் விவரமான பேட்டிகள் எடுத்தேன். ஒருவர் ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணித் தலைவர் யாசின் மாலிக் என்ற இளைஞர். மற்றவர் ஹுரையத் மாநாட்டு அமைப்பின் முதுபெரும் தலைவர் கிலானி. *ஆனந்தவிகடனில்* மாலிக்கின் பேட்டி வந்தது. அடுத்த இதழில் கிலானி பேட்டி வெளிவரும் என்று குறிப்பிட்டிருந்தோம்.

ஆர்.எஸ்.எஸ்சின் பல அவதாரங்களில் ஒன்றான அகில பாரதிய வித்யார்த்தி பரிஷத் என்ற மாணவர் அமைப்பிலிருந்து வீட்டுக்கு ஓயாமல் இரவெல்லாம் தொலைபேசி மிரட்டல்கள் வந்தன. 'கெட்ட' வார்த்தைகளில் வசவுகள். என் கையை உடைக்கப் போவதாகவும், நடமாடவிடாமல் செய்துவிடப் போவதாகவும் மிரட்டல்கள். விகடன் அலுவலகத்துக்கும் இத்தகைய தொலைபேசி மிரட்டல்கள் வந்தன. அலுவலகத்தைக் கொளுத்துவோம் என்று மிரட்டினார்கள். கார்கிலில் யுத்தத்தில் 'நமது' சிப்பாய்கள் செத்துக் கொண்டிருக்கும்போது 'தேசத் துரோகிகளின்' பேட்டியை எப்படி வெளியிடுவாய் என்று கேட்டார்கள். என்னை தேசப் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும் என்றும் நான் பாகிஸ்தான், கம்யூனிஸ்ட்டுகளின் ஏஜண்ட் என்றும் இந்து முன்னணி மாவட்டத் தலைவர் ஒருவரிடமிருந்து ஒரு அறிக்கைகூட வந்தது. உணர்ச்சிகள் கொந்தளிக்கும் சூழலில் தொடர்ந்து கிலானியின் பேட்டியை வெளியிட வேண்டாமென்று விகடன் ஆசிரியர் முடிவு செய்தார். அவ்வாறே அறிவிப்பும் வெளியிட்டார்.

அடுத்த இரண்டே ஆண்டுகளுக்குள், அதே மாலிக், அதே கிலானியுடன் பேச்சு வார்த்தைக்கு உதவும்படி அத்வானியும், அவர் தூதர்களும் அலையாய் அலைந்தார்கள் என்பது இன்றைய வரலாறு.

*சந்திப்பு:* கண்ணன், மனுஷ்ய புத்திரன்

*தொகுப்பு:* மகாதேவன்

*புகைப்படங்கள்:* சிநேகிதன்



படிப்பகம்

## தி.க. சிக்கு விருது

தி. க. சிக்கு விருது வழங்கப்பட்டது பற்றிய விவாதத்தில் கடந்த இதழில் எழுதியிருந்தவர்கள் நீங்கலாக ராஜ மார்த்தாண்டன், தமிழ்ச் செல்வன், இராஜேந்திரச் சோழன், ராஜ் கௌதமன். அரவிந்த பாரதி, பெருமாள் முருகன், முருகேச பாண்டியன், அமரந்தா, தேவி பாரதி ஆகியோரையும் கருத்துக் கேட்டிருந்தோம். எங்களுக்கு கிடைத்த பதில்களை கடந்த இதழில் பிரசுரித்திருந்தோம். இரண்டு இலக்கிய அன்பர்கள் விவாதத்திற்கு தங்கள் வினைகளை அனுப்பியுள்ளனர். அவற்றை இத்துடன் பிரசுரிக்கிறோம்.

நம் முன் நிற்கும் கேள்வி தி. க. சி. வணக்கத்திற்கு உரியவரா இல்லையா என்பது அல்ல. அவர் சிறந்த மனிதாபிமானியா என்பதும் அல்ல. சிறந்த இதழாசிரியரா, தோட்டக்காரரா, இளைஞர்களை ஊக்குவிப்பவரா, இலக்கியப் பணியாளரா என்பதெல்லாமும் அல்ல. நாங்கள் மனிதாபிமானிகளா குழுச்சார்புடையவர்களா என்பதும் விவாத மையம் அல்ல.

தி. க. சி. சாகித்திய அகாதமியின் திறனாய்வுப் பரிசுக்கு தகுதியானவரா என்பதுதான் விவாத மையம்.

பரிசு அறிவிக்கப்பட்டதிலிருந்து தி. க. சி. 'நான் விமர்சகன் அல்ல, தோட்டக்காரன்' என்ற ரீதியில் பேசி வருகிறார். பரிசு தேர்வுக் குழுவினரில் ஒருவரான வா. செ. குழந்தைசாமி பரிசளிப்பு விழாவில் 'ஒரு விமர்சகரை மொழி வளத்தை மட்டும் வைத்து மதிப்பிடக்கூடாது' என பேசியிருப்பது (*தினமணி*, 21.3.2001) தி. க. சிக்கு மொழி வளமும் இல்லை என்பதை இந்த மொழியியல் அறிஞர் உணர்வதையே புலப்படுத்துகிறது.

தி. க. சி. குழுவினருக்கு சில கேள்விகள்.

1. இடதுசாரி பதிப்பகங்கள் தி. க. சியின் எந்த திறனாய்வு (?) நூலையும் வெளியிடவில்லையே ஏன்? 1990கள் வரை தி. க. சியின் விமர்சனக் கருத்துகள் தொகுக்கப்படாதது ஏன்?

2. தீக்கதிரில் தி. க. சி. எழுதி தொடர் கட்டுரையாக மு. வ. பற்றிய விமர்சனம் வெளிவந்ததாகச் சொல்லப்படுகிறது உண்மையா? உண்மையெனில் 'மக்கள்' பத்திரிகையில் எழுதிய இந்த 'மக்கள்' விமர்சகரின் அரிய கருத்துகள் 'காணாமல்' போனது எப்படி?

3. உதிரியாக எழுதப்பட்ட நூல் விமர்சனங்கள், பத்திரிகைகளில் தொடராக வந்த 'பத்தி'களின் தொகுப்பு திறனாய்வாகுமா? இன்று பல்கலைக் கழகங்களில் சமர்பிக்கப்படும் 'ஊதிய உயர்வு' முனைவர் பட்ட ஆய்வுகளின் தரத்தில் கூட தி. க. சியின் பெயரில் ஒரு முழுமையான திறனாய்வுப் பிரதி – அவர் நூலாக எழுதி வெளியிட்ட ஒரு புத்தகம் – இல்லையே ஏன்?

ஆ. கு.

## ஐம்பது ஆண்டுக்கால பங்களிப்புக்குக் கிடைத்த விருது

இரண்டாயிரமாவது ஆண்டுக்கான சாகித்ய அகாதமி விருது எழுத்தாளர் திருநெல்வேலி கணபதியப்பன் சிவசங்கரன் அவர்களுக்கு கிடைத்துள்ளது. இதன் பேரில் சில எழுத்தாளர்களின் எதிர்வினைகளைத் தொகுத்து வழங்கி விவாதத்தை துவக்கியிருக்கிறது காலச்சுவடு (இதழ் 34).

விருது பெற்றதை ஆதரிப்பவர்களிடம் (மூன்று கேள்விகளை வழங்கி) அதற்கான விளக்கங்களைப் பெறவும், பாரபட்சமற்ற எண்ணங்களையும், கருத்துக்களையும் தெரியப்படுத்தப் பணிக்கப்பட்ட விதம் பாராட்டத்தக்க முயற்சியாகும். ஒரு சாரார் வாதத்தை மட்டும் கேட்பது சரியானதல்ல என்ற உயரிய எண்ணங் கொண்ட 'காலச்சுவடு' நடுநிலைச் சிற்றிதழ் என்பது நிரூபணமாகிவிட்டது இதன் மூலம்.

விவாதத்துக்கு ஆதார சுருதியான மூன்று கேள்விகளுக்குப் பதில்:

திரு. தி. க. சி. அவர்கள் ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாகவே தமிழில் இலக்கியத் திறனாய்வுத் துறையில் சிறப்பான பணிகளைச் செய்து வருபவர். இந்த காலத்தில் வெளியான கட்டுரைகள் முதலியன சற்றொப்ப எண்ணிக்கையில் ஆயிரத்தைத் தாண்டும். இவரது நெருங்கிய நண்பர்களின் வற்புறுத்தல்களின் பேரிலும், கைவசமிருந்தவைகளின் நகல்கள், நண்பர்கள் சேகரித்து அனுப்பியவைகளைக் கொண்டு "விமர்சனத்தமிழ்"; "தி. க. சியின் திறனாய்வுகள்"; "விமர்சனங்கள், மதிப்புரைகள், பேட்டிகள்" (சாகித்ய அகாதமி பரிசு பெற்றது); "மனக்குகை ஓவியங்கள்" ஆகிய நான்கு புத்தகங்கள் வெளியாகியுள்ளன. எழுதிய அனைத்து கட்டுரைகளையும் வெளியிட்டால் சற்றொப்ப அறுபது புத்தகங்களுக்கு மேல் வரும்.

இவரது விமர்சனப் பார்வைகள் கலையழகு; உலகளாவிய மனித குல நேயம் மற்றும் சமூக நோக்கு ஆகிய அம்சங்களை உள்ளடக்கியது என்பதை அறிந்து கொண்டேன். இவரை 1996ல் நான் நேரில் சந்தித்து உரையாடியபோது அறிந்து கொண்டவையும் கூட.

வ.ரா.; கவிஞர் சி. விஜயரங்கம் (கவிஞர் தமிழ் ஒளி); ஆர். ஷண்முக சுந்தரம்; ந. சிதம்பர சுப்பிரமணியன்; சு. சமுத்திரம்; கலாநிதி கைலாசபதி. புதுமைப்பித்தன்; மௌனி; ந. பிச்சமூர்த்தி; க. நா. சுப்ரமணியம்; கி. ராமச்சந்திரன் (கி. ரா); பி. எஸ். ராமையா; ஆதவன்; தகழி சிவசங்கர பிள்ளை; தொ. மு. சி. ரகுநாதன். டி. செல்வராஜ்; விந்தன்; நா. பார்த்தசாரதி; டாக்டர் தயாநந்தன் ஃபிரான்சிஸ்; என். ஆர். தாசன்; எழில் முதல்வன்; நாஞ்சில் நாடன், பேராசிரியர் நா. தர்மராஜன்; ராஜம் கிருஷ்ணன்; பூமணி; அகிலன் கண்ணன், மகாஸ்வேதா தேவி இவர்களது படைப்புக்களின் மீதான விமர்சன மதிப்பீட்டை விருப்பு வெறுப்பின்றி செய்தவர் தி. க. சி.

திறனாய்வுத்துறையில் முனைவோரும், தி. க. சியின் விமர்சனப் பார்வைகளை அறிந்து தமிழில் இவரது தடத்தில் நடந்து பயணித்து தம் பங்கினைச் செய்து வருவதை இலக்கிய ஆர்வலர்கள், வாசகப் பெருமக்கள், சம்பந்தப்பட்ட படைப்பாளிகள் அறிந்த உண்மைகளாகும்.

தி. க. சி. அவர்களது ஈடுபாட்டுடன் கூடிய இலக்கியத் தடம் உறுதியானவை, வேகமும், விவேகமும் நிறைந்தவை. இதில் பயணிப்பவர்களுக்கு தமிழில் மதிப்பும், மரியாதைகளும் நிச்சயம் கிடைக்கும் என்று சொல்லி கட்டுரையை முடிக்கிறேன். அரை நூற்றாண்டு பங்களிப்புக்கு கிடைத்த விருதுதான் சாகித்ய அகாதமி விருது. பாராட்டுவோம்.

ஜி. ஜி. ராதாகிருஷ்ணன்

## தி.க. சி. என்ற நடுநிலையாளர்

தி.க.சி. என்ற தி.க.சிவசங்கரன் அவர்கள், மறைந்த க.நா.சுப்ரமணியம், கைலாசபதி, இவர்களுக்குப் பின்னால் நான் விரும்பிப் படிப்பவர். அநேகமாக இவரது எல்லாப் படைப்புக் களையும் இன்று வரை படித்தும் வந்துள்ளேன். இவரது நடுநிலையான விமர்சனம் என்னை மிகவும் கவர்ந்தது. படைப்பு எப்படி, எதன் அடிப்படையில் இருக்க வேண்டும் என்பதில் தி.க.சி யிடம் சில தெளிவான கோட்பாடுகள் உள்ளது என்றே கருதுகிறேன். இலக்கிய நோக்கம், எப்படி இருக்க வேண்டும் என்பதை இவர் தெளிவாக எழுதி உள்ளார். ஆகவே யார் எழுதியுள்ளார் என்பதை விடப் படைப்பு நன்கு உள்ளதா என்பதே முக்கியம். எத்தனை நாவல்கள் சிறுகதைத்தொகுப்புகள், கவிதைகள், அரசியல் நூல்கள் எல்லாவற்றிலும் இவரது தெளிவான பார்வை இருக்கும். ஆகவே இவரது விமர்சனம் படித்த பின்பு நான் நூல்கள் வாங்குவது வழக்கம். ஏராளமான விமர்சகர்கள் வந்து உள்ளனர் இன்று. ஆனால், அவர்கள் என்ன எழுதி உள்ளனர் என்பது புரிவதும் இல்லை. ஆனால் தி.க.சியின் நடை தெளிவாக இருப்பதாய் புரிகிறது – இலக்கியம் என்றால், அபிப்பிராய பேதம் இருக்கும். இருக்கவும் வேண்டும். அதை சமூக நலனுக்கு உதவியாக இருக்குமா என்பதை கவனித்து எழுதியவர், தி. க. சி. இவரது விமர்சன தாக்கம் என்ன? நல்ல படைப்புகளை அடையாளம் காட்டுவதே – படைப்பு எப்படி நமக்கு, மிக முக்கியமோ அப்படி படைப்பை விமர்சிக்கும் விமர்சனமும் முக்கியம், விமர்சனம், எழுதுவது நடுநிலையில் இருப்பது ஆரோக்கியமான இலக்கிய



படிப்பகம்

www.padippakam.com



தூழலை வளர்க்கும், விமர்சனம் செய்த படைப்புகள், வாசகருக்கு அறிமுகம் செய்த தி.க.சி. பணி முக்கியமானது. பல எழுத்தாளர்களின் நூல்களை, விமர்சிப்பது பெரிய பணி. இவற்றில் தி.க.சி. மகத்தான வெற்றி பெற்று உள்ளார் என்பது எனது எண்ணம். அரவிந்த பாரதி எழுதி இருப்பது ஏற்றுக் கொள்ளக் கூடியது அல்ல.

நீதிபதி போல நடுநிலையுடன் விமர்சிப்பவர் தி.க.சி. விருப்பு வெறுப்பற்று விமர்சனம் செய்யும் தி.க.சி. மாற்று கருத்தையும் ஏற்கும் தன்மை வாய்ந்தவர். எங்களுக்கு இடையே கருத்து வேற்றுமைகள் இருந்தாலும் மனிதர்களை உயர்த்த வேண்டும் என்று எண்ணுகிற அடிப்படையில் நாங்கள் ஒரே சாதிதான். சிறந்த படைப்பாளியும் ஒரு விமர்சகன்தான். சிறந்த விமர்சகனும் ஒரு படைப்பாளிதான் என்று ஜெயகாந்தன் சொல்லுவது சரியானதே. பல நூல்களை, படிக்காமல் பல நூல்களுக்கு விமர்சனம் எழுதாமல், இருப்பவர்கள் இவரை வேண்டும் என்றே இழிவு செய்து வருகின்றனர். பாரதியை, ஜீவாவை, நா.வா.வை யாரும் ஏற்றுக் கொள்வர். இவர்கள் கொள்கையின் அடிப்படையில் படைப்பை சீர்தூக்கி பார்த்து விமர்சனம் எழுதுவது எப்படி தவறு ஆகும்? ஒரு சமூகத்தின் மதிப்பீடுகளை பிரதிபலிக்கும் விருதுகளை அதற்கு தகுதி அற்றவர்களுக்கு அளிப்பது, அந்த சமூகத்தை கேவலப்படுத்தும் செயல் என்பதால், இதை எதிர்த்து உரக்க குரல் எழுப்புவது, சமூக அக்கறை உள்ளவர்களின் கடமையாகிறது என்ற அரவிந்த பாரதியின் கருத்து தள்ளத்தக்கது. சரியான விமர்சகருக்கு சரியான படிப்பாளிக்கு சிறந்த எழுத்தாளருக்கு பரிசு கிடைத்துள்ளது. இது சரியானதே. இவர்கள் எத்தனை கொச்சைபடுத்தி எழுதினாலும் விமர்சன உலகத்தில், சிறப்பான இடம் எப்போதும் இவருக்கு உண்டு. பெருமாள் முருகன், சொல்லுவதும் தள்ளத்தக்கதே. போய் கோக் குடியுங்கள், தூடு தணியும் என்று எழுதி உள்ளார். முதலில் இவர் குடிக் கட்டும், மற்றதை பின்பு பார்க்கலாம். விமர்சன உலகத்துக்கு இன்னும் பல காலங்களுக்கு அது தமிழ் மக்களுக்கு தமிழ் இலக்கியத்துக்கு தி.க.சி. அவர்கள் மிக முக்கியமாக தேவைப் படுகிறது.

எஸ். எஸ். ஆர். லிங்கம்

## தி.க. சி. பாராட்டு விழாவில் ஒரு நாடகம்

"ஒவ்வொரு ஆண்டும் இலக்கியத்துக்கான நோபல் விருது அறிவிக்கப்பட்ட பின்பு இவர் இவருக்கு கொடுத்திருக்கலாம் என்று பரிந்துரைகள் சொல்லப்படுமே ஒழிய இவருக்கு கொடுத்திருக்கக்கூடாது என்று இதுவரை எவரும் சொன்னதில்லை. ஆனால், தமிழ் சாகித்ய அகாதமி விருது இதுவரை எந்த வருடமும் சர்ச்சை இல்லாமல் கொடுக்கப்பட்டதில்லை. இது தமிழ் எழுத்தாளர்களிடம் நிலவும் ஒற்றுமையின்மையையும் போட்டி பொறாமையையுமே காட்டுகிறது" என்று வா. செ. குழந்தைசாமி சென்ற வாரம் சென்னை, ரஷ்ய கலாச்சார மையத்தில் நடைபெற்ற தி. க. சிக்குப் பாராட்டு விழாவில் தன் நீண்ட பேச்சினிடையே குறிப்பிட்டார். அவரும் நடுவர் குழுவில் ஒருவராக இருந்து, தி. க. சிக்கு வழங்கப்பட்ட சாகித்ய அகாதமி விருது கிளப்பிவிட்டிருக்கும் சர்ச்சைகளுக்கு பதிலாகத்தான் அவர் இப்படி குறிப்பிட்டார்.

*விண் நாயகனில்* ஜெயமோகன், *சொல்புதிது* இதழ் தலையங்கம், *காலச்சுவடு* இதழில் 'சர்ச்சை : தி. க. சிக்கு விருது' பக்கத்தில் இடம் பெற்றிருக்கும் எழுத்தாளர்களின் கட்டுரைகள் என்று தொடர்ந்து எதிர்ப்புகள் புகைந்து வருவதில் நடுவர் குழுவில் இடம் பெற்றிருந்தவர்கள் பதில் சொல்லவேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டிருக்கிறார்கள். குறிப்பாக *காலச்சுவடு* முன்வைத்திருக்கும் பின்வரும் மூன்று கேள்விகளுக்கு :

1. தி. க. சி.யின் முக்கியமான விமர்சனக் கட்டுரைகள் யாவை? அவை முன் வைத்த புதிய கருத்து / பார்வை என்ன?

2. எந்த எந்த படைப்பாளிகளைப் பற்றி தி. க. சி. ஒரு முழுமையான விமர்சன மதிப்பீட்டை முன் வைத்திருக்கிறார்.

3. தி. க. சி.யின் விமர்சனப் பார்வை ஏற்படுத்தியிருக்கும் தாக்கம் என்ன?

வா. செ. குழந்தைசாமியின் நீண்ட உரையில் இக்கேள்விகளுக்கான பதிலில்லைதான். ஆனால், கூட்டத்தில் இரண்டு பேர் இக்கேள்விகளுக்கு பதில் சொன்னார்கள். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத் தலைவர் செந்தில்நாதன் மூன்று கேள்விகளையும் மேடையில் வாசித்துவிட்டு, "அறிவு இருக்காடா உனக்கு? இல்லைன்னா இப்படி ஒரு கேள்வியை கேட்பியா" என்றார். இன்னொருவர், "அரசியலுக்கு சோ, தமிழ் இலக்கியத்துக்கு சுந்தர ராமசாமி" என்றார். இதுவரைக்கும் தமிழக அரசியல் கட்சிக் கூட்டங்களில் மட்டுமே காணக்கிடைத்த இந்த 'நாகரிகம்' இப்போது ஒரு இலக்கிய கூட்டத்திலும் அரங்கேறியிருக்கிறது. ஆனால், கூட்டம் முடிந்தும், காலியான அறையில் செந்தில்நாதன் வாசித்த *காலச்சுவடு* கேள்விகள் பதிலின்றி மைக்குக்கு முன்னால் தொங்கிக் கொண்டிருந்தன என்பது யாரும் அறியாத ஒன்றல்ல.

*நன்றி* : குமுதம். காம்


**ஊமையன் கண்ட கனவுகள்**

பா. துளசிமணி

144 பக்கத்துக்கு ரூ. 27

கட்டுரை யாப்பறு கவிதை

மீண்டும் தேர்தல்
நீங்களும் நானும் நிற்கப்
போவதில்லை. நிற்க முடியாதவர்களால்
நடக்கவும் முடியாதுதான்!
ஆம்; வாக்குச் சாவடிக்கு. எனவே
ரோட்டுத் தொகுதியின் வேட்பாளன்
லாரிக்குத் துளசிமணியின் அறிவுரை
கவிதை "தீ மிதிக்கும் தலைவா"

"வேட்பாளன் நீ எனில்
வெற்றி உனதே
ஊர்திகள் பல பகையானாலும்
கால்வண்டிகள் கைவண்டிகள்
உன்னைப் பார்ப்பதுமில்லை
உன்னால் பாதிப்புமில்லை
உன் உண்மை உருவம்
தெரியாதவர்கள் அவர்கள்
எல்லைச் சண்டைக்கு அவற்றை
இழுப்பவை இதர ஊர்திகளே
மற்ற ஊர்திகளைப்பற்றி
மறந்தும் கவலை கொள்ளாதே
மூட்டைகள் நிறைந்தவர்க்கே
முழுவதுமாய் ஒதுக்கீடு என்னும்
எழுதாத சட்டத்தை எல்லாரும்
வழுவாது கடைப் பிடிப்பதால்
நிறங்கள் வேறு ஆனாலும்
நிற்பவர்கள் எல்லாரும் லாரிகளே!
டாட்டா பெற்ற பிள்ளைகளே!
தப்பியவர்
லேலாண்டு பெற்ற செல்வங்களே!
என்வாக்கு வீண் வாக்கேயென
வேதாந்தமாய் விரிப்பர்"

மணிமேகலைப் பிரசுரம்
4, தணிகாசலம் தெரு
தி. நகர்
சென்னை 600 017
தொலைபேசி 4342926




படிப்பகம்

www.padippakam.com

பிற வழிப் பயணம்

ரவிக்குமார்
adheedhan@rediffmail.com, adheedhan@eth.net



# மேலவளவு : நீதியின் புதிர்ப் பாதைகள்

எங்கோ ஓரிடத்தில் அநீதி இழைக்கப்பட்டாலும் அது எல்லா இடங்களிலும் நீதியை அச்சுறுத்துகிறது.

மார்ட்டின் லூதர் கிங்

மேலவளவு கொலை வழக்கில் தீர்ப்பு வரப்போகிறது. ஏப்ரல் 30க்குள் தீர்ப்பளிக்க வேண்டுமென்று உயர்நீதிமன்றம் ஆணையிட்டிருந்ததால் இந்த வழக்கின் விசாரணை வேகவேகமாக நடந்து வருகிறது.

'அதென்ன மேலவளவு கொலை வழக்கு?' என நீங்கள் கொஞ்சம் நெற்றியை சுருக்கக்கூடும். நினைவுகளை நிரடிப்பார்த்து தகவலாய் அது தட்டுப்பட்டால் "அந்தக் கேஸா" என்று அமைதியடையவும் கூடும். ஆனால் அதில் பாதிக்கப்பட்ட தலித்துகளுக்கு அது வெறுமனே ஒரு வழக்கு மட்டுமல்ல.


மதுரைக்கு அருகில் நத்தம் செல்லும் வழியில் மேலூரிலிருந்து 18 கி. மீ. தொலைவில் உள்ளது மேலவளவு என்ற கிராமம். கிராமத்தின் மக்கள் தொகையில் ஏறத்தாழ சம அளவினராக தலித்துகள் இருக்கின்றனர். மீதமுள்ளவர்களில் பெரும்பகுதியினர் அம்பலக்காரர் என்னும் கள்ளர் சாதியைச் சேர்ந்தவர்கள்.

சுமார் ஐந்தாயிரம் வாக்காளர்களைக் கொண்ட அந்த கிராமத்தில் தலித்துகளுக்கென்று சொத்து எதுவும் கிடையாது. கள்ளர்களிடம் விவசாயக் கூலிவேலை மட்டுமல்லாது கள்ளர்கள் வீடுகளில் யாரேனும் இறந்துபோனால் குழிவெட்டுவது உட்பட 'இழிதொழில்களையும்' செய்ய வேண்டும். வருடம் முழுவதும் வேலை செய்தால் ஆயிரம் ரூபாயும் இரண்டு மூட்டை நெல்லும் கூலியாகக் கிடைக்கும்.

கள்ளர் தரப்பில் பத்து ஏக்கர் நிலம் வைத்துள்ள குடும்பங்கள் உண்டு. சுமார் முப்பது குடும்பங்கள் 4 ஏக்கர் வரை நிலம் வைத்துள்ளனர். கூலி வேலை செய்யும் கள்ளர்களுக்கும் அறுபது எழுபது செண்ட் நிலம் இருக்கிறது.

இதுதவிர ஊரின் பொதுச் சாமியாக இருந்தாலும் கள்ளர்களால் கையகப்படுத்தப்பட்டுள்ள கருப்புசாமி கோயிலுக்கு பதினைந்து ஏக்கர்வரை நிலம் இருக்கிறது. அதைப் பயிர் செய்வதும் கள்ளர்கள்தான்.

இந்த ஊரில் ஒரு வினோதமான வழக்கமிருக்கிறது. தனியாக எவரும் ஆடு, மாடு வளர்க்கக்கூடாது. ஊருக்கென்று பொதுவாக சுமார் ஆயிரம் ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. அதை மேய்ப்பதற்கென்று ஒருவரை நியமித்து 12 ஆயிரம் ரூபாய் சம்பளமும், சாப்பாடும் ஊர் மூலமாக கொடுக்கப்படுகிறது. அந்தப் பொது ஆடுகளைத் தவிர வேறு ஆடுகள் அந்த ஊருக்குள் வந்தால் பிடித்து கட்டிப் போட்டுவிடுவார்கள். பிறகு அபராதம் செலுத்தித்தான் மீட்டுச் செல்லவேண்டும்.



தலித்துகள் நல்ல உடை அணிய முடியாது. திருவிழாவானாலும் வீட்டு விசேஷமென்றாலும் கூலி இல்லாமல் வேலை செய்யவேண்டும்; பொது சொத்துக்களிலோ, பொது காரியங்களிலோ பங்கெடுக்க முடியாது; ஊர்த் திருவிழாவுக்கு வரிகூட செலுத்த முடியாது; இரட்டைக் குவளை, தனிக் கிணறு, தனிச் சுடுகாடு எல்லாவற்றோடும் 'வேறுபாடு எதுவுமில்லாமல் தாயும் பிள்ளையுமாக' வாழ்க்கை நடந்துவந்த மேளவளவு கிராமத்தில் பஞ்சாயத்து தேர்தல் வந்ததால் 'அமைதி' பறிபோயிற்று.

இப்போது உங்களுக்கு நன்றாக ஞாபகம் வந்திருக்கும். மேலவளவில் நடந்த படுகொலை. பஸ்ஸில் போய்க் கொண்டிருக்கிறார்கள். ஓரு சிலர் ஓடிவந்து வழிமறிக்கிறார்கள். பஸ் நிறுத்தப்படுகிறது. அருகாமையிலிருந்த வைக்கோல் படப்பிலிருந்து நாற்பது, ஐம்பது பேர் கொண்ட கும்பல் ஓடிவருகிறது. பஸ்ஸில் இருந்து முருகேசன், ராஜா, சேவுக மூர்த்தி, மூக்கன், செல்லத்துரை, பூபதி, கிருஷ்ணன், சின்னையா, குமார் ஆகியோரை அந்த கும்பல் வெட்டுகிறது. கிருஷ்ணன், சின்னையா, குமார் ஆகிய மூன்று பேரும் காயங்களோடு தப்பித்து ஓடிவிட மற்ற ஆறுபேரும் அங்கேயே கொல்லப்படுகின்றனர். முருகேசனின் தலையை அறுத்து தனியாக எடுத்துச் செல்கிறார்கள். அருகே செல்லத்துரை வெட்டுப்பட்டு துடித்துக்கொண்டிருக்கிறார். அவரது வாயில் கத்தியை வைத்துப் பிளந்து அதில் முருகேசனின் தலையிலிருந்து வடிந்த ரத்தத்தை விடுகிறது அந்த கும்பல். இவ்வளவு வன்மத்தோடு படுகொலை செய்யுமளவுக்கு தலித்துகள் செய்த தவறு என்ன? பஞ்சாயத்து தேர்தலில் நின்றார்கள். அவ்வளவுதான். அதுவும் தலித்துக்களுக்கென்று ஒதுக்கப்பட்ட தனித்தொகுதியாக மேலவளவு பஞ்சாயத்து இருந்ததால் அதில் நின்றார்கள்.

ஜெயலலிதா ஆட்சியில் 1995ஆம் ஆண்டு மேலவளவு பஞ்சாயத்து தனித்தொகுதியாக அறிவிக்கப்பட்டது. அப்போது தேர்தல் நடத்தப்படவில்லை. தி. மு. க. ஆட்சி வந்த பிறகு பஞ்சாயத்து தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. 1996 அக்டோபரில் தேர்தல் நடந்தது. தேர்தலில் தலித்துகள் யாரும் போட்டியிடக்கூடாது என கள்ளர்கள் ஊர் கூட்டம் போட்டு முடிவு செய்ததை தலித் இளைஞர்கள் ஏற்கவில்லை. அதில் முனைப்பாக இருந்தவர் காஞ்சிவனம். அவரது வீட்டை 9.9.96 அன்று கள்ளர்கள் கொளுத்திவிட்டனர். மறுநாள் அதற்கு இழப்பீடாக இரண்டாயிரம் தருகிறோமென சமாதானம் பேசியுள்ளனர். அதை மறுத்த காஞ்சிவனமும் முருகேசனும் பஞ்சாயத்து தலைவருக்காக வேட்பு மனு தாக்கல் செய்யச் செல்கின்றனர். அது தெரிந்து தலித் பகுதியில் புகுந்து கள்ளர்


படிப்பகம்

www.padippakam.com



கள் ரகளை செய்து தலித்துகளை ஊரைவிட்டு விரட்டியடிக்கின்றனர். வேட்பு மனு தாக்கல் செய்யச் சென்ற காஞ்சிவனத்தையும், முருகேசனையும் அந்த மக்களில் சிலர் சென்று சந்தித்து "நீங்கள் தேர்தலில் நின்றால் எங்களையெல்லாம் கொன்றுவிடுவார்கள்" எனக் கூறி அவர்களைத் தடுத்து அழைத்து வருகிறார்கள். அதனால் அப்போது அங்கு தேர்தல் நடைபெறவில்லை.

ஆறு மாதங்கள் சென்ற பின்பு மீண்டும் அந்த தொகுதிக்குத் தேர்தல் அறிவிக்கப்படுகிறது. இந்த முறை முருகேசன் போட்டியிடுகிறார். கள்ளர்கள் தேர்தலைப் புறக்கணித்தது மட்டுமின்றி வாக்குப் பெட்டிகளையும் பறித்துச் செல்கின்றனர். அதனால் அங்கு மறு வாக்குப் பதிவு நடத்தப்பட்டு முருகேசன் தேர்ந்தெடுக்கப்படுகிறார். தங்கள் எதிர்ப்பையும் மீறி ஒரு தலித் பஞ்சாயத்துத் தலைவாகிவிட்டானே என்கிற கோபம்தான் கள்ளர்களை இப்படியான படுகொலை செய்யும்படித் தூண்டியுள்ளது.

திடீரென்று வெடித்த கலவரத்தில் இந்த கொலை நடக்கவில்லை. ஆறு மாதங்கள் திட்டமிட்டு, கண்காணித்து, சரியான இடத்தை, நேரத்தை தேர்ந்தெடுத்து செய்யப்பட்ட படுகொலை. இந்தப் படுகொலைக்குப் பின்னால் மேலூர் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. (குற்ற எண்.*508/97* u/s *147, 148, 341, 302, 307* IPC மற்றும் 3(1) (x) of SC/ST (Prevention of Atrocities) Act, 1989). இதில் நாற்பது பேர்களை குற்றவாளிகளாகப் பாதிக்கப்பட்ட மக்கள் அடையாளம் கூறினார்கள். அடையாளம் தெரிந்த குற்றவாளிகளானாலும் கூட போலீஸ் அவர்கள் எல்லோரையும் கைது செய்துவிடவில்லை. பன்னிரெண்டு பேரைக் கைது செய்வதற்கே ஒரு மாதம் ஆனது.

கொலை நடந்து ஒன்றரை மாதங்கள் கழித்த பின்பே அங்கு மாநில மனித உரிமை ஆணையத்தின் குழு சென்று விசாரித்தது. கொலையாளிகளைக் கைது செய்யும்படி வற்புறுத்தி *8.8.97*ல் விடுதலை சிறுத்தைகள் அங்கே பேரணி நடத்தியபோது அதன் அமைப்பாளர் திருமாவளவன் மீது நாட்டு வெடிகுண்டு வீசப்பட்டது. குண்டு வீசியவர்கள் எந்த இடத்திலிருந்து வீசினார்கள், எந்தப் பக்கம் ஓடினார்கள் என அடையாளம் காட்டப்பட்டபோதும் அவர்களைக் கைது செய்ய காவல்துறை முயற்சிக்கவில்லை. மாறாக பேரணியில் வந்த தலித்துகளில் *36* பேர்களைக் கைது செய்து மதுரை சிறையில் அடைத்தது. *45* நாட்கள் சிறையில் இருந்த அவர்கள் அதன் பின்னர் திருச்சியில் இருந்து தினமும் கையெழுத்துப்போட வேண்டும் என்று நிபந்தனை ஜாமீனில் விடுவிக்கப்பட்டனர்.

அதன் பின்னர் சி. பி. ஐ. விசாரணை வேண்டுமெனக் கேட்டு *24.11.97*ல் மீண்டும் அவர்கள் பேரணி நடத்தினார்கள். அதைப் பொருட்படுத்தாத அரசு *21* இடங்களில் சமபந்தி விருந்துகள் நடத்தியது.

மேலவளவு - கீழ் வெண்மணிபோல, கொடியங்குளம் போல மறக்க முடியாத பதிவாக மாறிவிட்டது. நமக்கு அது மறந்து போயிருக்கலாம். தொடர்ந்து சமூகத்தின் நினைவில் அதை தக்கவைத்துக் கொண்டிருக்கும் யுக்தி தலித்துகளுக்குத் தெரியாது. ஆனால் தமது துயரத்தை வெளிப்படுத்தும் ஆற்றலை சொற்கள் இழந்துவிட்ட நிலையில் அதை மௌனத்தால் அல்லது அலறலால் வெளிப்படுத்துகிறார்கள்

**தமது துயரத்தை வெளிப்படுத்தும் ஆற்றலை சொற்கள் இழந்துவிட்ட நிலையில் அதை மௌனத்தால் அல்லது அலறலால் வெளிப்படுத்துகிறார்கள் தலித்துகள்.**

அவர்கள். துயரம் சொல்லமுடியாதது. எனவே மௌனம் அதன் குறியீடாகிறது. மௌனத்தைப் போலவே அலறலும் மொழியை நிராகரிக்கிறது. வார்த்தைகள் தோற்றுப்போன இடத்திலிருந்து வருகிறது அது. ஆனால் நீதிமன்றத்துக்கோ வார்த்தைகள் மட்டும்தானே முக்கியம்.

மேலவளவு கொலைக் குற்றவாளிகள் முழுமையாக கைது செய்யப்படுவதற்கு முன்பே கைது செய்யப்பட்டவர்களையும் விடுவித்தது நீதிமன்றம். முக்கிய குற்றவாளி ராமர் உட்பட *11* பேர்கள் கைது செய்யப்படாத நிலையில், குற்றவாளிகளை ஜாமீனில் விடுவித்தது சரியல்ல என்று சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர்கள் *76* பேர் கையெழுத்திட்டு மனு ஒன்றை *30.4.98* அன்று தலைமை நீதிபதியிடம் கொடுத்தனர். அவர் கேட்ட விளக்கங்களை உள்ளடக்கி மற்றுமொரு மனு *4.5.98* அன்று அவரிடம் தரப்பட்டது. அதை பரிசீலித்த தலைமை நீதிபதி அதுபற்றி விசாரிக்கும்படி மனுவை ஒரு 'டிவிசன் பெஞ்ச்'சிடம் ஒப்படைத்தார். இதனிடையில் விடுமுறை வந்ததால் ஒத்திப்போடப்பட்ட வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. இது போன்றதொரு புகாரை அரசோ அல்லது பாதிக்கப்பட்டவர்களோ மட்டும்தான் தர முடியும். வழக்கறிஞர்கள் இப்படிப் புகார் செய்ய முடியாது எனக்கூறி *24.9.98* அன்று உயர்நீதிமன்றம் அந்த மனுவைத் தள்ளுபடி செய்தது.

உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து வழக்கறிஞர்கள் குழுவின் சார்பில் வழக்கறிஞர் ரத்தினம் உச்சநீதிமன்றத்தில் முறையிட்டார். அங்கு அதை விசாரித்த நீதிபதி கே. டி. தாமஸை உள்ளடக்கிய டிவிஷன் பெஞ்ச் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு சரியல்ல; எனவே அவர்களே அதை விசாரிக்க வேண்டும் எனத் திருப்பி அனுப்பியது.

குற்றவாளிகள் ஊருக்குள் சுதந்திரமாக நடமாடுவதால் சாட்சிகளுக்கு பாதுகாப்பற்ற சூழல் ஏற்பட்டுள்ளது என பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் வாதாடப்பட்டது. ஆனால் அதற்கு நீதிமன்றம் காது கொடுக்கவில்லை. குற்றவாளிகளின் ஜாமீனை ரத்து செய்வதற்குப் பதிலாக விரைந்து வழக்கை நடத்தி முடிக்கும்படி உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது.

இந்த வழக்கில் துவக்கத்திலிருந்தே காவல் துறை சரியாக செயல்படவில்லை. இதில் வழக்கு பதிவு செய்யப்பட்டபோது இந்திய தண்டனை சட்டத்தின் (IPC) பிரிவுகளுடன் கூட வன்கொடுமை தடுப்பு சட்டத்தின் பிரிவு 3 (1) (x) மட்டுமே சேர்க்கப்பட்டுள்ளது. அது பொது இடத்தில் சாதியின் பெயரால் இழிவுபடுத்துவது பற்றிய பிரிவாகும். இந்தப் பிரிவுதான் இருப்பதிலேயே மிகவும் இலகுவான பிரிவாகும். உண்மையில் இந்த வழக்குக்கு பிரிவு *3 (2) (v)* தான் பதிவு செய்யப்பட்டிருக்கவேண்டும்.

வன்கொடுமை தடுப்புச் சட்டத்துக்கென உருவாக்கப்பட்ட விதிகளின் *(1995)* படி இப்படி கொல்லப்பட்டவர்களின் மனைவிக்கு அரசு வேலையோ அல்லது மாதம் ஆயிரம் ரூபாய் உதவித் தொகையோ தரவேண்டும். அல்லது விவசாயம் செய்வதற்கு நிலமும் வீடும் தரவேண்டும். கொல்லப்பட்டவர்களின் பிள்ளைகளின் முழு படிப்புப் பொறுப்பையும் அரசு ஏற்பதோடு சிறப்பான பள்ளியில் கல்வி பெற ஏற்பாடு செய்ய வேண்டும். முதல் மூன்று மாதங்களுக்கு அந்தக் குடும்பத்துக்குத் தேவை

**இரட்டைக் குவளை, தனிக் கிணறு, தனிச் சுடுகாடு எல்லாவற்றோடும் 'தாயும் பிள்ளையுமாக' வாழ்க்கை நடத்துவந்த மேலவளவு கிராமத்தில் பஞ்சாயத்து தேர்தல் வந்ததால் 'அமைதி' பறிபோயிற்று.**



படிப்பகம்

www.padippakam.com



யான பாத்திரங்கள், சமையல் பொருட்கள் அனைத்தையும் தரவேண்டும். (இதற்கென ஆகும் செலவில் பாதியை மத்திய அரசு ஏற்கிறது. அப்படி ஒதுக்கப்பட்ட நிதி தமிழக அரசால் செலவிடப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.) ஆனால் தமிழக அரசு மேலவளவில் கொல்லப்பட்டோரின் குடும்பத்துப் பெண்களுக்கு சாலையில் தார் ஊற்றும் வேலையைத்தான் கொடுத்தது. சில மாதங்களில் அந்த வேலையும் பறிபோய்விட்டது.

குற்றவாளிகள் தொடர்ந்து சாட்சிகளை அச்சுறுத்தி வருகின்றனர் என்பதைப் பலவாறு எடுத்துக்கூறியும் உயர் நீதிமன்றம் கேட்கவில்லை. மதுரையில் வழக்கு விசாரணையை நடத்தும்படி உத்தரவிட்டது. மதுரையில் பாதுகாப்பு இருக்காது; நீதிமன்றத்தையாவது மாற்றித்தாருங்கள் என முறையிடப்பட்டது. சென்னை அல்லது விழுப்புரத்தில் விசாரணை நடத்தலாம் என்ற யோசனையை குற்றவாளிகளின் தரப்பு எதிர்த்ததால் தற்போது சேலம் சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை நடைபெறுகிறது.

வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின் பிரிவு 7 (2)ன்படி குற்றவாளிகளுடைய சொத்துக்களை நீதிமன்றம் தனது பொறுப்பில் எடுத்துக்கொள்ளலாம். தண்டனை வழங்கும்போது அந்தச் சொத்துக்களை பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடாக பிரித்து வழங்கலாம். இந்தப் பிரிவையும் அரசு இதுவரை பயன்படுத்தியதில்லை. இந்தப் பிரிவின் கீழ் நீதிமன்றம் ஆணை பிறப்பிக்க வேண்டுமென ஒரு வழக்கு தொடரப்பட்டது. ஆனால் அதையும் நீதிமன்றம் நிராகரித்துவிட்டது. குற்றவாளிகளின் நடமாட்டத்தை கட்டுப்படுத்துவதற்கான வழிகாட்டுதலை இந்தச் சட்டத்தின் பிரிவு 10 வழங்கியிருந்தும்கூட நீதிமன்றம் அதை நடைமுறைப்படுத்தவில்லை.

இது தொடர்பாக 4.4.2001 அன்று சேலம் முதன்மை செஷன்ஸ் நீதிபதி ஒரு தீர்ப்பினை வழங்கியுள்ளார். (The Inspector of Police, Melur vs Alagiriswamy and 39 others, SC No.10/2001)அந்தத் தீர்ப்பில் பாதிக்கப்பட்டவர்கள் சார்பாக ஆஜராகி வாதிட்ட வழக்கறிஞர் ரத்தினத்தின் வாதம் குறித்து ஒரு வார்த்தையும் கூறப்படவில்லை. அப்படியொருவர் ஆஜரானதற்கான தடயமே அதில் இல்லை. மாறாக குற்றவாளிகள் தரப்பில் கூறப்பட்ட கருத்துகள் அப்படியே ஏற்கப்பட்டுள்ளன.

மேலவளவு வழக்கு தற்போது சேலத்தில் நடந்துவருவதால் குற்றவாளிகளை சேலத்திலேயே தங்கியிருக்கும்படி உத்தரவிடவேண்டுமென பாதிக்கப்பட்டவர்களின் தரப்பில் கோரப்பட்டது. அப்படி குற்றவாளிகளைத் தடுத்துவைத்தால் சாட்சிகளின் ஆதரவாளர்களால் குற்றவாளிகளின் குடும்பத்தினருக்கு பெரும் ஆபத்து ஏற்படும் என்று அவர்கள் தரப்பில் கூறப்பட்டதை அப்படியே ஏற்றுக்கொண்டு நீதிபதி தீர்ப்பளித்துள்ளார். உண்மையில் அப்படியொரு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் வலு தலித்துகளுக்கு மேலவளவில் இருந்திருந்தால் ஆறுபேர் படுகொலை செய்யப்பட்டிருப்பார்களா?

சென்னகரம்பட்டியில் கோயில் நிலத்தை குத்தகை கேட்டதற்காக வேலு, அமாவாசை என்ற இரண்டு தலித்துகள் வெட்டிக் கொல்லப்பட்டனர். மேலூர் அருகிலுள்ள உலகப்பிச்சன்பட்டி என்ற கிராமத்தில் அம்பேத்கர் பாடல் கேசட்டைப் போட்டதற்காக சந்திரன் என்ற தலித் கொல்லப்பட்டார். இந்த வழக்குகளில் குற்றவாளிகள் தண்டிக்கப்பட்டிருந்தால் மேலவளவு படுகொலை நடந்திருக்காது என அந்தத் தாக்குதலில் தப்பித்து வந்த கண்ணுற்ற (eye witness) சாட்சி கிருஷ்ணன் குறிப்பிடுகின்றார். ஆனால் இந்த முறையீடுகள் நீதிமன்றத்தின் காதுகளை எட்டுவதே இல்லை.

## கண்டதும் கேட்டதும்

சேரனுக்கு கவிதை எழுதத் தெரியாது

சாரு நிவேதிதா, *அமுது*, ஜனவரி 2001

சேரன் எனக்குப் பிடித்த ஒரு கவிஞர்

சாரு நிவேதிதா, *காலச்சுவடு*, ஜன – மார். 2000

அண்மையில் கோணங்கி ராஜநாயஹம் என்னும் நண்பருக்குக் கொடுத்த குறிப்பு இது: 'பட்டுப் பூச்சிகள் உறங்கும் மூன்றாம் சாமத்தில் "3, 5, 6, 2, 7, 9, 1, 4, 8, என்ற வரிசைப்படி கதைகளைப் படியுங்கள். 'உப்புக் கத்தியில் மறையும் சிறுத்தை'யில் 2, 5, 6, 7, 8, 10, 9, 1, 3, 4, 11 என்ற வரிசையில் கதைகளைப் படியுங்கள். அப்போது கதைகள் எளிதாகப் புரிந்து கொள்ள முடியும்." அதாவது அர்த்த –கர்ப்பகிருஹத்தில் நுழைய நண்பருக்குப் 'பூசாரி' கொடுத்த நுழைவுச் சீட்டு இது. ஏன் இந்த வரிசையிலேயே கோணங்கி தமது கதைகளை வெளியிட்டிருக்கக் கூடாது? அவரது 'புதிர்ப் பாதைகள்' அழிந்துபோய்விடும் என்றா? அல்லது வாசகனை ஏமாற்றி மிரட்டும் முயற்சியாலா? இம்மாதிரி போலித்தனங்கள் தான் 'புத்திஜீவித்'தனமாக உலவுகின்றன.

க. பூரணச்சந்திரன், *சொல் புதிது*, ஜன. மார். *2001*

ஏப்ரல் 30க்குள் தீர்ப்பு வழங்க வேண்டும் என்ற உயர் நீதிமன்றத்தின் காலக்கெடு தற்போது கொஞ்சம் தள்ளிப் போடப்பட்டுள்ளது. தேர்தல் நேரம் என்பதாலும், மேலவளவு பகுதியில் பதட்டம் இருப்பதாலும் இந்த காலக்கெடு தள்ளிப்போடப்பட்டுள்ளது. பதட்டம் நிலவுகிறது என்பதை சேலம் நீதிமன்றம் ஏற்கவில்லை. ஆனால் சென்னையில் உள்ள உயர்நீதிமன்றம் ஏற்கிறது. தீர்ப்புகள் எதிரெதிராக இருந்தாலும் அதனால் பாதிப்படைவது தலித்துகள்தான்.

பொதுவாகவே நீதிமன்றங்களின் மீதான நம்பிக்கை தகர்ந்துவரும் காலமிது. அண்மையில் ஜெயலலிதா தொடுத்த வழக்கில் உயர்நீதிமன்றத்தில் வழங்கப்பட்டுள்ள குழப்பமான தீர்ப்பு இதற்கு இன்னொரு உதாரணம்.

சாமான்ய மனிதனுக்கு மட்டுமல்ல இந்திய குடியரசுத் தலைவருக்கும் இதே போன்ற அவநம்பிக்கைதான். உச்ச நீதிமன்றத்தின் பொன்விழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு 28.1.2000 அன்று பேசிய குடியரசு தலைவர் திரு. நாராயணன், நீதித்துறையின் போக்கு குறித்து சில கருத்துகளைத் தெரிவித்திருந்தார். அவற்றை இங்கே நினைவுகூர்வது பொருத்தமாயிருக்கும். அவர் கூறினார்: "இந்தியாவின் முதல் குடியரசுத் தலைவராயிருந்த டாக்டர் ராஜேந்திர பிரசாத், தான் வழக்கறிஞராக இருந்தபோது நடந்தவொரு சம்பவத்தை தனது நினைவுக் குறிப்புகளில் பதிவு செய்துள்ளார். பாட்னா நீதிமன்றத்தில் ஒரு வழக்கில் அவர் ஆஜராகி வாதாடியபின் "கனம் நீதிபதி அவர்களே, இந்த வழக்கில் நீதி வழங்குகள்" எனறு கேட்டாராம். உடனே நீதிபதி குறுக்கிட்டு, "நீதிபதிகள் நீதி வழங்குவதற்காக வரவில்லை. சாட்சிகளின் அடிப்படையில் வழக்குகளில் தீர்ப்பளிப்பதே எங்கள் வேலை" என்றாராம். சமீபத்தில்கூட இந்திய நாட்டில் ஒரு நீதிபதி ஒரு கொலையைச் செய்த குற்றவாளி இன்னார்தானெனத் தெரிந்திருந்தும் போதுமான சாட்சியங்கள் இல்லாததால் அவரை விடுவித்துவிட்டார். நீதியின் வழிமுறைகள் புதிர் நிரம்பியவையாக உள்ளன. அதனால் தான், "நீதிமன்றம் என்பது ஒரு தேவாலயமல்ல அது ஒரு சூதாட்ட விடுதி. ஆட்டத்தின் போக்குதான் அங்கு முடிவைத் தீர்மானிக்கிறது" என்று சொல்கிறார்கள் போலும்."...

■



படிப்பகம்

www.padippakam.com



தமிழ் இனி 2000

தமிழ் இனி 2000 வரவு செலவு விபரங்களை முழுமையாகக் காலச்சுவடில் பிரசுரிக்க உள்ளோம். இதன் முதல் கட்டமாக காலச்சுவடு அறக்கட்டளை யிலிருந்து தமிழகத்தில் திரட்டப்பட்ட மொத்தத் தொகை பற்றிய விபரங் களை இங்கே பிரசுரிக்கிறோம். ரூபாய் 1000க்கு மேல் தரப்பட்ட நன் கொடைகள் தனித்தனியாகப் பிரசுரிக்கப்படுகின்றன.

சென்னையில் தமிழ் இனி நடந்த நாட்களில் நண்பர்கள் ரசீதுடன் ரொக்க மாகக் கொடுத்த தொகை நீங்கலாக அனைத்து நன்கொடைகளும் காலச்சுவடு அறக்கட் டளையின் பெயரில் காசோலையாகவோ, வரைவோலையாகவோ, பணவிடையாகவோ பெறப்பட்டன. இந்தியர்கள் (இந்தியாவிலும் அயலிலும் வாழும் இந்திய குடிமக்கள்) மற் றும் இந்திய நிறுவனங்களும் அளித்த கொடைகளின் பெரும்பகுதி நாகர்கோவிலில் உள்ள காலச்சுவடு அறக்கட்டளை வங்கிக் கணக்கில் (ஐ. ஓ. பி. கணக்கு எண். 2004) சேகரிக்கப்பட்டது. தமிழ் இனிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் சென்னை எழும் பூரில் காலச்சுவடு அறக்கட்டளைக்கு புதிய கணக்கு (ஐ. ஓ. பி. கணக்கு எண். 14911) ஒன்று துவங்கப்பட்டது. கடைசி கட்டத்தில் திரட்டப்பட்ட நன்கொடைகள் இதில் வரவு வைக்கப்பட்டன. அயலவர் பங்களிப்புக்காக சட்டப்படி நாகர்கோவிலில் தனி கணக்கு (ஐ. ஓ. பி. கணக்கு எண். 2006) ஒன்றும் துவங்கப்பட்டது.

தமிழ் இனி பற்றி பரப்பப்பட்ட அவதூறுகளுக்கு முற்றிலும் மாறாக அயலிலிருந்து காலச்சுவடு அறக்கட்டளை பெற்ற மொத்த தொகை ரூ.19,300 என்பதை கவனிக்க வேண்டுகிறேன். இது அமெரிக்காவில் வாழும் இந்தியர்களிடமிருந்து விளக்கு அறக் கட்டளை மூலம் பெறப்பட்ட தொகை.

காலச்சுவடு அறக்கட்டளையில் தமிழ் இனிக்காகப் பெறப்பட்ட முதல் நன்கொடை மே 10, 2000த்தில் வரவு வைக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் 1999லிருந்து மே 2000 வரை செலவு செய்யப்பட்ட ஆரம்ப கட்ட ஆலோசனைக் கூட்டங்கள், பயணம் மற்றும் தொலைத் தொடர்பு செலவுகள் கனடா நண்பர்கள் சென்னையில் ஒழுங்கு செய்து கொடுத்த ரூபாய் 60000லிருந்து மேற்கொள்ளப்பட்டன. இந்தத் தொகை நன்கொடை அளிக்கப்பட்ட விபரம் தமிழ் இனிக்காக அயலில் மேற்கொள்ளப்பட்ட வரவு செலவுக் கணக்குகளுடன் பிரசுரிக்கப்படும். புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் தமிழ் இனிக்காக இந்தியாவில் பங்களித்த மொத்தத் தொகை இந்த ரூபாய் 60,000 மட்டுமே என்பதைக் கவனிக்க வேண்டுகிறேன். மலேசிய நண்பர்கள் தமிழ் இனியின்போது ரூபாய் 10,000த்தை நன்கொடையாகக் கொடுத்தனர். இந்தத் தொகையை சட்டப்படி காலச்சுவடு அறக்கட்டளை ஏற்றுக்கொள்ள இயலாது என்பதால் திரு. சேரனிடம் ஒப்படைக்கப்பட்டது. இதுபற்றிய விபரமும் அயல் கணக்கு வழக்குகளுடன் பிரசுரிக்கப்படும்.

இங்கே பிரசுரிக்கப்பட்டுள்ள கணக்கு விபரங்கள் தொடர்பாக நண்பர்களுக்கு ஏதேனும் கேள்விகள் இருப்பின் கேட்டுத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டுகிறேன்.

கண்ணன்

| | ரூ. |
|---|---|
| ஆறாம்திணை, சென்னை | 3,00,000 |
| ஸ்ரீராம் சிட்ஸ், சென்னை | 2,12,400 |
| ஓமேகா கேபிள்ஸ், சென்னை | 1,00,000 |
| எம். எ. சி. பப்ளிக் சேரிடபிள் டிரஸ்ட், சென்னை | 50,000 |
| கதா, புது தில்லி | 50,000 |
| ஆரெம்கே, திருநெல்வேலி | 25,000 |
| அழகேந்திரன் எக்ஸ்போர்ட்ஸ், சென்னை | 15,000 |
| மெட்ராஸ் சிமெண்ட் லிட், சென்னை | 10,000 |
| தினமலர், சென்னை | 10,000 |
| யூனைடெட் இந்தியா, சென்னை | 10,000 |
| கமீலா நாசர், சென்னை | 10,000 |
| உமா சங்கரி, சித்தூர் | 10,000 |
| ஜி. நாராயணசாமி, சென்னை | 6,000 |
| மெகா டிரெண்ட்ஸ், சென்னை | 6,000 |
| சேலம் தமிழ்ச் சங்கம் | 5,000 |
| பாலு மகேந்திரா, சென்னை | 5,000 |
| ஸ்ரீ ஜம்புநாதன் சீதாராமன் கல்வி அறக்கட்டளை, சென்னை | 5,000 |
| ஆனந்த் மாட்ச் எண்டர்பிரைசஸ், கழுகுமலை | 5,000 |
| ஸ்ரீதர், லீப், சென்னை | 5,000 |
| இ. ஜே. சுந்தர் (மலேசிய நண்பன்), சென்னை | 5,000 |
| ஜி. சாமிநாதன், யு.எஸ்.எ. | 4,663 |
| டி. வி. வரதராஜன், பெங்களூர் | 3,000 |
| டி. வி. ராமசந்திரன், பெங்களூர் | 3,000 |
| அ. வெற்றிவேல், பெங்களூர் | 2,500 |
| ஆர். பார்த்திபன், சென்னை | 2,000 |
| கே. என். விஜயன், பெங்களூர் | 2,000 |
| ஜி. கே. ராமசாமி, பெங்களூர் | 2,000 |
| கார்லோஸ், பெங்களூர் | 2,000 |

| | |
|---|---|
| பாவண்ணன், பெங்களூர் | 2,000 |
| பல்லடம் மாணிக்கம், விருத்தாசலம் | 2,000 |
| மு. வேலாயுதம், கோயம்புத்தூர் | 2,000 |
| ஆர். மகாலிங்கம், பெங்களூர் | 2,000 |
| ஜி. எஸ். ஆர். கிருஷ்ணன், பெங்களூர் | 2,000 |
| சர்வோதயா சங்கம், சங்கரன்கோவில் | 1,500 |
| சண்முக சுந்தரம், பெங்களூர் | 1,500 |
| தேவதத்தா, சென்னை | 1,575 |
| தம்பி மாடர்ன் மில்ஸ் | 1,100 |
| உமாபதி, கோவில்பட்டி | 1,000 |
| சர்வோதயா சங்கம், கோவில்பட்டி | 1,000 |
| ஹியூபர்ட் சதீஷ், நாகர்கோவில் | 1,000 |
| சக்தி எஞ்சினியரிங்ஸ், கோயம்புத்தூர் | 1,000 |
| பி. லிங்கம், ஹுப்லி | 1,000 |
| அ. செல்வராஜ், சென்னை | 1,000 |
| டி. ஆர். நடராஜன், பெங்களூர் | 1,000 |
| ஆயி கௌண்டன், பெங்களூர் | 1,000 |
| அருட்செல்வன், பெங்களூர் | 1,000 |
| அழகர்சாமி, புதுதில்லி | 1,000 |
| விளக்கு அறக்கட்டளை, யு.எஸ்.ஏ : (கே. ராஜாராம், என். கோபால்சாமி வி. பிள்ளை, வி. வெங்கட்ரமணி, எஸ். உதயநாராயணன், எஸ். கிருத்திகைவாசன்) | 19,300 |
| பிற சுமார் நூறு நண்பர்களின் பங்களிப்பு | 20,807 |
| நன்கொடை பெட்டி வதூல் | 162 |
| கட்டுரை (ஸெராக்ஸ்) மூலம் வரவு | 3,885 |

மொத்தத் தொகை ரூ.9,35,392


# காவ்யா

நல்ல நூல்கள் நல்ல நண்பர்கள்
நல்ல நண்பர்கள் நல்ல நூல்கள்

புத்தம் புதிய நூல்கள் – 2000

| | ரூ. |
|---|---|
| திருக்குறள்- காவ்யா உரை | 30.00 |
| *தொகுப்பாசிரியர் சண்முக சுந்தரம்* | |
| நெல்லைச் சிறுகதைகள் | 150.00 |
| நெல்லை நாட்டுப்புறவியல் | 75.00 |
| *சுந்தர பாண்டியன்* | |
| ஆராரோ (நாவல்) | 30.00 |
| இலக்கு | |
| எழுபதுகளில் கலை இலக்கியம் | 40.00 |
| *பிரேம் & ரமேஷ்* | |
| சிதைவுகளின் ஒழுங்கமைவு | 150.00 |
| *நீல. பத்மநாபன்* | |
| மதிலுகள் (மலையாள நவீன இலக்கியம்) | 75.00 |
| *அன்பாதவன்* | |
| செம்பழுப்பாய் சூரியன் (கவிதை) | 30.00 |
| *பா. இதயவேந்தன்* | |
| உயிரிழை (சிறுகதை) | 30.00 |
| *முனைவர் துரை* | |
| மார்க்சிய நோக்கு | 75.00 |
| *முத்து மாணிக்கம்* | |
| இயக்கவியல் | 35.00 |
| *திருநாவுக்கரசு* | |
| சுந்தர ராமசாமி : ஓர் கதைச் சொல்லி | 100.00 |
| *தமிழவன்* | |
| இருபதில் நவீனத் தமிழ் விமர்சனங்கள் | 200.00 |
| *சண்முகசுந்தரம்* | |
| அகத்தாரும் புறத்தாரும் | 75.00 |
| *சோலை சுந்தரபெருமாள்* | |
| வட்டத்தை மீறி (சிறுகதை) | 40.00 |
| *உமா ஜானகிராமன்* | |
| ஒரு துளி துக்கம் (சிறுகதை) | 45.00 |
| *முனைவர் சிவ. விவேகானந்தன்* | |
| பார்பதியம்மன் வழிபாடு | 50.00 |
| *ஞானி* | |
| இந்தியாவில் தத்துவம் கலாச்சாரம் | 65.00 |
| *முனைவர் க. பஞ்சாங்கம்* | |
| இலக்கியத்தின் இருப்பியலும் திறனாய்வின் இயங்கியலும் | 75.00 |
| *முனைவர் அ. ராமசாமி* | |
| அலையும் விழித்திரை | 60.00 |
| *முனைவர் முத்து மோகன்* | |
| ஐரோப்பிய தத்துவங்கள் | 75.00 |
| *முனைவர் பாலமுருகன்* | |
| இலக்கியக் களங்கள் | 35.00 |

2001-ன் புதிய நூல்கள்

| | |
|---|---|
| உயர் (தமிழியல் ஆய்வுகள்) | 50.00 |
| *தொகுப்பாசிரியர் : சண்முக சுந்தரம்* | |
| நாட்டுபுறவியல் கோட்பாடுகள் | 50.00 |
| கொங்கு நாட்டுப்புறவியல் | (அச்சில்) |
| *(தொ.) பெருமாள் முருகன்* | |
| கொங்குச் சிறுகதைகள் | (அச்சில்) |

**KAAVYA**
16, 17th 'E' Cross
Indira Nager IInd Stage
BANGALORE 560 038
✆ 080 - 5251095

- தபால் செலவு இலவசம்
- பதிவு தபாலுக்கு ரூ.15 சேர்க்க
- புத்தக விலை மட்டும் M.O / D.D.செய்க
- V.P.P. இல்லை




படிப்பகம்

www.padippakam.com

*With Best Compliments*
*from*

தினமலர்
தேசிய தமிழ் நாளிதழ்

DINAMALAR

National Tamil Newspaper

*Printed simultaneously at*

Chennai ✧ Vellore ✧ Pondicherry

Erode ✧ Salem ✧ Coimbatore

Tiruchi ✧ Madurai

Tirunelveli ✧ Nagercoil

**Edited and published by S.R. Sundaram (Kannan) for Kalachuvadu Pathippagam, 669 K.P. Road, Nagercoil 629 001**
**and printed by M. Biju at Print Point Offset Press, 103 Sahotharar Street, Nagercoil 629 002**

படிப்பகம்